# வெளிச்சத்தின் வேர்கள்

## செபம் பற்றிய சில புரிதல்கள்

(ஓர் விவிலியக் கண்ணோட்டம்)



தமிழ் நேசன்

மன்னா வெளியீடு

# வெளிச்சத்தின் வேர்கள்

## செபம் பற்றிய சில புரிதல்கள்

(ஓர் விவிலியக் கண்ணோட்டம்)

## Some Insights On Prayer

**(A Scriptural View)**

தமிழ் நேசன்

மன்னா பதிப்பகம்

மறைக்கல்வி நிலையம்,
புனித செபஸ்தியார் பேராலய வீதி,
மன்னார், இலங்கை.

மன்னா வெளியீடு 2

# நூல் முகம்


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | வெளிச்சத்தின் வேர்கள் |
| ஆசிரியர் | : | தமிழ் நேசன் |
| மொழி | : | தமிழ் |
| பொருள் | : | ஆன்மீகம் |
| முதற் பதிப்பு | : | 2007 ஜுன் |
| அச்சு எழுத்து | : | 11 |
| பக்கங்கள் | : | 184 + xx = 204 |
| உரிமை | : | ஆசிரியருக்கு |
| வெளியீடு | : | மன்னா பதிப்பகம் |
| அட்டைப் படம் | : | அ. றெஜினா தர்ஷினி |
| அச்சகம் | : | நந்தா அச்சகம், |
| | : | புளுமண்டல் றோட், கொழும்பு -13. |
| விலை | : | இலங்கை ரூபா. 200.00 |
| அச்சிடலாம் | : | அருட்பணி. ஏ. விக்ரர் சோசை, குருமுதல்வர், மன்னார் மறைமாவட்டம். |
| தொடர்புகள் | : | அருட்பணி. பா. தமிழ் நேசன் மறைக்கல்வி நிலையம், புனித செபஸ்தியார் பேராலய வீதி, மன்னார். தொலைபேசி இல. 023 - 2222377 செல்லிடத் தொலைபேசி இல. 077-6943145 |

| | | |
|---|---|---|
| **Title** | : | **Velichchathin Vaerkal** |
| **Author** | : | **Thamil Nesan** |
| **Language** | : | **Tamil** |
| **First Edition** | : | **2007 June** |
| **Pages** | : | **184 + xx = 204** |
| **Copy Rights** | : | **Author** |
| **Publishers** | : | **Manna Pablications** |
| **Cover Page** | : | **A. Regina Dharshini** |
| **Printers** | : | **Nantha Printers,** |
| **Prize** | : | **Sri Lankan Rs. 200.00** |
| **Contact** | : | **Rev. Fr. Thamil Nesan Catechetical Centre, St. Sebestian's Street, Mannar, Sri Lanka.** |

# சமர்ப்பணம்



எனது சிறுபராயத்தில் இருந்தே
என்னை எழுதத் தூண்டி,
எனக்கு எல்லாமுமாக இருந்து
அமர தீபமாகியும்
எனது வாழ்வில்
இன்றும் ஒளிர்ந்துகொண்டிருக்கும்
என் அன்புத் தாயாரின்
இனிய பாதங்களுக்கு ...!

தமிழ் நேசன்

# இந்நூல் கிடைக்குமிடங்கள்

**மன்னார்**
- வளனகம், மறைக்கல்வி நிலையம், மன்னார்.

**வவுனியா**
- ஆவே மரியா, அந்தோனியார் ஆலயம், இறம்பைக்குளம், வவுனியா

**யாழ்ப்பாணம்**
- புனித வளனார் கத்தோலிக்க அச்சகம், பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
- மறைக்கல்வி நிலையம், பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

**கொழும்பு**
- தேசிய மறைக்கல்வி நிலையம், 19, பல்கம் பிளேஸ், கொழும்பு 08.
- றண்ஸ்கா, 142,144, சென். அன்ரனிஸ் மாவத்தை, கொழும்பு 13.

**மட்டக்களப்பு**
- மறைக்கல்வி நடுநிலையம், மட்டக்களப்பு

**திருகோணமலை**
- மறைக்கல்வி நிலையம், திருகோணமலை

**கண்டி**
- மறைக்கல்வி நிலையம், கண்டி

**ஜேர்மனி**
- ஜேர்மன் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகம்

**பிரான்ஸ்**
- பிரான்ஸ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகம்

**சுவிஸ்**
- சுவிஸ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகம்

**இங்கிலாந்து**
- இங்கிலாந்து கத்தோலிக்க ஆன்மீகப் பணியகம்

**கனடா**
- கனடா கத்தோலிக்க ஆன்மீகப் பணியகம்

**நோர்வே**
- நோர்வே கத்தோலிக்க ஆன்மீகப் பணியகம்

# மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு கலாநிதி இரா. யோசேப்பு ஆண்டகை அவர்களின்

# ஆசியுரை



"வெளிச்சத்தின் வேர்கள்" என்ற பெயரில் செப வாழ்வை மையப்படுத்தி அருட்பணியாளர் பாவிலு கிறிஸ்து நேசன் அவர்கள் எழுதியுள்ள இந்நூலுக்கு ஆசீர் வழங்குவதில் பெருமையும் பெருமகிழ்ச்சியும் அடைகின்றேன்.

"முதிர்ச்சியுள்ள கிறிஸ்தவ வாழ்வை நோக்கிய பயணம்" என்ற மன்னார் மறைமாவட்டத்தின் ஐந்தாண்டுத் திட்டத்தில் முதல் ஆண்டு (2007), செப ஆண்டாக முன்னெடுக்கப்படும் இவ்வேளையில், இந்நூல் வெளி வருவது எமக்கு இரட்டிப்பான மகிழ்ச்சியைத் தருகின்றது. "வெளிச்சத்தின் வேர்கள்" என்ற இந்நூலின் தலைப்பு மேற்படி தரிசனப் பார்வையையும், அதில் செபத்தின் இடத்தையும் உள்ளடக்கியதாக, இரத்தினச் சுருக்கமாக அதேவேளை கவிதை நயம் பொருந்தியதாக அமைந்திருப்பது அற்புதமானதாகும்.

முதிர்ச்சியுள்ள கிறிஸ்தவ வாழ்வு வெளிச்சமாகத் திகழுகின்ற வாழ்வாகும். மண்ணோடு மண்ணாய் மங்கி மடிந்துபோகின்ற "ஊன் இயல்பின்" வாழ்வைத் தோற்கடித்து, கடவுளின் ஆவியானவருக்கு அடிமைப்பட்டு வாழப்படும் இந்த வாழ்வு (காண்க கலா.5:16-26) இந்த உலக இருளின் மத்தியிலே வெளிச்சமெனத் திகழும் பெருவாழ்வாகும். இதுவே இயேசு ஆண்டவரும், அவருடைய அடியார்களும்,

அருளாளர்களும் வாழ்ந்த வாழ்வாகும். இதே வாழ்வுக்குத்தான் நாமும் அழைக்கப்பட்டுள்ளோம். வெளிச்சமாய்த் திகழ்ந்த இவர்களின் வாழ்வின் இரகசியம், இவர்கள் செபத்தின் வழியாக, ஒளியே உருவான இறைவனோடு கொண்டிருந்த உறவேதான் என்பது உள்ளங்கை நெல்லிக் கனியாகும். இதைக் கண்டுகொண்டதால்தான், ஆண்டவருடைய சீடர்கள் அவரிடம் "ஆண்டவரே எமக்குச் செபிக்கக் கற்றுத் தாரும்" (காண்க லூக்.11:1) என்று கேட்பதைப் பார்க்கின்றோம்.

இன்று நாமும் ஆண்டவரிடம் இதே வேண்டுதலை முன்வைக்கும்போது, அவர் இந்த நூல் வடிவத்திலே எமக்குச் செபிக்கக் கற்றுத்தருகிறார். இந்த மனநிலையோடு இதைப் படித்துப் பற்றுதலோடு செபிக்கக் கற்றுக்கொள்ளவும், செபத்தின் வழியாக, ஒளி நிறைந்த சாட்சிய வாழ்வாகிய முதிர்ச்சியுள்ள கிறிஸ்தவ வாழ்வுக்கு நாம் இட்டுச் செல்லப்படவும் வேண்டும் என்ற எனது வேண்டுதலை இறைவனின் பாதத்திலே வைக்கின்றேன்.

பல பணிப் பளுக்கள் மத்தியிலும் பல மாதங்களாகக் கடுமையாக உழைத்து இந்நூலைப் படைத்துத் தந்த அருட்பணியாளர் நேசன் அடிகளாருக்கு எனது பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றேன். இதை வாசித்துப் பயனடைய இருக்கும் பயனாளிகள் அனைவருக்கும் எனது நிறைவான ஆசிரை அளிக்கின்றேன்.

மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை
மன்னார் ஆயர்,
மன்னார் மறைமாவட்டம்.

*ஆயர் இல்லம்,*
*மன்னார்*
*17. 06. 2007*

# மன்னார் மறைமாவட்ட மடுமாதா சிறிய குருமட அதிபர் அருட்பணியாளர் பி. யேசுராஜா அடிகளாரின்

# பாராட்டுரை



அருட்தந்தை நேசன் அவர்களை அவரது சிறு பராயந்தொட்டே நான் நன்கு அறிவேன்.

நான் குருவாகத் திருநிலைப் -படுத்தப்பட்டு இரண்டு வருட நிறைவில் முருங்கன் பங்குத் தந்தையாக நியமிக்கப் பட்டேன். எனது குருத்துவ வாழ்வின் முதல் தனிப்பங்கு முருங்கன் பங்குதான் என்று கூறுவதில் மகிழ்ச்சி அடைகின்றேன். “இறைபணியாற்ற இறைவனின் துணை உண்டு” என்ற நம்பிக்கையோடு முருங்கனில் எனது பங்குப் பணியை ஆரம்பித்தேன்.

பங்குச் சபையினர் மற்றும் பக்திச்சபையினரைச் சந்தித்து பங்கு பற்றியும், பணிகள் பற்றியும் கேட்டறிந்தேன். பீடப்பணியாளரைச் சந்திக்க நாளும் நேரமும் குறித்தேன். “இங்கு பீடப்பணியாளர் சபை என ஒன்றும் இயங்குவதில்லை. குருமனையில் இயங்கிவரும் ‘மாணவர் இல்ல’ மாணவர்கள்தான் திருப்பலிக்கு உதவிபுரிந்து வருகின்றனர்” என்று கூறப்பட்டது. “பாடசாலை விடுமுறை நாட்களில் மாணவர்கள் விடுமுறைக்காக வீடுகளுக்குச் செல்லும்பொழுது பங்குத்தந்தையே பீடப் - பணியாளராகவும் செயற்படுவது வழக்கம்” எனவும் கூறப்பட்டது.

பீடப்பணியாளர் திருப்பலிக்கு உதவிபுரிவது மட்டுமல்லாது அவர்கள் பெற்றுக்கொள்ளும் உருவாக்கத்தின் விளைவாக குருமடம் செல்லும் சிந்தனையும் அவர்கள் உள்ளங்களில் உதிப்பது வழமை என்ற உண்மையை எனது சிறுபராய அனுபவரீதியாக பெற்றுக்கொண்ட நான் உடனடியாகப் பீடப்பணியாளர் சபையை ஆரம்பிக்கத் திட்டமிட்டேன்.

மறுதினம் ஞாயிறு திருப்பலியில் இதுபற்றிய சிறு விளக்கத்தை மக்களுக்கு வழங்கினேன். அன்று பிற்பகல் பீடப்பணியாளர் சபை ஆரம்பிக்கப்பட்டது. 25இற்கும் மேற்பட்ட சிறார்கள் இச்சபையில் இணைந்தனர். இச்சிறுவர்களுள் ஒருவர்தான் இன்றைய 'மன்னா' பத்திரிகையின் பதிப்பாசிரியரும், "வெளிச்சத்தின் வேர்கள்" என்ற இந்நூலின் ஆசிரியருமான அருட்தந்தை நேசன் அடிகளாராகும்.

13 வயது நிரம்பிய சிறுவன் நேசன், பீடப்பணியாளர் சபையின் நிர்வாகத் தெரிவில் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் என்பதனை இங்கு குறிப்பிட விரும்புகின்றேன். தனது செயலாளர் பொறுப்பை ஆரம்பத்திலிருந்தே திறம்படச் செய்துவந்த சிறுவன் நேசன் பீடப்பணியாளர் சபையின் வாராந்தக் கூட்ட அறிக்கைகளைத் தெளிவாகவும், கவர்ச்சிகரமாகவும், சுவையாகவும் எழுதி தனது எழுத்தாற்றலை வெளிக்கொணர்ந்தது மட்டுமல்லாது அன்றே தனது எதிர்கால உயர்வுக்கும் வித்திட்டார்.

1980 காலப்பகுதியில் யாழ் மறைமாவட்ட வாராந்த இதழான 'பாதுகாவலன்' பத்திரிகை மன்னார் பிரதேசத்திலும் பிரசித்தி பெற்றிருந்தது. பலரும் அப்பத்திரிகையைப் பெற்று வாசிப்பது வழக்கம். பத்திரிகைக்கான ஆக்கங்களும் 'பாதுகாவலன்' சஞ்சிகை ஆசிரியரினால் எதிர்பார்க்கப்பட்டது.

பீடப்பணியாளரின் வாராந்தக் கூட்டம் ஒன்றில் சிறுவன் நேசன் ஒரு கவிதை வாசித்தார். அக்கவிதை பீடப்பணியாளர்களின் அழைத்தலைப் பற்றியதாக இருந்தது. நேசன் அக்கவிதையை வாசித்து முடித்தவுடன் நான், "இந்தக் கவிதையை எழுதியது யார்?" எனக் கேட்டேன். அவர் அதைத் தானே எழுதியதாகச் சொன்னார். நான் "இக்கவிதையை வேறு தாளில் அழகாக எழுதிக்கொண்டுவந்து தாரும்,

இதை நான் யாழ்ப்பாணத்திற்கு பாதுகாவலன் பத்திரிகைக்கு அனுப்பிவைப்பேன்" என்று சொன்னேன். நான் கேட்டுக்கொண்டபடி *"சிறார்களை அழைத்ததேனோ?"* என்ற அக்கவிதையை அவர் என்னிடம் தந்ததாகச் சொன்னார். "நீங்கள் அதை யாழ்ப்பாணத்திற்கு அனுப்பினீர்களோ, அது பத்திரிகையில் பிரசுரமாகியதோ எனக்குத் தெரியவில்லை. ஆனால் எனக்கும் எழுத்தாற்றல் இருக்கிறது என்பதை அச்சம்பவத்தினூடாகவே நான் கண்டுகொண்டேன். நான் பாதுகாவலனுக்கு எழுதிய அக்கவிதைதான் எனது கன்னிக் கவிதை, எனது முதல் எழுத்தாக்கம். அன்றிலிருந்துதான் எனக்கும் எழுதத் தெரியும் என்ற நம்பிக்கை எனக்குள் வந்தது; எழுத்தார்வம் என்னை ஆட்கொண்டது" என இரண்டு மாதங்களுக்கு முன்பாக அருட்தந்தை நேசன் தனது நூல் பற்றி என்னோடு பேசிக்கொண்டிருந்தபோது கூறினார்.

இன்று நேசன் செபம் தொடர்பான தனது சிந்தனைகளை நூல்வடிவில் வெளிக்கொண்டுவருவதையிட்டு நான் பெருமிதம் அடைகின்றேன்; உளமார வாழ்த்துகின்றேன்.

இவ்வாண்டானது மன்னார் மறைமாவட்டத்தில் செப ஆண்டாகக் கடைப்பிடிக்கப்படுகின்ற நிலையில் இந்நூலானது நம் அனைவரையும் செபிக்கத்தூண்டவல்ல சிறந்த ஊடகமாக அமையுமென்பதில் எந்தவொரு ஐயப்பாடுமில்லை. செபம் என்றால் என்ன? செபிப்பது எப்படி? யாரிடம் செபிப்பது? எதற்காகச் செபிப்பது? என்றவாறு பல கோணங்களிலிருந்தும் செபத்தைப் பற்றிய தெளிவைப் பெற இந்நூலானது எமக்கு உதவி செய்யும்.

எனவே செபத்தாகம் கொண்ட ஒவ்வொருவரும் இந்நூலை வாங்கி, வாசித்து, தியானித்து வாழ்வாக்க வேண்டுகின்றேன். மீண்டுமொரு தடவை நேசன் அடிகளாரை வாழ்த்துவதோடு இதுபோன்ற இன்னும் பல நூல்களை ஆக்கி இன்னும் பல்லாயிரம் வாசகர்கள் படித்துப் பயன்பெற ஆவண செய்யுமாறும் கேட்டுக்கொள்கின்றேன்.

**அருட்திரு. பி. யேசுறாஜா,**

அதிபர், மடுமாதா சிறிய குருமடம், மன்னார்.

## கிறிஸ்தவ பாட ஆசிரிய ஆலோசகர்

# திருமதி பயஸ் ரதி யுடேக்சியா பீரிஸ் அவர்களின்

# அணிந்துரை



"எப்பொழுதும் மகிழ்ச்சியாய் இருங்கள், இடைவிடாது இறை - வனிடம் வேண்டுங்கள், எல்லாச் சூழ்நிலையிலும் நன்றி கூறுங்கள்" (1தெச.5:16-18).

மன்னார் மறைமாவட்டத்தின் ஐந்தாண்டு அருட்பணித் திட்டத்தின் முதல் ஆண்டாகிய இந்தச் செப ஆண்டிற்குப் பூபாளம் இசைக்கும் வகையில் "வெளிச்சத்தின் வேர்கள்" என்ற இந்நூல் வெளிவருகின்றது. விவிலியக் கண்ணோட்டத்தில் செபம் பற்றிய புரிதல்களை உள்ளடக்கி வெளிவரும் இந்நூல் காலத்திற்கேற்ற அருமையான கருத்துக்களைத் தாங்கிய சிறந்த கருவூலமாகத் திகழ்கின்றது.

செப வாழ்வு அனுபவத்தை ஊக்குவிப்பதன் மூலம் இறை மனித உறவினை ஆழப்படுத்த வேண்டும் என்ற நோக்கை இலக்காகக்கொண்டு எம் மன்னார்த் தலத்திருச்சபை செயற்பட்டு வருகின்றது. இவ்வேளையில் காலத்தின் தேவையை உணர்ந்தவராக எம் மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்பணியாளர் நேசன் அடிகளார் இந்நூலாக்க முயற்சியில் ஈடுபட்டுள்ளார்.

மன்னார் மறைமாவட்டத்தில் மறைக்கல்வி, கல்வி, விவிலியப் பணிகளுக்கு பொறுப்பாக இருந்து சிறப்பாகப் பணியாற்றிவரும் நேசன் அடிகளார் செபம் பற்றி வடித்திருக்கும் இக்கருத்தாழமிக்க நூலுக்கு அணிந்துரை எழுதுவதில் பேருவகை அடைகின்றேன்.

'தமிழ் நேசன்' என்னும் செல்லப் பெயரில் எழுத்துலகில் வலம்வந்துகொண்டிருக்கும் அருட்பணியாளர் நேசன் அவர்கள்

கடந்த பல வருடங்களாக சிறுகதைகள், கட்டுரைகள், ஆக்க இலக்கியங்கள் பலவற்றை எழுதி வருகின்றார். 'மன்னா' பத்திரிகை ஆசிரியராக இருந்து அவர் ஆற்றிவரும் பணிகளோடு மறைக்கல்வி, கல்வி மற்றும் விவிலியப் பணிகளுக்கு இவர் தன்னை அர்ப்பணித்து ஊன் உறக்கமின்றி செயற்பட்டு வரும் தன்மையானது இவரை செயல் வீரராக சித்தரிக்கின்றது.

செபம் பற்றிய இந்நூலை வெளியிடுவதன் மூலம் அருட்பணியாளர் அவர்கள் செயல்வீரனாக மாத்திரமல்ல, செபவீரராகவும் தன்னை இனம்காட்டியுள்ளார் எனலாம். இயேசுவின் சீடர்கள் எங்களுக்கு "செபிக்கக் கற்றுத் தாரும்" என்று இயேசுவிடம் கேட்டபொழுது, இயேசு தான் தனது தந்தையோடு கொண்டிருந்த உறவினை, அப்பா அனுபவத்தினை அவர்களுக்குச் சொல்லிக் கொடுத்தார். அதேபோன்ற அப்பா அனுபவத்திற்கு, இறையுறவிற்கு இந்நூலானது நம்மை அழைத்துச் செல்கின்றது.

இறைவனுக்கும், மனிதனுக்கும் உள்ள உறவினை ஆழப்படுத்தவும், மனிதனை அன்புறவில் பிணைக்கவும், செபமே ஆயுதமாகும். ஏன்? எப்படி? எதற்காக? எங்கு? எப்போது? செபிக்க வேண்டும் என்ற வினாக்களின் அடிப்படையில் இந்நூலை வளர்த்தெடுத்திருக்கும் பாணியானது வாசிப்போரின் உள்ளுணர்வுகளைத் தூண்டிவிடுவது மட்டுமல்ல, செபம் பற்றிய இநூலின் கருத்துக்களை வாசிப்போர் வாழ்வாக்கவும் வழிசமைத்துத் தரும் கருவியாக அமைந்துள்ளது.

"யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்ற தத்துவத்திற்கேற்ப தனது இறையனுபவத்தை மக்கள் சுவைக்க வேண்டும்; அதன் மூலம் செயலூக்கமுள்ள கிறிஸ்தவ வாழ்வு வாழ வேண்டும் என்ற நோக்கோடு ஒவ்வொரு இயலையும் ஆசிரியர் அமைத்துள்ளார். செபத்தின் மூலமாக ஆண்டவரை அயலவரில் கண்டு நிறைவாழ்வை நோக்கிப் பயணிக்க வழிகாட்டுகின்றார். இறைவார்த்தையை வாழ்வாக்குவதன் மூலமே கிறிஸ்துவின் பணியாளர்கள் செபத்தை வாழ்வாக்க முடியும் எனக் காட்டுகின்றார். இக்கருத்துக்களை அழகாக வேதாகம ஒளியில் விளக்கியிருப்பது ஆசிரியரின் வேதாகம அறிவிற்கு இன்னுமொரு சிறந்த சான்றாகும்.

அடக்குமுறைகளும், ஆயுதக்கலாச்சாரங்களும், துன்பமும், இழப்புக்களும், மனமடிவுகளும் மலிந்திருக்கும் ஒரு காலத்தில் நாம் வாழ்கின்றோம். இக்கட்டான இக்காலகட்டத்தில் இந்நூலை படிக்கும்

ஒவ்வொருவரும் வெறுமனே வாழாதிருக்க முடியாது. விரைந்து செயல்பட, உத்வேகம் கொள்ளச்செய்யும் அளவிற்கு இந்நூல் உயிர்த்துடிப்பு உள்ளதாக அமைந்துள்ளது.

அமைதி இழந்து, ஆறுதல் தேடி அலைந்து திரிகின்ற மனிதர்கள் மத்தியிலே, நிரந்திரமான நிம்மதியையும், நிலையான அமைதியையும் தரக்கூடிய ஆண்டவரிடம் நம்மை அழைத்துச் செல்கின்ற நூலாக இந்த "வெளிச்சத்தின் வேர்கள்" அமைந்திருக்கின்றது.

யோவான் நற்செய்தியின்படி நிலை வாழ்வுக்கு எம்மை இட்டுச் செல்வது செபமே என்பதைப் புடமிட்டுக் காட்டியுள்ளதுடன் வாழ்வில் ஒவ்வொரு படிநிலைகளிலும் செபத்தின் முக்கியத்துவத்தை இந்நூல் கோடிட்டுக் காட்டுகின்றது. "என்னைப் பிரிந்து உங்களால் எதுவும் செய்ய இயலாது" (யோவான் 15:5) என்ற யேசுவின் உயிருள்ள வார்த்தைக்கு அணி சேர்த்துள்ளது இந்நூல்.

இயேசுவின் மலை அனுபவம் மக்கள் அனுபவமாக மாறிய முறையை நற்செய்தியின் ஒளியில் கையாண்டு இருப்பது கற்போர் அனைவரையும் பணிவாழ்வுக்கு தயார்படுத்தும் அனுபவமாகக் காண்கின்றேன்.

இந்நூலானது எம் கிறிஸ்தவ சமூகம் மட்டுமல்ல ஏனைய சமூகங்களும்கூட இறையுறவில் நிலைத்திருக்க வேண்டிய அவசியத்தை உணர்த்துகின்றது. இவ்வாறு இந்நூல் எல்லோர் வாழ்விலும் ஓர் விடியலைத் தோற்றுவிக்கும் விடிவெள்ளியாக அமைந்துள்ளது என்பதில் ஐயமில்லை.

வாசகரின் இறையனுபவத்தை தூசிதட்டித் தூண்டிவிடவும், அந்த இறையனுபவத்திற்குப் புதிய பரிமாணங்களைப் பதித்துப் பொலிவூட்டவும் சிறந்த கருவியாக இந்நூல் விளங்கும் என நம்புகின்றேன். நூலாசிரியர் நேசன் அடிகளாரைப் பாராட்டுவதோடு பல்துறைப் பணிகளை சிறப்பாகப் புரிந்துவரும் அவர் பணி வாழ்க, வளர்க என நெஞ்சார வாழ்த்துகிறேன்.

திருமதி. பயஸ் ரதி யுடெக்சியா பீரிஸ்
(B.A., M.Ed.)
ஆசிரியர் ஆலோசகர் (கிறிஸ்தவம்)
வலயக்கல்விப் பணிமனை,
மன்னார்

# மன்னார் மறைமாவட்ட பொதுநிலையினர் பேரவைத் தலைவர்

# திரு. அ. அந்தோனிமுத்து அவர்களின்

# பாராட்டுரை



"அகனமர்ந்து ஈதலின் நன்றே முகனமர்ந்து இன்சொல னாகப் பெறின்" (குறள் 92) என்ற தெய்வப்புலவர் திருவள்ளுவரின் குறளுக்கு இலக்கணமாய்த் திகழ்பவர் 'தமிழ் நேசன்' அடிகளார்.

"கேட்டார்ப் பிணிக்கம் தகைய வாய்ச் சொற்களால்" இன்னார் இனியார் யாவரையும் கவரும் சக்தி வாய்ந்த இந்த இளங்குரவர் எந்த விடயத்தை முன்னெடுக்கும்போதும் "எண்ணித் துணிக கருமம் துணிந்தபின் எண்ணுவம் என்ப திகழுக்கு" என்ற குறள்நெறிக்கேற்ப முன்யோசனையுடன் சிறந்த ஒழுங்கமைப்புடன் நிகழ்ச்சிகளைத் திட்டமிட்டு அழுலாக்கம் செய்வதில் வல்லவர் என்பதற்கு அவர் ஆற்றிவரும் அரும் பெரும் சேவைகள் சான்றாகும். குறிப்பாக மறையாசிரியர், கத்தோலிக்க ஆசிரியர்கள் மற்றும் பொதுநிலைப் பணியாளர்கள் போன்றோருக்கு அவர் வருடாந்தம் வெற்றிகரமாக நடாத்திவரும் கருத்தமர்வுகள் மற்றும் தியானங்கள் இதற்குச் சான்றாகும்.

முருங்கன் கிராமத்தின் புலவரும் அண்ணாவியாருமான சீனியரின் புத்திரனாகிய இவரது சிறு பராயத்தை எண்ணிப் பார்கின்றேன். நான் கற்கடந்தகுளம் பாடசாலையின் அதிபராயிருந்து முருங்கன் மாணவர் இல்லத்தின் மேற்பார்வையாளராகவும் இருந்தவேளை (1975 – 1983). 'நேசன்' துடிப்புமிக்க சிறுவனாக ஆலயத்தைச் சுற்றிச் சுற்றி வந்து கோவிற் திருப்பணிகளில் ஏனைய இளம் சிறுவர்களுக்கு முன்னுதாரணமாய்த் திகழ்ந்தமையை எண்ணி மகிழ்கின்றேன்.

ஆடல், பாடல் மற்றும் விளையாட்டுகளின்போது இப்பிஞ்சு முகத்தின் வசீகர சக்தி சொல்லில் அடங்காது! அவரது அன்பான பெற்றோரின்

அரவணைப்பு, ஆதரவு உருவாக்கம் இன்று இவரை இந்நிலைக்கு உயர்த்தியதென்றால் அது மிகையாகாது. என்றும் புன்முறுவலுடன் உரையாடும் 'சீனியண்ணனின்' முகப்பொலிவை இவரது முகத்தில் இன்றும் நான் காண்கின்றேன்.

கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக கத்தோலிக்க சஞ்சிகைகளில் மட்டுமல்ல தேசிய நாளேடுகளிலும் இவர் எழுதிய ஆக்கங்கள் பலரது பாராட்டுக்களையும் பெற்றன. இவரது எழுத்தாற்றலுக்குக் களம் அமைத்துக் கொடுத்ததில் பெரும்பங்கு வகித்தது 'மன்னா' பத்திரிகை ஆகும். கடந்த 07 ஆண்டுகளாக 'மன்னா' பத்திரிகையின் பதிப்பாசிரியராக இருந்து அதனை மகத்தாக முன்னேற்றிவரும் இவரின் களம் இவரது 'வாண்மை'யை மேலும் விருத்திசெய்ய உதவிவருகின்றது. மன்னாவின் ஆசிரிய தலையங்கத்தில் பதிப்பாசிரியராகத் தனது பெயரையும் பதித்து சமகால நிகழ்வுகளைத் தொட்டுக்காட்டி ஆணித்தரமான கருத்துக்களையும் கிறிஸ்தவ விழுமியங்களையும் அழகாக வழங்கிவரும் இவரைப் பாராட்டாமல் இருக்க இயலவில்லை.

மன்னா வெளியீட்டின் முதல் நூலாக, "தண்ணீருக்குள் தாகமா?" என்ற இறைவனின் இனிய இயல்புகளை வெளிக்கொணர்ந்த கையோடு 'வெளிச்சத்தின் வேர்கள்' என்ற 'செபம் பற்றிய புரிதல்கள்' எனும் இரண்டாவது நூலையும் வெளிக்கொணர்ந்துள்ளார்.

கிறிஸ்தவ வாழ்வு ஒளி கொடுக்கவேண்டிய வாழ்வு. அந்த வாழ்வுக்கு வேராக இருப்பது செபம். எனவேதான் 'ஒளியின் வேர்கள்' என அமைய வேண்டிய தலைப்பைத் தமக்கேயுரித்தான கவிதை நயத்தோடு 'வெளிச்சத்தின் வேர்கள்' என மகுடமிட்டு அழகுறப் படைத்துள்ளார்.

ஆசிரியர் தமது முன்னுரையில் "ஆண்டவரே எமக்குச் செபிக்க கற்றுத்தாரும்" என்று கேட்ட சீடர்களின் தன்மையைக் கூறி 'செப அனுபவத்தை' இறைஞ்சும் அவர்களின் பண்பினைப் பாராட்டுகின்றார். இறுதியாக வாழ்வின் மையமே செபம் எனக் கூறி, எதிர்பார்ப்பு, ஏக்கம் நிறைந்த இன்றைய மனிதனுக்கு 'செப ஆற்றல்' ஒன்றே வழிகாட்ட முடியும் எனக் கூறுகிறார். பொருளடக்கத்தில் செபத்தைப் 10 பிரிவுகளுக்குள்ளடக்கி அவற்றை 43 நுண்தலைப்புக்களாகப் பிரித்து அக்குவேறு ஆணிவேறாகத் தந்திருக்கும் விருந்து தித்திக்கும் திருவிருந்து!

பிறர் அறியாவண்ணம் செபிப்பதுதான் சிறந்த செபம் என்று தனிச் செபத்தின் மகிமையைக் கூறவந்தவர், குழுச்செபத்தைப்பற்றிக் கூறும் போது, "குழுவாகச் செபிக்கின்ற செபம் விரைவாக இறைவனை எட்டுகின்றது' என்கின்றார். நம் செபத்தேவைகள் மறுக்கப்படுவதற்குரிய காரணத்தைக் காட்டும் முறையை விளக்கியமை (பக்.87,118) பாராட்டத்தகுந்தது. வரிதண்டுவோரையும், பரிசேயரையும் இரு துருவங்களாகப் படம் பிடித்துக் காட்டும் அவர் (பக் 121) இவர்கள் அந்தக் காலத்திற்குரியவர்கள் மட்டுமல்ல எக்காலத்திலும் இருக்கிறார்கள் எனக்கூறி சிலசமயம் "நாம் முகம் பார்க்கும் கண்ணாடியில் கூட" தோன்றுவதுண்டு என நகைச்சுவையாகச் சுட்டிக் காட்டியது அருமை!

'மன்னிப்பு' வழங்குதல் மூன்று முறை என இருந்த யூத சட்டம் மாறி ஏழு எழுபது முறை என்ற புரட்சிக் கருத்தை வைத்தவிதம் சிறப்பானது (பக் 129). பரலோக மந்திரத்தில் "நாங்கள் அடுத்தவரை மன்னிக்கிறோம். ஆகவே எங்களையும் மன்னித்தருளும்" எனக் கூறுவதில் உண்மையுண்டா? என எம்மை ஆன்ம சோதனைசெய்து பார்க்கச் சொல்கிறார். பிறரன்போடுகூடிய செபங்களையே இறைவன் விரும்புவதாகவும் ஏனையவற்றை நிராகரிப்பார் என்றும் துணிந்து கூறுகிறார். (பக். 133).

- ✠ இறைவன் அன்பை நினைத்தால் - புகழ்ச்சி
- ✠ மனித பலவீனத்தை நினைத்தால் - மன்னிப்பு
- ✠ இறைவன் குரல் கேட்க நினைத்தால் - இறைவார்த்தை
- ✠ இறைவனிடம் விண்ணப்பம் செய்தால் - வேண்டுதல்
- ✠ இறைவனின் நன்மைத்தனம் நினைந்தால் - நன்றி

என ஐந்து பகுதிகளையும் இரத்தினச் சுருக்கமாகத் தந்தமை பாராட்டுக்குரியது. குறிப்பாக இறைவார்த்தைப் பகுதியில் 75 தலைப்புக்களைத் தொகுத்துத் தந்தமை வியந்து போற்றுதற்குரியதே.

"சும்மா நீ மட்டும் திருந்தி வாழ்ந்தால் போதாது. அராஜகம், அநீதிகளை எதிர்த்துப் போராடுதல் உட்பட நன்மைகளைச் செய்ய முன்வரவேண்டும்" என்ற விவேகானந்தரின் அறிவுரையை (பக். 171) எடுத்துக்காட்டி இதற்கான தூண்டுதல்களைத் தருவது செபம் என முத்தாய் ஒப்பிடுகின்றார்.

ஐந்தாவது நற்செய்தியா? அது என்ன? எனக்கேட்டு அது நாம் ஒவ்வொருவரும்தானே என்பதில் எவ்வளவு அர்த்தம் பொதிந்து

போய்க்கிடக்கிறது. "ஆகையால் பிறர் உங்களுக்குச் செய்யவேண்டும் என விரும்புகிறவற்றை எல்லாம் நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்" என்ற சொற்றொடர் 'பொன்விதி' என்றும் "அறநெறிகளின் எவறெஸ்ற்" என்றும் 'செபத்தின் கிரீடக்கல்' என்றும் விதந்துரைப்படுவதைச் சுட்டிக் காட்டியுள்ளார்.

கத்தோலிக்க மக்கள் மட்டுமல்ல மனிதநேயங்கொண்ட எச்சமயத்தவரும் இதனைப் பயன்படுத்தக்கூடிய வகையில், விவிலியப் பகுதி, அறிஞர்களின் கோட்பாடுகள், ஏனைய சமயக் கோட்பாடுகள், சினிமாப் பாடல்கள் ஆகியவற்றை எடுத்துக்காட்டாகப் பயன்படுத்தியமை இவரது பல்சமயப் பரந்த அறிவையும் அனுபவத்தையும் எடுத்துக்காட்டுகின்றது.

செபவாழ்வுக்கு இலக்கணம் வகுத்து நம் காலத்திலே வாழ்ந்து காட்டிய அன்னை திரேசாவின் அனுபவப் பகிர்வுகள் செபத் தாகம் உள்ளவர்களுக்குச் சுனைநீராகப் பயன்படுகின்றது என்பதை அழகுற வடித்துள்ளார் (பக்.181).

நிறைவாக, இச்செப ஆண்டில் செபவாழ்வை ஆழப்படுத்த, ஊக்குவிக்க விரும்பும் அன்பு நெஞ்சங்களுக்கு இந்நூல் 'அமுதசுரபி'யாகி இறையன்பு எனும் திருவமுதை அள்ளி வழங்கியுள்ளதெனக்கூறி, 'செயற்கரிய செய்த' பெரியார் தமிழ் நேசன் அடிகளாரை வாழ்த்தி வணங்கி விடைபெறுகின்றேன்.

அ. அந்தோனிமுத்து
ஓய்வுபெற்ற உதவிக்கல்விப் பணிப்பாளர்,
மன்னார் மறைமாவட்ட
பொதுநிலையினர் பேரவைத் தலைவர்
மன்னார்.

# இதயத்திலிருந்து சில ஈரவரிகள்....!

'வெளிச்சத்தின் வேர்கள்' வித்தாக விழுந்து, வீரியமுள்ள வேர் நிறைந்த விருட்சமாக உருவெடுத்தது மூன்றே மூன்று மாதங்களுக்குள்தான். ஆச்சரியம்; ஆனால் உண்மை!

மறைமாவட்டத்தின் செப ஆண்டு நிகழ்ச்சித்திட்டத்தில் என்னை முற்றாக இணைத்து செபம் தொடர்பான பல்வேறு உரைகளையும், கருத்தமர்வுகளையும், தியானங்களையும் நெறிப்படுத்திவந்த என்னிடம் எனது நண்பர்கள் சிலர் எனக்கு வழங்கிய ஆலோசனையின் விளைவே இந்நூல்.

அவர்கள் வழங்கிய ஆலோசனையின் வழியில் நானும் சிந்தித்தேன் செயலில் இறங்கினேன். செப ஆண்டு முடிவடைவதற்குள் திருநிலையினர், பொதுநிலையினர் ஆகிய அனைத்துப் பிரிவினரும் பயன்பெறும் வகையில் செபத்தை மையப்படுத்திய இந்நூலை ஆக்கும் முயற்சியில் துரித கதியில் ஈடுபட்டேன். எனது இந்த முயற்சியில் எனக்கு ஆக்கம் தந்து ஊக்கம் ஊட்டிய எல்லாம் வல்ல நல்ல இறைவனுக்கு எனது முதல் நன்றி!

எனது திசையெங்கும் வழிகாட்டியாக நின்று, ஒரு தந்தைக்குரிய அன்போடும் அக்கறையோடும் என்னை நெறிப்படுத்தி, ஆலோசனைகள் வழங்கி, எனது பணிக்களப் பயணத்தில் என்னை ஊக்கமூட்டி இந்நூலுக்கு இனிய ஆசியுரை வழங்கி மகிழ்ந்து நிற்கும் என் அன்புக்குரிய ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை அவர்கள்......

இந்நூலை அச்சிடலாம் என்று பச்சைக்கொடி காட்டிய செயல்துடிப்புள்ள இளம் குரு, மன்னார் மறைமாவட்டத்தின் குருமுதல்வர் அருட்பணியாளர் ஏ. விக்ரர் சோசை அடிகளார் ........

எனது சிறுபராயத்தில் இறை அழைத்தலின் பாதையில் என்னை உற்சாகப்படுத்தி, சிறிய குருமடம் அனுப்பிவைத்து, இன்றுவரை அன்போடும் அக்கறையோடும் என்னைத் தட்டிக்கொடுத்து, எனது வளர்ச்சியில் மகிழ்ச்சி காணுகின்றவராய் இந்நூலுக்குப் பாராட்டுரை வழங்கிய மன்னார் சிறிய குருமட அதிபர் அருட்பணியாளர் பி. யேசுறாஜா அடிகளார்......

எனது சிறுபராயத்து நினைவுகளை இரைமீட்டு, இந்நூலின் சிறப்பினைப் புடமிட்டுக்காட்டி சிறந்த பாராட்டுரை வழங்கிய மன்னார் மறைமாவட்டப் பொதுநிலையினர் பேரவைத் தலைவரும் இளைப்பாறிய முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளருமாகிய திரு. ஏ. அந்தோனிமுத்து அவர்கள் .........

குறுகிய கால அவகாசத்தில் நெறிபிறழாத நல்ல அணிந்துரை வழங்கி இந்நூலுக்கு அணிசேர்த்திருக்கும் மன்னார் வலயக் கல்விப் பணிமனையின் கிறிஸ்தவப்பாட ஆசிரிய ஆலோசகர் திருமதி பயஸ் ரதி யுடேக்சியா பீரிஸ் அவர்கள் .......

எனது இந்த நூலாக்க முயற்சியில் நான் சோர்வுறும்போதெல்லாம் சுகம் விசாரித்து, என் முயற்சியில் அயர்சியடையாது தொடர்ந்து முன்னேறத் தூண்டுதல் தந்த தம்பி, அருட்பணியாளர் அன்புராசா....

எனது ஜெஸ்தமனி அனுபவதில் என்னோடு விழித்திருந்து இந்நூலை சிறப்பான முறையில் கணனியில் எழுத்துருவாக்கிய எனது அன்புக்குரிய மன்னா பத்திரிகைப் பணியாளர்கள் செல்வி அ. தர்ஷினி, (இவரே நூலின் அட்டைப் படத்தையும் உள் பக்கங்களையும் வடிவமைத்தவர்) மற்றும் செல்வி கவிதா; தமிழ்த் திருத்தம் செய்து உதவிய அருட்சகோதரி பெனிக்னஸ், செல்வி சி. கொன்சி குரூஸ், செல்வி புவனேஸ், செல்வி அ. ரேகா ஆகியோர் ...........

எனது இந்நூல் குழந்தையை குறுகிய காலத்தில் மணவாட்டியாக்கி அலங்கரித்துத்தந்த கொழும்பு நந்தா பிறின்ரர்ஸ் அச்சகத்தினர்..... எனது எழுத்துப் பணியில் என்னை ஊக்குவித்து உற்சாகப்படுத்தும் என் பாசமுள்ள சகோதர சகோதரிகள்...... என்னைப் பாராட்டித் தட்டிக்கொடுக்கும் என் குருத்துவ துறவற நண்பர்கள் மற்றும் பொதுநிலையினர் ..... உங்கள் அனைவருக்கும் ........

என் இதயத் தளத்தில் அலையாக எழந்துவரும் ஈரவரிகளால் நான் கூறும் ஒரே சொல் - நன்றி!

என்றென்றும்<br>
தோழமையுடன்,<br>
தமிழ் நேசன்

# பொருளடக்கம்

முன்னுரை -

**1. செபம் என்றால் என்ன?**
1.1. இதயம் இறைவனைத் தேடுவது செபம்
1.2. இறை பிரசன்னத்தில் இன்புற்றிருப்பது செபம்
1.3. இறை மனித உரையாடலே செபம்
1.4. நிகழ்காலத்தில் வாழ்வது செபம்

**2. ஏன் செபிக்க வேண்டும்?**
2.1. வாழ்வை வசப்படுத்திக்கொள்ள
2.2. வல்லமையை வசீகரிக்க
2.3. அறிவெல்லாம் கடந்த அமைதிபெற
2.4. சவால்களைச் சந்தித்து எதிர்நீச்சல்போட

**3. யார் வழியாகச் செபிக்க வேண்டும்?**
3.1. இயேசுவின் பெயரால் செபிக்க வேண்டும்
3.2. ஆவியால் உந்தப்பட்டுச் செபிக்க வேண்டும்
3.3. புனிதர்களின் பரிந்துரையோடு செபிக்க வேண்டும்
3.4. அப்பா அனுபவத்தில் செபிக்க வேண்டும்

**4. எங்கு செபிக்க வேண்டும்?**
4.1. தனிமையில் செபிக்க வேண்டும்
4.2. குழுவில் செபிக்க வேண்டும்
4.3. குடும்பத்தில் செபிக்க வேண்டும்
4.4. கோவிலில் செபிக்க வேண்டும்

**5. எப்போது செபிக்க வேண்டும்?**
5.1. காலையில் செபிக்க வேண்டும்
5.2. இரவில் செபிக்க வேண்டும்
5.3. வாழ்வின் முக்கிய கட்டங்களில் செபிக்க வேண்டும்
5.4. துன்ப வேளையில் செபிக்க வேண்டும்

**6. எப்படிச் செபிக்க வேண்டும்?**

6.1. மனம் ஒன்றித்துச் செபிக்க வேண்டும்
6.2. அலட்டாமல் அளவோடு செபிக்க வேண்டும்
6.3. விழித்திருந்து செபிக்க வேண்டும்
6.4. இறைசித்தம் நிறைவேறச் செபிக்க வேண்டும்

**7. எந்த நிலையில் செபிக்க வேண்டும்?**

7.1. முழங்காலில் இருந்து செபிக்க வேண்டும்
7.2. கரங்களை உயர்த்திச் செபிக்க வேண்டும்
7.3. அழுது புலம்பிச் செபிக்க வேண்டும்
7.4. உண்ணா நோன்பிருந்து செபிக்க வேண்டும்

**8. செப மனநிலைகள்**

8.1. விடாப்பிடியாகச் செபிக்க வேண்டும்
8.2. நம்பிக்கையோடு செபிக்க வேண்டும்
8.3. மனம் தளராமல் செபிக்க வேண்டும்
8.4. தாழ்ச்சியோடு செபிக்க வேண்டும்
8.5. பிறரன்போடு செபிக்க வேண்டும்.

**9. செபத்தின் பல்வேறு வகைகள்**

9.1 புகழ்ச்சிச் செபம்
9.2 மன்னிப்புச் செபம்
9.3 இறைவார்த்தைச் செபம்
9.4 வேண்டுதல் செபம் -
9.5 நன்றிச் செபம்

**10. செபமும் செயற்பாடும்**

10.1 மலை அனுபவமா? மக்கள் அனுபவமா?
10.2 செயற்பாட்டை மையப்படுத்திய செபம்
10.3 ஆண்டவரை அயலவரில் காண்பது செபம்
10.4. வார்த்தையை வாழ்வதே செபம்
10.5 பணி வாழ்வுக்கு பலம் சேர்ப்பது செபம்

# முன்னுரை

# ஆண்டவரே எங்களுக்கு செபிக்க கற்றுத்தாரும்!

"இயேசு ஓரிடத்தில் இறைவனிடம் வேண்டிக்கொண்டிருந்தார். அது முடிந்ததும் அவருடைய சீடர்களுள் ஒருவர் அவரை நோக்கி, 'ஆண்டவரே, யோவான் தம் சீடருக்கு இறைவனிடம் வேண்டக் கற்றுக்கொடுத்ததுபோல் எங்களுக்கும் கற்றுக்கொடும்' என்றார்" (லூக்.11:1).

இயேசுவின் சீடர்கள் இயேசுவிடம் தங்களுக்கு செபிக்கக் கற்றுத்தரும்படி கேட்கின்றார்கள். இந்த வேண்டுகோள் மிகவும் முக்கியமான ஒன்று. இந்த வேண்டுகோளைச் சற்று விரிவாக ஆராய்வது இந்த வேண்டுகோளின் முக்கியத்துவத்தை நாம் புரிந்துகொள்ள உதவியாக இருக்கும்.

உண்மையில் அவர்கள் இயேசுவிடம் எதை எதையெல்லாமோ கற்றுத்தரும்படி கேட்டிருக்கலாம். ஆனால் ஏன் அவர்கள் எதையும் கேட்காமல் செபிக்க மட்டும் கற்றுத்தரும்படி கேட்கின்றார்கள்? அதற்குக் காரணம் இருந்தது!

### பேச்சு வன்மையைக் கற்றுத்தரும்படி கேட்கவில்லை!

இயேசுவின் சீடர்கள் இயேசுவின் ஆளுமையைப் பார்க்கின்றார்கள். அவர் சிறந்த பேச்சுவன்மை மிக்கவராக இருப்பதைக் காண்கிறார்கள். "அவர் அவர்களுடைய தொழுகைக் கூடங்களில் கற்பித்துவந்தார். எல்லாரும் அவரைப்பற்றி பெருமையாகப் பேசினர்" (லூக்.4:15). "அவர் வாயிலிருந்து வந்த அருள்மொழிகளைக் கேட்டு வியப்புற்று, .... எல்லாரும் அவரைப் பாராட்டினர்" (லூக்.4:22).

"எப்படிப் பேசுகிறார் பாருங்கள்! அதிகாரத்தோடும் வல்லமையோடும் தீய ஆவிகளுக்குக் கட்டளையிடுகிறார்; அவையும் போய் விடுகின்றனவே! என்று ஒருவரோடு ஒருவர் பேசிக்கொண்டனர். அவரைப் பற்றிய பேச்சு சுற்றுப்புறமெங்கும் பரவியது." (லூக்.4:36,37) "அவருடைய போதனையைக் குறித்து அவர்கள் வியப்பில் ஆழ்ந்தார்கள்"(லூக்.4:32).

இப்படியாக இயேசுவின் போதனைகளைக் குறித்து பொதுமக்கள் அபிப்பிராயம் சிறப்பாக இருந்தபோதிலும் "இந்தப் பேச்சு வல்லமையை எங்களுக்குக் கற்றுத்தாரும்" என்று சீடர்கள் இயேசுவைக் கேட்கவில்லை.

## அற்புதங்களை ஆற்றக் கற்றுத்தரும்படி கேட்கவில்லை!

மிகுந்த வல்லமையோடு அற்புதங்கள் அருங்குறிகளைச் செய்பவராக சீடர்கள் இயேசுவைப் பார்க்கின்றார்கள். "இதைக் கண்ட யாவரும் மெய்மறந்தவர்களாய்க் கடவுளைப் போற்றிப் புகழ்ந்தனர். அவர்கள் அச்சம் நிறைந்தவராய், 'இன்று புதுமையானவற்றைக் கண்டோம்! என்று பேசிக்கொண்டார்கள்" (லூக்.5:26).

"அவரிடமிருந்து வல்லமை வெளிப்பட்டு அனைவர் பிணியையும் போக்கியதால், அங்கு திரண்டிருந்த மக்கள் யாவரும் அவரைத்தொட முயன்றனர்"(லூக்.6:19). இப்படியாக இயேசுவின் அற்புதங்களை அடையாளங்களை கண்டும் கேட்டும் இருந்தவர்கள் இந்தப் புதுமைகளைச் செய்ய எங்களுக்கு கற்றுத்தாரும் என்று கேட்கவில்லை.

## எதைக் கற்றுத்தரும்படி கேட்கின்றார்கள்?

ஆனால் அவர்கள் எதைக் கற்றுத்தரும்படி கேட்கின்றார்கள் என்பது மிகவும் சுவாரசியமானது. இயேசுவினுடைய வியக்கவைக்கும் பேச்சாற்றலைக் கற்றுத்தரும்படி கேட்காமல், அதிசயிக்கத்தக்க அவருடைய குணப்படுத்தும் வல்லமையைக் கற்றுத்தரும்படி கேட்காமல் இவை அனைத்தையும் அவர் செய்வதற்கு அவருக்கு ஆற்றலையும், தூண்டுதலையும் அளித்த அவருடைய *செப அனுபவத்தையே* கற்றுத்தரும்படி கேட்கிறார்கள்.

"இயேசு ஓரிடத்தில் இறைவனிடம் வேண்டிக்கொண்டிருந்தார். அது முடிந்ததும் அவருடைய சீடர்களுள் ஒருவர் அவரை நோக்கி, "ஆண்டவரே யோவான் தம் சீடருக்கு இறைவனிடம் வேண்டக் கற்றுக்கொடுத்ததுபோல் எங்களுக்கும் கற்றுக்கொடும்" என்றார். (லூக்.11:1)

## இயேசுவின் செபவாழ்வை உற்றுநோக்கும் சீடர்கள்

செபிக்கக் கற்றுத்தரும்படி இயேசுவிடம் கேட்குமுன்னர், சீடர்கள் இயேசுவின் வாழ்க்கையை உற்றுநோக்கிப் பார்க்கின்றனர். இயேசுவின் செபவாழ்வு அனுபவம் அவர்களுக்குத் தெளிவாகத் தெரிகின்றது.

லூக்கா நற்செய்தியாளர் தனது நற்செய்தியின் நடுப்பகுதிவரை அதாவது 11ம் அதிகாரம் மட்டும் இயேசுவின் செப அனுபவத்தை தொடர்ச்சியாக சுட்டிக்காட்டிக்கொண்டே வருகின்றார்.

1. லூக்.3:21 இயேசு திருமுழுக்குப் பெற்று இறைவனிடம் வேண்டிக்-கொண்டிருக்கும்போதே தூய ஆவி அவர்மேல் இறங்கி வருகிறது.

2. லூக்.4:1-13 இயேசு நாற்பது நாட்கள் அலகையினால் சோதிக்கப்படுவதற்காக பாலைவனத்தில் செபத்தில் இருக்கின்றார்.

3. லூக்.4:42 பொழுதுவிடியும் வேளையில் இயேசு தனிமையான ஓர் இடத்திற்குப் புறப்பட்டுச் செல்கிறார். செபிப்பதற்காகவே அவர் சென்றிருக்க வேண்டும்.

4. லூக்.5:16 இயேசுவோ ஆள் நடமாட்டம் இல்லாத இடங்களுக்குச் சென்று தனித்திருந்து இறைவனிடம் வேண்டிவந்தார்.

5. லூக். 6:12 அந்நாளில் அவர் வேண்டுவதற்காக ஒரு மலைக்குப் போனார். அங்கு கடவுளிடம் வேண்டுதல் செய்வதில் இரவெல்லாம் செலவிட்டார்.

6. லூக். 9:10 இயேசு திருத்தூதர்களை மட்டும் கூட்டிக்கொண்டு தனித்திருப்பதற்காகப் பெத்சாய்தா என்னும் நகருக்குச் சென்றார்.

7. லூக்.9:18 இயேசு தனித்து இறைவனிடம் வேண்டிக்கொண்டிருந்தபோது சீடர் மட்டும் அவரோடு இருந்தனர்.

8. லூக்.9:28 இயேசு பேதுருவையும் யோவானையும் யாக்கோபையும் கூட்டிக்கொண்டு இறைவனிடம் வேண்டுவதற்காக ஒரு மலைமீது ஏறினார். அவர் வேண்டிக்கொண்டிருந்தபோது அவரது முகத்தோற்றம் மாறியது.

இவ்வாறு எட்டுத் தடவைகள் (அதாவது 3ம் அதிகாரம் தொடக்கம் 9ம் அதிகாரம் வரை) லூக்கா இயேசுவின் செப அனுபவத்தை தொடர்ச்சியாக குறித்துக்காட்டுகிறார். இதன் பின்னர்தான் சீடர்கள் இயேசுவிடம் தங்களுக்கும் செபிக்கக் கற்றுத்தரும்படி கேட்கின்றார்கள்.

## அனைத்திற்கும் அடிப்படை செபமே!

ஆம்! அச்சீடர்கள் ஆழமாகச் சிந்தித்துப் பார்க்கிறார்கள். இயேசுவின் செப வல்லமைதான் அவரை எல்லா வகையிலும் வல்லவராக்கியது. சிறப்பாகப் பேசவும். வல்லமையோடு அற்புதங்கள் செய்யவும் அவருக்கு ஆற்றல் கிடைத்தது செபத்தினால்தான் என்பதை அவர்கள் தேர்ந்து தெளிகின்றார்கள். இயேசுவைப்போல நன்றாகச் செபிக்கத் தெரிந்தால் தம்மாலும் சிறந்த பேச்சாற்றலை வெளிப்படுத்த முடியும்; தம்மாலும்

அற்புதங்களைச் செய்ய முடியும் என்பதை அவர்கள் தேர்ந்து, தெளிந்து கொண்ட பின்னர்தான் செபிக்கக் கற்றுத்தரும்படி கேட்கின்றார்கள்.

ஆகவே நாமும் செபத்தின் வல்லமையை உணர்வோம். இறைவனிடம் அதைத்தாரும் இதைத்தாரும் என்று கேட்காமல் எல்லா வல்லமையையும் பெறுவதற்குக் கால்வாயாக இருக்கக் கூடிய செபத்தைக் கற்றுத்தரும்படி கேட்போம்.

## நாம் செபிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும்

"இன்று நொடிக்கு நூற்றுக்கணக்கான மாற்றங்கள் மனித உள்ளத்தை ஆட்டி அலைக்கழிக்கின்றன. ஆதலால் மற்ற எல்லாக் காலத்தையும்விட இக்காலத்தில் உள்ளார்ந்த செபப்பண்பும், பயிற்சியும் தேவைப்படுகின்றன. ஆழ்ந்த இடையறாத செப வாழ்வும், விசுவாச வாழ்வும் அன்பு வாழ்வும் இல்லாவிட்டால் நாம் கிறிஸ்தவராக இருக்க முடியாது. இவையின்றி புத்துயிரும், மறுமலர்ச்சியும் பெற்றுவரும் திருவழிபாட்டில் பயனுறு முறையில் ஞானத்துடன் பங்குபெறல் இயலாது. எங்கும் பேசப்படும் உயர் கிறிஸ்தவப் பண்பிற்கு சாட்சிபகர முடியாது. பயணம் செய்யும் திருச்சபையோடு சேர்ந்து சிந்திக்கவோ, செயலாற்றவோ துன்பப்படவோ, நம்பிக்கைகொள்ளவோ முடியாது. எனவே நாம் செபிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும்" என்று கூறுகின்றார் மறைந்த திருத்தந்தை 6ம் சின்னப்பர்.

இயந்திரமாகிக்கொண்டிருக்கும் உலகில் மனிதன் முழுமுதற் பொருளாம் இறைச் சிந்தனையின்றித் துன்பம், துயரம், தோல்வி, கஸ்டம், எதிர்ப்புக்கள் ஏமாற்றங்கள் வரும்பொழுது மனநிம்மதியை இழந்து நிலை தடுமாறுகின்றான். எனவே செபப்பண்பும் பயிற்சியும் மிக அவசியமாகின்றன.

## வாழ்வின் மையம் செபம்

முழு மனித வளர்ச்சிக்கும் இறையனுபவத்திற்கும் அடிப்படையாக இருப்பது செபம். இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையே உறவை உருவாக்குவது செபம். மற்ற எல்லா உயிர்களுக்கும், உறவுகளுக்கும், தொடர்புகளுக்கும் வேரோட்டமாக அமைவது செபம்.

மனிதன் அன்றாடம் ஆற்றும் எல்லா ஆக்கச் செயல்களுக்கும் ஆற்றல் மையமாக இருப்பது செபம். பலவிதமான எதிர்பார்ப்புகளும் ஏக்கங்களும் நிறைந்த இன்றைய மனித வாழ்வு சிறப்படைய செப ஆற்றல் ஒன்றே வழிகாட்ட முடியும்.

# இயல் 1

# செபம் என்றால் என்ன?


1. இதயம் இறைவனைத் தேடுவது செபம்
2. இறைபிரசன்னத்தில் இன்புற்றிருப்பது செபம்
3. இறை மனித உரையாடலே செபம்
4. நிகழ்காலத்தில் வாழ்வது செபம்

*காற்றைச் சுவாசிப்பதற்கு யார் கட்டளை தரவேண்டும்?*
*உண்ணுவதற்கு யாரிடமிருந்து உத்தரவு வாங்க வேண்டும்?*
*அன்பு செய்வதற்கு யாரிடமிருந்து ஆணை பெறவேண்டும்?*
*பாசம் காட்டுவதற்கு யார் பரிந்துரைக்க வேண்டும்?*
*அதுபோலதான் செபம் செய்வதும்!*
*இயல்பான - இனிமையான - இதயபூர்வமான*
*ஓர் இறையனுபவ நிகழ்ச்சியே செபம்!*

*இதுதான் செபம் என்று யாரும் வரையறை செய்ய முடியாது. ஆனால் நமது மனித விளக்கத்திற்காக இவை இவை எல்லாம் செபம் என்று சுட்டிக்காட்டுவது செபத்தைப் புரிந்துகொள்வதற்கு இலகுவாக இருக்கும்.*


*வாழ்வின் பயணத்தில் திக்கற்ற மனிதனுக்கு வழிகாட்டி செபம். துன்பத்தில் துவளும் நெஞ்சங்களுக்கு ஆறுதலின் பிறப்பிடம் செபம். மனம் வலிமையற்று வாழ்வை இழந்து பரிதவிக்கும் மனிதனுக்கு நித்திய வாழ்வை அளிக்கும் வாய்க்கால் செபம்.*
*இருள் சூழ்ந்த உலகிலே அருள் வாழ்வைப் பெற்றுத் தருவது செபம். நம்மை இறைச் சாயல்கொண்ட மறுகிறிஸ்துவாக மாற்றுவது செபம்!*








# இதயம் இறைவனைத் தேடுவது செபம்!




"என்னைப் பொறுத்தமட்டில் இதயம் இறைவனைத் தேடுவது செபம். விண்ணை நோக்கி நம் கண்களைத் திருப்புவது செபம். மகிழ்ச்சியோடுகூடிய அன்பின் கூக்குரலே செபம்" என்கிறார் குழந்தை இயேசுவின் புனித சின்னத் தெரேசா. படைப்புப் பொருளாகிய மனித இதயம், படைத்தவரைத் தேடுவது இயல்புதானே!

இதே உணர்வைத்தான் திருப்பாடலின் ஆசிரியரும் உணர்ந்து உரைக்கின்றார். "கடவுளே! நீரே என் இறைவன்! உம்மையே நான் நாடுகின்றேன். என் உயிர் உம்மீது தாகம் கொண்டுள்ளது... நீரின்றி வறண்ட தரிசு நிலம்போல என் உடல் உமக்காக ஏங்குகிறது. உம் ஆற்றலையும் மாட்சியையும் காணவிழைந்து உம் தூயகம் வந்து உம்மை நோக்குகின்றேன்" (தி.பா.63:1-2). "கலைமான் நீரோடைகளுக்காக ஏங்கித் தவிப்பதுபோல் கடவுளே! என் நெஞ்சம் உமக்காக ஏங்கித் தவிக்கின்றது" (தி.பா.42:1). இறைவனுக்கான ஏக்கம் எல்லா மனிதருக்குள்ளும் இயல்பாகவே உள்ள ஒரு ஏக்கமாகும்.

இறைவன் நம் வாழ்வின் ஆதாரம் என்பதால் அவரை நம் நெஞ்சம் இயல்பாகவே தேடுகின்றது. அதனால்தான், "எண்ணெயின்றி விளக்கெரியாது, இறைவனின்றி மனிதன் வாழமுடியாது" என்கிறார்

இராமகிருஸ்ண பரமஹம்சர். "நம்முடைய இதயத்தையும் எண்ணங்களையும் இறைவன்பால் எழுப்புவது செபம். அவரிடமிருந்து நன்மையானவற்றை வேண்டுவது செபம்" என்கிறார் புனித யோவான் தம்சேன் என்ற புனிதர்.

## இப்போதும் எப்போதும் இறைவனைத் தேடலாம்



"ஒருவரது மனதையும் இதயத்தையும் கடவுளை நோக்கி எழுப்புவது செபம். விசுவாசத்தை நோக்கிப் பார்ப்பது செபம். சோதனையிலும் மகிழ்ச்சியிலும் உன்னதத்தை நோக்கி எழுப்பிடும் அன்புக்குரல் செபம். கடவுள்மீது கொண்ட அன்பின் வெளிப்பாடு செபம். இறைத் தந்தையான கடவுள், இறைமகனான கடவுள், தூய ஆவியானவரான கடவுள் இவர்கள்மீது கொண்டுள்ள நம்பிக்கையின் குரல் செபமாகும்" என கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வி நூல் (CCC- இல.2559) கூறுகின்றது.

செபவாழ்வு என்பது நமது இதயத்தை இறைவன்பால் எழுப்புவது. இத்தகைய செபவாழ்வு துறவற மடங்களில் மட்டும்தான் சாத்தியமானது என்று அல்ல. உருக்குலைய உழைக்கும்போதும், உறங்கும்போதும், நண்பர்களோடு, அன்பர்களோடு உரையாடும்போதும், ஓய்வுபெறும்போதும், மகிழ்ச்சிக் கடலில் மகிழ்ந்தாடும்போதும், அமைதியற்றுத் தவிக்கும்போதும்கூட இதயம் இறைவனைத் தேட முடியும்.

நம் அன்றாட அலுவல்களுக்கிடையிலும் நாம் செபிக்கமுடியும்; செபவாழ்வு வாழ முடியும். நமது ஒவ்வொரு நினைவு, சொல், செயல் அனைத்தையும் இறைவனை நோக்கியதாக அமைக்க முடியும். புனித பவுல் கூறுவதுபோல், "நீங்கள் உண்டாலும் குடித்தாலும் எதைச் செய்தாலும், எல்லாவற்றையும் கடவுளுடைய மாட்சிமைக்காகவே செய்யுங்கள்" (1கொரி.10:31). அவ்விதம் செய்யும்பொழுது உண்மையிலே நாம் செபவாழ்வு வாழ்கிறோம். இறைவன்பால் நம் இதயத்தை எழுப்புகிறோம்.

## சந்திப்பில்தான் சரித்திரங்கள் உருவாகின்றன!

ஒரு நாள் மாலை நேரத்தில் சாலை ஓரத்திலே முடவனும் குருடனும் சந்தித்தார்கள். முடவனால் நடக்க முடியவில்லை. எனவே சாலையைக் கடக்க இயலவில்லை. குருடனுக்குப் பார்வை இல்லை, எனவே சாலையைக் கடந்து செல்ல இயலவில்லை. முடவன் குருடனைப் பார்த்து சொன்னான், "நீ என்னைத் தூக்கிக்கொள், நான் உனக்கு வழி காட்டுகிறேன்" குருடன் சம்மதித்தான். இருவருமே சாலையைக் கடந்து சென்றார்கள். இருவருடைய சந்திப்பிலே வழி பிறந்தது.


இருவருடைய சந்திப்பிலேதான் வாழ்வே உதயமாகிறது.
பெற்றோர் பிள்ளைகளைச் சந்திக்கிறார்கள் - பாசம் பிறக்கிறது.
அண்ணன் தங்கையைச் சந்திக்கிறான் - அன்பு பிறக்கிறது.
நண்பன் நண்பனைச் சந்திக்கிறான் - நட்பு பிறக்கிறது.
ஆசிரியர் மாணவனைச் சந்திக்கிறார் - அறிவு பிறக்கிறது.
வைத்தியர் நோயாளியைச் சந்திக்கிறார் - நலம் பிறக்கிறது.
காதலன் காதலியைச் சந்திக்கின்றான் - காதல் பிறக்கின்றது

நாமும் இறைவனைத் தேடுகின்றோம்; செபத்தில் அவரைச் சந்திக்கின்றோம். அச்சந்திப்பே ஒரு செப அனுபவம்தான்! இருவருடைய சந்திப்பில் எண்ணற்ற நன்மைகள் ஏற்படுகின்றன. கருவுற்றிருந்த எலிசபெத்தைக் கன்னிமரியா சந்தித்தார்; எலிசபெத்தின் குழந்தை மகிழ்ச்சியில் துள்ளியது. இயேசுவை பார்வையற்ற மனிதன் சந்தித்தான்; பார்வை பெற்றான். இயேசுவைத் தொழுநோயாளி சந்தித்தான்; நலமடைந்தான். இயேசுவை மகதலா மரியா சந்தித்தாள்; பக்தையானாள். இயேசுவைத் திருத்தூதர்கள் சந்தித்தார்கள்; புதுவாழ்வு பெற்றார்கள். இறைவனை நம் இதயம் தேடி அவரைச் சந்தித்தால் நம் வாழ்வும் வளமை பெறும்; முழுமை பெறும்!



## 1.2

# இறை பிரசன்னத்தில் இருப்பது செபம்




"இறைவனின் பிரசன்னத்தை உணர்வதுதான் செபம். இறைபிரசன்னமே செபத்தின் உறைவிடம்" என்கிறார் புனித லிகோரியார்.

"இயேசுவும் சீடர்களும் தொடர்ந்து சென்று கொண்டிருந்தார்கள். அப்போது இயேசு ஓர் ஊரை அடைந்தார். அங்கே பெண் ஒருவர் அவரைத் தம் வீட்டில் வரவேற்றார். அவர் பெயர் மார்த்தா. அவருக்கு மரியா என்னும் சகோதரி ஒருவர் இருந்தார். மரியா ஆண்டவருடைய காலடி அருகில் அமர்ந்து அவர் சொல்வதைக் கேட்டுக்கொண்டிருந்தார். ஆனால் மார்த்தா பற்பல பணிகள் புரிவதில் பரபரப்பாகி இயேசுவிடம் வந்து, 'ஆண்டவரே, நான் பணிவிடை செய்ய என் சகோதரி என்னைத் தனியே விட்டுவிட்டாளே, உமக்குக் கவலையில்லையா? எனக்கு உதவிபுரிய அவளிடம் சொல்லும்' என்றார். ஆண்டவர் அவரைப் பார்த்து, 'மார்த்தா, மார்த்தா! நீ பலவற்றைப் பற்றிக் கவலைப்பட்டுக் கலங்குகிறாய். ஆனால் தேவையானது ஒன்றே. மரியாவோ நல்ல பங்கைத் தேர்ந்தெடுத்துக்கொண்டாள். அது அவளிடமிருந்து எடுக்கப்படாது' என்றார்" (லூக்.10:38-42).

மார்த்தா தேர்ந்துகொண்ட நல்ல பங்கு என்ன? ஆண்டவர் இயேசுவின் காலடியில் - பிரசன்னத்தில் அமர்ந்திருந்து அவருக்குச்

செவிகொடுத்ததாகும். ஆம், செபம் என்பது இறைப்பிரசன்னத்தை உணர்வதும், அப்பிரசன்னத்தில் நிலைத்திருப்பதும் ஆகும். “இயேசு உன் பாதத்தில் இருப்பது எனக்கு ஆனந்தம் தருகின்றது - பேர் ஆனந்தம் தருகின்றது” எனப் பாடி பரவசிக்கும் அனுபவமாகும்.

## ஏதும் குடும்பக் கஸ்ரமா...?

பங்குக் குருக்களின் பாதுகாவலர் புனித மரிய வியான்னி. அவரது வாழ்வில் நடந்த ஒரு உண்மைச் செப அனுபவம் இது. அவர் ஒரு பங்கில் பங்குத்தந்தையாக இருந்தபொழுது தினமும் மாலை வேளையில் கோவிலில் அமர்ந்து செபிப்பாராம். அப்படிச் செபிக்கும்பொழுது தினமும் ஒரு வயதானவர் கோவிலுக்கு வந்து நற்கருணைப் பேழைமுன் அமர்ந்து செபிப்பதைக் கவனித்திருக்கின்றார். இந்நிகழ்ச்சி பல மாதங்கள் நடந்திருக்கின்றது. ஒருநாள் புனித மரிய வியான்னி அந்த முதியவரை அழைத்து, “ஐயா நீங்கள் தினமும் கோவிலில் அமர்ந்து செபிக்கின்றீர்களே ஏதும் குடும்பக் கஸ்ரமா? என்ன... இறைவனிடம் அப்படிப் பேரம் பேசுகின்றீர்கள்?” என்று கேட்க முதியவரோ, “பாதர் நான் எதுவும் பேசுவதில்லை. நற்கருணை இயேசுவை நான் பார்க்க அவர் என்னைப் பார்ப்பார் அவ்வளவுதான்” என்றாராம். எவ்வளவு அருமையான செபம்!

## தாய் மடியில் தவழும் குழந்தையாய் ...!



செபம் என்பது தாய் மடியில் தவழும் குழந்தையைப்போல இறைவனோடு ஒன்றித்திருப்பது. செபம் என்பது இறை ஆவியால் முழுமையாக ஆட்கொள்ளப்படுவது. செபம் என்பது இறைவன் முன்பு தன் நிலை மறந்து அவர் நிலை அடையத் துடிப்பது. செபம் என்பது அத்வைத மார்க்கம் குறிப்பிடுவதுபோல குறைவுள்ள ஆத்மா நிறைவான பரமாத்மாவில் சங்கமிப்பது. செபம் என்பது புத்த மத ‘ஜென் வழி’ குறிப்பிடுவதுபோல ‘சும்மா’ இருப்பது.

புத்தரின் சீடர் ஒருமுறை, "சாதாரண சித்தார்த்தனாக இருந்த நீங்கள் புத்தராக மாறியது எப்படி?" என்று கேட்டாராம். அப்போது புத்தர், "என் வழி மிகச்சுலபமான வழி. ஆனால் பலருக்கு அது மிகக்கடினமான வழி. அவ்வழி என்னவென்றால் நான் போதி மரத்தடியில் 'சும்மா' (BEING CONSICIOUS) இருந்தேன்." என்றாராம். எனவே கடவுளை உணர்ந்து அப்பேரமைதியில் நிலைத்திருப்பது என்பது செபத்தின் ஒரு பரிமாணம் ஆகும்.

## கடவுளுக்காகக் காத்திருப்பது செபம்



இறைபிரசன்னத்தில் இருக்கும் அனுபவம் இறைவனுக்காகக் காத்திருக்கும் அனுபவமாகவும் உள்ளது. காத்திருத்தல் என்பது ஓர் கனதியான அதேவேளை சுவையான ஓர் அனுபவம்.

"ஆண்டவருக்காக ஆவலுடன் நான் காத்திருக்கின்றேன்; என் நெஞ்சம் காத்திருக்கின்றது; அவரது சொற்களுக்காக ஆவலுடன் காத்திருக்கின்றேன். விடியலுக்காய்க் காத்திருக்கும் காவலரைவிட, என் நெஞ்சம் என் தலைவருக்காய் ஆவலுடன் காத்திருக்கின்றது" (தி.பா.130:5,6)

"கத்திக் கத்திக் களைத்துப்போனேன்; தொண்டையும் வறண்டுபோயிற்று; என் கடவுளாம் உமக்காகக் காத்திருந்து என் கண்கள் பூத்துப் போயின" (தி.பா.69:3).






# இறை-மனித உரையாடலே செபம்



"கடவுளோடு உரையாடுவதுதான் செபம்" என்கிறார் புனித அலெக்ஸாண்டிரிய கிளமென்ற். "குழந்தை தந்தையிடம் பேசுவதுபோல கடவுளோடு அன்புடன் உரையாட வேண்டும்" என்கிறது திருமறைச்சுவடி.

நாம் பெற்றோருடனும் உடன் பிறந்தோர் நண்பர்களுடன் உறவுகொள்கின்றோம். உறவு இன்றி மனித வாழ்வு இல்லை! உரையாடல் வழியாகவே உறவு வளர்கிறது! நாம் எந்தளவிற்கு நம் குடும்பத்தில், நண்பர்களிடத்தில் மனம் திறந்து பேசுகின்றோமோ அந்த அளவுக்கு உறவில் வளர்ச்சியைக் காண முடியும். நாம் ஒவ்வொரு நாளும் பெற்றோருடனும் உடன்பிறந்தோருடனும் நண்பர்களுடனும் உறவில் வளர்வதுபோன்று, இறைவனுடனும் உறவில் வளரவேண்டும். இந்த உறவுக்கு அடிப்படை செபம். செபம் இறைவனின் அன்புக் குரலுக்கு மனிதன் உள்ளத்தில் எழும் பதில்... ஆம் இறைவனோடு பேசுவது செபம்! இறைவன் பேசுவதைக் கேட்பது செபம்!

## உரையாடலால் உறவு வளர்கிறது

நம்மைக் கருவாக்கி, உருவாக்கி நமக்குத் தேவையானதைத் தரும் நம்முடைய அப்பா, அம்மாவோடு பேசாமல் நம்மால் இருக்க முடியுமா? முடியாது! அதுபோல நம்மைப் படைத்து, பராமரித்து, வழிநடத்தி வருகின்ற இறைவனோடும் பேசாமல் இருக்க நம்மால் முடியாது.

ஆம், இறைவனுடன் இறைமக்கள் கொள்ளும் உறவே செபம். இறைவனுடைய உள்ளமும் இறைமக்களுடைய உள்ளமும் ஒன்றித்திருக்க வேண்டும். ஒன்றித்தலுக்கு மிக அவசியம் உரையாடல். உரையாடலால் உறவுகொள்ள முடிகிறது. உறவினால் இரு உள்ளங்கள் ஒன்றாய் இணையவும், இயங்கவும் செய்கின்றன.

## விவிலியம் காட்டும் இறைமனித உரையாடல்

செபம் என்பது கடவுளுக்கும் மனிதனுக்கும் இடையேயான ஓர் உரையாடல் என்பது தொடக்க நூல்களில் காணப்பெறும் உண்மையாகும்.

கடவுளும் ஆதாம் ஏவாளும் உரையாடுகின்றனர்:
"ஆண்டவராகிய கடவுள் மனிதனைக் கூப்பிட்டு, 'நீ எங்கே இருக்கின்றாய்?' என்று கேட்டார். 'உம் குரல் ஒலியை நான் தோட்டத்தில் கேட்டேன். ஆனால் எனக்கு அச்சமாக இருந்தது. ஏனெனில் நான் ஆடையின்றி இருந்தேன். எனவே நான் ஒளிந்துகொண்டேன்.' என்றான் மனிதன்" (தொடக்க நூல் 3:8-19).
கடவுளும் மோயீசனும் உரையாடுகின்றனர்: "..... எனவே இப்போதே போ; இஸ்ராயேல் இனத்தவராகிய என் மக்களை எகிப்திலிருந்து நடத்திச் செல்வதற்காக நான் உன்னைப் பார்வோனிடம் அனுப்புகிறேன்' மோசே கடவுளிடம், 'பார்வோனிடம் செல்வதற்கும், இஸ்ராயேல் மக்களை எகிப்திலிருந்து அழைத்துப்போவதற்கும் நான் யார்?' என்றார்" (விப.3:9-12)

## அவள் என்னைப் பேசவே விடுவதில்லை!

**நீதிபதி:** "எதற்காக நீ கணவனைப் பிரிந்து வாழ விவாகரத்துக் கேட்கிறாய்?"
**மனைவி:** "என் கணவன் என்னுடன் மூன்று மாதமாகப் பேசுவதில்லை. ஒரே வீட்டில் இருந்துகொண்டு பேசாதவருடன் நான் எப்படிக் குடும்பம் நடத்துவது?"
**நீதிபதி:** (கணவனை நோக்கி) "உன் மனைவியின் குற்றச்சாட்டுக்கு என்ன பதில் சொல்கிறாய்?"
**கணவன்:** "என் மனைவி சொல்வது உண்மைதான். நான் மூன்று மாதம் அவளுடன் பேசவில்லை. அவள் என்னைப் பேசவிட்டால்தானே....! அவளே மூன்று மாதமும் பேசிக்கொண்டே இருந்தால் நான் எப்படிப் பேசுவது? என்னை அவள் பேசவே விடவில்லையே?"

செபம் என்பது உரையாடல். உரையாடலுக்கு இருவர் தேவை. ஒருவர் பேச மற்றவர் செவிமடுக்க வேண்டும். பேசியவர் செவிமடுக்க செவிமடுத்தவர் பேசவேண்டும். இந்த உரையாடலில் இருவருக்குமே பேசுகிற வாய்ப்பும், செவிமடுக்கிற வாய்ப்பும் உண்டு. பேசிக்கொண்டே இருந்தால் அல்லது செவிமடுத்துக்கொண்டே இருந்தால் அது உரையாடல் ஆகாது.

செவிமடுத்துப் பேசவேண்டும், பேசிச் செவிமடுக்க வேண்டும். அப்போதுதான் உரையாடல் நிறைவுபெறுகிறது. ஆனால் செபத்திலே நாம் மட்டுமே மூச்சுவிடாமல் பேசிக்கொண்டிருக்கிறோமே தவிர நாம் செவிமடுக்க முயற்சிப்பதில்லை. ஆண்டவரைப் பேசவிடாமல் நாமே பேசிக்கொண்டே இருப்பதால்தான் செபம் தன் தன்மையை இழந்துவிடுகிறது.

## கடவுள் எவ்வாறு பேசுகின்றார்?

கடவுள் நமக்கு நேரடியாகக் காட்சியளித்து பேசினால்தான் உண்மையான செபமா? கடவுள் நமக்குத் தோன்றி நேரடியாகப் பேசுவார் என்று நாம் எதிர்பார்க்கக்கூடாது.



தமது படைப்பின் வழியாக, தம் மகன் அருளிய நற்செய்தியின் வழியாக, நற்செய்தியை நமக்கு விளக்கித்தரும் குருக்கள் வழியாக கடவுள் தொடர்ந்து பேசிக்கொண்டே இருக்கிறார். நாம் விசுவாசக் கண்களுடன் நம்மிடையே நடக்கும் ஒவ்வொரு நிகழ்ச்சியையும் பார்க்கும்போது அதில் கடவுளின் குரலைக் கேட்க முடியும்.



# 1.4 நிகழ்காலத்தில் வாழ்வது செபம்



பழம்பெரும் செப வழிமுறையான 'விப்பாசனா' குறிப்பிடுவது போல நிகழ்-காலத்தில் நம்மை நாமாக ஆள் உணர்ந்து (Becoming conscious of our Being in the present) வாழ்வது செபத்தின் தனித்துவப் பாங்கு.

ரெய்னால்டு நெய்பர் தனது 'அமைதிச் செபம்' (Serenity) என்னும் பகுதியில், "கடவுளே! என்னால் மறக்கமுடியாத உண்மைகளை மனமுவந்து ஏற்றுக்கொள்ளும் பக்குவத்தையும் மாறக்கூடிய எதார்த்தங்களை மாற்றக் துணியும் துணிவையும் இரண்டிற்கும் உள்ள வேறுபாட்டை உணரும் ஞானத்தையும் தாரும். ஒரு நாளை மட்டும் வாழவும், ஒரு பொழுதை மட்டும் அனுபவிக்கவும், நிகழ்கால ஒவ்வொரு நொடியையும் சுவைத்திடவும் அருள்தாரும்" என்கிறார்.

எனவே நாளைய கவலைகளை விடுத்து இன்றைய நிகழ்காலத்தை நிம்மதியாக வாழத் துணிவதே செபம். கடந்த காலம் என்பது துயரம், எதிர்காலம் என்பது புதிர், நிகழ்காலம் ஆண்டவன் அளித்திருக்கும் பரிசு.

## அன்றன்றுள்ள தொல்லையே போதும்!

"உயிர்வாழ எதை உண்பது என்றோ, உடலுக்கு எதை உடுத்துவது

என்றோ நீங்கள் கவலைகொள்ளாதீர்கள். உணவைவிட உயிரும் உடையைவிட உடலும் உயர்ந்தவை அல்லவா ...? ஆகையால் நாளைக்காகக் கவலைப்படாதீர்கள். ஏனெனில் நாளையக் கவலையைப் போக்க நாளை வழி பிறக்கும். அந்தந்த நாளுக்கு அன்றன்றுள்ள தொல்லையே போதும்" (மத் 6:25-34 இணை வசனம் லூக்.12:22-34).

— மனிதர்களில் பெரும்பாலானோருக்கு மன அழுத்தம் ஏற்படுவதற்கு இரு காரணங்கள் உள்ளன. ஒன்று எதிர்காலம் பற்றிய பயம். இரண்டு இறந்த காலத் துயரம். இங்கே எதிர்காலம் என்பது ஆண்டவரிடம் உள்ளது. அவரே அதைப் பார்த்துக்கொள்வார் என்று இறைவனுடைய பராமரிப்பில் ஆழமான நம்பிக்கை வைப்பது செபத்தின் முக்கிய அம்சமாகும்.

பகவத் கீதையின் அடிப்படைத் தத்துவம், "பலனை எதிர்பாராமல் கடமையைச் செய்" (Nishkama karma) என்பது. இதில் பலன் என்பது எதிர்காலம் சம்பந்தப்பட்டது. கடமை என்பது நிகழ்காலம் சம்பந்தப்பட்டது. எதிர்காலத்தைப் பற்றிய கவலையும், பயமும் வந்தால் வாழ வேண்டிய நிகழ்காலம் தடுமாறி, தடம்மாறி போய்விடும். எனவேதான் எதிர்காலம், இறந்தகாலம் பற்றிய கவலைகொள்ளாமல் வாழ்வதற்கு அளிக்கப்பட்டுள்ள நிகழ்காலத்தை ஒவ்வொரு நொடியும் அனுபவிப்பது செபம் ஆகும்.


## ஆண்டவரின் அன்பை உணர்வதே செபத்தின் அடிப்படை

ஆலயத்திலே செபித்துக்கொண்டிருந்த பக்தனிடம் வானதூதர் ஒரு பெயர்ப் பட்டியலைக் காட்டி, "இதில் உன் பெயர் இருக்கிறதா? தேடிப்பார்" என்றார். ஆவலுடன் தேடினான். அவன் பெயர் அதில் இல்லை. குழப்பத்துடன், "இது என்ன பட்டியல்?" என்று வானதூதரிடம் கேட்டான். "கடவுளை யார் அன்பு செய்கிறார்களோ அவர்கள் பெயர் இதில் உள்ளது" என வானதூதர் பதிலளித்தார்.

"அப்படியானால் நான் கடவுளை அன்பு செய்யவில்லையா?" எனச் சொல்லி அழ ஆரம்பித்தான். வானதூதர் இன்னொரு பட்டியலைக் காட்டி "இதில் உன பெயர் இருக்கின்றதா பார்" என்றார். அவன் பெயர் அதில் முதலாவதாக இருந்தது. ஆச்சரியத்துடன், "இது என்ன பட்டியல்?" என்றான். "கடவுள் யாரை அன்பு செய்கிறாரோ அவர்களுடைய பெயர் இதில் உள்ளது" எனப் பதிலளித்தார் தூதர். அவன் மகிழ்ச்சியோடு "அப்படியானால் கடவுள் என்னை அன்புசெய்துகொண்டிருக்கிறார்" என மிகுந்த மகிழ்ச்சியோடு கூறினான்.

ஆம், நான் ஆண்டவரை அன்புசெய்கிறேனோ இல்லையோ ஆனால் ஆண்டவர் என்னை அன்புசெய்கிறார் என்ற உணர்வே செபம் ஆகும்.

## செபிக்க விழைவதே செபம்



"செபிக்க விழைவதே செபம்" என்கிறார் புனித அகுஸ்தீனார். இது எவ்வளவு உண்மையான வார்த்தை!

கனிமொழி 2ம் வகுப்புப் படிக்கிறாள். அவளுடைய மறைக்கல்வி ஆசிரியர் அனைவரையும் காலையில் எழும்போதும், இரவு உறங்கச் செல்லும் முன்பாகவும் செபம் செய்யும்படி கூறினார். ஒவ்வொருவரும் தத்தமது வீட்டில் படுக்கும்போது செபம் சொல்ல முற்பட்டனர், ஆனால் அவர்களுக்கு செபம் சொல்லத் தெரியவில்லை. எனவே அனைவரும் செபம் சொல்லாமல் உறங்கிவிட்டனர்.

ஆனால் கனிமொழி மட்டும் சத்தமாக அ, ஆ, இ, ஈ என்று சொல்லிக்கொண்டிருந்தாள். "பேசாம படுத்துத் தூங்கு" என்றார் தாத்தா. அதற்குக் கனிமொழி, "தாத்தா நான் செபம் சொல்றேன்" என்றாள். தாத்தா அவளிடம், "என்னது ... செபம் சொல்றியா?" என்று கேட்டார். அதற்கு கனிமொழி, "ஆமா தாத்தா, எனக்குச் செபம் சொல்லத் தெரியாது. அதனால்தான் அ, ஆ, இ, ஈ என்று சொன்னேன். கடவுள் அதை வார்த்தையா மாத்தி செபமா ஆக்குவாரு" என்று கூறினாள்.

இங்கே கனிமொழி சொன்னது செபமா? ஆம்! காரணம் அவள் செபிக்க விழைந்தாள்; அதுவே செபமாக மாறியது!

# இயல் 2

# ஏன் செபிக்க வேண்டும்?

1. வாழ்வை வசப்படுத்திக்கொள்ள
2. வல்லமையை வசீகரிக்க
3. அறிவெல்லாம் கடந்த அமைதிபெற
4. சவால்களைச் சந்தித்து எதிர்நீச்சல் போட

*காற்று இன்றேல் உயிரொன்றும் வாழாது;*
*இது இயற்கை உண்மை.*
*சாவி கொடாவிட்டால் கடிகாரம் ஓடாது;*
*இது செயற்கை நியதி.*
*எண்ணெய் ஊற்றாவிட்டால்*
*விளக்கு எரியாது;*
*இது அனுபவ உண்மை.*
*செபம் செய்யாவிட்டால்*
*அருள்வாழ்வு மலராது;*
*இது ஆன்மீக உண்மை.*


"நீ செபத்தை
நிறுத்திவிட்டால்
தண்ணீரிலிருந்து
கரையில்
வீசி எறியப்பட்ட
மீனுக்கு ஒப்பாவாய்"
*- புனித ஜோண்*
*கிறிஸ்தோஸ்தம்*

*திருச்சபை கிறிஸ்துவின் மறையுடல்.*
*அவ்வுடலின் இதயத் துடிப்பு செபம்!*

*நீருக்கு வெளியே மீனுக்கு வாழ்வு இல்லை.*
*அதேபோல் செபத்திற்கு வெளியே*
*மனிதனுக்கும் வாழ்வு இல்லை!*
*இவ்வுலகமே*
*செபத்திற்காகப் படைக்கப்பட்டிருக்கிறது.*

*கடவுள் நம்மீது பொழியும் அன்புக்கு*
*நம்முடைய பதிலே செபத்தின் நோக்கமாகும்.*


"செபிக்காத
மனிதன்
வேரில்லாத
மரத்திற்குச்
சமம்"
*- திருத்தந்தை*
*12ம் பத்திநாதர்*








# வாழ்வை வசப்படுத்திக்கொள்ள



"செபிக்காதவன் தானாகவே இறந்துவிடுகிறான்" என்கிறார் புனித அகுஸ்தீனார். இறைவனே வாழ்வின் ஊற்றாய் இருக்கிறார். "தந்தை, தாம் வாழ்வின் ஊற்றாய் இருப்பதுபோல மகனும் வாழ்வின் ஊற்றாய் இருக்குமாறு செய்துள்ளார்" (யோவா.5:26) என யோவான் நற்செய்தி இவ்வுண்மைக்கு சான்று பகர்கின்றது.

"எவன் நன்றாகச் செபிக்க அறிவானோ அவனே நன்றாக வாழத் தெரிந்தவன்" என்பது புனித அகுஸ்தீனாரின் அனுபவ வார்த்தைகள். இதை மறுபுறத்தில் சொல்வதாயின் "செபிக்கத் தெரியாதவன் வாழத் தெரியாதவன்" எனலாம். ஆம், வாழ்வை வசப்படுத்திக்கொள்ள நாம் செபிக்க அறிந்திருக்க வேண்டும். நாம் வாழ்வதற்கு காற்று எவ்வாறு அவசியமோ, நீர் எவ்வாறு அவசியமோ அதுபோன்று வாழ்வை நாம் வளமோடு - வாழ்வாங்கு வாழ செபம் நமக்கு அவசியம்.

## வாழ்வை நிறைவாகப் பெறும்பொருட்டு வந்தேன்!

"*வாழ்வு* பெறுமாறு என்னிடம் வர உங்களுக்கு விருப்பம் இல்லை" (யோவா.5:40) "*வாழ்வு* தரும் உணவு நானே" (யோவா.6:35) "இயேசுவே இறைமகனாகிய மெசியா என நீங்கள் நம்புவதற்காகவும், நம்பி அவர் பெயரால் *வாழ்வு* பெறுவதற்காகவுமே இந்நூலில்

உள்ளவை எழுதப்பெற்றுள்ளன"(யோவா.20:31). "நான் ஆடுகள் *வாழ்வைப* பெறும்பொருட்டு, அதுவும் நிறைவாகப் பெறும்பொருட்டு வந்துள்ளேன்" (யோவா.10:10).

"*வாழ்வு*" என்ற வார்த்தை யோவான் நற்செய்தியில் ஆழமான அர்த்தம் நிறைந்த வார்த்தையாக உள்ளது. நற்செய்தியாளர் யோவானைப் பொறுத்தவரை வாழ்வு என்பது - சாதாரண வாழ்வு அல்ல, உப்புச்சப்பற்ற வாழ்வு அல்ல; அல்லது ஏதோ இந்த உலகத்தில் பிறந்துவிட்டோம் எப்படியாவது வாழ்ந்து முடிக்க வேண்டும் என்று அலுத்துக்கொண்டு, சலித்துக்கொண்டு வாழுகின்ற வாழ்வும் அல்ல. மாறாக யோவான் நற்செய்தியில் வாழ்வு என்பது நிலையான வாழ்வு; நிம்மதியான வாழ்வு; மகிழ்ச்சியான வாழ்வு. இந்த வாழ்வைத் தரவே இயேசு வந்தார். ***அதுவும் அந்த வாழ்வை நிறைவாகத் தரும்பொருட்டு வந்தார்.*** அந்த வாழ்வை நாம் வாழ வகை செய்வதே செபம்.

இயேசு கொண்டுவந்த வாழ்வில் துன்பம், துயரம் போன்றவை இல்லை என்பது அர்த்தம் அல்ல. மாறாக இவை மத்தியிலும் நாம் மகிழ்வோடும், நிறைவோடும் வாழ்கின்ற வாழ்வு செபத்தினால்தான் சாத்தியமாகும்.

## செபிக்காத மனிதன் வேரில்லாத மரத்திற்குச் சமம்

"செபிக்காத மனிதன் வேரில்லாத மரத்திற்குச் சமம்" என்கிறார் திருத்தந்தை 12ம் பத்திநாதர். "செபம் இல்லாத வாழ்வு கூரை இல்லாத வீடு" என்கிறார் காண்டேகர் என்ற அறிஞர்.

வேரில்லாத மரம் நிலைநிற்காது. அது சரிந்து விழுந்துவிடும். அதன் வாழ்வுக்கு முற்றுப்புள்ளி ஏற்பட்டுவிடும். ஒரு மரம் தனது வாழ்வைத் தக்கவைக்க வேண்டுமென்றால் அதற்கு வேர் வேண்டும். அதுபோலவே ஒரு மனிதன் தனது வாழ்வைத் தக்கவைக்க, வாழ்வை வசப்படுத்த செபம் அவசியமாகிறது. இறைவன் நம்மைப் படைத்தவர்; அவரே நம்மை வழிநடத்தி வருகின்றார் எனவே அவரைப் பிரிந்து நம்மால் எதுவும் செய்ய முடியாது. "என்னைவிட்டுப் பிரிந்து உங்களால் எதுவும் செய்ய இயலாது" (யோவான்15:5) என்று இயேசுவே உறுதிபடக் கூறுகின்றார்.

போராட்டம் நிறைந்த இந்த உலகில் நம்முடைய சொந்தப் பலத்தினால் வாழ முடியாது. "அவரைச் சார்ந்துதான் நாம்

வாழ்கின்றோம், இயங்குகின்றோம், இருக்கின்றோம்" (திப.17:28). எனவே அவருடைய துணை நமக்குத் தேவை. இறைவனுடைய துணையை நமக்குப் பெற்றுத் தருவது செபமே. எனவே கண்டிப்பாக நாம் செபிக்கவேண்டும்.

## என்னை அறிந்து வாழ்வை வாழ செபம் தேவை



"உன்னையே நீ அறிவாய்" என்கிறார் சோக்ரட்டீஸ். "தன்னையறிந்தால் தனக்கொரு கேடில்லை" என்கிறார் திருமூலர்.

கலங்கலான தண்ணீர் உள்ள குளத்தின் உள்ளே என்ன இருக்கிறது என்பது தெரியாது. தெளிவான குளத்தில்தான் தெரியும்?

உள்ள அமைதியை உருவாக்கும் செபத்தில் நமது உள்ளத்தின் செயற்பாடுகளையும் நாட்டத்தையும் தெளிவாகக் கண்டுணர முடியும். அந்த அமைதி நிலையில் உள்ளத்தின் தவறான நாட்டத்தைச் சரியான திசையில் திருப்பிவிடக்கூடிய வழிமுறைகளும் கிடைக்கின்றன. நமது பலங்களையும் பலவீனங்களையும் செபத்தில்தான் நாம் கண்டுகொள்ள முடியும். இந்தக் கண்டுபிடிப்பு அமைதியான செபத்தில் நடைபெறுகிறது. அமைதியான சூழமைவில்தான் மனிதர்கள் தங்கள் நிறைவையும், வாழ்வின் ஆழத்தையும், அர்த்தத்தையும் கண்டுகொள்கிறார்கள்.

"இறைமகனைக் கொண்டிருப்போர் வாழ்வைக்கொண்டுள்ளனர்; அவரைக்கொண்டிராதோர் வாழ்வைக்கொண்டிரார்" (1யோவா.5:12). செபத்தினால்தான் நாம் இறைமகனைக் கொண்டிருக்க முடியும். அதன்வழி வாழ்வையும் கொண்டிருக்க முடியும்.




# வல்லமையை வசீகரிக்க





"செபம் தன்னிலேயே வல்லமை மிக்கது" என்கிறார் தியோ டோரட் என்ற அறிஞர். ஆம்! நமது கிறிஸ்தவ வாழ்க்கைப் பயணத்திலே வல்லமையை நாம் வசீகரிக்க செபிக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

### செப வல்லமை! - தெர்த்துல்லியன் வாக்கு மூலம்!

"செபம் வலுவற்றவரைத் திடப்படுத்துகின்றது. நோயுற்றோரைக் குணப்படுத்துகிறது. பாவத்தில் இருந்து நம்மைத் தூய்மையாக்குகிறது. சிறைச்சாலைக் கதவுகளைத் திறக்கிறது. மாசற்றவரை விடுதலை செய்கிறது. குற்றங்களை மன்னிக்கிறது. இச்சைகளை அடக்குகிறது. வேதவிரோதிகளை முறியடிக்கிறது. நல்மனத்தவருக்கு ஊக்கமளிக்கிறது. புயலை அடக்குகிறது. திருடர்களை அச்சுறுத்துகிறது. பசியுற்றோரை நன்மைகளால் நிரப்புகிறது. பணம் படைத்தோரை அடக்கி ஆள்கிறது. தடுமாறி விழுந்தவர்களைக் கைதூக்கி விடுகிறது. தடுமாறுபவர்களைத் திடப்படுத்துகிறது. நேர்மையாய் நல்வழி நடப்போருக்கு துணைபுரிகிறது." என்கிறார் தெர்த்துல்லியன் என்ற திருச்சபைத் தந்தையர்.

"செபத்தைவிட வல்லமைமிக்கது இவ்வுலகில் வேறெதுவும் இல்லை." என்று மொழிந்த புனித கிரகோரியின் வார்த்தைகள் எத்தனை உண்மையானவை!

## செபத்தினாலே வல்லமையை வசீகரிக்கும் இயேசு

இயேசு அற்புதங்களை நிகழ்த்து முன்னர் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் செபிப்பதைக் காணமுடிகிறது. செபத்தின் மூலமே வல்லமையைப் பெற்று அவர் அற்புதங்களை ஆற்றுவதை நற்செய்தி நூல்கள் நயம்பட இயம்புகின்றன.

இலாசரை உயிர்ப்பிக்க முன்னர் இயேசு செபிக்கின்றார். "இயேசு அண்ணாந்து பார்த்து, 'தந்தையே நீர் என் வேண்டுதலுக்கு செவிசாய்த்ததற்காக உமக்கு நன்றி கூறுகின்றேன். நீர் எப்போதும் என் வேண்டுதலுக்கு செவிசாய்க்கின்றீர் என்பது எனக்குத் தெரியும்....." (யோவா.11:41-42) எனச் செபிக்கின்றார்.

காது கேளாதவரை நலமாக்கிய வேளையிலும் இயேசு செபிக்கின்றார். "இயேசு அவரைக் கூட்டத்திலிருந்து தனியே அழைத்துச்சென்று, தம் விரல்களை அவர் காதுகளில் இட்டு, உமிழ்நீரால் அவர் நாவைத் தொட்டார்; பிறகு வானத்தை அண்ணாந்து பார்த்து, பெருமூச்சு விட்டு, அவரை நோக்கி 'எப்பத்தா' அதாவது 'திறக்கப்படு' என்றார்" (மாற்.7:34).

இவ்வாறு செபத்தின் மூலமே இயேசுவிடம் இருந்து வல்லமை வெளியேறுவதை நாம் கண்டுதெளியலாம்.

## செபத்தினால் அற்புதங்களைச் செய்யும் திருத்தூதர்கள்

சாதாரண மனிதர்கள் அசாதாரண காரியங்களைச் செய்யும் வல்லமை பெற்றது செபத்தினால்தான். பேதுருவும் யோவானும் கோவிலுக்கு செபிக்கச் சென்ற வேளையில்-தான் அவர்கள் பிறவியிலேயே கால் ஊனமுற்ற ஒருவரைக் குணமாக்குகின்றனர் (திப.3:1-6).



புறவினத்தாருக்கும் திருமுழுக்குக் கொடுத்து திருச்சபையில் அவர்களை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற செய்தியை இறைவன் ஒரு

காட்சியின் வழியாகவே பேதுருவுக்கு வழங்குகிறார். பேதுரு செபிக்கும் வேளையில்தான் அந்தக் காட்சி அவருக்கு கிடைக்கின்றது. *(தி.ப.10:9-10).*

பேதுரு தபித்தா என்ற இறந்த சிறுமியை செபத்தினால்தான் உயிர்ப்பிக்கின்றார். "பேதுரு அனைவரையும் வெளியே அனுப்பிவிட்டு முழந்தாட்படியிட்டு இறைவனிடம் வேண்டினார். அவரது உடலின் பக்கமாகத் திரும்பி, 'தபித்தா எழுந்திடு' என்றார். உடனே அவர் கண்களைத் திறந்து பேதுருவைக் கண்டு, எழுந்து: உட்கார்ந்தார்." (தி.ப.9:36-41).

பவுல் பயணம் செய்த கப்பல் புயலில் சிக்கி மால்தா தீவில் கரையொதுங்கியபோது அங்கே செபத்தினால் பவுல் ஒருவருக்கு நலமளிக்கின்றார். "புப்பிலியுவினது தந்தை காய்ச்சலினாலும் வயிற்று அளைச்சலினாலும் நோயுற்றுக் கிடந்தார். பவுல் அங்கு சென்று அவர்மேல் தம் கையை வைத்து இறைவனிடம் வேண்டி அவரை நலமாக்கினார். இந்நிகழ்ச்சிக்குப் பின் அத்தீவில் நோயுற்றிருந்த ஏனையோரும் அவரிடம் வந்து குணமடைந்தனர்." (தி.ப.28:8-9).

இன்றும்கூட நாம் வல்லமையை வசீகரிக்க வேண்டுமானால் செபிக்க வேண்டும். ஏனெனில் 'செபமே ஜெயம்' என்ற வார்த்தையில்தான் எத்தனை உண்மைகள் அடங்கியிருக்கின்றன!






# அறிவெல்லாம் கடந்த அமைதிபெற...



"இருக்கும் இடத்தைவிட்டு இல்லாத இடம்தேடி எங்கெங்கோ அலைகிறார் ஞானத் தங்கமே" என்று பாடினார் கவிஞர் கண்ணதாசன். அவர் எதைக்குறித்துப் பாடினார் என்பதை நாம் திட்டவட்டமாகச் சொல்ல முடியாது. ஆனால் ஒன்றுமட்டும் உண்மை; அதாவது மனிதர் இன்று அமைதி சமாதானம் இருக்கும் இடமாகிய இறைவனை விட்டுவிட்டு அது இல்லாத இடமாகிய இந்த உலகம் தருகின்ற சில்லறைச் சந்தோசங்களில் தேடிக்கொண்டிருக்கின்றனர்.

"ஆண்டவருக்குள் என்றும் அகமகிழுங்கள் .... ஆண்டவர் அண்மையில் உள்ளார். எதைப்பற்றியும் கவலைப்பட வேண்டாம். ஆனால் எல்லாத் தேவைகளிலும் நன்றியோடுகூடிய செபத்திலும் மன்றாட்டிலும் கடவுளிடம் உங்கள் விண்ணப்பங்களை ஒப்படையுங்கள். *அப்போது அறிவெல்லாம் கடந்த இறை அமைதி,* கிறிஸ்து இயேசுவுக்குள் உங்கள் உள்ளத்துக்கும் மனதுக்கும் அரணாயிருக்கும்" (பிலி.4:4-7).

## செபத்தில்தான் மன அமைதியைப் பெறுகின்றேன்

இந்திய நாட்டின் தேசபிதா அண்ணல் காந்தியடிகள். அவர் அகிம்சை வழியில் இந்திய நாட்டிற்குச் சுதந்திரத்தைப் பெற்றுத் தந்தவர். "வெள்ளையனே வெளியேறு!" என்று பிரித்தானிய ஏகாதிபத்தியத்திற்கு

எதிராகத் துணிந்து குரல்கொடுத்தவர். கத்தியின்றி இரத்தமின்றி அறப்போர் நடத்தியவர். பிரித்தானிய அரசின் மனச்சாட்சியை உலுக்கியவர். ஈற்றில் பல்வேறு துன்பங்கள், போராட்டங்கள் மத்தியில் இந்தியாவுக்கு விடுதலையை வென்றெடுத்தவர். அத்தகைய அகிம்சாவாதி காந்தி செபத்தைப் பற்றிக் கூறும் வார்த்தைகள் சுவாரசியமானவை,

"சமய வாழ்வின் சாரமாக, ஆன்மாவாக செபம் அமைய வேண்டும். மனித வாழ்வின் மையம் செபம். செபம் இன்றி எந்த மனிதனும் உயிர்வாழ இயலாது. **நான் செபத்தில்தான் மன அமைதியையும் ஆற்றலையும் பெறுகின்றேன்.** செபிக்கின்ற பழக்கத்தை விட்டிருந்தேன் என்றால் நான் என்றோ பைத்தியக்காரன் ஆகியிருப்பேன்." (மகாத்மா காந்தி).

ஆம் இன்றைய உலகில், அதுவும் போராட்டங்களும் சவால்களும் நிறைந்த உலகில், மன அமைதியை அனுபவிக்க நாம் செபிக்க வேண்டியவர்களாக உள்ளோம். செபத்தில் நாம் ஆறுதலைப் பெறுகின்றோம், ஆண்டவரின் அன்பை, தேற்றுதலை அனுபவிக்கின்றோம். இந்தச் செப அனுபவம் நமக்கு இல்லையேல் காந்தியடிகள் சொல்வதுபோல நாமும் சிலவேளை மனநோயாளிகளாக மாற வாய்ப்பு உண்டு.

## ஆண்டவரில்தான் அமைதி, மகிழ்ச்சி!

ஆண்டவரில்தான் நாம் அமைதியை மகிழ்ச்சியை கண்டடைய முடியும். அது செபத்தில்தான் சாத்தியமாகும். "ஏனெனில், அரசர் **ஆண்டவரில** நம்பிக்கை வைக்கின்றார்: உன்னதரின் பேரன்பினால் அவர் அசைவுறாதிருப்பார்." (தி.பா.21:7). "பொல்லாருக்கு வரும் துன்பங்கள் பல: ***ஆண்டவரில்*** நம்பிக்கை கொள்வோரை அவரது பேரன்பு சூழ்ந்து நிற்கும்." (தி.பா.32:10) "நீதிமான்களே, ***ஆண்டவரில்*** களிகூருங்கள்: நீதியுள்ளோர் அவரைப் புகழ்வது பொருத்தமானதே" (தி.பா.33:1). "நேர்மையாளர் ***ஆண்டவரில்*** அகமகிழ்வர்: அவரிடம் அடைக்கலம் புகுவர்: நேரிய உள்ளத்தோர் அவரைப் போற்றிடுவர்" (தி.பா.64:10). "என் தியானப் பாடல் அவருக்கு உகந்ததாய் இருப்பதாக! நான் ***ஆண்டவரில்*** மகிழ்ச்சி கொள்வேன்" (தி.பா.104:34).


## அமைதியை அருளும் இயேசு

இயேசு மனுக்குலத்திற்கு தரும் மிகப்பெரிய கொடை அமைதி - சமாதானமாகும். தான் அருளும் அமைதி உலகம் தரும் அமைதி

போன்றது அல்ல என்கிறார். “அமைதியை உங்களுக்கு விட்டுச்செல்கிறேன்: என் அமைதியையே உங்களுக்கு அளிக்கிறேன். நான் உங்களுக்குத் தரும் அமைதி உலகம் தரும் அமைதி போன்றது அல்ல” (யோவா14:27).

உயிர்த்த இயேசு வழங்கிய ஆசீரும், அமைதி ஆகும். “அன்று வாரத்தின் முதல் நாள். அது மாலை வேளை. யூதர்களுக்கு அஞ்சிச் சீடர்கள் தாங்கள் இருந்த இடத்தின் கதவுகளை மூடிவைத்திருந்தார்கள். அப்போது இயேசு அங்கு வந்து அவர்கள் நடுவில் நின்று, *‘உங்களுக்கு அமைதி உரித்தாகுக!’* என்று வாழ்த்தினார்.” (யோவா.20:19).

## இருள் வாழ்விலிருந்து அருள் வாழ்வு நோக்கி...!



இருள் வாழ்விலிருந்து நாம் அருள் வாழ்வுக்குக் கடந்துசெல்ல, அறிவெல்லாம் கடந்த அமைதியைப்பெற நாம் கட்டாயம் செபிக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம். இதைத்தான் புனித பொனவெந்தூர் கூறுவார், “செபம் செய்வதைக் கைவிட்டால் எண்ணற்ற தீமைகள் நம்மை வந்தடையும்” என்று. இந்த உண்மையை நமது புனிதர்கள் பலர் பல்வேறு வடிவங்களில் உரைக்கின்றனர்.

“எல்லாப் புண்ணியங்களின் தொடக்கமும் வளர்ச்சியும், முதிர்ச்சியும் செபம்தான்.” என்கிறார் புனித கில்லறி. “செபத்தால் பாவத்திலிருந்து விடுதலையும் மனமாற்றமும், இரட்சிப்பும், ஆன்மீக வளர்ச்சியும் பெறுகின்றோம்” என்கிறார் புனித தோமஸ் அக்வீனஸ்.






# சவால்களைச் சந்தித்து எதிர்நீச்சல்போட



செபமானது நமது கஸ்ரமான, இக்கட்டான சூழ்நிலையிலிருந்து நம்மை விடுவிக்கும் திடீர் மந்திர சக்தி அல்ல. ஆனால் அந்தக் கஸ்ரமான, இக்கட்டான சூழ்நிலையில் - வேதனை, சோதனை, துன்பம், நிறைந்த சூழ்நிலையில் அவற்றைத் தாங்கிக்கொள்ளக் கூடிய சக்தியை நமக்குக் கொடுக்கிறது.

**போய் வா எமனே!**

வயதான பெரியவர் பெரிய சுமையைக் கஸ்ரப்பட்டு சுமந்து செல்கிறார். வழியில் சுமை-தாங்கியில் சுமையை இறக்கி வைத்து சற்று இளைப்பாறிவிட்டு மறுபடியும் சுமையைத் தூக்கித் தலையில் வைக்க முயற்சிக்கின்றார். தூக்க முடியாமல், “இந்த வயசான காலத்தில் எனக்கு ஏன் இந்தக் கஸ்ரம்?” என்று புலம்புகிறார். எதிரே எமன் தோன்றி, “உன் கஸ்ரத்தை தீர்த்துவிடுகிறேன், என்னுடன் வா” என்கிறான்.

“இந்தச் சுமையைத் தூக்க முடியாமல் கஸ்ரப்படுகிறேனே தவிர உலகத்தில் வாழ எனக்கொன்றும் கஸ்ரமில்லை. போய் வா எமனே” எனச் சொல்லி எமனை அனுப்பி வைக்கிறார் அந்தப் பெரியவர். சவால்களைச் சந்தித்து எதிர்நீச்சல்போட, இன்னும் வாழவேண்டும் என்ற ஆவலை, ஆர்வத்தை செபம் நமக்குத் தரவேண்டும்.

## எனது அருள் உனக்குப்போதும்

புனித பவுல்கூட தனக்கு வந்தபெரும் சோதனையை தன்னிடமிருந்து எடுத்துவிடும்படி வேண்டுகின்றார். அதற்கு ஆண்டவர், "எனது அருள் உனக்குப் போதும்" (2கொரி.12:9) என்று சொல்லி, "உனது சக்திக்கு மீறி நான் உன்னைச் சோதிக்க மாட்டேன்" என்ற ஆறுதலையும் கொடுக்கின்றார்.

ஆண்டவர் இயேசு கெத்சமனித் தோட்டத்திலே "உமக்கு விருப்பமானால் இந்தத் துன்பக் கலம் என்னிடம் இருந்து நீங்கட்டும்" என்று அழுது புலம்பிச் செபிக்கின்றார். தந்தை உடனே அவரை சிலுவை மரணத்தில் இருந்து விடுவிக்கவில்லை. மாறாக, அந்தச் சிலுவை மரணத்தை பொறுமையுடன் தாங்க வலிமையைக் கொடுக்கின்றார்.

எனவே செபம் என்பது வாழ்வின் சவால்களிலிருந்து, துன்பத்திலிருந்து தப்பித்துச் செல்வதற்குரிய வழி அல்ல, மாறாக வாழ்வை எதிர்கொள்ள, சவால்களைச் சந்திக்க "மலையே வந்தாலும் தலையே சுமு" என்று எதிர்ப்புக்களை எதிர்கொள்ள ஆற்றலைத் தருகின்ற வழிமுறையாகும்.

"உங்களுக்கு ஏற்படுகின்ற சோதனை பொதுவாக மனிதருக்கு ஏற்படும் சோதனையே அன்றி வேறு அல்ல. கடவுள் நம்பிக்கைக்குரியவர். அவர் உங்களுடைய வலிமைக்கு மேல் நீங்கள் சோதனைக்குள்ளாக விடமாட்டார்: சோதனை வரும்போது அதைத் தாங்கிக்கொள்ளும் வலிமையை உங்களுக்கு அருள்வார்: அதிலிருந்து விடுபட வழிசெய்வார்" (1கொரி.10:13)

## செபம் தப்பித்துக்கொள்கின்ற வழி அல்ல

நாம் உல்லாசப் பயணத்திற்காக வெளியே செல்கின்றோம் என வைத்துக்கொள்வோம். "கடவுளே நல்ல மழையில்லாத நல்ல காலநிலையைத் தாரும்" என்று செபிக்கின்றோம். அதேவேளை ஓர் விவசாயி "எனது வயல் காய்ந்து கிடக்கிறதே, இன்று மழையைத் தாரும் ஆண்டவரே" எனச் செபிக்கிறான். இந்தச் சூழ்நிலையில் கடவுள் யாருடைய செபத்தைக் கேட்டுப் பதில் கொடுப்பது? இப்படியான ஒரு சூழ்நிலையில் "ஆண்டவரே இன்று மழையாய் இருந்தாலும் வெயிலாய் இருந்தாலும் இன்றைய நாளில் நாங்கள் சந்தோசமாக இருக்க உதவிபுரியும்!" என்பதே சரியான செபமாக இருக்க முடியும்.

பொதுவாக நாம் செபத்தில் செய்யும் தவறு என்ன? நமது செபத்தை நமது கஸ்ரமான சூழ்நிலையில் இருந்து தப்பித்துக்கொள்ள ஒரு வழியாக நினைத்துக்கொள்கிறோம். செபம் தப்பித்துக்கொள்வதற்கான வழி அல்ல; மாறாக வாழ்க்கையை வெற்றிகொள்வதற்கான வழி ஆகும்! இயற்கையின் விதி நமது செபத்தால் மாற்றப்படுவதில்லை. மாறாக நாம் எந்தச் சூழ்நிலையிலும் அமைதியாக, மகிழ்வாக வாழத் தேவையான அருளையும் பலத்தையும் செபம் நமக்குத் தருகின்றது.

## வாழ்க்கை என்பது போராட்டம்தானே!



வாழ்க்கை என்பது பஞ்சு மெத்தை அல்ல; அது கல்லும் முள்ளும் நிறைந்த கடினமான பாதை! வாழ்க்கை என்பது போராட்டம்தான்! அதனால்தான் இயேசு சொன்னார், "என்னைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து தம் சிலுவையை நாள்தோறும் தூக்கிக்கொண்டு என்னைப் பின்பற்றட்டும்" (லூக்.9:22).

"ஒவ்வொரு பூக்களுமே சொல்கிறதே, வாழ்வென்றால் போராடும் போர்க்களமே! ஒவ்வொரு விடியலுமே சொல்கிறதே, இரவென்றால் பகலொன்று வந்திடுமே" ஆம் புலி என்றால் பாய்ச்சல்; மாடு என்றால் மேய்ச்சல்; மந்திரிசபை என்றால் கூச்சல்; மனிதன் என்றால் நீச்சல்! வாழ்க்கையில் சவால்களைச் சந்தித்து எதிர்நீச்சல்போட நாம் செபிக்க வேண்டும்.

# இயல் 3

# யார் வழியாகச் செபிக்க வேண்டும்?

1. இயேசுவின் பெயரால் செபிக்க வேண்டும்
2. ஆவியால் உந்தப்பட்டுச் செபிக்க வேண்டும்
3. புனிதர்களின் பரிந்துரையோடு செபிக்க வேண்டும்
4. அப்பா அனுபவத்தில் செபிக்க வேண்டும்

*நமது செபத்திற்கு கைகொடுக்க,*
*பலம் சேர்க்க பலர் இருக்கிறார்கள்!*

*இயேசுவின் பெயரில் செபிக்கவேண்டும்*
*என்பது தந்தையின் திருவுளமாகும்.*
*தன் வழியாய்ச் செபிக்கும்படி*
*இயேசுவே கூறியிருக்கிறார்.*

*ஆவியில் நிறைந்து செபிக்கும் செபங்களே*
*அற்புதமான செபங்களாக இருக்கும்!*
*நமக்குள் இருந்து நமக்காக*
*பெருமூச்சுக்களோடு செபிப்பவர் ஆவியானவர்.*
*அவரைச் செபிக்க அனுமதிப்பதே*
*அழகான செபம்!*

*புனிதர்கள் நமக்காக இறைவனிடம்*
*பரிந்துபேசுகின்றவர்கள்.*
*புனிதர்கள் நம் தேவைகளிலும்*
*துன்ப வேளைகளிலும் துணை நிற்பவர்கள்.*

*'அப்பா' அனுபவத்தில் அந்நியோன்னியமாக*
*செபித்த இயேசுவின் வழியே நமது வழி!*


"நீங்கள் என் பெயரால் தந்தையிடம் கேட்பதையெல்லாம் அவர் உங்களுக்குக் கொடுப்பார்" *(யோவா.15:16)*

"அப்பா" அப்பழுக்கற்ற அன்பையும் ஆழமான நெருக்கத்தையும் வெளிப்படுத்தும் சொல்






# 3.1



# இயேசுவின் பெயரால் செபிக்க வேண்டும்



இயேசுவின் பெயராலேயே நாம் விண்ணகத் தந்தையை நோக்கிச் செபிக்க வேண்டும் என்பது திருவிவிலியம் கூறும் திடமான செய்தியாகும்.

"தந்தையிடம் பரிந்துபேசுபவர் ஒருவர் நமக்கு இருக்கிறார். நம் பாவங்களுக்கு கழுவாய் அவரே" (1யோவா.2:1) என இயேசுவின் பரிந்துபேசுதலைக் குறித்து யோவான் எழுதுகின்றார். இயேசுவின் வழியாகத்தான் நாம் பரம தந்தையை அணுகு-கின்றோம். இயேசுவே பரம தந்தையை அறிந்தவர்; அனுபவித்தவர்.

## என் பெயரால் கேட்பதையெல்லாம் தருவார்

"ஆகவே நீங்கள் என் பெயரால் தந்தையிடம் கேட்பதையெல்லாம் அவர் உங்களுக்குக் கொடுப்பார்" (யோவா.15:16). "நீங்கள் என் பெயரால் தந்தையிடம் கேட்பதை எல்லாம் அவர் உங்களுக்குத் தருவார் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்"(யோவா.16:23).

ஆண்டவர் இயேசு தன் போதனைகளின்போது, தன் பெயரால் செபிக்கும்வேளையில் அவற்றைத் தான் தருவதாக ஒரே வசனத்தில் இரு தடவைகள் வாக்களிக்கின்றார். "நீங்கள் என் பெயரால் கேட்பதையெல்லாம் நான் செய்வேன். இவ்வாறு தந்தை மகன் வழியாய் மாட்சி பெறுவார். நீங்கள் என் பெயரால் எதைக் கேட்டாலும்

செய்வேன்" (யோவா.14:13-14) என்கிறார்.

## திருத்தூதர் பவுலின் போதனை

திருத்தூதர் பவுல் இயேசுவின் பெயரால் தந்தையாம் கடவுளுக்கு நன்றி செலுத்தும்படி தன் மடல்களில் வலியுறுத்துகின்றார். இதிலிருந்து தொடக்கத் திருச்சபையிலேயே இயேசுவின் பெயரால் தந்தையிடம் செபிக்கும் வழக்கம் நடைமுறையில் இருந்ததை அறியமுடிகிறது.

"எதைச் சொன்னாலும் எதைச் செய்தாலும் அனைத்தையும் ஆண்டவர் *இயேசுவின் பெயரால்* செய்து அவர் வழியாகத் தந்தையாம் கடவுளுக்கு நன்றி செலுத்துங்கள்"(கொலோ.3:17). "உங்கள் உரையாடல்களில் திருப்பாடல்கள், புகழ்ப்பாக்கள், ஆவிக்குரிய பாடல்கள் ஆகியவை இடம்பெறட்டும். உளமார இசைபாடி ஆண்டவரைப் போற்றுங்கள். நம் ஆண்டவராகிய *இயேசுக் கிறிஸ்துவின் பெயரால* எல்லாவற்றிற்காகவும் எப்போதும் தந்தையாம் கடவுளுக்கு நன்றி செலுத்துங்கள்" (எபே.5:18-20) எனப் பவுல் கூறுகின்றார்.

## திருச்சபை கற்பிக்கும் போதனையும் அதுவே

இயேசுவின் வழியாகவே திருச்சபை இறைத்தந்தைக்கு வழிபாடு செலுத்துகிறது என்பதை இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடு விளக்கிக் கூறுகின்றது. "உண்மையிலேயே, கடவுளுக்கு மாட்சி நல்குவதும் மக்களைத் தூய்மையாக்குவதுமான இம்மாபெரும் பணியில் தன் ஆண்டவரைக் கூவி அழைத்து *அவர் வழியாக என்றும் வாழும் தந்தைக்கு வழிபாடு நடத்தும்* தம் அன்புமிக்க மணமகளாம் திருச்சபையைக் கிறிஸ்து என்றுமே தம்முடன் இணைத்துக்கொள்கிறார்" (இர.வத்.சங்கஏடு(திருச்சபை, எண்.7).



நமது செபங்கள் அனைத்தும் இயேசு வழியாகவே ஏறெடுக்கப்பட -வேண்டுமென திருச்சபைத் தாய் நமக்குக் கற்பிக்கின்றாள். திருப்பலியின்போது சபை மன்றாட்டின் முடிவில், "உம்மோடு தூய ஆவியின் ஒன்றிப்பில் இறைமகனாய் என்றென்றும் வாழ்ந்து ஆட்சி செய்கின்ற எங்கள் ஆண்டவரும் உம் திருமகனுமாகிய ***இயேசுக் கிறிஸ்து வழியாக*** உம்மை மன்றாடுகின்றோம்." என்று சொல்லப்படுகிறது. (உரோமைத் திருப்பலிப் புத்தகத்தின் பொதுப் போதனை இல.32).

## தவறான நடைமுறைகள் களையப்பட வேண்டும்

பல்வேறு சந்தர்ப்பங்களில் நமது செபங்களின்போது விவிலியத்தின் வழிகாட்டலையும் திருச்சபையின் அறிவுறுத்தலையும் அறியாமல் தவறான நடைமுறைகள் பின்பற்றப்படுவது கவலைக்குரிய விடயமாகும். உதாரணமாக திருப்பலியில் விசுவாசிகள் மன்றாட்டின்போது தந்தையை நோக்கி செபங்கள் ஏறெடுக்கப்படுவதற்குப் பதிலாக இயேசுவை நோக்கிச் செபிக்கப்படுகிறது.


சில அருங்கொடைச் செப வழிபாடுகளில் 'இயேசப்பா' என்று இயேசுவை தகப்பனாகப் பாவித்து செபிக்கப்படுகிறது. இவை தவிர்க்கப்படவேண்டும். தந்தையாகிய இறைவனை அப்பா என்று அழைப்பதே பொருத்தமானதாகும். இயேசுவை அப்பா என்று அழைப்பது பொருத்தமற்றதாகும்.

---



# 3.2

# ஆவியால் உந்தப்பட்டு செபிக்க வேண்டும்



"இவ்வாறு தூய ஆவியார் நமது வலுவற்ற நிலையில் நமக்குத் துணை நிற்கிறார்; ஏனெனில் எதற்காக, எப்படி நாம் இறைவனிடம் வேண்டுவது என்று நமக்குத் தெரியாது; தூய ஆவியார் தாமே சொல்வடிவம் பெறமுடியாத நம்முடைய பெருமூச்சுக்களின் வாயிலாய் நமக்காகப் பரிந்துபேசுகிறார். உள்ளங்களைத் துருவி ஆயும் கடவுள் தூய ஆவியாரின் மனநிலையை அறிவார். தூய ஆவியாரும் கடவுளுக்கு உகந்த முறையில் இறைமக்களுக்காகப் பரிந்துபேசுகிறார்" (உரோ.8:26-28).

செபம் தூய ஆவியார் கொடுக்கும் கொடை. இதைப் பெற்றுக்கொண்டவர்கள் எந்நேரமும் செபிக்கலாம். செபவல்லமையினால் எல்லா வேலைகளையும் இரட்டிப்பு உற்சாகத்துடன், துடிப்புடன் ஆர்வமாகச் செய்து முடிக்கலாம். ஏனெனில் அங்கு தூய ஆவியார் நமக்குள் இருந்துகொண்டு செயலாற்றுகிறார்.

**என் பாதமே துணை!**

ஞானியில் ஆச்சிரமத்திற்கு அருகில் உள்ள ஆற்றில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. சீடன் ஒருவன் பயப்படாமல் ஆற்றங்கரைக்குச் சென்று, "என் குருவின் பாதமே துணை" என்று வேண்டிக்கொண்டு தண்ணீரின்மீது நடக்கலானான். இதைப்பார்த்த குருவுக்கு சந்தோசம்


பொறுக்க முடியவில்லை. "எனது பாதத் துணைக்கு இவ்வளவு சக்தியா?" என நினைத்துத் தானும் ஆற்றங்கரைக்குச் சென்று, "என் பாதமே துணை" என்று சொல்லி ஆற்றிலே நடக்கலானார். அந்தோ! ஆற்றுவெள்ளம் குருவை அடித்துச்சென்றது.

தனது சக்திமீது, வல்லமைமீது மட்டும் அதிக நம்பிக்கைகொள்ளும் மனிதனுக்கு கிடைக்கும் பரிசு அழிவுதான். மனித வாழ்வு இறைவனின் கொடை. அவருடைய அருளினால்தான் நாம் ஒவ்வொருவரும் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். அப்படி இருக்கும்போது நமது பலத்தின்மீது மட்டும் அதிக நம்பிக்கை கொள்வோமேயானால் நாம் சாதிக்கப்போவது ஏதுமில்லை. அதனால்தான் நாம் செபத்தில் பரிசுத்த ஆவியின் துணையை, ஏவுதலை நாடுகின்றோம்.

"தீயோராகிய நீங்களே உங்கள் பிள்ளைகளுக்கு நற்கொடைகள் அளிக்க அறிந்திருக்கிறீர்கள். அப்படியானால் விண்ணகத் தந்தை தம்மிடம் கேட்போருக்குத் தூய ஆவியைக் கொடுப்பது எத்துணை உறுதி" (லூக்.11:13) என இயேசுவே கூறியிருக்கின்றார்.

"உண்மையை வெளிப்படுத்தும் தூய ஆவியார் வரும்போது அவர் முழு உண்மையை நோக்கி உங்களை வழிநடத்துவார்" (யோவா.16:13).

## நமக்குள் இருந்து நமக்காகச் செபிக்கின்றார்



செபிப்பது நாமல்ல, நம்மில் இருக்கும் அந்தத் தூய ஆவிதான் நமக்குள் இருந்து செபிக்கத் தூண்டுகிறார். மனித பலவீனங்களால் நாம் செபிக்கிற செபம் குறையுள்ளதாக இருக்கலாம். எப்படிச் செபிக்க வேண்டும் எவ்வாறு பேசவேண்டும் என நமக்குப் புரியாமல் இருக்கலாம். எதைக் கேட்பது என்பதுகூட நமக்குத் தெரியாமல் இருக்கலாம். அவ்வேளையில் தூய ஆவியார் நமக்குத் துணையாக வருகின்றார். "தூய ஆவியாரின் துணையுடன் வேண்டுதல் செய்யுங்கள்" (யூதா:20) என திருத்தூதர் யூதா அழைப்பு விடுக்கின்றார்.

“நீங்கள் பிள்ளைகளாய் இருப்பதால் கடவுள் தம் மகனின் ஆவியை உங்கள் உள்ளங்களுக்குள் அனுப்பியுள்ளார். அந்த ஆவி, ‘அப்பா, தந்தையே’, எனக் கூப்பிடுகிறது” (கலா.4:6). “மீண்டும் அச்சத்திற்கு உள்ளாக்கும் மனப்பான்மையை நீங்கள் பெற்றுக்கொள்ளவில்லை: மாறாகக் கடவுளின் பிள்ளைகளுக்குரிய மனப்பான்மையையே பெற்றுக்கொண்டீர்கள். அதனால் நாம், ‘அப்பா, தந்தையே’ என அழைக்கிறோம். நாம் இவ்வாறு அழைக்கும்போது நம் உள்ளத்தோடு சேர்ந்து தூய ஆவியாரும் நாம் கடவுளின் பிள்ளைகள் என்பதற்குச் சான்று பகர்கிறார். நாம் பிள்ளைகளாயின், உரிமைப்பேறு உடையவர்களாய் இருக்கிறோம். ஆம், நாம் கடவுளிடமிருந்து உரிமைப்பேறு பெறுபவர்கள்” (உரோ.8:15-17).

கடவுளின் ஆவியார் என்னுள் இருந்துகொண்டு என்னைச் சிந்திக்க, செயல்பட அழைப்பு விடுக்கிறார். எனவே நான் செபிப்பதாக இல்லாமல் ஆவியானவரைச் செபிக்க அனுமதிப்பதே உண்மைச் செபம். இயேசு மறைநூல் அறிஞர் நிக்கோதேமுவிடம் சொன்னதுபோல் உண்மையிலும், ஆவியானவரிலும் இறைவனைத் தொழுவதே உண்மைச் செபம்.

---






# புனிதர் பரிந்துரையில் செபிக்க வேண்டும்



புனிதர்கள் இறைவனின் அழைப்பைப் பெற்றவர்கள்; அனைத்தையும் துறந்து இயேசுவைப் பின்தொடர்ந்தவர்கள். இறைவனோடு நெருக்கமாக உறவுகொண்டு வாழ்ந்தவர்கள். செபம் தவம், தியானம் இவற்றால் இறை அனுபவம் பெற்றவர்கள்; தாங்கள் பெற்ற இறை அனுபவத்தைப் பிறரோடு பகிர்ந்துகொண்டவர்கள். சென்ற இடமெல்லாம் இறைவார்த்தையை ஆர்வமுடன் போதித்தவர்கள். அதற்காகப் பல துன்பங்களை ஏற்றவர்கள். இறைவார்த்தையின்படி வாழ்ந்தவர்கள்; இறையரசுக்காக எவ்வித சவால்களையும் ஏற்றவர்கள். கடவுளுடைய அரசை மக்கள் மத்தியில் உருவாக்கியவர்கள்.

திருச்சபையை அன்புசெய்தவர்கள்; அதன் வளர்ச்சிக்காக எண்ணற்ற தியாகங்களைச் செய்தவர்கள். திருச்சபையில் நிலவிய சில தவறான போக்குகளையும் கண்ணோட்டங்களையும் அச்சமின்றி சுட்டிக்காட்டியவர்கள். இறைவனில் ஆழ்ந்த விசுவாசம் கொண்டவர்கள்; விசுவாசத்திற்காக தங்கள் உயிரையே கொடுத்தவர்கள். இறைவனின் அருட்கொடைகளினால் புனித வாழ்வின் நிறைவுக்கு உயர்த்தப்பட்டவர்கள். புனிதர்கள் நமது கிறிஸ்தவ வாழ்வுக்கு சிறந்த முன்னோடிகள். நமக்கு இறையரசின் வழியைக் காட்டுபவர்கள். புனிதர்கள் நமக்காக இறைவனிடம் பரிந்துபேசுகின்றவர்கள். புனிதர்கள்

நம் தேவைகளிலும் துன்ப வேளைகளிலும் நமக்குத் துணை நிற்பவர்கள்.

## புனிதர்கள் எங்கிருக்கின்றார்கள்?

புனிதர்கள் என்றால் யார்? அவர்கள் எங்கிருக்கின்றார்கள் என்பதை திருவிவிலியம் நமக்குத் தெளிவாக எடுத்து விளக்குகிறது. "நான் வெற்றி பெற்று என் தந்தையின் அரியணையில் அவரோடு வீற்றிருப்பதுபோல, வெற்றி பெறும் எவருக்குமே எனது அரியணையில் என்னோடு வீற்றிருக்கும் உரிமை அளிப்பேன்" (திவெ.3:21). "வார்த்தையைக் கடைப்பிடிப்போர் என்றுமே சாகமாட்டார்கள் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன் என்றார்" (யோவா.8:51).

"பின்பு நான் அரியணைகளைக் கண்டேன். தீர்ப்பளிக்கும் அதிகாரம் பெற்றிருந்த சிலர் அவற்றின்மீது வீற்றிருந்தனர். கடவுளின் வாக்கை அறிவித்து இயேசுவுக்குச் சான்று பகர்ந்ததற்காகத் தலை கொடுத்தவர்களின் ஆன்மாக்களையும் கண்டேன். அவர்கள் அந்த விலங்கையோ அதன் சிலையையோ வணங்கியதில்லை: அதற்குரிய குறியைத் தங்கள் நெற்றியிலோ கையிலோ இட்டுக்கொண்டதுமில்லை. அவர்கள் மீண்டும் உயிர்பெற்று, ஆயிரம் ஆண்டுகள் கிறிஸ்துவோடு ஆட்சிபுரிந்தார்கள்" (திவெ.20:4). "பின்பு விண்ணகத்திலிருந்து ஒரு குரலைக் கேட்டேன்: 'இது முதல் ஆண்டவரோடு இணைந்த நிலையில் இறப்போர் பேறுபெற்றோர்' என எழுது என்று அது ஒலித்தது. அதற்குத் தூய ஆவியார், 'ஆம், அவர்கள் தங்கள் உழைப்பிலிருந்து ஓய்வு பெறுவார்கள்: ஏனெனில் அவர்களின் செயல்கள் அவர்களைப் பின்தொடரும்' என்று கூறினார்" (திவெ.14:13).

## புனிதர்களின் பரிந்துரையை நாம்கேட்கலாம்

புனிதர்களின் பரிந்துரையை நாடிச் செபிப்பதுபற்றி திருச்சபை தெளிவாக எடுத்து இயம்புகிறது. "அவர்களைப் பணிவுடன் வேண்டுவதும், கடவுளிடமிருந்து அவரது மகனும் நம் ஆண்டவரும் நம் ஒரே மீட்பரும் விடுதலையாளருமான கிறிஸ்து இயேசுவின் வழியாக நன்மைகளைப் பெற, அவர்களின் இறைவேண்டல்களையும் ஆற்றலையும், உதவியையும் நாடிச்செல்வதும் போற்றத்தக்கது" (இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடு, திருச்சபை, எண்.50).

## புனிதரின் வேண்டுதல் துணை நிற்பதாக!



"உம்முடைய அருள்வாக்கைப் பின்பற்றி வாழ்ந்து, பல்வேறு விதங்களிலே பேறுபெற்றவர்களாய் இருக்கிற இப்புனிதர்களின் திருக்கூட்டத்தோடு இணைந்து உம்மைப் போற்றுகின்றோம். இப்புனிதர்களின் வாழ்க்கையைப் பின்பற்றி நற்செய்தி வழியில் நடக்க, இவர்களுடைய வேண்டுதல் என்றும் எங்களுக்கு துணை நிற்பதாக!" என புனிதர் அனைவரின் திருவிழாவில் இடம்பெறும் சபை மன்றாட்டில் கூறப்பட்டுள்ளது.

"ஏனெனில் நாங்கள் உமது அருளால் வானக எருசலேமை எங்கள் அன்னையாகக் கொண்டாடுகின்றோம். அங்கேதான் எங்கள் சகோதரர் சகோதரிகளாகிய புனிதர்கள் உம்மைச் சூழ்ந்து நின்று, முடிவின்றிப் போற்றிப் புகழ்கின்றார்கள். அந்நகரை நோக்கியே நாங்கள் விசுவாசப் பயணம் செய்து ஆர்வத்துடன் விரைந்து வருகின்றோம்.

அங்கேதான் திருச்சபையின் உறுப்பினர் வாழ்வின் நிறைவை அடைந்து மகிமை பெறுகின்றனர் என மகிழ்கின்றோம். ஏனெனில் எங்கள் வலுவின்மையைப் போக்க அவர்கள் வழியாக எடுத்துக்காட்டுதலும் துணையும் தோழமையும் அருளுகின்றீர்" என புனிதர் அனைவரின் திருவிழாவில் இடம்பெறும் தொடக்கவுரையில் சொல்லப்பட்டுள்ளது.

நாமும் எமது செப வாழ்வுப் பயணத்தில் "எங்களுக்காக வேண்டிக்கொள்ளுங்கள்" என்று புனிதர்களின் பரிந்துரையைக் கேட்டுச் செபிப்போம்.



## 3.4

# அப்பா அனுபவத்தில் செபிக்க வேண்டும்



வாழ்க்கை என்றாலே உறவு என்றான் ஓர் அறிஞன். மனிதனின் உறவுகள் அமைந்திருக்கும் விதத்திலேதான் அவனுடைய வாழ்க்கை அமைந்திருக்கும். ஏனெனில் உறவுகள் அமைந்திருக்கும் விதத்தில்தான் அவனுடைய மனநிலைகள் உருவாகின்றன. உறவுகள் வளர அவனுடைய வாழ்க்கையும் வளம்பெறுகின்றது. இந்த உறவுகள் பலவகைப்பட்டவை அதில் ஒன்றுதான் 'அப்பா - பிள்ளை' உறவு.

### 'அப்பா' என்பது குழந்தை மொழி

அப்பா என்பது குழந்தை மொழி. ஒரு குழந்தை அப்பா என அன்பொழுக அழைக்கும்போது அங்கு மழலையின் இனிமையும் கொஞ்சும் எளிமையும் களிநடனம் புரிகின்றன. 'அப்பா' அப்பழுக்கற்ற அன்பையும், ஆழமான நெருக்கத்தையும், முழுமையான நம்பிக்கையையும் வெளிப்படுத்தும் சொல். யூதக் குடும்பங்களிலும் பிள்ளைகள் தந்தையை 'அப்பா' என்றே அழைத்தனர்.

ஒரு மழலையின் சொல்லை இறைவனுக்குச் சாற்றி, அவரை அப்பா என அழைத்தமை - இறைவன் மக்களோடு என்றும் உடன் இருப்பவர், உறவுகொள்பவர், மக்களின் நலனில் அக்கறையும் ஆர்வமும் காட்டுபவர் என்பதைத் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றது. பிள்ளைகளைப் பசியிலும்

பட்டினியிலும் பரிதவிக்கவிட்டு தான்மட்டுமே உண்டு குடித்தால் போதும் என நினைப்பவர் அப்பா அல்லர். தமக்காக வாழாமல் தம் பிள்ளைகளுக்காக உடல் பொருள் ஆவி அனைத்தையும் அர்ப்பணிப்பதால்தான் ஒருவர் அப்பா ஆகிறார். இறைவனும் தமது பரிவிரக்கத்தாலும், ஈடுபாட்டாலுமே அப்பாவாகப் பர்ணமிக்கிறார் என்பதை இயேசு சுட்டிக்காட்டுகிறார். (லூக். 6:36; மத்.6:25-34; 18:10 -14).

## மழலை மொழியில் இயேசுவின் செபம்


இயேசு செபித்தபோது இறைவனை எவ்வாறு அழைத்தார் என்பது நாம் ஆழமாகச் சிந்திக்க வேண்டிய ஒன்று. நான்கு நற்செய்திகளிலும் விரவிக் கிடக்கும் குறிப்புகளிலிருந்து புலப்படும் ஓர் உண்மை, சிலுவையில் இயேசு "என் கடவுளே, என் கடவுளே ...." என எழுப்பிய அவலக்குரல் நீங்கலாக (மத்.15:34) மற்ற எல்லாச் செபங்களிலும் இயேசு இறைவனை 'அப்பா' என்றே விளித்துச் செபித்துள்ளார்.

அப்பா ஓர் அரமயிக் சொல். அதுவே இயேசுவின் தாய் மொழியும்கூட. அன்று யூதர்களால் சொல்லப்பட்ட மூவேளைச் செபமும், எருசலேம் ஆலயத்தில் ஓதப்பட்ட வழிபாட்டுச் செபங்களும் எபிரேய மொழியில் அமைந்திருக்க, இயேசு தமது தாய் மொழியிலேயே செபித்தது ஒரு மாபெரும் புரட்சியாகும்.

யூத சமயத்தில் இறைவனை அப்பா என அழைப்பது வழக்கில் இல்லை. இறைவன் வரலாற்றை ஊடுருவி மக்களின் அன்றாட வாழ்வில் பங்கேற்பவராக விளங்கினாலும் அவரை அரசராகவும், ஆண்டவராகவும் கருதி எட்டாத தூரத்தில் வைத்தனர். அதேவேளையில் இறைவனைத் தந்தை எனக் குறிப்பிடுவது பழைய ஏற்பாட்டில் ஒருசில இடங்களில் காணப்படுகிறது. ஆனால் இயேசுவோ இறைவனை அப்பா என்று அழைத்து இறைவனுக்கும் மனிதருக்கும் இடையே ஒரு புதிய உறவை, நெருக்கமான, இறுக்கமான பிணைப்பை ஏற்படுத்திப் புரட்சிப் பூபாளம் இசைத்தார்.

"அப்பா, தந்தையே எல்லாம் உம்மால் இயலும். இத்துன்பக் கிண்ணத்தை என்னிடமிருந்து அகற்றும். ஆனாலும் என் விருப்பப்படி அல்ல: உம் விருப்பப்படியே நிகழட்டும் என்று கூறினார்"(மாற்.14:36).

## நமது இறையனுபவம் அப்பா அனுபவமாக இருக்கிறதா?



"நீங்கள் பிள்ளைகளாய் இருப்பதால் கடவுள் தம் மகனின் ஆவியை உங்கள் உள்ளங்களுக்குள் அனுப்பியுள்ளார். அந்த ஆவி, 'அப்பா, தந்தையே', எனக் கூப்பிடுகிறது" (கலா.4:6).

"மீண்டும் அச்சத்திற்கு உள்ளாக்கும் மனப்பான்மையை நீங்கள் பெற்றுக்கொள்ளவில்லை: மாறாகக் கடவுளின் பிள்ளைகளுக்குரிய மனப்பான்மையையே பெற்றுக்கொண்டீர்கள். அதனால் நாம், 'அப்பா, தந்தையே' என அழைக்கிறோம். நாம் இவ்வாறு அழைக்கும்போது நம் உள்ளத்தோடு சேர்ந்து தூய ஆவியாரும் நாம் கடவுளின் பிள்ளைகள் என்பதற்குச் சான்று பகர்கிறார். நாம் பிள்ளைகளாயின், உரிமைப்பேறு உடையவர்களாய் இருக்கிறோம். ஆம், நாம் கடவுளிடமிருந்து உரிமைப்பேறு பெறுபவர்கள்" (உரோ.8:15-17).

நமது நாளாந்த செப அனுபவமும் இயேசுவின் அனுபவத்தைப்போல அப்பா அனுபவமாக மாறவேண்டும். இறைவனை நமது சொந்த அப்பாவாகப் பாவித்து செபிக்கின்ற அந்த மேலான அனுபவத்திற்குள் நாம் கடந்து செல்லவேண்டும்.

# இயல் 4

# எங்கே செபிக்க வேண்டும்?

1. தனிமையில் செபிக்க வேண்டும்
2. குழுவில் செபிக்க வேண்டும்
3. குடும்பத்தில் செபிக்க வேண்டும்
4. கோவிலில் செபிக்க வேண்டும்


*எங்கே செபிக்க வேண்டும் என்று கேட்டால் —*
*அதற்கான விடை எங்கும்*
*செபிக்கலாம் என்பதுதான்.*
*ஆனால் நமது கிறிஸ்தவ வாழ்வுப்*
*பின்னணியை வைத்துச் சிந்திக்கையில்*
*சில இடங்களில் செபிப்பது*
*நமக்கு நன்மை பயக்கும் என்பது மட்டுமல்ல*
*அது இன்றைய காலத்தின் தேவையும்கூட!*

> "குழுவாகச் செபிக்கின்ற செபம் விரைவாக இறைவனை எட்டுகின்றது"
> *(இலத்தீன் பழமொழி)*

*திருச்சபை வரலாற்றின் சில காலகட்டங்களில்*
*கடவுளோடு தொடர்பை ஏற்படுத்திக்கொள்ள*
*இறை மனிதர்கள் உலகத்தைத் துறந்தனர்.*
*பாலைவனம், மலைகள், குகைகள் போன்ற*
*தனிமையான இடங்களுக்குச் சென்று*
*அமைதியில் செபித்தனர்.*

*இன்று காலமாற்றத்தின் கரையில்*
*நாம் நிற்கின்றோம்.*
*தனிமையில், குழுவில், குடும்பத்தில்,*
*கோவிலில் செபிப்பது தேவையாக உள்ளது.*

> "கூடிச் செபிக்காத குடும்பம் கூரையில்லாத வீட்டிற்குச் சமம்"








# தனிமையில் செபிக்க வேண்டும்



உடலோடும் ஆன்மாவோடும் படைக்கப்பட்ட மனிதன் ஒவ்வொரு நாளும், படைத்தவரைத் தேடவேண்டும். "என்னைப் பிரிந்து உங்களால் எதுவும் செய்ய இயலாது" (யோவா.15:5) என்ற இயேசுவின் கூற்றை மெய்ப்பிக்கும் வகையில் நாம் ஒவ்வொரு நிமிடமும் இறைவனைச் சார்ந்திருக்க வேண்டும். நாம் இறைவனைச் சார்ந்திருக்கிறோம் என்பதன் வெளி அடையாளம்தான் செபம். நம்மைப் படைத்து பராமரித்துவரும் கடவுளை நாம் சார்ந்திருக்கிறோம் என்பதை செபத்தின் வழியாக நாம் உறுதிப்படுத்திக்கொள்கிறோம்.

## தனிமையில்தான் மனதைத் திறக்க முடியும்

"இனிது இனிது ஏகாந்தம் இனிது;
அதனினும் இனிது ஆதியைத் தொழுதல்."

*(தனிப்பாடல் திரட்டு: ஒளவையார்,55)*

மனிதன் தனிப்பட்ட முறையில் செபிக்க வேண்டும். மனிதன் தனிமையிலே கடவுளோடு உரையாடும்போது அவன் தன் மனதை கடவுளிடம் திறந்து காட்டுகிறான். அவனது வாழ்வு ஒரு திறந்த புத்தகமாகக் கடவுள்முன் இருக்கின்றது. தனிப்பட்ட முறையில் கடவுள் நம்மிடம் என்ன சொல்ல விரும்புகிறார் என்பதை தனிச் செபத்தில்தான் நாம் கண்டுணர முடியும்.

இதனால்தான் கடவுள் சிந்தனையிலே வாழ்கின்ற மனிதனிடம் இயேசு சொல்கிறார். *"நீங்கள் இறைவனிடம் வேண்டும்பொழுது உங்கள் உள்ளறைக்குச் சென்று, கதவை அடைத்துக்கொண்டு, மறைவாய் உள்ள உங்கள் தந்தையை நோக்கி வேண்டுங்கள். மறைவாய் உள்ளதைக் காணும் உங்கள் தந்தையும் உங்களுக்குக் கைமாறு அளிப்பார்" (மத்.6:6)*

"பிறர் அறியாவண்ணம் செபிப்பதுதான் சிறந்த செபம்" என்கிறார் புனித அந்தோனியார்.

## தனிச்செபத்திலேயே உணர்வை ஒருங்கிணைக்க முடியும்

மனிதரின் உணர்வெல்லாம் இறைவன்பால் எழுப்பப்பட்டு, ஒருங்கிணைந்து நிற்கின்ற அனுபவ நிலையே செபம். உணர்வுத்தளத்தில் இறைவனோடு உறவுகொள்கிறோம்; உறவாடுகின்றோம். நன்றியுணர்வு, நம்பிக்கையுணர்வு, அன்புணர்வு, நீதியுணர்வு, சகோதர உணர்வு, குழும உணர்வு, விழிப்புணர்வு போன்ற உணர்வுகளைச் செபத்தில் அனுபவிக்கின்றோம். நமது உள்ளத்து உணர்வுகள் எப்படி இயங்குகின்றன? அது தனது விருப்பம்போல் செல்கிறதா? அல்லது இறை விருப்பத்தை நாடுகிறதா? உணர்வுகள் சிதறி இருக்கின்றனவா? என்பதையெல்லாம் தனிச்செபத்தில் கண்டுணர்ந்து உணர்வுகளை நெறிப்படுத்தி ஒரே இலட்சியத்தை நோக்கி செயல்பட தனிச்செபம் நம்மைத் தூண்டுகிறது.

## தனிச்செபத்தில் தரித்திருக்கும் இயேசு

தனிச்செபத்திற்கு ஆண்டவர் இயேசுவே முன்மாதிரிகையாக இருக்கிறார்.



"அவரோ ஆள் நடமாட்டம் இல்லாத இடங்களுக்குச் சென்று தனித்திருந்து இறைவனிடம் வேண்டிவந்தார்" (லூக்.5:16).

"இயேசு விடியற்காலைக் கருக்கலில் எழுந்து தனிமையான ஓர் இடத்திற்குப் புறப்பட்டுச் சென்றார். அங்கே அவர் இறைவனிடம் வேண்டிக்கொண்டிருந்தார்" (மாற்.1:35).

"அவர் அவர்களிடமிருந்து விடைபெற்றுக்கொண்டு, இறைவனிடம் வேண்டுவதற்காக ஒரு மலைக்குச் சென்றார்" (மாற்.6:46).
"இயேசு தனித்து இறைவனிடம் வேண்டிக்கொண்டிருந்தபோது சீடர் மட்டும் அவரோடு இருந்தனர்" (லூாக்.9:18).
"பிறகு அவர் அவர்களை விட்டுக் கல்லெறி தூரம் விலகிச்சென்று முழந்தாட்படியிட்டு இறைவனிடம் வேண்டினார்." (லூாக்.22:39-41).
ஆண்டவர் இயேசுவின் தனிச் செபவாழ்வு நமக்கு ஒரு முன்மாதிரியாகவும் மேல்வரிச் சட்டமுமாக இருக்கின்றது.

## நான் நானாக இருக்கின்ற நிலை



இறைபிரசன்னத்திலே தனிமையில் அமர்ந்திருந்து இறைவனோடு சங்கமமாவது எவ்வளவு இனிமையான அனுபவம்!


பலர் தனிச்செபத்திலே பல மணி நேரங்களைச் செலவுசெய்து, இறைவனின் சிறப்பான வரத்தைப் பெற்று இன்று புனிதர்களாக இருக்கின்றார்கள். தனிச் செபம்தான் நம்மையும் புனிதர்களாக மாற்றும்.

தனிச்செபத்தில்தான் நாம் சுதந்திரமாக, நம் மனம்போன போக்கில் இறைவனோடு உரையாட முடியும். "நானும் என் இறைவனும்" என்ற நிலையில் அங்கே ஓர் சுதந்திர உணர்வு இழையோடி நிற்கும். நான் எந்த முகமூடியும் போடாமல் நான் நானாக இருக்கின்ற நிலையை தனிச் செபத்தில்தான் அனுபவிக்க முடியும்.



# 4.2

# குழுவில் செபிக்க வேண்டும்




மனிதன் சமுதாயத்தில் மக்களோடு மக்களாக வாழ்கின்றான். சமுதாயத்தில் தன்னையும் இணைத்துக் கொண்டு தானும் வளர்ந்து பிறரும் வளர வழி செய்கின்றான். கூட்டுவாழ்விலே குழுச் செபமானது அதிகம் எதிர்பார்க்கப்படுகிறது.

## கூடியிருக்கும் இடத்தில் நான் இருக்கிறேன்!

இறைவனின் தனிப்பட்ட பிரசன்னம் இருவர் மூவர் கூடிச்செபிக்கும்போது கிடைக்கிறது. "இரண்டு அல்லது மூன்றுபேர் என் பெயரின் பொருட்டு எங்கே ஒன்றாகக் கூடியிருக்கிறார்களோ அங்கே அவர்களிடையே நான் இருக்கிறேன்" (மத்.18:20) என்கிறார் இயேசு.

இயேசுவின் இந்த வார்த்தையில் நம்பிக்கைகொண்டு கருத்தொருமித்த, தமக்குள் அன்புறவு கொண்ட ஒருசிலர், இறைவனின் திருப்பெயரால் ஒன்றுகூடி, பல்வேறுபட்ட வாழ்க்கைச் சூழ்நிலைகளிலும் பல்வேறு உறவுகளிலும் இறைபிரசன்னத்தை உணர்ந்து கொண்டாடுவது குழுச்செபமாகும். குழுச் செபத்தில் மனிதன் தனக்கும் இறைவனுக்கும் உள்ள அன்புறவை, இறைவன் தன் வாழ்வில் செய்த அருஞ்செயல்களைப் பிறர்முன் வெளிப்படுத்திக் கொண்டாடுகிறான்.

## மனமொத்துச் செபிக்க வேண்டும்



குழுச் செபத்தை நாம் எப்படிச் செபிக்க வேண்டும் என்பதையும் இயேசு அழகாகச் சொல்கிறார். "உங்களுள் இருவர் மண்ணுலகில் தாங்கள் வேண்டும் எதைக்குறித்தும் *மனமொத்திருந்தால்* விண்ணு-லகில் இருக்கும் என் தந்தை அதை அவர்களுக்கு அருள்வார்" மத்.18:19) ஆம், நாம் மனமொத்துச் செபிக்க வேண்டும் என்பதையே இயேசு சுட்டிக்காட்டுகின்றார்.

இதைத்தான் தொடக்கத் திருச்சபையில் வாழ்ந்தவர்கள் செய்தார்கள். "அவர்கள் அனைவரும் சில பெண்களோடும் இயேசுவின் சகோதரர்களோடும், அவருடைய தாய் மரியாவோடும் இணைந்து *ஒரே மனத்தோடு* இறைவனிடம் வேண்டிக் கொண்டிருந்தார்கள்" (தி.ப.1:14).

இதையே புனித பவுல், "கிறிஸ்து இயேசுவின் முன்மாதிரிக்கேற்ப நீங்கள் ஒரே மனத்தினராய் இருக்குமாறு மன உறுதியையும் ஊக்கத்தையும் தரும் கடவுள் உங்களுக்கு அருள்புரிவாராக! இவ்வாறு நீங்கள் அனைவரும் *ஒருமனப்பட்டு,* நம் ஆண்டவர் இயேசுக் கிறிஸ்துவின் கடவுளும் தந்தையுமானவரை ஒருவாய்ப்படப் போற்றிப் புகழ்வீர்கள்" (உரோ.15:5,6).

இயேசுகூட இவ்வுலக வாழ்வின்போது, தனது வழக்கப்படி ஓய்வுநாளன்று செபக்கூடத்தில் குழுவாகச் செபித்தார் (லூக்.4:16). எம்மாவுஸ் செல்லும் சீடர்களுடன் செபித்தார் (லூக்.24:30). இவ்வாறு பலநேரங்களில் பொதுச் செபத்தில் ஈடுபட்டு நம் அனைவருக்கும் முன்மாதிரியாகத் திகழ்ந்தார்.


"குழுவாகச் செபிக்கின்ற செபம் விரைவாக இறைவனை எட்டுகின்றது" என்பது ஓர் இலத்தீன் பழமொழி ஆகும்.

## மனிதர் நாம் தனித் தீவுகள் அல்ல

மனிதர்களாகிய நாம் தனித்தனி தீவுகளாக வாழ முடியாது. மற்றவர்களின் உதவி இல்லாமல், தொடர்பு இல்லாமல் வாழ முடியாது. நாம் சேர்ந்தே வாழ வேண்டியவர்கள். சிலர் குழுவாக, பொதுவாக வந்து செபிப்பதை விரும்புவதில்லை. "எனக்குத் தனிச் செபம் போதுமானது, நானுண்டு என் இறைவன் உண்டு" என்ற மனப்பான்மையில் வாழ்கின்றனர். இது தவறான ஓர் கண்ணோட்டமாகும். காரணம் கடவுள் நம்மைத் தனியாகப் படைக்கவில்லை. ஒரு மக்களினமாகவே படைத்தார். ஒரு மக்களினமாகவே மீட்டார். எனவே நாம் இறைவனை நோக்கிச் செபிக்கும்போதும் ஒரு மக்களினமாகவும் குழுவாகவும் செபிக்க அழைக்கப்படுகின்றோம்.

## வீடுகளில் கூடிச் செபித்த இளந்திருச்சபை

தொடக்கத் திருச்சபையிலே வீடுகளில் கூடி குழுவாகச் செபிக்கின்ற நடைமுறை இருந்ததை பவுலின் திருமுகங்கள் வாயிலாக அறிய முடிகிறது.



1. பிரிஸ்கா அக்கில்லா வீட்டில் கூடும் திருச்சபை (உரோ.16:5).
2. நிம்பா வீட்டில் கூடுகிற திருச்சபை (கொலோ.4:15).
3. பிலமோன் வீட்டில் கூடும் திருச்சபை (பில.1:2) என்பன சில உதாரணங்கள்.

இன்று வீடுகளில் நாம் அன்பியமாக ஒன்றுகூடிச் செபிப்பதற்கு இளந்திருச்சபையின் இந்த முன்மாதிரி நமக்கு ஊக்கம் அளிப்பதாக, உந்துசக்தி தருவதாக அமைகின்றது.



# 4.3 குடும்பத்தில் செபிக்க வேண்டும்



கிறிஸ்தவக் குடும்பம் திருச்சபையின் உயிரணு, திருச்சபையின் 'இல்லத் திருவிடம்" (Domestic Sanctuary) என அழைக்கப்படுகிறது. குடும்பம் ஒரு குட்டித் திருச்சபை; குடும்பம் ஓர் அன்புக் களஞ்சியம்; நன்மக்களை உருவாக்கும் பயிற்சிப் பாசறை; முழுமையான மனிதனை உருவாக்கும் பல்கலைக்கழகம்!

குடும்பம் - அது இறைவனின் அன்புத் திட்டம். குடும்பம் மனிதனுக்கு மட்டும் உரிய ஒப்பற்ற அமைப்பு; குடும்பம் என்பது உறவுகளின் உறைவிடம்; மனிதத்தின் பிறப்பிடம்; வாழ்க்கையை வளப்படுத்த வேண்டிய சிறப்பிடம்; சமூக - சமய நற்பண்புகளை, ஒழுக்கத்தை ஆற்றுப்படுத்தும் அறிவகம்; சமுதாயத்தின் சாரம்; அன்பைப் பிறப்பிக்கும் சாதனம்... இப்படிப் பல்வேறு சிறப்புக்களைக் கொண்ட குடும்பம் செபிக்கின்ற குடும்பமாக இருக்கும்பொழுதுதான் மேற்சொன்ன சிறப்புக்கள் அங்கே யதார்த்தமாக மாறுகின்றன.

## கூடிச் செபிக்கும் குடும்பம் கூடிவாழும்

"கூடிச் செபிக்கும் குடும்பம் கூடிவாழும்" என்பது எவ்வளவு உண்மையான வார்த்தைகள்! இதே கருத்தை எதிர்மறையாகக் கூறுவதாயின், "கூடிச் செபிக்காத குடும்பம் கூரையில்லாத வீட்டிற்குச் சமம்" என்றும் சொல்லலாம்.

தூய ஆவியில் இயேசுக்கிறிஸ்து வழியாகத் தந்தையோடு புரியும் உரையாடல் வழியாகக் குடும்பம் புனிதமடைகின்றது. குடும்ப செபத்தின் உள்ளடக்கம் குடும்ப வாழ்வேயாகும். குடும்பத்தில் இடம்பெறும் இன்ப துன்பங்கள், எதிர்பார்ப்புக்கள், ஏமாற்றங்கள் இவைபோன்ற எல்லா நிகழ்ச்சிகளும் குடும்பத்தின் வரலாற்றில் இறைவன் ஈடுபட்டிருப்பதைக் காட்டுகின்றன.

"ஒத்த குறிக்கோளுடன் ஒரே வீட்டினுள் வசிக்கும் நபர்களின் இணைப்பே குடும்பம்" என ஐ.நா.சபை வரையறை செய்கிறது. இங்கே சாதாரணமாகவே ஒத்த குறிக்கோளுடன் வாழ்பவர்கள்தான் குடும்பத்தினர் என்றால் ஒரு கிறிஸ்தவக் குடும்பத்தில் அது இன்னும் முக்கியமானதொன்றாகவே உள்ளது.

கூடிச்செபிக்கும் குடும்பத்தில் இறைபிரசன்னம் நிறைந்திருக்கும். அக்குடும்பம் இறைவார்த்தையால் ஒவ்வொரு நாளும் ஊட்டமடைந்து வரும். குடும்பமாகச் செபிக்கும்போது அங்கே ஒருவரை ஒருவர் ஏற்றுக்கொள்கின்ற மனப்பான்மை வளரும். அங்கே மனிதப் பலவீனங்கள் மத்தியிலும் அன்பு, மன்னிப்பு, விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை என்பன மேலோங்கி இருக்கும். அப்படியான ஒரு சூழ்நிலையில் நல்லதொரு குடும்ப ஒன்றிணைப்பு நல்லதொரு கிறிஸ்தவ சமூகத்தின் தோற்றத்திற்கு வழிவகுக்கும்.

## குடும்ப உறவை வலுப்படுத்தும் குடும்பச் செபம்



"அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்", "தந்தை சொல்மிக்க மந்திரமில்லை", "தாயில் சிறந்ததொரு கோயிலும் இல்லை" என பெற்றோரின் பெருமையை நம் தமிழ் மூதாட்டி ஔவையார் *கொன்றை வேந்தனில்* கூறிச்சென்றுள்ளார்.

"தந்தை அகலாகவும் தாய் அதிலுள்ள எண்ணையாகவும் இவர்களின் குழந்தைகள் எரியும் திரியாகவும் இருந்தால் அகல் விளக்கின் ஒளிபோல் குடும்பம் பிரகாசிக்கும்" என்கிறது ஒரு பாலஸ்தீனப் பழமொழி.


“பிள்ளைகளே உங்கள் பெற்றோருக்கு முற்றிலும் கீழ்ப்படியுங்கள். ஆண்டவரைச் சார்ந்தவர்களுக்கு இதுவே தகும்” (கொலோ.3:20) என இறைவார்த்தை பிள்ளைகளுக்கு அறிவுரை கூறுகின்றது. அதேபோன்று பெற்றோர்களும் பிள்ளைகளைப் புரிந்துகொண்டு நடக்க வேண்டும் என இறைவார்த்தை கூறுகின்றது. “பெற்றோர்களே, உங்கள் பிள்ளைகளுக்கு எரிச்சல் மூட்டாதீர்கள். அப்படிச் செய்தால் அவர்கள் மனந்தளர்ந்து போவார்கள்” (கொலோ.3:21).

இறைவார்த்தை விடுக்கின்ற இந்த அழைப்பை வாழ்வாக்க வேண்டுமானால் அது குடும்ப செபத்தில்தான் சாத்தியமாகும். குடும்பமாக த்ாய், தந்தை மற்றும் பிள்ளைகள் செபிக்கும்போது அங்கே ஒருவர் ஒருவர் மட்டில் மதிப்பும் அன்புறவும் மேலோங்கி வளரும்.

“இல்லறம் நடத்துங்கள், ஆனால் ஒரு கையால் வாழ்க்கைக் கடமைகளைச் செய்துகொண்டு, ஒரு கையால் பகவானின் காலைப் பிடித்துக்கொண்டே இருக்க வேண்டும். வேலை செய்யாமல் இருக்கும்போது, இரண்டு கைகளும் ஆண்டவருடைய பாதங்களைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டிருக்கப் பயன்படவேண்டும். கடவுள் உங்களைக் காப்பாற்றுவார்” என்கிறார் இராமகிருஸ்ணர்.

---






# 4.4 கோவிலில் செபிக்க வேண்டும்

"இறைவன் வாழும் இல்லம் என்பது ஆலயமாம் - இங்கு
இறைமக்கள் யாவரும் இணைந்து வருவது ஆனந்தமாம் ......

மனம் தேடும் இறைவனைத் தினம்தோறும் காண
மாண்புறு ஆலயம் இருக்கின்றது - இறை
மலர்ப்பாதம் தொழுது பணிகின்றபோது
நம் உள்ளம் ஆலயம் ஆகின்றது."



"என் ஆன்மா ஆண்டவரின் கோவில் முற்றங்களுக்காக ஏங்கித் தவிக்கின்றது. என் உள்ளமும் உடலும் என்றுமுள இறைவனை மகிழ்ச்சியுடன் பாடுகின்றது" (தி.பா.84:2) என உரைக்கின்றார் திருப்பாடலின் ஆசிரியர். இயேசுகூட எருசலேம் கோவிலில் இருந்து வியாபாரிகளை விரட்டும் சந்தர்ப்பத்தில் "என் இல்லம் மக்களினங்கள் அனைத்திற்கும் உரிய இறைவேண்டலின் வீடு என அழைக்கப்படும்" என்ற எசாயா இறைவாக்கினர் நூலின் வார்த்தைகளை (எசா.56:7) மேற்கோள் காட்டிப் பேசுகிறார்.

## மக்கள் குலமாகவே வழிபட அழைக்கும் இறைவன்

மக்கள் குலமாக மனிதனைப் படைத்து, மக்கள் குலமாகவே அவன் தன்னை வழிபட வேண்டும் என இறைவன் விரும்புகின்றார். "தனித்தனியாக ஒருவருக்கொருவர் தொடர்பு ஏதும் அற்றமுறையில்

மக்களைப் புனிதப்படுத்தவும் ஈடேற்றவும் இறைவன் விரும்பவில்லை. மாறாக, தம்மை ஏற்றுக்கொண்டு புனிதமாய் தமக்கு ஊழியம் செய்யும் ஒரு மக்கள் குலமாக அவர்களை நிறுவ விழைந்தார்" (இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடு, திருச்சபை, எண். 9).

தொடக்கத் திருச்சபையினர்கூட கோவிலில் மக்கள் குழுவாகவே கூடிச் செபிக்கும் வழக்கத்தைக் கொண்டிருந்தனர் என திருத்தூதர்பணி நூல் சுட்டிக்காட்டுகிறது. "ஒவ்வொரு நாளும் அவர்கள் ஒரே மனத்தோடு கோவிலில் தவறாது கூடிவந்தார்கள்" (தி.ப.2:46). "ஒருநாள் இறைவேண்டல் செய்யும் நேரமாகிய பிற்பகல் மூன்று மணிக்குப் பேதுருவும் யோவானும் கோவிலுக்குச் சென்றனர்"(தி.ப.3:1).

## இறை அன்புக்கு காணக்கூடிய அடையாளம்

ஆலய நேர்ந்தளிப்புத் திருப்பலிச் செபத்தில் ஆலயத்தின் பயன்பாடு தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. "நாங்கள் உமதருளால் கட்டி எழுப்பிய இவ்வாலயம் நீர் எங்களோடு கொண்டுள்ள அன்புறவுக்குக் காணக்கூடிய அடையாளமாக அமைந்து, உம்மோடு உறவை உருவாக்கவும் வளர்க்கவும் உதவுகின்றது. உம்மை நோக்கிப் பயணம் செய்யும் திருச்சபைக்கு இங்கேதான் நீர் தவறாது துணைபுரிகின்றீர். எங்களையும் உமது உயிருள்ள ஆலயமாகக் கட்டி எழுப்புகின்றீர். விண்ணக வீடான எருசலேமில் உமது அமைதியைக் கண்டு முழுமை அடையும்வரை, உலகெங்கும் பரவியிருக்கும் உமது திருச்சபை பல்வேறு உறுப்புகளால் ஆன கிறிஸ்துவின் உடலாக இங்கேதான் வளர்ச்சிபெறச் செய்கின்றீர்."

## விழாக்களோடு விடை கொடுக்கின்றோமா?

நமது தலத்திருச்சபைகள் அனேகமாக கோவிலை மைய- மாகக் கொண்ட திருச்சபை- களாகவே இருப்பதைக் காண்கின்- றோம். இந்தக் கோவில்கள் இறைபிரசன்னத்தைத் தாங்கி நிற்கும் இல்லிடங்களாகத் திகழ்கின்றன. பலவேளைகளில் நாம் மிகவும் கஸ்ரப்பட்டு, பல முயற்சிகளை மேற்கொண்டு கோவில்களைக் கட்டி எழுப்பு- கின்றோம்.



ஆனால் எந்த அளவுக்கு அந்தக் கோவில்களைச் செபிக்கும் இடங்களாக முழுமையாகப் பயன்படுத்துகின்றோம் என்பது ஆய்வுக்குரிய கேள்வியாகும். திருப்பலிகளோடு அதிலும் திருவிழாக் கொண்டாட்டங்களோடு நாம் கோவிலுக்கு விடைகொடுத்து விடுகின்றோமா என்று ஆழமாகச் சிந்திக்க வேண்டும்.

இன்னும் பலவேளைகளில் கோவிலுக்குள் போதிய இடம் இருந்தாலும் சிலர் கோவிலுக்கு வெளியே நின்று வழிபாடுகளில் பங்கெடுப்பதையே வழக்கமாகக் கொண்டுள்ளனர். இந்நிலை மாறவேண்டும்.

இன்று அநேகமான கோவில்களில் நற்கருணைப் பிரசன்னம் இருக்கின்றது. தனியாக, குழுவாக, குடும்பமாக ஆலயத்திற்கு வந்து வல்லமையுள்ள நற்கருணைப் பிரசன்னத்தில் செபிக்கின்ற பழக்கத்தை - வழக்கத்தை நாம் கைக்கொள்ள வேண்டும்.

"திருச்சபை இறைவனின் மறையுடல். செபம் அந்த உடலின் இதயத் துடிப்பு" என்கிறோம். அப்படியானால் இறைவனின் மறையுடலாகிய திருச்சபையின் இதயத்துடிப்பு - அதாவது செபம் கோவில்களில்தானே முதலில் எதிரொலிக்க வேண்டும்!

---

# இயல் 5


# எப்போது செபிக்க வேண்டும்?

1. காலையில் செபிக்க வேண்டும்
2. இரவில் செபிக்க வேண்டும்
3. வாழ்வின்முக்கிய கட்டங்களில் செபிக்க வேண்டும்
4. துன்ப வேளையில் செபிக்க வேண்டும்

"அவரோ மிகுந்த வேதனைக்குள்ளாகவே உருக்கமாய் இறைவனிடம் வேண்டிக் கொண்டிருந்தார்."
(லூக்.22:41-44).

"வைகறையில் உமக்காக வழிமேல் விழிவைத்துக் காத்திருப்பேன்."
(தி.பா.5:3)

*நாம் எப்பொழுதெல்லாம்*
*செபிக்கவேண்டும் என்று*
*நினைக்கின்றோமோ,*
*அப்பொழுதெல்லாம் செபிக்கலாம்.*
*இன்றைய நவீன உலகில்,*
*"வாரம் ஒரு திருப்பலி*
*பாரம் இன்று நமக்கு"*
*என்று நினைப்பவர்களுக்கு மத்தியில்*
*செபம் செய்ய முன்வருகின்றவர்கள்*
*ஒரு சிலரே.*
*ஒரு மனிதன் ஒரு மரத்தின் உச்சியில்*
*வேலை செய்துகொண்டிருந்தாலும்*
*அல்லது கட்டடம் கட்டும்*
*சாரத்தில் இருந்தாலும்*
*செபிக்கக் கடமைப்பட்ட நேரத்தில்*
*செபிக்க வேண்டும் என*
*யூதப் பாரம்பரியம் சொல்கிறது.*
*காலையில், இரவில், முக்கிய கட்டங்களில்*
*துன்ப வேளையில் செபிப்போம்*





# 5.1

# காலையில் செபிக்க வேண்டும்



"ஒவ்வொரு நாளையும் திறந்து மூடும் சாவியாக செபம் இருக்க வேண்டும்." என்கிறார் தோமஸ் புல்லர் என்ற அறிஞர். காலையில் நாம் கண்விழிப்பது இறைவனின் எல்லையற்ற இரக்கத்தினால்தானே! அதிகாலையில் எழுந்து ஆண்டவரின் திருப்பாதம் அமர்ந்து செபிப்பது வல்லமையுள்ள செபமாக அமைகிறது. காரணம் இரவின் உறக்கத்தின் பின்னர், நீண்ட ஓய்வின்பின்னர் நமது உடலும் உள்ளமும் புதிய உற்சாகத்தோடு விளங்கும். அந்த வேளையில் நாம் நம் முழுப் புலனையும் செலுத்திச் செபிப்பது நமக்கு இலகுவாக இருக்கும். அதனால்தான் காலைச் செபத்தை ஆன்மீகவாதிகள் அதிகம் ஊக்கப்படுத்துகின்றார்கள். "ஒவ்வொரு காலையிலும் மாலையிலும் ஆண்டவருக்கு நன்றி கூறவும் அவரைப் போற்றவும் வேண்டும்" (1குறி.23:30) என இறைவார்த்தை அறிவுறுத்துகின்றது.

காலையில் பறவைகள் இன்னிசை எழுப்பி இறைவனைப் புகழ்கின்றன; பறந்து பாடுகின்றன. படைப்புக்களில் மேலான படைப்பாகிய மனிதனும் இறைவனைப் போற்ற, புகழ அழைக்கப்படுகின்றான்.

## காலையில் உமக்காகக் காத்திருக்கிறேன்!

திருப்பாடலின் ஆசிரியர் காலையில் தான் செபிக்கும் அனுபவத்தை பல இடங்களில் வெளிப்படுத்தியுள்ளார்."ஆண்டவரே, விடியற்காலையில் என் குரலைக் கேட்டருளும். வைகறையில் உமக்காக வழிமேல் விழிவைத்துக் காத்திருப்பேன்." (தி.பா.5:3) "நானோ உமது ஆற்றலைப் புகழ்ந்து பாடுவேன்: காலையில் உமது பேரன்பைப் போற்றி ஆர்ப்பரித்துப் பாடுவேன்" (தி.பா.59:16)

"ஆண்டவரே! நானோ உம்மை நோக்கிக் கதறுகின்றேன்: காலையில் உம்மை நோக்கி மன்றாடுகின்றேன்." (தி.பா.88:13) "காலைதோறும் உமது பேரன்பால் எங்களுக்கு நிறைவளியும்:" (தி.பா.90:14) "காலையில் உமது பேரன்பையும் இரவில் உமது வாக்குப் பிறழாமையையும் பத்து நரம்பு வீணையோடும் தம்புரு, சுரமண்டல இசையோடும் எடுத்துரைப்பது நன்று" (தி.பா.92:2). "நலிந்தவனை நல்வாக்கால் ஊக்குவிக்கும் அறிவை நான் பெற்றிட, ஆண்டவராகிய என் தலைவர், கற்றோனின் நாவை எனக்கு அளித்துள்ளார்: காலைதோறும் அவர் என்னைத் தட்டி எழுப்புகின்றார்: கற்போர் கேட்பது போல்நானும் செவிகொடுக்கச் செய்கின்றார்" (எசா.50:4). "காலைதோறும் அவை புதுப்பிக்கப்படுகின்றன! நீர் பெரிதும் நம்பிக்கைக்குரியவர்!"(புல.3:23).


## விடியற்காலையில் செபிக்கும் இயேசு

"இயேசு விடியற்காலை கருக்கலில் எழுந்து தனிமையான ஓர் இடத்திற்குப் புறப்பட்டுச் சென்றார். அங்கே அவர் இறைவனிடம் வேண்டிக்கொண்டிருந்தார்"(மாற்கு1:35).

இயேசு விடியற்காலையில் கருக்கலில் எழுந்துசென்று செபித்தார் என மாற்கு நற்செய்தியாளர் குறிப்பிடுகின்றார். விடிகாலைப் பொழுது அதிலும் கருக்கலான நேரம் ஆழ்ந்த அமைதி குடிகொள்ளும் நேரமாகும். கருக்கலான அந்த நேரம் அகிலமே அடங்கிப்போய் இருக்கும் நிசப்தமான நேரமாகும். இயேசு செபிப்பதற்காக இந்த ஆழ்ந்த, அமைதியான நேரத்தைத் தேர்ந்தெடுத்ததில் ஆச்சரியமில்லை.

கருக்கல் என்ற சொல்லின் அர்த்தத்தை நாம் அவதானித்தால் அது இருளாயிருக்கும் நேரம் என்பது புலனாகும். இயேசு செபிக்கும் ஆர்வத்தில் தம் உறக்கத்தையே குறைத்துக்கொண்டார்.

## வெற்றிபெறும் வழி உண்டு; காலையில் செபி!



சேர் ஐசாக் நியூட்டன் என்பவர் உலகம் போற்றும் விஞ்ஞானி ஆவார். அவர் சிறு வயதாய் இருந்தபோது அவருடைய தந்தையை இழந்தார். ஆகவே அவருடைய தாயார் அவரை அவருடைய பாட்டியின் வீட்டிற்குக் கொண்டுபோய் விட்டுவிட்டார்.

பாட்டி ஏழ்மை நிலையில் இருந்தார். அவர் தன் பேரனிடம், "நியூட்டன், நீ உன் வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்கு அதிகமாக என்னால் உதவ முடியாது. ஆனால் வெற்றி பெறும் வழியொன்றை நான் உனக்குக் கற்றுக்கொடுக்கிறேன். நீ ஒவ்வொரு நாள் காலையிலும் செபி. காலையில் எழுந்திருக்கும்போது இறைவனை நோக்கி, "ஆண்டவரே என் அருள் நாயகனே, எனக்காக உயிரைக் கொடுத்த என் இயேசுவே, இந்த நாளிலே எனக்கு வெற்றியைத் தாரும்' என்று பிரார்த்தனை செய். ஆண்டவர் உன் செபத்தைக் கேட்டு உனக்கு உதவி செய்வார்" என்றார்.

ஐசாக் நியூட்டன் அதைக் கடைப்பிடித்து ஒவ்வொரு நாளும் காலையில் எழுந்து செபித்தார். நாளடைவில் ஆண்டவர் கண்களைத் திறந்தார். மிகப்பெரிய விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்களை கண்டுபிடித்தார். அவருடைய கண்டுபிடிப்புக்கள் உலகத்தையே வியக்கச் செய்தன!

ஆம் அவர் செய்தது ஒவ்வொரு நாள் காலையிலும் எழுந்து செபித்ததுதான். காலையில் செபித்து வந்ததால் அவருடைய வாழ்க்கை வெற்றியின் வாழ்க்கையாய் அமைந்தது.



# 5.2


# இரவில் செபிக்க வேண்டும்



இரவுவேளை பூமித்தாய் ஓய்வெடுக்கும் இதமான நேரம்! உயிரினங்கள் அடங்கித் துயில்கொள்ளும் வேளை! இந்த இரவுப்பொழுது செபத்திற்கு உகந்த பொழுதாக இருக்கின்றது. பகலில் பணிகளை நிறைவு செய்துவிட்டு ஓய்வெடுக்கும் நேரம் செபத்திற்குரிய இனிய நேரமாகும். தனிமையிலும் சரி, குடும்பமாகவும் சரி இரவுப் பொழுதில் இறைபிரசன்னத்தில் வீற்றிருந்து செபிக்கும் பழக்கம் இறையுறவுக்குள்ளே ஆழமாகச் செல்ல நமக்கு உதவியாக இருக்கும்.

"இரவு நேரங்களில் ஆண்டவரின் இல்லத்தில் பணிசெய்யும் ஆண்டவரின் ஊழியரே நீங்கள் அனைவரும் ஆண்டவரைப் போற்றுங்கள்" (தி.பா.134:1-2). "படுக்கையில் உங்கள் உள்ளத்தோடு பேசி அமைதியாய் இருங்கள்." (திபா 4:4 ஆ) என இரவில் செபிக்கும்படி திருப்பாடலின் ஆசிரியர் அழைப்பு விடுக்கின்றார். "பெருமுச்சினால் இளைத்துப்போனேன். ஒவ்வோர் இரவும் கண்ணீரில் என் படுக்கை மிதக்கின்றது. என் கட்டில் அழுகையால் நனைகின்றது" (தி.பா6:6) என உள்ளத்து உணர்வின் வெளிப்பாட்டை எடுத்துக்காட்டுகின்றார்.

## இரவில் செபிக்கும் இயேசு



இயேசுவின் செப அனுபவத்தில் அவர் இரவில் செபித்த சந்தர்ப்பங்களை நற்செய்தியாளர்கள் குறித்துக்-காட்டியுள்ளனர். "அந்நாட்களில் அவர் வேண்டுவதற்காக ஒரு மலைக்குப் போனார். அங்கு கடவுளிடம் வேண்டுதல் செய்வதில் இரவெல்லாம் செலவிட்டார்" (லூக்.6:12).

"இயேசு செபிப்பதில் இரவெல்லாம் செலவிட்டார்" என்று லூக்கா குறிப்பிடுகின்றார். இங்கே இயேசு ஆறுதலாக, அமைதியாக இருந்துகொண்டு இப்படி இரவெல்லாம் செபித்தாரா என்று நாம் சிந்திக்கும்பொழுது அதற்கான விடையை மாற்கு நற்செய்தியாளர் நமக்குத் தருகின்றார். "அவர் அவர்களிடம், 'நீங்கள் தனிமையான ஓர் இடத்திற்குச் சென்று சற்று ஓய்வெடுங்கள்' என்றார். ஏனெனில் பலர் வருவதும் போவதுமாய் இருந்ததால் உண்பதற்குக்கூட அவர்களுக்கு நேரம் கிடைக்கவில்லை." (மாற்கு6:31). ஆம், உண்பதற்குக்கூட நேரம் கிடைக்காத நிலையில்தான் அவர் இரவிலும் விழித்திருந்து செபிக்கின்றார்.

இயேசுவும் சீடர்களும் கெதரோன் என்னும் நீரோடையைக் கடந்து சென்று அங்குள்ள தோட்டத்தில் அடிக்கடி செபிப்பதற்காகக் கூடுவர் என்ற குறிப்பை யோவான் நற்செய்தியாளர் சுட்டிக்காட்டுகின்றார். "இவற்றைக் கூறியபின் இயேசு தம் சீடர்களோடு கெதரோன் என்னும் நீரோடையைக் கடந்து சென்றார். அங்கே ஒரு தோட்டம் இருந்தது. தம் சீடர்களோடு இயேசு அதில் நுழைந்தார். அவரைக் காட்டிக் கொடுத்த யூதாசுக்கு அந்த இடம் தெரியும். ஏனெனில், இயேசுவும் அவருடைய சீடர்களும் அடிக்கடி அங்கு கூடுவர்." (யோவா.18:1-2). இது யூதாசுக்குத் தெரிந்திருந்தபடியால்தான் இயேசுவை அங்கே இலகுவாகக் காட்டிக்கொடுக்க முடிந்தது.

## நள்ளிரவில் இறைவனிடம் வேண்டிய பவுலும் சீலாவும்



"அவர்களை நன்கு அடித்துச் சிறையில் தள்ளிக் கருத்தாய்க் காவல் செய்யுமாறு சிறைக்காவலர் ஒருவருக்குக் கட்டளையிட்டார்கள். இவ்வாறு கட்டளை பெற்ற அவர் அவர்களை உட்சிறையில் தள்ளி, அவர்கள் கால்களைத் தொழுமரத்தில் உறுதியாய் மாட்டிவைத்தார். நள்ளிரவில பவுலும் சீலாவும் கடவுளுக்குப் புகழ்ப்பா பாடி இறைவனிடம் வேண்டினர். மற்ற கைதிகளோ இதனைக் கேட்டுக்கொண்டிருந்தார்கள்." (திப.16:23-30). அந்த நள்ளிரவுச் செபத்தின் விளைவு; அவர்கள் அதிசயமான முறையில் விடுதலை பெற்றார்கள். இரவுச்செபத்தின் வல்லமையை விளக்குவதாக இது அமைந்துள்ளது.

இரவுப்பொழுது தனிச்செபத்திற்கு மட்டுமல்ல, குடும்பமாகச் செபிப்பதற்கும் ஏற்ற சிறந்த பொழுதாகும். தந்தை தாய் பிள்ளைகள் ஒன்றாகக்கூடி இரவு உணவை அருந்துமுன் குடும்பச் செபம் செய்வது முக்கியமான ஒரு கிறிஸ்தவச் செயற்பாடாகும்.

---



# 5.3

# வாழ்வின் முக்கிய கட்டங்களில் செபிக்க வேண்டும்



வாழ்வின் முக்கிய கட்டங்களில் தீர்மானம் எடுப்பதென்பது மிகவும் கவனமாகக் கையாள வேண்டிய விடயமாகும். சரியான நேரத்தில் எடுக்கப்படும் பிழையான தீர்மானங்களாலும் பயன் இல்லை. அதேபோல் பிழையான நேரத்தில் எடுக்கப்படும் சரியான தீர்மானங்களாலும் பயன் இல்லை. மாறாக சரியான நேரத்தில் எடுக்கப்படும் சரியான தீர்மானங்களே வாழ்க்கையின் வெற்றி இலக்கைத் தீர்மானிப்பவையாக உள்ளன. இந்தத் தீர்மானம் எடுக்கும் முயற்சியின்போது செபத்தில் இறையுதவி வேண்டுவது முக்கியமான ஒரு அம்சமாகும்.

### பின்னிருந்து உங்கள் செவிகளில் ஒலிக்கும்

ஒவ்வொரு முக்கிய அலுவல்களின் முன்னும் செபத்தில் இறைபிரசன்னத்தில் இருந்து அக்காரியத்திற்காக ஊக்கமாகச் செபிக்கும்போது இறைவனின் வழிநடத்துதலை நம்மால் உணரமுடியும்; இறைவனின் குரலை நாம் கேட்கமுடியும். இதையே எசாயா இறைவாக்கினர் "நீங்கள் வலப்புறமோ, இடப்புறமோ எப்பக்கம் சென்றாலும் 'இதுதான் வழி, இதில் நடந்துசெல்லுங்கள்' என்னும் வார்த்தை பின்னிருந்து உங்கள் செவிகளில் ஒலிக்கும்." (எசா.30:21) என்கிறார். செபத்தில் இறைவனுடைய வழிநடத்தலை

உணர்ந்துகொள்கின்றபோது அவருடைய வார்த்தை நம் முயற்சிகளுக்கு, நம் பாதைக்கு வெளிச்சமாக இருக்கும். “என் காலடிக்கு உம் வாக்கே விளக்கு! என் பாதைக்கு ஒளியும் அதுவே!” (தி.பா.119:105).

## முக்கிய கட்டங்களில் செபிக்கும் இயேசு



பன்னிருவரைத் தேர்ந்தெடுக்குமுன் இயேசு செபிக்கின்றார்: தனது பணியைத் தொடர இயேசு பன்னிரு சீடர்களைத் தேர்ந்தெடுக்கின்றார். இத்திருத்தூதர்களே திருச்சபையின் தூண்களாக இருந்தனர். இறையரசை இவ்வுலகில் நிலைநிறுத்த, இயேசு உருவாக்கிய திருச்சபையை தொடர்ந்து வழிநடத்த திருத்தூதர்களை தேர்ந்தெடுக்கும் இயேசுவின் தீர்மானம் மிக முக்கியமானதாகும்.

எனவே இந்த முக்கிய செயற்பாட்டை செய்வதற்கு முதல் நாள் இரவு முழுவதும் இயேசு செபத்தில் ஈடுபடுகின்றார். *“அந்நாள்களில் அவர் வேண்டுவதற்காக ஒரு மலைக்குப் போனார். அங்கு கடவுளிடம் வேண்டுதல் செய்வதில் இரவெல்லாம் செலவிட்டார். விடிந்ததும் அவர் தம் சீடர்களைத் தம்மிடம் கூப்பிட்டு அவர்களுள் பன்னிருவரைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு திருத்தூதர் என்று பெயரிட்டார்” (லூாக்.6:12,13).*

அப்பங்களைப் பலுகச் செய்யுமுன் இயேசு செபிக்கின்றார்: இயேசு மக்களின் பசியைக் கண்டு இரங்குகிறார். அவர்களின் வயிற்றுப் பசியைப் போக்க முனைகின்றார். அவ்வேளையில் அவர் செபத்தில் தன்னை ஈடுபடுத்துகின்றார். ஐயாயிரம் பேருக்கு உணவளிக்கும் புதுமையை நிகழ்த்துமுன் இயேசு வானத்தை அண்ணார்ந்து பார்த்து கடவுளைப் போற்றிச் செபிக்கின்றார் என்பதை நான்கு

நற்செய்தியாளர்களும் குறிப்பிட்டுக் காட்டுகின்றனர். "அவர் அந்த ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன்களையும் எடுத்து வானத்தை அண்ணாந்து பார்த்து, கடவுளைப் போற்றி, அப்பங்களைப் பிட்டு, அவர்களுக்குப் பரிமாறுவதற்காகத் தம் சீடரிடம் கொடுத்தார்" (மாற்கு6:41).

செபிக்கக் கற்றுக்கொடுக்க முன் இயேசு செபிக்கின்றார்: "செபிக்கக் கற்றுக்கொடும்" என்று சீடர்கள் இயேசுவைக் கேட்கின்றனர்: இயேசு 'கர்த்தர் கற்பித்த செபம்' என்று நாம் அழைக்கும் பரலோக மந்திரச் செபத்தைக் கற்றுக்கொடுக்கின்றார். சிறப்பு வாய்ந்த, முக்கியமான அந்தச் செபத்தைக் கற்றுக்கொடுக்க முன்னர் இயேசு செபத்தில் ஆழ்ந்திருப்பதை நாம் பார்க்கின்றோம்

"இயேசு ஓரிடத்தில் இறைவனிடம் வேண்டிக்கொண்டிருந்தார். அது முடிந்ததும் அவருடைய சீடர்களுள் ஒருவர் அவரை நோக்கி, ஆண்டவரே, யோவான் தம் சீடருக்கு இறைவனிடம் வேண்டக் கற்றுக்கொடுத்ததுபோல் எங்களுக்கும் கற்றுக்கொடும்" என்றார். அவர் அவர்களிடம், 'நீங்கள் இறைவனிடம் வேண்டும்பொழுது இவ்வாறு சொல்லுங்கள்.' ....... என்று கற்பித்தார்"" (லூக்.11:1).


## இறையுணர்வு மிகப்பெரும் பலமாகும்

இன்றைய மனிதன் தன்னை மட்டும் நம்பி மோசம் போகின்றான். தன்னம்பிக்கை என்பது நமக்குத் தேவையானதே! அதேவேளையில் இறைநம்பிக்கையும் தன்னம்பிக்கையும் இணைந்து செயலாற்றுகின்றபோதே காரியங்கள் சித்திபெறுகின்றன.

இறைவனின் அளப்பரிய ஆற்றலில் நம்பிக்கை வைத்து, அவர் உதவியைக் கேட்டு, அவரிடமே காரியங்களை ஒப்படைத்துவிட்டு ஒரு காரியத்தில் இறங்கும்போது "அவரே அனைத்தையும் பொறுப்பெடுத்து நடத்துகின்றவராக இருப்பார். இறைவன் என்னோடு இருந்து செயலாற்றுகிறார் என்ற உணர்வு நமக்கு மிகப்பெரும் பலமாகும். அந்த உணர்வுக்கு ஈடாக இந்த உலகில் நமக்கு எந்தச் சக்தியும் இருக்க முடியாது.



# 5.4 துன்பவேளையில் செபிக்க வேண்டும்



மனித வாழ்வு துன்பங்கள் சவால்கள் நிறைந்தது. தனிமனிதர் தம் வாழ்விலும், சமுதாய வாழ்விலும், வீட்டிலும், நாட்டிலும், எண்ணற்ற துன்பங்களை, சவால்களைச் சந்திக்கின்றனர். சவால்களைக் கண்டு அஞ்சி ஓடுபவர் கோழை. அவற்றை எதிர்கொண்டு துணிவுடன் சந்திக்கும் மனிதரே வீரர். "வீட்டுக்கு வீடு வாசல்படி" என்பார்கள். அதுபோல் துன்பங்களும் துயரங்களும் சவால்களும் அனைவருக்கும் பொதுவானவை. இவை வாழ்வின் தொடர்கதையாக நம்மைத் துரத்திக்கொண்டே இருக்கின்றன. துன்பங்களைக் கண்டு மனிதன் விரக்தி அடைந்து சிலவேளை தற்கொலைக்குக்கூட சென்றுவிடுகின்றான்.

## துன்பவேளையில் துணைக்கு வரும் ஆண்டவர்

"சாவின் கயிறுகள் என்னைப் பிணித்துக்கொண்டன: பாதாளத்தின் துன்பங்கள் என்னைப் பற்றிக்கொண்டன: துன்பமும் துயரமும் என்னை ஆட்கொண்டன" (தி.பா.116:3) எனத் திருப்பாடலின் ஆசிரியர் புலம்புகிறார். அதேவேளை "துன்பங்கள் அனைத்திலும் ஆண்டவரே அவர்களின் மீட்பர் ஆனார்: தூதரோ வானதூதரோ அல்ல, அவரே நேரடியாக அவர்களை விடுவித்தார்" (எசா.63:9). "ஆகவே, துன்ப

வேளையில் உம் அன்பர் அனைவரும் உம்மை நோக்கி மன்றாடுவர்: பெருவெள்ளம் பாய்ந்து வந்தாலும் அவர்களை அது அணுகாது" (தி.பா. 32:6). "துன்ப வேளையில் என்னைக் கூப்பிடுங்கள்: உங்களைக் காத்திடுவேன்: அப்போது, நீங்கள் என்னை மேன்மைப்படுத்துவீர்கள்" (தி.பா.50:15) என துன்பவேளையில் ஆண்டவரின் மீட்கும் வல்லமையையும் அவர் எடுத்துக்கூறத் தவறவில்லை.

## துன்பவேளையில் செபிக்கும் இயேசு



துன்பவேளையில் இயேசுவை செபிக்கின்றவராகவே நற்செய்தி நூல்கள் நமக்குக் காட்டுகின்றன. இயேசு துன்பவேளையில் செபத்தில் இறைவனிடம் தஞ்சமடைவதைப் பார்க்கின்றோம். இது நமக்கு எல்லாம் ஒரு பாடமாக அமைகின்றது.

"மேலும் இயேசு, 'இப்போது என் உள்ளம் கலக்கமுற்றுள்ளது. நான் என்ன சொல்வேன்? 'தந்தையே இந்த நேரத்திலிருந்து என்னைக் காப்பாற்றும் என்பேனோ? இல்லை! இதற்காகத்தானே இந்நேரம்வரை வாழ்ந்திருக்கிறேன். தந்தையே உம் பெயரை மாட்சிப்படுத்தும்' என்றார்" (யோவா.12:27-28).

"அவரோ மிகுந்த வேதனைக்குள்ளாகவே உருக்கமாய் இறைவனிடம் வேண்டிக்கொண்டிருந்தார். அவரது வியர்வை பெரும் இரத்தத்துளிகளைப்போலத் தரையில் விழுந்தது" (லூக்.22:41-44).

சிலுவையில் தொங்கும் இயேசு செபிக்கின்றார்: "நண்பகல் பன்னிரெண்டு மணி முதல் பிற்பகல் மூன்று மணிவரை நாடு முழுவதும் இருள் உண்டாயிற்று. மூன்று மணியளவில் இயேசு 'ஏலி ஏலி லெமா சபக்தானி?" அதாவது, 'என் இறைவா, என் இறைவா, ஏன் என்னைக் கைவிட்டீர்?' என்று உரத்த குரலில் கத்தினார்" (மத்.27:46). "தந்தையே உம் கையில் என் உயிரை ஒப்படைக்கின்றேன்" என்று இயேசு உரத்த குரலில் கூறி உயிர் துறந்தார்" (லூக்.23:46).

## செபத்தில் தஞ்சமடையும் துன்புறும் திருச்சபை

தொடக்கத் திருச்சபையானது துன்ப வேளையில் செபத்தில் தஞ்சமடைந்து ஆறுதலும் தேறுதலும் பெறுவதைக் காண்கின்றோம். *"விடுதலை பெற்ற அவர்கள் தங்களைச் சேர்ந்தவர்களிடம் வந்து தலைமைக் குருக்களும் மூப்பர்களும் தங்களுக்குக் கூறிய யாவற்றையும் அறிவித்தார்கள்.* ***இவற்றைக் கேட்ட யாவரும் ஒரே மனத்துடன் தங்கள் குரலைக் கடவுள்பால் எழுப்பி, பின்வருமாறு மன்றாடினர்.*** "ஆண்டவரே விண்ணுலகையும், மண்ணுலகையும், கடலையும் அவற்றிலுள்ள அனைத்தையும் படைத்தவர் நீரே..... இப்போதுகூட ஆண்டவரே அவர்கள் அச்சுறுத்துவதைப் பாரும். உமது அடியார் முழுத்துணிவுடன் உமது வார்த்தைகளை எடுத்துக்கூற அருள்தாரும்." (தி.ப.4:23-31) என்று வேண்டினர்.

தொடக்கத் திருச்சபையில் யாக்கோபு கொலைசெய்யப்பட்ட பின்னர் பேதுரு சிறையில் அடைக்கப்படுகின்றார். அந்த இக்கட்டான வேளையில் செபமே தொடக்கத் திருச்சபைக்கு அடைக்கலமாக இருந்தது. "பேதுரு இவ்வாறு சிறையில் காவலில் வைக்கப்பட்டிருந்தபோது திருச்சபை அவருக்காகக் கடவுளிடம் உருக்கமாக வேண்டியது" (தி.ப.12:5). பேதுரு தூதரின் உதவியோடு இரவில் சிறையில் இருந்து வெளியேறி வருகின்றபோது தொடக்க திருச்சபையினர் செபத்தில் இருப்பதைப் பார்க்கின்றோம். *(தி.ப. 12:12).*

எனவே நமது வாழ்வின் துன்ப அனுபவங்களின்போது நாமும் இறைவனிடம் தஞ்சமடைவோம். இணையில்லாத இறைவனின் ஆற்றலையும் சக்தியையும், ஆறுதலையும் செபத்தில் கண்டுணர்வோம்.

---

# இயல் 6

# எப்படிச் செபிக்க வேண்டும்?

1. மனம் ஒன்றித்துச் செபிக்க வேண்டும்
2. அலட்டாமல் அளவோடு செபிக்க வேண்டும்
3. விழித்திருந்து செபிக்க வேண்டும்
4. இறைசித்தம் நிறைவேறச் செபிக்க வேண்டும்


"இப்படித்தான் செபிக்க வேண்டும்" என்ற வரன்முறைகள் எதுவும் இல்லை. எப்படியும் செபிக்கலாம்! ஆனால் சில நெறிமுறைகள் உண்டு. அவை முரண்பாடானவை அல்ல.

அமைதியில் செபிக்க வேண்டும் என வலியுறுத்தும் திருவிவிலியம் சத்தமாகவும் செபிக்க அழைக்கிறது. தனிமையில் - உள்ளறையில் செபிக்க வலியுறுத்தும் திருவிவிலியம் கூட்டத்தில் வெளிப்படையாகச் செபிக்கவும் அழைக்கிறது.

எப்படிச் செபிக்க வேண்டும் என்பதல்ல; மாறாக என்ன மனநிலையோடு செபிக்க வேண்டும் என்பதே முக்கியம். செயற்பாட்டைவிட மனநிலையே முக்கியம் (Attitude is important than the activities) செபத்தின்போது நமக்கு இருக்க வேண்டிய சில அடிப்படையான மனநிலைகள் இப்பகுதியில் விளக்கப்படுகின்றன.

"செபிக்கத் தெரியாதவன் தானாகவே இறந்து விடுகிறான்"
(புனித அகுஸ்தீனார்)

"இறைவன் தனது திட்டத்தை மாற்றிக்கொள்ள வேண்டும் என்று அல்ல, மாறாக இறைவனின் சித்தத்திற்கேற்ப நாம் மாறவேண்டும் என்பதுதான் செபம்"
- புனித தோமஸ் அக்குவினாஸ்








# மனம் ஒன்றித்துச் செபிக்க வேண்டும்



மனம் ஒரு குரங்கு என்பார்கள். காரணம் மனம் எப்போதும் அலை பாய்ந்துகொண்டே இருக்கும். நமது செபவேளைகளில் பல தடவைகள் நாம் மனத்தை ஒருநிலைப்படுத்தி செபிக்க முடியாமல் தத்தளித்திருக்கின்றோம். இந்தத் தவிப்பு விளங்கிக்கொள்ளக்கூடியதே. ஆனால் சிலவேளை நாமே மனம் ஒன்றித்துச் செபிக்க விரும்பாமல் இருக்கின்ற சூழ்நிலைகளும் உள்ளன.

உள்ளத்தின் நிறைவிலிருந்தே வாய் பேச வேண்டும். ஆனால் உள்ளத்தில் ஒன்று உதட்டில் இன்னொன்றாக வெளிவரும் செபம் உண்மைச் செபமாகாது. "நம்முடைய எல்லாச் செபங்களும் நம் இதயத்தின் ஆழத்திலிருந்து எழும்புவதாகவும், இறைவன் நம்மீது கொண்ட அன்புக்கு பதிலாகவும் இருக்க வேண்டும்" (கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வி நூல் - கிறிஸ்தவ வாழ்வில் செபம்)

## "என்னைக் கவனித்தது எப்படி?"


வேட்டைக்குச் சென்ற முகலாயப் பேரரசர் அக்பர் மாலை நேரத்தில் தங்கள் வழக்கப்படி பாய் விரித்து முழந்தாளிட்டு செபம் செய்தார். காலையில் வேலைக்குச் சென்ற தன் கணவன் மாலையில் வீடு திரும்பாததால் கலக்கத்தோடு தேடிச் சென்றாள் விவசாயப் பெண்ணொருத்தி. பாதையில் செபத்தில் ஈடுபட்டிருந்த பேரரசரைப்

பாராமல் தடுக்கி விழுந்து ஒரு வார்த்தை மன்னிப்பும் கேளாமல் கானகம் சென்றாள். இந்தத் தடங்கலால் பேரரசர் சினம் கொண்டாலும் வழிபாட்டின்போது பேசக்கூடாது என்பதால் பேசாதிருந்தார். சென்றவள் கணவனுடன் மகிழ்ச்சியோடு திரும்பிக்கொண்டிருந்தாள். அப்போதுதான் பேரரசரைக் கவனித்தாள்.

பேரரசரின் சினம் சொல்லில் வெடித்தது. "மரியாதைக் குறைவாக நடக்க என்ன காரணம்? சொல்லாவிடில் தண்டிக்கப்படுவாய்" என்றார். அந்தப் பெண் அச்சமின்றி மன்னரைப் பார்த்து, "என் கணவரைத் தேடிச்சென்ற பரபரப்பில் நான் உம்மைக் கவனிக்கவே இல்லை. நீர் சொல்வதுபோல உம்மை இடறித் தடுக்கி விழுந்ததுகூட நினைவில்லை. நீரோ யாவரினும் மேலான இறைவனிடத்து ஈடுபட்டு செபம் செய்தபோது என்னைக் கவனித்தது எப்படி?" என்று கேட்டாள். பேரரசர் அக்பர் வெட்கப்பட்டார்.

ஓர் அறிவாளிகூட இல்லை, சாதாரணப் பெண் ஒருத்தி பேரரசருக்கு செபத்தின் பொருளை எவ்வளவு அழகாக விளக்கிவிட்டாள்?

## முழு உள்ளத்தோடு தேட வேண்டும்!



இறைவனைச் செபத்தில் தேடுகின்றபோது நாம் அரைகுறை மனத்தோடு அல்ல முழு உள்ளத்தோடு தேடவேண்டும் என இறைவார்த்தை அறிவுறுத்துகின்றது. "நீங்கள் என்னைத் தேடுவீர்கள்: உங்கள் முழு இதயத்தோடும் என்னைத் தேடும்பொழுது நீங்கள் என்னைக் கண்டடைவீர்கள்."(எரே.29:13). "உங்கள் கடவுளாகிய ஆண்டவரை நீங்கள் நாடினால், உங்கள் முழு இதயத்தோடும் முழு உள்ளத்தோடும் தேடினால், அவரைக் கண்டடைவீர்கள்" (இ.ச.4:29)

தந்தையாகிய இறைவன் இஸ்ராயேல் மக்களுக்கு வழங்கிய கட்டளையில் முழு உள்ளத்தோடு ஆண்டவரை அன்புசெய்ய வேண்டும் என்று வலியுறுத்துகின்றார். "முழு

இதயத்தோடும், உன் முழு உள்ளத்தோடும், உன் முழு ஆற்றலோடும் உன் கடவுளாகிய ஆண்டவரிடம் அன்புகூர்வாயாக!" (இ.ச.6:5). "உன் கடவுளாகிய ஆண்டவர்மீது நீ முழு இதயத்தோடும் முழு உள்ளத்தோடும் அன்புகூர்வாய். அப்போது, நீயும் வாழ்வு பெறுவாய்." (இ.ச.30:6).

## ஆசையும் விருப்பமும் வேண்டும்

செபிக்கவேண்டும் என்ற ஆசையும் விருப்பமும் இருக்கின்றபோதுதான் மனம் ஒன்றித்துச் செபிக்க முடியும். கடமைக்காக, கட்டளைக்காகச் செபிக்கின்றபோது ஏனோ தானோ என்றுதான் செபிக்கத் தோன்றும். நமது செபவேளையில் முழு உள்ளத்தோடு ஆண்டவர் பெயரைப்போற்ற, முழு உள்ளத்தோடு அவருக்குப் புகழ்ப்பா இசைக்க, மனம் ஒன்றித்த செபம் நமக்குத் தேவையாக இருக்கின்றது.

"இப்போது *முழு உள்ளத்தோடும்* ஆண்டவருக்கு வாயாரப் புகழ் பாடுங்கள்: அவருடைய பெயரைப் போற்றுங்கள்." (சீஞா.39:35).

"தம் எல்லாச் செயல்களிலும் மாட்சியைச் சாற்றும் சொற்களால் உன்னத இறைவனாகிய ஆண்டவருக்கு நன்றி செலுத்தினார்: தம் *முழு உள்ளத்தோடும்* புகழ்ப்பா இசைத்தார்: தம்மைப் படைத்தவர்மீது அன்பு செலுத்தினார்." (சீஞா.47:8).

---



# 6.2

# அலட்டாமல் செபிக்க வேண்டும்



"நீங்கள் இறைவனிடம் வேண்டும்பொழுது பிற இனத்தவரைப்போல பிதற்ற வேண்டாம். மிகுதியான சொற்களை அடுக்கிக்கொண்டே போவதால் தங்கள் வேண்டுதல் கேட்கப்படுமென அவர்கள் நினைக்கின்றார்கள். நீங்கள் அவர்களைப் போல் இருக்க-வேண்டாம். ஏனெனில் நீங்கள் கேட்கும் முன்னரே உங்கள் தேவையை உங்கள் தந்தை அறிந்திருக்கின்றார்."(மத்.6:7-8).

பிதற்றலும், கூச்சலும், கூப்பாடும் செபம் அல்ல. அதிகம் பேசுவதால் செபம் விரைவாகக் கேட்கப்படவும் போவதில்லை. தந்தை நமக்கு நிறைவாய்த் தருவார் என்பதை விசுவசிக்காத உள்ளத்தின் வெளிப்பாடே இத்தகைய அதிகப்பிரசங்கித்தனமான செபமாக ஊற்றெடுக்கின்றது.

## செபம் நேரத்தை அடிப்படையாகக் கொண்டதல்ல

"மறைநூல் அறிஞர்கள் நீண்ட நேரம் இறைவனிடம் வேண்டுவதுபோல் நடிக்கின்றார்கள்" (லூக்.20:47). செபம் நேரத்தை அடிப்படையாகக் கொண்டதல்ல. நீண்டநேரம் செபிப்பதால் ஒரு செபம் நல்ல செபமாகிவிடப்போவதில்லை. நீண்ட நேரம் செபம் செய்வது தவறல்ல. ஆனால் நீண்ட செபங்களை வரிபிறலாமல் சொல்லிவிட்டு அமைதியில் ஆண்டவர் குரலைக் கேட்காமல் அவரோடு ஒன்றித்திருக்காமல்

இருப்பதுதான் தவறு.

நாம் எவ்வளவு நீண்ட நேரம் செபிக்கிறோம் என்பதோ, எவ்வளவு அழகான வார்த்தைகளை உபயோகிக்கிறோம் என்பதோ, எவ்வளவு சத்தமாகக் கத்திச் செபிக்கிறோம் என்பதோ முக்கியமல்ல; மாறாக எவ்வளவு அன்பான மனநிலையுடன் செபிக்கிறோம் என்பதைத்தான் இறைவன் எதிர்பார்க்கிறார். நீண்ட நேரமோ, அதிகமோ பேசுவதால் மட்டும் நமது செபம் கேட்கப்படப்போவதில்லை.

## உபயோகமானதா? உருப்படியானதா?

பிறேமா கோவிலுக்குச் சென்று திரும்பி வந்தாள். அடுத்தவர்களைப் பற்றிப் பேசுவதே அவள் பொழுதுபோக்கு. அன்று பக்கத்து வீட்டுப் பாமாவைப் பற்றி ஒரு சுவையான வதந்தி. கணவன் வீடு திரும்பியவுடன் அவனிடம் சொல்லவேண்டுமென துடிதுடித்துக்கொண்டிருந்தாள். கணவன் வீட்டுக்குள் நுழைந்தானோ இல்லையோ ஆரம்பித்துவிட்டாள்.

மனைவி: அத்தான் உங்களுக்கு ஒரு சேதி தெரியுமா?
கணவன்: பொறு நீ சொல்ல இருப்பது உண்மையா?
மனைவி: தெரியவில்லை.
கணவன்: நீ சொல்ல விரும்புவது உபயோகமானதா?
மனைவி: தெரியவில்லை.
கணவன்: நீ சொல்ல இருப்பது உருப்படியானதா?
மனைவி: தெரியவில்லை
கணவன்: பிறகு ஏன் நீ அதை என்னிடம் சொல்லணும்? நான் ஏன் அதைக் கேட்கணும்?

நாம் உண்மையானதையும், உபயோகமானதையும், உருப்படியானதையும் மட்டுமே செபத்தில் கேட்கும்போது குறைவான வார்த்தைகளில் செபிப்போம்.

## அமைதியில் ஆண்டவரைச் சந்திக்கலாம்

அமைதியில் ஆண்டவரின் பிரசன்னத்தை நாம் அனுபவிக்க முடியும். "அமைதி கொண்டு, நானே கடவுள் என உணர்ந்து கொள்ளுங்கள்" (தி.பா.46:10). "கடவுளின் செயலுக்காக நான் மௌனமாய்க் காத்திருக்கின்றேன்; எனக்கு மீட்புக் கிடைப்பது அவரிடமிருந்தே" (தி.பா.62:1) என்கிறார் திருப்பாடலின் ஆசிரியர். நமது கீழைத்தேச செப முறை என்பது அமைதியான தியான முறைகளே என்பதை நாம் நினைவில்கொள்வது நல்லது.

## வெளிவேடச் செபம் கூடாது



"பிறர் அறியாவண்ணம் செபிப்பதுதான் சிறந்த செபம்" என்கிறார் புனித அந்தோனியார். "நீங்கள் இறைவனிடம் வேண்டும் பொழுது வெளிவேடக்காரரைப்-போல் இருக்க வேண்டாம். அவர்கள் தொழுகைக் கூடங்களிலும் வீதியோரங்களிலும் நின்று- கொண்டு மக்கள் பார்க்க வேண்டுமென இறைவேண்டல் செய்ய விரும்புகிறார்கள். அவர்கள் தங்களுக்குரிய கைமாறு பெற்றுவிட்டார்கள் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். ஆனால் நீங்கள் இறைவனிடம் வேண்டும் பொழுது உங்கள் உள்ளறைக்குச் சென்று, கதவை அடைத்துக்கொண்டு, மறைவாய் உள்ள உங்கள் தந்தையை நோக்கி வேண்டுங்கள். மறைவாய் உள்ளதைக் காணும் உங்கள் தந்தையும் உங்களுக்குக் கைமாறு அளிப்பார்." (மத் 6:5-6). இங்கே இயேசு நமது செபம் வெளிவேடமற்றதாக இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்துகிறார்.

ஆகவே அதிகம் அலட்டாமல், அளவோடு, அமைதியில், வெளிவேடம் இல்லாமல் செபிக்கவே நாம் அழைக்கப்படுகின்றோம்.






# விழித்திருந்து செபிக்க வேண்டும்



இன்றைய மனிதன் மனம்போன போக்கில் வாழ முனைகின்றான். தன்னைச் சுற்றி என்ன நடந்துகொண்டிருக்கிறது என்ற உணர்வு அவனுக்கு இல்லாமல் இருக்கின்றது. புறச்சூழ்நிலை பற்றிய விழிப்புணர்வு இல்லாத நிலை ஒருபுறமிருக்க தன்னைப் பற்றிய உணர்வும் மனிதனுக்கு இருப்பதில்லை. "தன்னகத்தே உள்ள மனிதனைப் பற்றி அறியாதவன் மற்ற மனிதர்களைப்பற்றி ஒருபோதும் அறியவே முடியாது" என்கிறார் நிக்கலாய் சோனி கென்ஸ்கி என்னும் அறிஞர். சாதாரண மனித வாழ்க்கையில் விழிப்போடு வாழ்வதென்பது மிகவும் முக்கியம். அதிலும் செபவாழ்வில் இது இன்னும் அதிகம் தேவைப்படுகின்றது.

செபம் என்பது விழிப்புணர்வு. அதாவது நான், எனது வாழ்க்கை, எனது எண்ணம், சிந்தனை, சொல், செயற்பாடுகள், இலட்சியம், நான் வாழும் சூழ்நிலை, சமூக அமைப்புக்கள், சமூகக் கூறுபாடுகள் ஆகியவற்றின் தெளிவு விழிப்புணர்வு ஆகும்.

## விழித்திருந்து செபிக்கும் இயேசு

இயேசு ஆண்டவர் விழித்திருந்து செபிக்கின்றவராக நற்செய்தி நூல்கள் நமக்குக் காட்டுகின்றன. "மக்களை அனுப்பிவிட்டு, அவர் தனியே இறைவனிடம் வேண்டுவதற்காக ஒரு மலையின்மேல் ஏறினார்.

பொழுது சாய்ந்தபிறகும் அங்கே அவர் தனியே இருந்தார்" (மத்.14:23-26). "அந்நாள்களில் அவர் வேண்டுவதற்காக ஒரு மலைக்குப் போனார். அங்கு கடவுளிடம் வேண்டுதல் செய்வதில் இரவெல்லாம் செலவிட்டார்" (லூக்.6:12).

## விழிப்பாயிருந்து மன்றாடுங்கள்



விழித்திருந்து செபிக்கும் இயேசு தன் சீடர்களைப் பார்த்து விழித்திருந்து செபியுங்கள் என்று அறிவுரையும் கூறுகின்றார். "மேலும் இயேசு, 'உங்கள் உள்ளங்கள் குடிவெறி, களியாட்டத்தாலும் இவ்வுலக வாழ்க்கைக்குரிய கவலை-யினாலும் மந்தம் அடையாதவாறும் .... எச்சரிக்கையாய் இருங்கள்.... ஆகையால் நிகழப்போகும் அனைத்திலிருந்தும் தப்ப மானிட மகன் முன்னிலையில் நிற்க வல்லவராவதற்கும் எப்பொழுதும் *விழிப்பாயிருந்து மன்றாடுங்கள்*' என்றார்." (லூக்.21:34-36).

"அவர் இறைவேண்டலை முடித்துவிட்டு எழுந்து சீடர்களிடம் வந்தபோது அவர்கள் துயரத்தால் சோர்வுற்றுத் தூங்கிக்கொண்டிருப்பதைக் கண்டார். அவர்களிடம், என்ன உறங்கிக்கொண்டா இருக்கிறீர்கள்? சோதனைக்கு உட்படாதிருக்க விழித்திருந்து இறைவனிடம் வேண்டுங்கள் என்றார்." (லூக்.22:45-46).

இன்றும் எம்மைப் பார்த்து, "சோதனைக்கு உட்படாதிருக்க விழித்திருந்து இறைவனிடம் வேண்டுங்கள்" என்கிறார். "அறிவுத் தெளிவோடு *விழிப்பாயிருங்கள*. உங்கள் எதிரியாகிய அலகை யாரை விழுங்கலாமெனக் கர்ச்சிக்கும் சிங்கம்போலத் தேடித்திரிகிறது" (1பேதுரு5:8).

## விழித்திருந்து செபித்ததால் கேட்டது கிடைத்தது

தனக்கு நல்ல கணவன் கிடைக்கவேண்டும் என்ற நோக்கத்தோடு ஒரு பெண் பத்து ஆண்டுகளாக நாள்தோறும் புனித சூசையப்பர் சுருபத்தைப் பார்த்து மன்றாடி வந்தாள். பத்து ஆண்டுகள் கடந்து சென்றும் திருமணம் கைகூடவில்லை. அப்பெண் பெரிதும் வருந்தினாள். அத்துடன் கடவுள் மட்டில் அவளுக்கிருந்த நம்பிக்கையையும் அவள் இழக்கும் ஆபத்தில் இருந்தாள்.

ஒருநாள் ஞாயிற்றுக்கிழமை திருப்பலிக்குச் சென்றுவந்த அவள் புனிதரின் சுருபத்தின்முன் கண்ணீரோடு செபித்தாள். அப்போது அவளுக்கு கோபம் ஏற்பட்டது. அவநம்பிக்கை அவளை ஆட்கொண்டது. உடனே சுருபத்தை எடுத்து யன்னலூடாக வெளியே வீதியில் வீசி எறிந்தாள்.

அவ்வழியால் நடந்துசென்ற ஒருவரின் தலையில் அச்சுருபம் பட்டு அவருக்குத் தலையில் காயம் ஏற்பட்டது. காயப்பட்ட அந்த இளைஞன் அந்த வீட்டின் கதவைத் தட்டி, காயப்பட்ட இடத்தில் மருந்து கட்ட முயன்றார். அந்தப் பெண்ணே வெளியில் வந்தாள். “சுருபத்தை வீதியில் வீசி எறியக் காரணம் என்ன?” என்று இளைஞர் கேட்டார். அப்பெண் நடந்ததைக் கூறினாள். நாட்கள் சென்றன.... அந்த இளைஞனே அப்பெண்ணுக்கு கணவனானான்!

சாதாரண ஒரு பெண் தன் தேவைக்காக இறைவனிடம் தினமும் காத்திருந்து, விழித்திருந்து செபித்ததனால் அடைந்த பலனை இங்கே அறிகிறோம். நாமும் விழித்திருந்து செபிக்கும் அனுபவத்திற்குள் வளர முயற்சிக்க வேண்டும்.






# இறை சித்தம் நிறைவேற செபிக்க வேண்டும்

“இறைவன் தனது திட்டத்தை மாற்றிக்கொள்ளவேண்டும் என்று அல்ல, மாறாக இறைவனின் சித்தத்திற்கேற்ப நாம் மாறவேண்டுமென்பதுதான் செபம்” என்கிறார் புனித தோமஸ் அக்குவினாஸ். இறைவனின் திருவுளத்தை நிறைவேற்றுவதே இயேசுவினுடைய வாழ்வின் இலட்சியமாக இருந்தது. அதனால்தான் அவர் உலகிற்கு வந்தபோது “என் கடவுளே உம் திருவுளத்தை நிறைவேற்ற இதோ வருகின்றேன்” (எபி10:7,9) என்றார். செபம் என்பது தற்கையளிப்பு. அதாவது தன்னையே இறைத்திட்டத்திற்காகக் கையளிப்பது.



## தந்தையின் திருவுளம் நிறைவேற்றும் இயேசு

இயேசு இந்த உலகில் வாழ்ந்தபோது தந்தையின் சித்தத்தை நிறைவேற்றுவதையே தனது குறிக்கோளாகக் கொண்டிருந்தார். “இயேசு அவர்களிடம், என்னை அனுப்பியவரின் திருவுளத்தை நிறைவேற்றுவதும் அவர் கொடுத்த வேலையைச் செய்து முடிப்பதுமே என் உணவு” (யோவா.4:34) என்கிறார். “ஏனெனில் என் சொந்த விருப்பத்தை நிறைவேற்ற அல்ல, என்னை அனுப்பியவரின் விருப்பத்தை நிறைவேற்றவே நான் விண்ணகத்திலிருந்து இறங்கி வந்தேன்.” (யோவா.6:38) என்கிறார். கெத்சமனியில் பாடுகளின் முன்னர் செபிக்கும் இயேசு தந்தையின் திருவுளத்திற்குத் தன்னையே கையளிக்கின்றார்.

"தந்தையே, உமக்கு விருப்பமானால் இத்துன்பக் கிண்ணத்தை என்னிடமிருந்து அகற்றும். ஆனாலும் என் விருப்பப்படி அல்ல: உம் விருப்பப்படியே நிகழட்டும் என்று கூறினார்" (லூக்.22:42).

## என் சித்தம் அல்ல உம் சித்தம் நாதா

நம்முடைய ஆசைகள் விருப்பங்கள், எதிர்பார்ப்புக்கள், கனவுகள் நிறைவேறவேண்டும் என்று ஆசிப்பதே மனித இயல்பு. ஆனால் இயேசுவைப்போல இறைவனின் சித்தம் நிறைவேறவே நாம் செபிக்க வேண்டும். நம்முடைய விருப்பங்களுக்கும் இறைவனுடைய விருப்பங்களுக்கும் இடையே சிலவேளை பாரிய இடைவெளி இருக்கலாம்.

"மண்ணுலகத்திலிருந்து விண்ணுலகம் மிக உயர்ந்து இருப்பதுபோல உங்கள் வழிமுறைகளைவிட என் எண்ணங்களும் மிக உயர்ந்திருக்கின்றன" (எசா.55:9) என ஆண்டவரே கூறுகின்றார். "நாம் கேட்பது கடவுளுடைய திருவுளத்திற்கு ஏற்ப அமைந்திருப்பின், அவர் நமக்குச் செவிசாய்க்கிறார்: இதுவே நாம் அவர்மீது கொண்டுள்ள உறுதியான நம்பிக்கை" (1யோவா.5:14).

## நம் செபம் மறுக்கப்படுவது ஏன்?

நமக்கு உதவ ஆண்டவர் எப்போதும் தயாராக இருந்தும், எல்லாம் அவரால் இயலக்கூடியதாக இருந்தும், பல வேளைகளில் நாம் கேட்டதை வழங்கக் காலம் தாழ்த்துகிறார். சில வேளைகளில் ஒரேயடியாக மறுக்கவும் செய்கின்றார். காலம் தாழ்த்துகிறார் என்றால் நாம் கேட்டதை ஏற்பதற்கு நம்மைத் தகுதியுடையவர்களாக உருவாக்குகிறார் என்பதே உண்மை. நாம் தாழ்மையுடனும், உறுதியுடனும், நம்பிக்கையுடனும் இறைஞ்சி வேண்டியும் நாம் கேட்டதை அவர் தர மறுக்கிறார் என்றால் நமக்கு எது நல்லது என்பது அவருக்கு மட்டுமே தெரிந்திருப்பதால்தான். நமக்குத் தீமை தருவதை அவர் அனுமதிப்பதில்லை. நாம் கேட்பதை அவர் மறுத்தால் உறுதியாக அதைவிட மேலானதைத் தருவார்.

நம் நலனில் அக்கறை கொண்டுள்ளார் என்பதை மனதிற்கொண்டு நமக்கும் பிறருக்கும் நன்மை தருபவைகளையே அவரிடம் இறைஞ்சுவோம். நம்முடைய உண்மையான செபம், 'இறைவா உம்முடைய விருப்பம் நிறைவேறுவதாக, அதற்கு நான் ஒத்துழைக்கிறேன்' என்றதாய்த் தொடங்கட்டும். நம் விருப்பத்தை

அவர் விருப்பத்தில் திணிப்பதல்ல. அவர் விருப்பத்தை நம் விருப்பமாக ஏற்பதே செபத்தின் நோக்கமாக இருக்கட்டும். நம் முயற்சிகளைத் தவிர்ப்பதாய், முயற்சிகளுக்கு மாற்றாய் நம் செபம் மாறிவிட வேண்டாம்.

## இப்படிச் செபிப்போம்



இயேசு உலகில் வாழ்ந்த காலத்தில் மக்கள் எப்படி அவரை நோக்கிச் செபித்தார்களோ அதுபோல இப்போதும் நாம் அவரை நோக்கிச் செபிக்க வேண்டும். (மத்தேயு 8:1-3) "இயேசு மலையிலிருந்து இறங்கியபின் பெருந்திரளான மக்கள் அவரைப் பின்தொடர்ந்தார்கள். அப்பொழுது தொழுநோயாளர் ஒருவர் வந்து அவரைப் பணிந்து, "ஐயா, *நீர் விரும்பினால் எனது நோயை நீக்க உம்மால் முடியும்*" என்றார். இயேசு தமது கையை நீட்டி அவரைத் தொட்டு, "நான் விரும்புகிறேன் உமது நோய் நீங்குக" என்று சொன்னார்.

புனித கிறிஸோஸ்தம் பின்வருமாறு கூறுகிறார். "அனைத்தும் இறைவனைச் சார்ந்திருப்பதுபோல செபிப்போம். அனைத்தும் நம்மையே சார்ந்திருப்பதுபோல் செயற்படுவோம்." இது ஓர் ஒன்றிணைந்த முயற்சி. நமக்குரியதை நிறைவேற்றிவிட்டு மீதியை இறைவனின் கையில் ஒப்படைப்போம்.

# இயல் 7

# எந்த நிலையில் செபிக்க வேண்டும்?

**1. முழங்காலில் இருந்து செபிக்க வேண்டும்**

**2. கரங்களை உயர்த்திச் செபிக்க வேண்டும்**

**3. அழுது புலம்பிச் செபிக்க வேண்டும்**

**4. உண்ணா நோன்பிருந்து செபிக்க வேண்டும்**

*நமது இறுதிக் கதி இறைவனே!
அவரையே பற்றிக்கொண்டு அவரிடமே நாம் சரணடைய அழைக்கப்படுகின்றோம்.
அப்படியாக நாம் சரணடைந்து செபிக்கும்போது நமது உடல்நிலை நமது மனநிலையைச் சொல்வதாக இருக்கும்.*

*வல்லமையுள்ள செபத்தின் பண்புகளாக ஆன்மீகவாதிகள் அடையாளம் காட்டுபவை மூன்று;
முழங்காலில் இருந்து செபித்தல்,
கைகளை உயர்த்திச் செபித்தல்,
உண்ணா நோன்பிருந்து செபித்தல்.*

*"நாம் நின்றுகொண்டோ, அமர்ந்துகொண்டோ, முழங்காலில் இருந்துகொண்டோ, நடந்துகொண்டோகூடச் செபிக்கலாம்.
செபிக்கும்போது,
நம் உடலின் கோணம் முக்கியமல்ல,
செபிக்கும்போது நம் மனதிலும், இதயத்திலும் என்ன இருக்கிறது என்பதுதான் முக்கியம்."*


"இன்றைய திருச்சபைக்குத் தேவை மூளையுள்ள மனிதர்களோ மூலதனம் உள்ள மனிதர்களோ அல்ல.
மாறாக முழங்காலில் தரித்திருக்கும் மனிதர்களே தேவை."








# முழங்காலில் இருந்து செபிக்க வேண்டும்



முழங்காலில் இருந்து செபிப்பது என்பது நமது செபத்திலே நமக்கு இருக்கின்ற ஈடுபாட்டை, அர்ப்பணத்தைக் காட்டுவதாக உள்ளது. அதிக ஊக்கத்தோடு, அக்கறையோடு, விடாப்பிடியாகச் செபிப்பதன் அடையாளம்தான் முழந்தாட் படியிட்டு செபித்தலாகும். அதைவிட நம்மை முழுவதும் இறைவனுக்கு சரணாகதியாக்கி, நம்மைத் தாழ்த்தி, வெறுமையாக்கி, நம்மையே அவருக்கு அர்ப்பணம் ஆக்குவதன் அடையாளமே முழந்தாட்படியிடுதலாகும்.

ஓர் ஆங்கிலேய ஆயர் தனிமையில் பயணம் செய்தார். பயணத்தின் வழியில் ஓரிடத்தில் ஒரு கைதி கிழிந்த ஆடையுடன் முழந்தாளிலிருந்து கற்களை உடைத்துக்கொண்டிருந்தான். ஆயர் அவன் அருகில் சென்று அவனிடம் அன்போடு பேசினார். ஆறுதல் மொழிகளைக் கூறினார். பின் திரும்பி வரும்போது, “இக்கைதி மலைகளிலுள்ள கற்களை உடைப்பதுபோல என் மக்களின் கடின இதயங்களை உடைக்க விரும்புகிறேன்” என்றார் ஆயர். அதற்கு கைதி கூறுவான், “ஐயா நீர் முழந்தாட்படியிட்டு உழைத்தால் மக்களின் கடின இதயங்களை உடைக்கலாம்” என்றான். அதாவது மண்டியிட்டு மன்றாடினால் கடின பணியும் எளிய பணியாகிவிடும் என்றான்.

"நான் எங்கும் போகவேண்டியதில்லை. நான் போகவேண்டிய ஒரே இடம் முழந்தாட்படியிட்டு மன்றாடும் இடம் என்பதை நன்கு உணர்ந்திருந்ததால் அடிக்கடி மண்டியிட்டேன், மன்றாடினேன்" என்று அமெரிக்க குடியரசுத் தலைவராயிருந்த ஆபிரகாம் லிங்கன் கூறுவதுண்டு.

## பழைய ஏற்பாட்டு நடைமுறை

முழங்காலில் நின்று செபிப்பது கிறிஸ்தவ ஆலயங்களில் வழக்கமாக உள்ளது என்றாலும் இது உரோமானியப் பழக்கத்திலிருந்து வந்ததாகும். யூதர்கள் நின்றுகொண்டு செபிப்பதையே பெரும்பாலும் வழக்கமாகக் கொண்டிருந்தனர். (1சாமு.1:26 ; 1அர.8:2 ; மத்.6:5 ; மாற்கு11:25; லூக்.18:1). செபக்கூடங்களில் நின்றுகொண்டேதான் செபித்தனர்.

பழைய ஏற்பாட்டில் முழங்காலில் இருந்து செபிக்கும் வழக்கமும் நடைமுறையில் இருந்ததை விவிலியம் நமக்குச் சொல்கிறது. "மாலைப் பலி நேரத்தில் நோன்பை முடித்துக் கிழிந்த ஆடையோடும் மேலுடையோடும் *முழந்தாளிட்டு* என் கடவுளாகிய ஆண்டவரைநோக்கி கைகளை விரித்து நான் கூறியது..." (எஸ்ரா9:5). "வாருங்கள்; தாழ்ப்பணிந்து அவரைத் தொழுவோம்; நம்மை உருவாக்கிய ஆண்டவர் முன் *முழந்தாளிடுவோம்*" (தி.பா.95:6).

## இயேசுவினதும் சீடர்களினதும் அர்ப்பணம்

இயேசுவின் வாழ்வில் மிகவும் முக்கியமான ஒரு கட்டத்தில் அவர் முழந்தாட்படியிட்டுச் செபிப்பதாக நற்செய்தியாளர்கள் குறித்துக்காட்டுகின்றனர். "பிறகு அவர் அவர்களை விட்டுக் கல்லெறிதூரம் விலகிச் சென்று, *முழந்தாள்படியிட்டு,* இறைவனிடம் வேண்டினார்" (லூக்.22:41).

இயேசு மட்டுமல்ல அவருடைய திருத்தூதர்களும் இவ்வாறு முழந்தாட்படியிட்டு செபிக்கின்றனர். "பேதுரு அனைவரையும் வெளியே அனுப்பிவிட்டு *முழந்தாட்படியிட்டு இறைவனிடம் வேண்டினார்.* அவரது உடலின் பக்கமாகத் திரும்பி, 'தபித்தா எழுந்திடு' என்றார். உடனே அவர் கண்களைத் திறந்து பேதுருவைக் கண்டு, எழுந்து உட்கார்ந்தார்."(திப.9:40).

## திருத்தந்தையின் முழங்கால் செபம்

மறைந்த திருத்தந்தை 2ம் அருள் சின்னப்பர் ஒரு சமயம் விமானம்

ஒன்றில் பயணம் செய்துகொண்டிருந்தார். அவ்வேளை அவர் விமானத்தில் உள்ள செப அறையில் செபித்துக்கொண்டிருந்தார். அதேசமயம் வத்திக்கான் அலுவலகத்தில் இருந்து அவசரமான தொலைபேசி அழைப்பு ஒன்று வந்தது. அழைப்பைப் பெற்ற கர்தினால், "திருத்தந்தை அவர்கள் செபித்துக்கொண்டிருக்கிறார்" என்று கூறினார். ஆனால் தொலைபேசி மீண்டும் மீண்டும் ஒலித்துக்கொண்டே இருந்தது. பொறுமை இழந்த கர்தினால் திருத்தந்தையிடம் சென்று, "மிகவும் அவசரமான செய்தியாம் தாங்கள் உடனே பேசவேண்டுமாம்" என்றார். அதற்கு திருத்தந்தை கொடுத்த பதில் வியப்புக்குரியதாகும். "அவசரமான, மிகவும் அவசரமான செய்தியென்றால் இதற்காக நான் இன்னும் அதிக நேரம் முழந்தாட்படியிட்டு செபிக்க வேண்டும்" என்றாராம்.

இறைவனோடு பேசுவதில், உரையாடுவதில் திருத்தந்தைக்கு எவ்வளவு தாகம் இருந்தது என்பதை இதிலிருந்து அறிய முடிகிறது. "இன்றைய திருச்சபைக்குத் தேவை மூளையுள்ள (அறிவுள்ள) மனிதர்களோ, மூலதனம் (பணம்) உள்ள மனிதர்களோ அல்ல, மாறாக முழங்காலில் (செபத்தில்) தரித்திருக்கும் மனிதர்களே தேவை" என ஓர் இறையடியார் கூறுவது முற்றிலும் பொருத்தமானதே.

## பல்வேறு விதமான நிலைகளில் செபம்


முழந்தாட்படியிட்டுச் செபிப்பதைத்தவிர தரையில் முகங்குப்புற விழுந்து செபிக்கும் நடைமுறையையும் விவிலியத்தில் நாம் காண்கிறோம். "நான் இந்த மக்கள் கூட்டமைப்பை ஒரு நொடியில் எரித்துவிடும்படி அதிலிருந்து நீங்கள் விலகிக்கொள்ளுங்கள். மோசேயும் ஆரோனும் *முகங்குப்புற விழுந்தனர்*" (எண்.16:44,45).

"யோசுவா தம் ஆடைகளைக் கிழித்துக்கொள்ள, அவரும் அவருடன் இஸ்ரயேலின் முதியோரும் ஆண்டவரின் பேழைக்குமுன் மாலைவரை தரையில் *முகங்குப்புற விழுந்து கிடந்தனர்* (யோசு.7:6).

"எலியா கர்மேல் மலையின் உச்சிக்கு ஏறிச்சென்று. அங்கே தரையில் மண்டியிட்டுத் தம் முழங்கால்களுக்கு இடையே முகத்தைப் புதைத்துக்கொண்டார்." (1அர.18:42).

"பிறகு இயேசு சற்று அப்பால் சென்று *முகங்குப்புற விழுந்து,* என் தந்தையே, முடிந்தால் இத்துன்பக் கிண்ணம் என்னை விட்டு அகலட்டும். ........ என்று கூறி இறைவனிடம் வேண்டினார் (மத்.26:37).






# கரங்களை உயர்த்திச் செபிக்க வேண்டும்




கரங்களை உயர்த்துவதென்பது சரணாகதி அடைவதன் அடையாளமாகும். போரிலே தோல்வியடைந்தவர் கரங்களை உயர்த்திக்கொண்டு நிற்கிறார் என்றால் தான் எதிராளியிடம் சரணடைகின்றார் என்ற செய்தியை அவர் சொல்கிறார் என்பதே அர்த்தமாகும். சாதாரணமாக இன்றைய போர்க்காலச் சூழ்நிலையில் ஆயுதம் தாங்கியோர் எதிர்பாராத நிலையில் துப்பாக்கியை நம்முன் நிறுத்தி நம்மைநோக்கிச் சுட முனைகின்றார் என்றால் முதலில் நாம் செய்வது நமது கரங்களை உயர்த்துவதாகும். காரணம் "நான் உனக்கு எதிரானவன் இல்லை, நான் ஒரு அப்பாவி, நான் உனக்கு முன்னால் சரணடைகின்றேன்" என்ற செய்தியையே நாம் தெரிவிக்கின்றோம்.

## இறைவனிடம் சரணாகதி அடைகிறோம்

மனிதனும் தன் இறுதி நம்பிக்கையாகிய இறைவனிடம் செபிக்கும்போது கரங்களை உயர்த்திச் செபிக்கின்றான். கரங்களை உயர்த்திச் செபிக்கும்போது "நான் உம்மிடம் சரணடைகின்றேன்" என்ற செய்தியை மனிதன் இறைவனிடம் சொல்லாமல் சொல்கிறான்.

நமது கத்தோலிக்க திருச்சபையின் வழிபாட்டுப் பாரம்பரியத்தில் கரங்களை உயர்த்திச் செபிக்கும் வழக்கம் உள்ளதை இங்கு நாம் நினைவுபடுத்துதல் பொருத்தமானது. திருப்பலி வேளையில் குருவானவர் கரங்களை உயர்த்தியே செபிக்கின்றார்.

## வெற்றி கிடைக்க கைகளை உயர்த்திச் செபி!



கைகளை உயர்த்திச் செபிப்பதன் வல்லமையை வெளிப்படுத்தும் மிகவும் சுவாரசியமான சம்பவம் ஒன்று பழைய ஏற்பாட்டில் இடம்பெற்றுள்ளது. மோசே கைகளை உயர்த்திச் செபித்தபோது இஸ்ராயேலர் போரில் வெற்றி பெற்றனர். அவர் சோர்ந்து கைகளைக் கீழே விட்டபொழுதெல்லாம் தோல்வியைத் தழுவினர்.

"பின்னர் அமலேக்கியர் இரபிதிமில் இஸ்ரயேலரை எதிர்த்துப் போரிட வந்தனர். மோசே யோசுவாவை நோக்கி, "நம் சார்பில் தேவையான ஆள்களைத் தேர்ந்தெடு. நாளை நீ போய், அமலேக்கியரை எதிர்த்துப் போரிடு. நான் கடவுளின் கோலைக் கையில் பிடித்தவாறு குன்றின் உச்சியில் நின்றுகொள்வேன்" என்றார். அமலேக்கியரை எதிர்த்துப் போரிட மோசே கூறியவாறு யோசுவா செய்யவே, மோசே. ஆரோன், கூர் என்பவர்கள் குன்றின் உச்சிக்கு ஏறிச்சென்றனர். ***மோசே தம் கையை உயர்த்தியிருக்கும் போதெல்லாம் இஸ்ரயேலர் வெற்றியடைந்தனர்: அவர் தம் கையைத் தளர விட்டபோதெல்லாம் அமலேக்கியர் வெற்றியடைந்தனர்.***

மோசேயின் கைகள் தளர்ந்து போயின. அப்போது அவர்கள் கல்லொன்றை அவருக்குப் பின்புறமாக வைக்க, அவர் அதன்மேல் அமர்ந்தார். அவர் கைகளை ஆரோன் ஒரு பக்கமும், கூர் மறுபக்கமுமாகத் தாங்கிக்கொண்டனர். இவ்வாறாக அவர் கைகள் கதிரவன் மறையும் வரை ஒரே நிலையில் இருந்தன. (விப.17:8-12).

## கைகளை உயர்த்திச் செபிக்க அழைப்பு

கைகளை உயர்த்திச் செபிக்குமாறு இறைவார்த்தையும் நமக்கு அழைப்பு விடுக்கின்றது. "எழு! இரவில் முதற் சாமத்தில் குரலெழுப்பு! உள்ளத்தில் உள்ளதை என் தலைவர் திருமுன் தண்ணீரைப்போல் ஊற்றிவிடு! தெருமுனையில் பசியால் மயங்கி விழும் குழந்தைகளின் உயிருக்காக, அவரை நோக்கி உன் கைகளை உயர்த்து!" (புல.2:19).



"எனவே, ஆண்கள் சினமும் சொற்பூசலும் இன்றி எவ்விடத்திலும் தூய உள்ளத்தோடு கைகளை உயர்த்தி இறைவேண்டல் செய்யுமாறு விரும்புகின்றேன்" (1 திமொ.2:8).

எமது செபங்களிலும் நாம் கைகளை உயர்த்திச் செபிக்கும்போது அங்கே நமது அர்ப்பணத்தை, சரணாகதியை நாம் வெளிப்படுத்துகின்றோம்.

மனித நம்பிக்கைகள் பொய்த்துப்போகின்றபோது இறைவனே நமது இறுதிக் கதியாக இருக்கின்றார். எனவே அவரையே நாம் என்றும் பற்றிக்கொள்வோம். அவரிடமிருந்து ஆறுதலை அமைதியை, வாழ்வைப் பெற்றுக்கொள்ள முனைவோம்.



# 7.3

# அழுது புலம்பிச் செபிக்க வேண்டும்



"பிறக்கும்போதும் அழுகின்றான், இறக்கும்போதும் அழுகின்றான் ஒரு நாளேனும் கவலை இல்லாமல் சிரிக்க மறந்தாய் மானிடனே" என்று பாடுகின்றான் ஒரு கவிஞன். மனித வாழ்வின் கவலைகள், துன்பங்கள் மத்தியில் மனிதன் ஆற்றாமையால் அழுகின்றான். தனது இயலாமையின் வெளிப்பாடாக அழுகின்றான். அழுவது உடல் நலத்திற்கு நன்மை பயக்கும் என்பது மருத்துவர்களின் சாட்சியமாகும்.

இறைபிரசன்னத்தில் செபவேளையில் அழுவதென்பது நமது ஆற்றாமையை, இயலாமையை இறைவனிடம் சமர்ப்பிக்கும் ஒரு வழிமுறையாக உள்ளது. உள்ளம் உருகி அழுவதென்பது நமது உணர்வுகளின் வெளிப்பாடாக உள்ளது. அழுது செபிக்கும்போது இறைவனின் இரக்கம் கரைபுரண்டு ஓடுகின்றது. இறைவனின் உள்ளம் உருகுகின்றது. எமது அழுகையை இறைவன் இரக்கத்தோடு பார்க்கின்றார், நமக்குப் பதிலும் அளிக்கின்றார்.

## கண்ணீர் சிந்தி அழுது செபிக்கும் இயேசு


இயேசுகூட தான் வாழ்ந்த காலத்தில் கண்ணீர் சிந்தி அழுதார் என நற்செய்தி நமக்குச் சொல்கிறது. "இயேசு எருசலேம் நகரை நெருங்கி வந்ததும் அதைப் பார்த்து அழுதார். "இந்த நாளிலாவது அமைதிக்குரிய வழியை நீ அறிந்திருக்கக்கூடாதா?" (லூக்.19:41-42)

எனக் கேட்கின்றார். இலாசர் இறந்தபோது இயேசு கண்ணீர்விட்டு அழுதார் (யோவா.11:35).

கெத்சமனித் தோட்டத்தில் தனது சிலுவைப் பாடுகளை எதிர்கொள்கின்ற வேளையில் இயேசு மிகுந்த மனப்பாரத்தோடு செபிக்கின்றார். அவ்வேளையில் அவருடைய வியர்வை பெரும் இரத்தத்துளிகளாக விழுந்தது என்றால் நிச்சயம் அவர் அங்கு அழுதே செபித்திருப்பார்.

"எல்லா வகையிலும் நம்மைப்போலச் சோதிக்கப்பட்டவர்; எனினும் பாவம் செய்யாதவர்" (எபி.4:15) என இயேசுவின் இவ்வுலக வாழ்வை இரத்தினச் சுருக்கமாகக் கூறும் எபிரேயர் திருமுகத்தை எழுதிய ஆசிரியர், இயேசுவும் கண்ணீர் சிந்தி அழுது செபித்தார் எனக் கூறுகின்றார். "அவர் இவ்வுலகில் வாழ்ந்த காலத்தில், தம்மைச் சாவிலிருந்து காப்பாற்ற வல்லவரை நோக்கி உரத்த குரல் எழுப்பி, ***கண்ணீர் சிந்தி,*** மன்றாடி வேண்டினார். அவர் கொண்டிருந்த இறைப்பற்று கலந்த அச்சத்தை முன்னிட்டு, கடவுள் அவருக்குச் செவிசாய்த்தார் (எபி.5:7).

## அழுது செபிக்கும் இறைமனிதர்கள்



பழைய ஏற்பாட்டில் இறைமனிதர்கள் இறைவனிடம் கண்ணீர் சிந்தி அழுது செபிப்பதை பல இடங்களில் நாம் காணலாம். "நாங்கள் ஆண்டவரை நோக்கி அழுதபோது அவர் எங்கள் குரலைக் கேட்டு எங்களை எகிப்திலிருந்து வெளிக்கொணர ஒரு தூதனை அனுப்பினார்" (எண்.20:16) "அன்னா மனம் கசிந்து அழுது புலம்பி, ஆண்டவரிடம் மன்றாடினார்" (1சாமு.1:10).

இறைவாக்கினர்கள் தமது மக்களை அழுது செபிக்கும்படி கூறுகின்றனர். "எனவே, சாக்கு உடை உடுத்திக்கொள்ளுங்கள். அழுது புலம்புங்கள்: ஒப்பாரி வையுங்கள்: ஏனெனில், ஆண்டவரின் கோபக் கனல் நம்மைவிட்டு நீங்கவில்லை" (எரே.4:8). "மகளாகிய

என் மக்களே! சாக்கு உடை உடுத்துங்கள்: சாம்பலில் புரளுங்கள்; இறந்த ஒரே பிள்ளைக்காகத் துயருற்று அழுவதுபோல், மனமுடைந்து அழுது புலம்புங்கள். ஏனெனில், அழிப்பவன் திடீரென நமக்கெதிராய் வருவான்" (எரே.6:26).

## உன் கண்ணீரைக் கண்டேன்

"அந்நாள்களில், எசேக்கியா நோய்வாய்ப்பட்டு சாகும் நிலையில் இருந்தார்: ஆமோட்சின் மகனான எசாயா இறைவாக்கினர் அவரைக் காணவந்து அவரை நோக்கி, 'ஆண்டவர் கூறுவது இதுவே: நீர் உம் வீட்டுக் காரியத்தை ஒழுங்குபடுத்தும் ஏனெனில் நீர் சாகப்போகிறீர்: பிழைக்கமாட்டீர்' என்றார். எசேக்கியா சுவர்ப்புறம் தம் முகத்தைத் திருப்பிக் கொண்டு ஆண்டவரிடம் மன்றாடி, 'ஆண்டவரே, நான் உம் திருமுன் உண்மை வழியில் மாசற்ற மனத்துடன் நடந்துவந்ததையும் உம் பார்வைக்கு நலமானவற்றைச் செய்ததையும் நினைந்தருளும்' என்று கூறிக் கண்ணீர் சிந்தித்தேம்பித் தேம்பி அழுதார்.

அப்போது ஆண்டவரின் வாக்கு எசாயாவுக்கு அருளப்பட்டது: 'நீ எசேக்கியாவிடம் சென்று கூறவேண்டியது: உன் தந்தை தாவீதின் கடவுளாகிய ஆண்டவர் கூறுவது இதுவே: **உன் கண்ணீரைக் கண்டேன்**. இதோ நீ வாழும் காலத்தை இன்னும் பதினைந்து ஆண்டு மிகுதியாக்குவேன்." (எசா.38:1-5).

நாமும் நமது செபத்தில் கண்ணீர் சிந்தி அழுது செபிக்கும்போது இறைவனின் இரக்கத்தைப் பெறமுடியும்; வாழ்வாங்கு வாழ முடியும்.

---



# 7.4

# உண்ணா நோன்பிருந்து செபிக்க வேண்டும்



உண்ணா நோன்பிருத்தல் கிறிஸ்தவ மறைக்கு மட்டுமே சொந்தமான ஒரு வழக்கமல்ல. உலகில் உள்ள எல்லா மதத்தவரும் உண்ணா நோன்பிருக்கின்றனர். உண்ணா நோன்பு இருக்கும்போது நாம் இறையரசுக்காகப் பசித்திருக்கின்றோம். ஆண்டவரின் அருள் உணவைச் சுவைக்க சிலவேளை நாம் நமது அன்றாட உணவை விடவேண்டும்.

உண்ணா நோன்பின் மூலம் பலவித நன்மைகளை நாம் அடைகின்றோம். உடல் பசித்திருக்கும்போது இறைவனைப் பற்றிய எண்ணமும் சிந்தனையும் அதிகம் ஏற்படுகின்றது; தியான மனநிலை ஏற்படுகின்றது; செபிக்க, இறைவார்த்தையை வாசிக்க ஆர்வம் பிறக்கின்றது. உண்ணா நோன்பிருப்பது நமது உடல் நலத்திற்கு நன்மை பயப்பதாக உள்ளது. பசித்திருக்கும் ஏழைகளின் பசியை உணர முடிகின்றது.

"மணமகன் மணவிருந்தினர்களோடு இருக்கும்வரை அவர்களை நோன்பு இருக்கச் செய்யலாமா? ஆனால் மணமகன் அவர்களைவிட்டுப் பிரியவேண்டிய காலம் வரும்: அப்போது அவர்களும் நோன்பு இருப்பார்கள்" (லூக்.5:34-35). என்று தம்மைப் பின்பற்றுபவர்களைக் குறித்து இயேசு சொன்னார். இயேசுவின் மணமகளாகிய இறைமக்களும் நோன்பிருக்கும்பொழுது அவரோடு என்றென்றும் நிலையாக இணைகின்ற விண்ணக விருந்தை எதிர்பார்த்திருக்கின்றனர்.

## உண்ணா நோன்பிருக்க அழைப்பு

திருநூலில் உண்ணா நோன்பிருந்து செபிக்கும்படி பல இடங்களில் அழைப்பு விடுக்கப்படுகின்றது. "உண்ணா நோன்புக்கென நாள் குறியுங்கள்; வழிபாட்டுப் பேரணியைத் திரட்டுங்கள்; ஊர்ப் பெரியோரையும் நாட்டில் குடியிருப்போர் அனைவரையும் உங்கள் கடவுளாகிய ஆண்டவரின் இல்லத்தில் கூடிவரச் செய்யுங்கள்; ஆண்டவரை நோக்கிக் கதறுங்கள்" (யோவே1:14).

"இப்பொழுதாவது உண்ணா நோன்பிருந்து, அழுது புலம்பிக்கொண்டு, உங்கள் முழு இதயத்தோடு என்னிடம் திரும்பி வாருங்கள் என்கிறார் ஆண்டவர்" (யோவே.2:12). "சீயோனில் எக்காளம் ஊதி எச்சரியுங்கள்; புனிதமான உண்ணா நோன்புக்கென நாள் குறியுங்கள்; வழிபாட்டுப் பேரணியைத் திரட்டுங்கள்" (யோவே.2:15).

"நினிவே நகர மக்கள் கடவுளின் செய்தியை நம்பி, எல்லாரும் நோன்பிருக்க முடிவுசெய்தார்கள். பெரியோர் சிறியோர் அனைவரும் சாக்கு உடை உடுத்திக்கொண்டனர்" (யோனா.3:5).

## இறைமாந்தர்கள் நோன்பிருந்தனர்

பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும் பல இறைமனிதர்கள் நோன்பிருந்து செபிக்கின்றனர். அரசர் தாவீது, இறைவாக்கினர் தானியேல், ஆண்டவர் இயேசு என இந்தப் பட்டியல் நீண்டு செல்லும். "தாவீது அக்குழந்தைக்காக ஆண்டவரிடம் மன்றாடினார். உண்ணா நோன்பு மேற்கொண்டு உள்ளே சென்று இரவெல்லாம் படுத்துக்கிடந்தார்." (2சாமு.12:16). "நான் நோன்பிலிருந்து சாக்கு உடை அணிந்து சாம்பலில் அமர்ந்து என் தலைவராகிய கடவுளிடம் திரும்பி மன்றாடி வேண்டிக்கொண்டேன்" (தானி.9:3). "அவர் நாற்பது நாள் இரவும் பகலும் நோன்பிருந்தார். அதன்பின் பசியுற்றார்"(மத்.4:2).

## தொடக்கத் திருச்சபையில் உண்ணா நோன்பு

தொடக்கத் திருச்சபையில் இறைமக்கள் உண்ணா நோன்பிருந்து செபிக்கின்றனர். குறிப்பாக திருப்பணியாளர்களைப் பணிக்களங்களுக்கு அனுப்புமுன்னர் அவர்கள் நோன்பிருந்து செபித்து அவர்களை வழியனுப்பி வைக்கின்றார்கள்.

"அவர்கள் நோன்பிருந்து ஆண்டவரை வழிபடும்போது தூய ஆவியார் அவர்களிடம், 'பர்னபாவையும் சவுலையும் ஒரு தனிப்பட்ட பணிக்கென நான் அழைத்திருக்கிறேன். அந்தப் பணிக்காக அவர்களை ஒதுக்கி வையுங்கள்' என்று கூறினார். அவர்கள் நோன்பிருந்து இறைவனிடம் வேண்டினார்கள்; தங்கள் கைகளை அவ்விருவர்மீது வைத்துத் திருப்பணியிலமர்த்தி அவர்களை அனுப்பி வைத்தார்கள். (திப.13:2-3) "அவர்கள் ஒவ்வொரு திருச்சபையிலும் மூப்பர்களைத் தேர்ந்தெடுத்து நோன்பிருந்து இறைவனிடம் வேண்டித் தாங்கள் நம்பிக்கைகொண்டிருந்த ஆண்டவரிடம் அவர்களை ஒப்படைத்தார்கள்" (திப.14:23).

## வல்லமையை வசீகரிக்க உண்ணா நோன்பு

உண்ணா நோன்பிருத்தல் இறைவனின் வல்லமையை நம்மீது கொண்டுவரும் ஒரு வழி மட்டுமல்ல அவ்வல்லமையை முழுத்திருச்சபைக்கும், முழு உலகத்திற்கும் பெற்றுக்கொடுக்கின்ற சிறந்த ஒரு வழியாகவும் உள்ளது. சாத்தானை விரட்ட வல்லமையுள்ள ஆயுதமாகச் செபத்தையும் உண்ணா நோன்பையுமே இயேசு பரிந்துரைக்கின்றார். "இவ்வகைப் பேய் இறைவேண்டலினாலும் நோன்பினாலுமேயன்றி, வேறு எதனாலும் வெளியேறாது என்றார்" (மத்.17:21).

## வெளிவேடமற்ற நோன்பு

நமது உண்ணா நோன்பு முயற்சிகள் வெளிவேடமற்றவையாக இருக்க வேண்டும். "மேலும் நீங்கள் நோன்பு இருக்கும்போது வெளிவேடக்காரரைப்போல முகவாட்டமாய் இருக்க வேண்டாம். தாங்கள் நோன்பு இருப்பதை மக்கள் பார்க்கவேண்டுமென்றே அவர்கள் தங்கள் முகங்களை விகாரப்படுத்திக்கொள்கிறார்கள். அவர்கள் தங்களுக்குரிய கைம்மாறு பெற்றுவிட்டார்கள் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்.

நீங்கள் நோன்பு இருக்கும்போது உங்கள் தலையில் எண்ணெய் தேய்த்து, முகத்தைக் கழுவுங்கள். அப்பொழுது நீங்கள் நோன்பு இருப்பது மனிதருக்குத் தெரியாது; மாறாக. மறைவாய் இருக்கிற உங்கள் தந்தைக்கு மட்டும் தெரியும். மறைவாய் உள்ளதைக் காணும் உங்கள் தந்தையும் உங்களுக்கு ஏற்ற கைம்மாறு அளிப்பார்" (மத்.6:16-18).

# இயல் 8
# செப மனநிலைகள்

**1. விடாப்பிடியாகச் செபிக்க வேண்டும்**
(நள்ளிரவில் வரும் நண்பன் உவமை)

**2. நம்பிக்கையோடு செபிக்க வேண்டும்**
(அப்பம் கேட்கும் பிள்ளை உவமை)

**3. மனம் தளராமல் செபிக்க வேண்டும்**
(நேர்மையற்ற நடுவர் உவமை)

**4. தாழ்ச்சியோடு செபிக்க வேண்டும்**
(பரிசேயரும் - வரிதண்டுபவரும் உவமை)

**5. பிறரன்போடு செபிக்க வேண்டும்**
(மன்னிக்க மறுத்த பணியாளர் உவமை)

*இயேசு ஆண்டவர்*
*ஒரு செப வீரராக இருந்து*
*செபித்தவர் மட்டுமல்ல*
*செபத்தில் இருக்கவேண்டிய*
*பல்வேறு மனநிலைகளை*
*சிறப்பான உவமைகள் வழியாக*
*படிப்பிக்கின்றவராகவும் இருக்கின்றார்.*

*இந்த இயலில் செபத்தைக் குறித்து*
*இயேசு சொன்ன முக்கிய உவமைகளை*
*அக்கால வாழ்வுப் பின்னணியோடு*
*ஆராய்ந்து பார்த்து*
*அவை இன்று நமக்குத் தரும்*
*செய்திகளைப் புரிந்துகொள்ள முயற்சிப்போம்.*

"இவ்வுலகம்
கனவிலும்
எண்ணிப்பார்க்க
முடியாத
உயரியவை
செபத்தால்
நிகழ்ந்துள்ளன"
*(பிரபு டென்னிசன்)*









# விடாப்பிடியான செபம்

## நள்ளிரவில் வரும் நண்பன் உவமை (லூக் 11:5-8)



*மேலும் இயேசு அவர்களை நோக்கிப் பின்வருமாறு கூறினார். "உங்களுள் ஒருவர் தம் நண்பரிடம் நள்ளிரவில் சென்று, 'நண்பா, மூன்று அப்பங்களை எனக்குக் கடனாகக் கொடு. என்னுடைய நண்பர் ஒருவர் பயணம் செய்யும் வழியில் என்னிடம் வந்திருக்கிறார். அவருக்குக் கொடுக்க என்னிடம் ஒன்றுமில்லை' என்று சொல்வதாக வைத்துக்கொள்வோம். உள்ளே இருப்பவர், 'எனக்குத் தொல்லை கொடுக்காதே. ஏற்கெனவே கதவு பூட்டியாயிற்று. என் பிள்ளைகளும் என்னோடு படுத்திருக்கிறார்கள். நான் எழுந்திருந்து உனக்குத் தரமுடியாது' என்பார். எனினும் அவர் விடாப்பிடியாகக் கதவைத் தட்டிக்கொண்டேயிருந்தால் அவர் தம் நண்பர் என்பதற்காக எழுந்து கொடுக்காவிட்டாலும், அவரது தொல்லையின் பொருட்டாவது எழுந்து அவருக்குத் தேவையானதைக் கொடுப்பார் என நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்" (லூக்.11:5-8).*

### விருந்தோம்பல் பண்பாடு

கீழைநாடுகளில் விருந்தோம்பல் என்பது ஒரு புனித கடமை. வீடு தேடி ஒருவர் வந்துவிட்டால் அவருக்குப் பசியாறவோ, குறைந்தபட்சம் ஏதாவது குடிக்கவோ கொடுத்தாக வேண்டும் என்பது இன்னும் நம் பண்பாட்டில் ஊறிப்போய்க் கிடக்கிறது.

வீட்டுக்கு வந்தவர் எதுவும் உட்கொள்ளாமல் சென்றுவிட்டால், அது தங்களுக்கு இழைக்கப்பட்ட அவமானமாகக்கூட கருதுவதுண்டு. "வந்துவிட்டு ஒரு வாய் தண்ணீர்கூட குடிக்காமல் சென்றுவிட்டார்களே?" என்று வருந்துவதுமுண்டு. "எங்கள் வீட்டில் எல்லாம் நீங்கள் கையை நனைப்பீர்களா?" என இடைவெளியைக் காட்டுவதுமுண்டு. இத்தகைய ஒரு பின்னணியில்தான் இந்த உவமையின் நிகழ்வுகளும் இடம்பெறுகின்றன. அதாவது இவ்வுவமையின் நிகழ்வுகளின் பண்பாட்டுப் பின்னணி இது.

இஸ்ரயேல் மற்றும் பலஸ்தீனாவில், அப்பம் அல்லது ரொட்டி என்பது அன்றன்றே செய்யக்கூடியதாகும். பொதுவாக அதை யாரும் மறு நாளுக்கென வைத்திருப்பதில்லை. தோசை, இட்லி போன்ற நமது நாட்டு உணவு வகைகள்போல் அவ்வப்போது செய்து சாப்பிடக்கூடிய உணவுப் பொருள்தான்.

நண்பர் ஒருவர் தாமதமாகத் திடீரென்று வரும்போது, அதுவும் வீட்டில் எதுவும் இல்லாதபோது, விருந்தோம்பலை செய்யமுடியாத நிலையில் மனம் வேதனையுறுகின்றது. இன்னொரு நண்பரின் உதவியைத் தேடிச் செல்கிறார்.

## வீட்டின் அமைப்பு

மேலை நாடுகளைப்போல் அல்லாமல் கீழை நாடுகளில், அதுவும் அந்தக் காலத்தில் ஒரே அறையையுடைய வீடுகள்தான் பெரும்பாலும் இருந்தன. அந்த ஓர் அறையிலேயே ஏறத்தாழ மூன்றில் ஒரு பகுதி சிறிது உயர்த்திக் கட்டப்பட்டு சமையல் அறையாகப் பயன்படுத்தப்பட்டது. ஏனைய பகுதி, கீழே பாய் விரித்து தூங்குவதற்காகப் பயன்படுத்தப்பட்டது. கதவு திறக்கும் பகுதியில்கூட முழுக் குடும்பமும் அருகருகே படுத்திருக்கும். இன்னும் நம் கிராமப்புறங்களில் ஓலைக் குடிசைகளின் உள்ளே காணப்படும் அதே வாழ்க்கை முறைதான் இது.

## நண்பரின் அவசரத் தேவை

ஒருமுறை இரவில் வீட்டின் கதவு மூடப்பட்டுவிட்டால், மேலான காரணம் இருந்தால் அன்றி எவரும் கதவைத் தட்டுவதில்லை. ஏனெனில் தூங்குபவர் எல்லோரும் தொந்தரவுக்கு உள்ளாக வேண்டியிருக்கும்.

ஆனால் இங்கே வெளியே நிற்கும் நண்பரின் தேவை பெரிது. எனவே சில எதிர்பார்ப்புகளுடன் நடைமுறை நியதிகளையும் தாண்டி கதவைத் தட்டுகிறார். இங்கு, தொடர்ந்த தட்டுதல்களால், ஏற்கனவே குடும்பம் விழித்திருக்க வேண்டும். ஆகவே நண்பருக்காக இல்லையென்றாலும் அவரின் தொந்தரவைத் தாங்க முடியாமல் அவர் கேட்டதைக் கொடுக்கிறார் வீட்டுக்காரர்.

இது இயேசு கற்பித்த செபத்தோடு நேரடித் தொடர்பு உடையது. அச்செபத்தைத் தொடர்ந்தே வருகிறது. மேலும் இவ்வுவமை அன்றாட வாழ்க்கை நடவடிக்கையிலிருந்தே எடுக்கப்பட்டுள்ளது. 'நண்பர்' என வீட்டுக்காரரை அழைக்கத் தொடங்குகிறார். வீட்டுக்குள்ளிருக்கும் நண்பரோ, 'எனக்குத் தொல்லை கொடுக்காதே' எனத் தொடங்குகிறார். இங்கு எரிச்சலை உணர முடிகிறது. அதேவேளை அந்த எரிச்சலுக்கான காரணமும் விளக்கப்படுகின்றது. இறுதியில் கேட்டது கிடைக்கிறது.

## செபத்தில் உறுதியுடன் நிலைத்திருத்தல்

செபத்தில் நாம் உறுதியுடன் நிலைத்திருக்க வேண்டும் என்பதை விளக்க இயேசு கூறிய உவமை இது. நள்ளிரவில் வந்து சளைக்காமல் விடாப்பிடியாக வீட்டுக்கதவைத் தட்டி அப்பம் கேட்கும் அந்த நண்பனைப்போல நாமும் இடைவிடாது - விடாப்பிடியாக ஆண்டவரிடம் செபிக்க வேண்டும் என்ற கருத்தை ஆண்டவர் இயேசு இந்த உவமையில் வலியுறுத்துகின்றார்.

## தப்பான விளக்கங்கள் தவிர்க்கப்பட வேண்டும்

இவ்வுவமையை நம் செப வாழ்வுக்கு மொழிபெயர்க்கும்போது சில தப்பான விளக்கங்கள் புகுந்துவிடாமல் தவிர்ப்பதில் கவனமாய் இருத்தல் வேண்டும். கடவுள் நாம் கேட்பதை நமக்குத் தரும்வரை நாம் கட்டாயப்படுத்தி தொந்தரவு கொடுத்துக்கொண்டேயிருக்க வேண்டும் என்றோ அல்லது விருப்பமில்லாத ஒருவரை நம் விருப்பத்திற்கு பணியவைக்க வேண்டுமென்றோ இவ்வுவமை பொருள் தருவதாக விளக்கம் தந்துவிடக்கூடாது.

தரவிருப்பம் இல்லாத ஒரு கடவுளை நோக்கி நாம் விண்ணப்பங்களை எடுத்துச் சொல்லவில்லை. மாறாக, நம் தேவைகளை ஏற்கெனவே அறிந்திருக்கும் தந்தையாம் இறைவனிடம் தான் கேட்கிறோம். நாம் கேட்பது கிடைக்கவில்லையானால் கடவுள் அதை மறுப்பதாக எடுத்துக்கொள்ளாமல், அதைவிடச் சிறந்ததைத் தர நமக்கு அவர் திட்டமிட்டிருப்பதாக ஏற்றுக்கொள்ளவேண்டும். நாம் விரும்பிய பதிலாக

அது இல்லாமல் இருக்கலாம். ஆனால் அது கட்டாயம் நமக்கான இறைவனின் அன்பையும், அவரின் ஞானத்தையும் வெளிப்படுத்துவதாக இருக்கும்.

## செபத்தில் நாம் நிலைத்திருக்க வேண்டும்

ஒரு மனிதனின் கழுத்தில் கத்தியை வைத்து அழுத்தும் நேரத்தில்கூட கடவுளின் இரக்கத்தை வேண்டி செபிப்பதை நிறுத்தக்கூடாது என்று யூதப் பாரம்பரியம் கூறுகிறது.

இணைச் சட்டம் (3:26ல்) கடவுள், "போதும் இனி அந்தக் காரியத்தைக் குறித்து நம்மோடு பேசவேண்டாம்" என மோயீசனிடம் கூறியபோதும்கூட அவர் கடவுளின் கருணைக்காகத் தொடர்ந்து வேண்டியதாகப் படிக்கின்றோம். இது விடாமுயற்சியுடன் செபிக்க வேண்டியதன் அவசியத்தை நமக்கு எடுத்துரைக்கிறது.

நம் செபத்தில் நாம் நிலைத்திருக்க வேண்டும். தொடர்ந்து இறைவனிடம் மனந்தளராமல் கேட்டுக்கொண்டேயிருக்க வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக, நம் செபங்கள் கேட்கப்படும் என்ற நம்பிக்கையுடன் இருக்க வேண்டும்.

இவ்வுவமையைக் கூறுவதற்கு முன்னால் இயேசு தன் சீடர்களுக்குச் செபம் ஒன்றைக் கற்றுத் தந்தார். முழுமையையும், முழுப் பொருளையும், ஈடுபாட்டையும், மனிதனின் உள், வெளித் தேவைகளையும் உள்ளடக்கிய செபம் அது. *இயேசு கற்பித்த செபம்* எனப் பெயர் வாங்கியது அது. அந்தச் செபத்தைக் கற்றுக்கொடுத்தபின், செபத்தில் எவ்வாறு நம்பிக்கையுடனும் உறுதிப்பாட்டுடனும் இருக்கவேண்டும் என்பதை வலியுறுத்த இந்தச் சிறிய, எளிய உவமையை எடுத்துரைக்கிறார். விளக்கம் தேவையின்றியே பொருள்புரிந்துவிடும் உவமை இது. ஏனெனில் இவ்வுவமையைத் தொடர்ந்து அவர் கூறும் வார்த்தைகள் தெளிவாக உள்ளன.

"கேளுங்கள், உங்களுக்குக் கொடுக்கப்படும். தேடுங்கள், நீங்கள் கண்டடைவீர்கள். தட்டுங்கள் உங்களுக்குத் திறக்கப்படும்" ஏனெனில் கேட்போர் எல்லாரும் பெற்றுக்கொள்கின்றனர். தேடுவோர் கண்டடைகின்றனர். தட்டுவோருக்குத் திறக்கப்படும்" (லூக்.11:9-10) என்கிறார் இயேசு. விருப்பமில்லா ஒரு நண்பரே இறுதியில் கேட்டதை வழங்க இறங்கி வருவாராகில், அன்பு செய்யும் தந்தை எவ்வளவு தூரம் தருவார்.

## கேட்டுத்தான் தரவேண்டுமா?

ஆண்டவருக்கு நம் தேவை தெரியுமென்றால் நாம் ஏன் அவரிடம் கேட்க வேண்டும்? மீண்டும் மீண்டும் ஏன் இறைஞ்சவேண்டும்? என்ற கேள்வி எழலாம். இதற்கு தமிழில் இருக்கும் ஒரு முதுமொழி அழகாக பதில் தருகிறது. *'அழுத பிள்ளைதான் பால்குடிக்கும்'* என்பதே அது.

நமக்கு எது தேவை என்பது அவருக்குத் தெரிந்திருந்தும் அது நம்முடைய தேவையாக இருப்பதால் நாம் கேட்க வேண்டும் என எதிர்ப்பார்க்கப்படுவது இயல்பு. நமக்குத் தேவையானதில் நம்முடைய ஈடுபாடு எதிர்ப்பார்க்கப்படுகின்றது. நமக்காக இன்னுமொருவர் சிந்தித்துச் செயற்பட எதிர்பார்க்காத ஒரு பொறுப்புணர்வு இங்கு தேவைப்படுகின்றது.

## கேட்காமலே தருகின்ற இறைவன்



நாம் இவ்வுலகில் பிறந்ததிலிருந்தே நம்மீது எண்ணற்ற கொடைகளை வாரி வழங்கிக்கொண்டிருக்கிறார் இறைவன். பெற்றோரைக் கொடுத்தார், நம் உடலை, ஆன்மாவை, உறவினர்களை, நாட்டை, நம்மீது அக்கறை கொண்டு பாதுகாப்பளிக்கும் சட்டத்தை எனத் தொடர்ந்து வழங்கினார்.

எத்தனையோ தீமைகளில் இருந்து அவர் நம்மைக் காப்பாற்றியுள்ளார். நம் வாழ்வின் எத்தனையோ தேவைகளை நிறைவுசெய்துள்ளார். இவற்றையெல்லாம் நாம் கேட்டு அவர் வழங்கவில்லை. நாம் கேட்டுத்தான் தரவேண்டும் என அவர் காத்திருக்கவுமில்லை. நாம் கேட்கவில்லையே என்பதற்காக அவர் தராமலிருக்கவும் இல்லை. ஆனால் இத்தகைய பொதுக் கொடைகள் தவிர மற்றும் பலவும் நமக்குத் தேவையாயிருக்கின்றன. அவைகளையும் தர அவர் தயாராக இருக்கின்றார்.

---



# 8.2

# குழந்தைக்குரிய நம்பிக்கைச் செபம்

## அப்பம் கேட்கும் பிள்ளை (மத். 7:9 -11)

*"உங்களுள் எவராவது ஒருவர் அப்பத்தைக் கேட்கும் தம் பிள்ளைக்குக் கல்லைக் கொடுப்பாரா? அல்லது பிள்ளை மீன் கேட்டால் பாம்பைக் கொடுப்பாரா? தீயோர்களாகிய நீங்களே உங்கள் பிள்ளைகளுக்கு நற்கொடைகள் அளிக்க அறிந்திருக்கிறீர்கள். அப்படியானால் விண்ணுலகில் உள்ள உங்கள் தந்தை தம்மிடம் கேட்போருக்கு இன்னும் மிகுதியாக நன்மைகள் அளிப்பார் அல்லவா! என்றார் இயேசு" (மத்.7:9-11).*



### நம்பிக்கையோடுகூடிய செபம்

செபத்தை அன்பு செய்து, அதில் உறுதியான நம்பிக்கை கொண்டிருந்த ஒரு சமுதாயத்தில் மனுவுருவெடுத்தார் இயேசு. யூத எழுத்துக்களில் செபத்தைப்பற்றிய பலவேறு உயரிய பொன்மொழிகள் காணப்படுகின்றன. நாம் காணும் இந்த உவமையில் ஒரு கிறிஸ்தவரின் செபம் எத்தகைய நம்பிக்கையைப் பின்னணியாகக் கொண்டு இருக்கவேண்டும் என்பதை வலியுறுத்துகின்றார் இயேசு.

நள்ளிரவில் வரும் நண்பர் என்ற உவமை செபத்தில் நிலைத்திருக்க வேண்டியதன் தேவையை வலியுறுத்துகிறது என்றால் இந்த

உவமையோ செபத்தில் குழந்தைக்குரிய நம்பிக்கையுடன் செயல்பட வேண்டும் என்பதை சுட்டிக்காட்டி நிற்கின்றது.

இறைவன் தம் படைப்புகளிடம் ஒரு தந்தைக்குரிய அன்பை, அக்கறையைக் கொண்டுள்ளார் என்பது, பழைய ஏற்பாட்டில் இறைவனாலேயே உறுதிசெய்யப்பட்ட வார்த்தைகள்தாம். "பால்குடிக்கும் தம் மகவைத் தாய் மறப்பாளோ? கருத்தாங்கினவள் தன் பிள்ளை மீது இரக்கம் காட்டாதிருப்பாளோ? இவர்கள் மறந்திடினும், நான் உன்னை மறக்கவே மாட்டேன்" (எசா.49:15) என்கிறார் இறைவன்.

இன்று நாம் நோக்கும் உவமை மத்தேயு நற்செய்தியில் மலைப்பொழிவின் இறுதிப்பகுதியில் கூறப்பட்டதாகவும், லூக்கா நற்செய்தியிலோ செபத்தின் தேவைப்பற்றி வலியுறுத்தும் ஒரு பெரும் உரையின் ஒரு பகுதியாகவும் வருவதைக் காண்கின்றோம்.

## இயேசு வெளிப்படுத்தும் தர்க்கவாதம்

மிகவும் எளிய, புரிந்துகொள்ளக்கூடிய ஒரு தர்க்கவாதத்தையே இயேசு இங்கு கொணர்கிறார். 'நல்லதெது, தீயதெது' என முற்றிலுமாக பகுத்து உணரமுடியாத, அதேவேளை அறியாமையில் உழல்கின்ற இவ்வுலகின் பெற்றோர்களால் தங்கள் குழந்தைகளுக்கு எது நல்லது என்பதைத் தீர்மானிக்க முடியுமென்றால், எல்லாம் அறிந்த, காலத்தையும் கடந்து நிற்கின்ற வானுலகத் தந்தை எவ்வளவு தூரம் செய்வார் என்ற தர்க்கவாதத்தை முன்வைக்கிறார் இயேசு.

நள்ளிரவில் வரும் நண்பர் என்ற உவமையில் நண்பர் ஒருவர் இன்னொரு நண்பருக்கு உதவுவதையும், இவ்வுவமையில் தந்தை மகனுக்கு இடையேயுள்ள அன்பையும் எடுத்துக்காட்டி இதைவிட மேலான அன்பும் உறவும் தந்தையாம் இறைவனுக்கும் அவர் பிள்ளைகளுக்கும் உரியது என்கிறார் இயேசு.

## எத்தகைய இறைவனிடம் நாம் செபிக்கிறோம்?

நாம் செபிப்பதற்கு முன்னால் எத்தகைய ஓர் இறைவனிடம் நாம் செபிக்கிறோம் என்பதைத் தெளிவாக உணர்ந்துகொண்டிருத்தல் அவசியம். எந்த ஒரு கொடையையும் மீண்டும் மீண்டும் நச்சரித்தால் மட்டுமே தரக்கூடிய ஓர் இறைவனிடம் நாம் செபிக்கிறோமா? அல்லது நாம் கேட்பதைவிட அதிகம் தரத் தயாராக இருக்கும் இரக்க இதயமுடைய இறைவனிடம் செபிக்கிறோமா? இதில் எத்தகைய எண்ணப் பின்னணியோடு நாம் செபிக்கிறோமோ அதற்கேற்றாற்போல்

நம் செபமும் இருக்கும்.

நம் முதலாளியிடம் நாம் ஒரு சலுகையை - கொடையைக் கேட்கும் முறையும், அதையே நம் தந்தையிடம் கேட்கும் முறையும் முற்றிலும் வேறுபட்டதாகத்தான் இருக்கும். இரண்டிலும் அன்பு மற்றும் உரிமையின் அளவு வேறுபட்டிருக்கும்.

## பிள்ளைக்குத் தந்தை தீமை செய்வாரா?

இஸ்ரேல் பகுதியில் அப்பமும் மீனும் அடிப்படையான உணவு. அப்பத்திற்கான தானியத்தை விளைய வைக்கும் மண்ணில்தான் கற்களும் காணக்கிடக்கின்றன. உணவாகும் மீன் வாழும் நீரில்தான் பாம்புகளும் உள்ளன. அதுவும் மீன்களைப் போலவும் உள்ளன. பசியாயிருக்கும் தன் மகன் பசிபோக்க அப்பம் கேட்கும்போது அவனுக்கு கல்லை உண்ணக் கொடுத்துக் கேலி செய்வாரா ஒரு தந்தை? கல் உண்ண முடியாதது மட்டுமல்ல, உண்ண முயற்சித்தால் பற்களையே உடைத்துவிடும். “பிள்ளை மீனைக் கேட்டால் உங்களுள் எந்தத் தந்தையாவது மீனுக்குப் பதிலாகப் பாம்பைக் கொடுப்பாரா? முட்டையைக் கேட்டால் அவர் தேளைக் கொடுப்பாரா?” (லூக்.11:11,12) எனக் கேட்கிறார் இயேசு. கொடுக்கமாட்டார் என்பதுதான் இங்கு பதில்.

தன் பிள்ளையை அன்பு செய்யும் எந்தத் தந்தையும் இத்தகைய கொடிய செயல்களைச் செய்யமாட்டார். அப்படியிருக்க அனைத்து வல்லமையுடைய, அனைத்தும் அறிந்த நம் வானகத்தந்தை நாம் கேட்பதற்கு மாறானதைக் கொடுத்து நம்மைக் கேலி செய்வாரா? நாம் கேட்பதை தராமல் சிறிது காலம் தாழ்த்தலாம். ஆனால் நிச்சயமாக பாலுக்குப் பதிலாக நஞ்சை ஊட்டமாட்டார். அவர் காலம் தாழ்த்துவது கூட நம் நன்மைக்குத்தானேயொழிய அவர் அதில் காணும் இன்பத்திற்காக அல்ல.

## விளைவுகள் நமக்கு விளங்குவதில்லை

நாம் பல வேளைகளில் கேட்கும் கொடைகளின் விளைவுகளைக் குறித்து அறியாதிருக்கிறோம். ஆண்டவரிடம் தான் சாகக்கூடாது என்ற செபத்தை வேண்டுபவரின் செபத்தை இறைவன் நிறைவேற்றினால் வயதாகி, கிழமாகி தனக்கு மட்டுமல்ல இச்சமுதாயத்திற்கே ஒரு சுமையாக மாறிவிடுவார். அவர் கேட்ட கொடையே அவருடைய துன்பத்திற்கு காரணமாய் மாறிவிடும்.

என்றும் இளமையாகவே இருக்க வேண்டும், மரணம் இடம்பெறக்கூடாது என ஒரு மனிதர் விரும்பினால் தன் மக்களின், மற்றும் மக்களின் மக்களுடைய தன் வழியான தலைமுறைகளின் சாவுகளைப் பார்த்தே இவர் கண்ணீர் வடிக்க வேண்டியிருக்கும். ஆகவே இதில் எது எது மனிதருக்கு நல்லது என்ற தீர்மானத்தை இறைவன் கையிலேயே விட்டுவிடுவோம். அவருடைய பதிலுரை ஞானமும் அன்பும் நிறைந்தது.

## அன்பிருந்தால் அனைத்தும் இருக்கும்



அன்பு என்பது அனைத்தையும் எளிதாகவும் மேன்மை நிரம்பியதாகவும் மாற்றுகிறது. தன் குழந்தைக்காக தாய் எத்தனையோ தியாகங்களைச் செய்கிறாள். அதில் அவள் சோர்வடைவதில்லை. ஒரு இராணுவ வீரர் தன் நாட்டிற்காக உயிர் கொடுத்துப் போராடுகிறார். அதற்கு அவர் பிரதிபலன் எதிர்பார்ப்பதில்லை. புதிய அறிவியல் கண்டுபிடிப்புக்களில் ஈடுபட்டிருப்பவர்கள் தங்களின் கண்டுபிடிப்பிற்காக எத்தனையோ இரவுபகல் கண்விழித்துப் பணியாற்றுகின்றனர். எத்தனையோ புனிதர்கள், வேதசாட்சிகள் தங்களின் இறைநம்பிக்கைக்காக மனமுவந்து தங்கள் உயிரையே கையளித்திருக்கின்றனர். இந்த மனநிலைதான் செபத்தில் வேண்டும்.

உண்மை அன்போடு நாம் இறைவனிடம் உரையாடிக் கொண்டிருக்கும்போது அங்கு நேரம் போவதே தெரிவதில்லை. அங்கு சோர்வு என்பதோ, மனத்தளர்ச்சி என்பதோ இல்லை. தன்னையே மறந்த மகிழ்ச்சி நிலை அது. நாட்கள் மணித்துளிகள்போல் கடந்து செல்கின்றன. ஆனால் செபமோ தொடர்கிறது. உண்மை, அழகு, நீதி மற்றும் முடிவற்ற வாழ்வின் வலிமை பற்றி விளக்கிய புனித அகுஸ்தீனார், “அன்பு காட்டும் ஒரு மனிதரை என்னிடம் கொண்டுவாருங்கள், அவர் இவைகளையெல்லாம் புரிந்துகொள்வார்” என்று கூறுகின்றார். ஏனெனில் அன்பிருந்தால் அனைத்துமிருக்கும். “இயேசுவை அன்பு செய்; பிறகு எது வேண்டுமானாலும் செய்” எனக் கூறுகிறார் புனித அகுஸ்தீனார்.

## முரண்பாடான உலக யதார்த்தம்

கடவுள் நம்மை அன்பு செய்கிறார் என்பது உண்மை. ஆனால் நாம் இவ்வுலகில் காண்பவைகள் அதை உறுதிசெய்பவைகளாக உள்ளனவா? இவ்வுண்மையை நாம் உணர்ந்துகொள்ளக்கூடியதாக இன்றைய உலகின் அன்றாட நிகழ்வுகள் உள்ளனவா? வாழ்வின் நன்மைத்தனங்களில் ஒரு சிறு துளியைக்கூட இவ்வுலகில் காண முடியவில்லையே எனக் கேட்கிறான் மனிதன்.

## நம்மை பட்டைதீட்டி வைரமாக்கும் இறைவன்

இறைவனின் வழிகளை முற்றிலுமாக அறிந்தவர் எவரும் இல்லை. ஒவ்வொரு வேளையிலும் அவர் நம்மைப் புடமிட்டுப் பார்க்கிறார். ஒவ்வொரு சோதனையிலும் நம்மை பட்டைதீட்டி வைரமாக்குகிறார்.


நான் உணவு கேட்பதற்கு முன்னரே என் பசியை அடக்கும் இறைவன், இப்போது கல்லைத் தருவதுபோல் தோன்றுகிறார் என்றால், நிச்சயம் அந்த செயலுக்குப் பின்னால் ஒரு கருத்தைத் தருகின்றார். ஏனெனில் அவர் கல்லான இதயம் உள்ளவர் அல்ல. கல்லுக்கும் உணவுக்கும் வேறுபாடு தெரியாதவரும் அல்ல.

## நல்லதையே விரும்பும் தந்தை அவர்

தன்னைவிட்டு ஓடிச்செல்பவரைத் தேடிச் செல்கிறார் நம் இறைவன். அத்தகைய தந்தையாம் இறைவனிடம் பிள்ளைக்குரிய பாசத்துடன் நம் தேவைகளை எடுத்துச் சொல்வோம். பின் “உம் விருப்பம் நிறைவேறுவதாக” என்று முடித்துக்கொள்வோம்.

தான் பெற்ற குழந்தையை எந்தத் தாயும் மறந்துவிடுவதில்லை. எந்தப் பெரிய கூட்டத்திலும் தன் குழந்தையை அடையாளம் கண்டுகொள்வாள் தாய். தான் பாலூட்டிய தன் குழந்தையைத் தாய் மறப்பதென்பது எண்ணிப்பார்க்க முடியாத ஒன்று. அப்படி ஒரு தாயே தன் குழந்தையை மறந்தாலும் நான் உன்னை மறக்கமாட்டேன் என உறுதி தருகிறார் நம் இறைவன்.






# மனம் தளராத செபம்

## நேர்மையற்ற நடுவர் உவமை (லூக். 18:1 –8)



“அவர்கள் மனந்தளராமல் எப்பொழுதும் இறைவனிடம் மன்றாட வேண்டும் என்பதற்கு இயேசு ஒரு உவமை சொன்னார். “ஒரு நகரில் நடுவர் ஒருவர் இருந்தார். அவர் கடவுளுக்கு அஞ்சி நடப்பதில்லை, மக்களையும் மதிப்பதில்லை. அந்நகரில் கைம்பெண் ஒருவரும் இருந்தார். அவர் நடுவரிடம் போய், ‘என் எதிரியைத் தண்டித்து எனக்கு நீதி வழங்கும்’ என்று கேட்டுக் கொண்டேயிருந்தார்.

நடுவரோ, நெடுங்காலமாய் எதுவும் செய்ய விரும்பவில்லை. பின்பு அவர், ‘நான் கடவுளுக்கு அஞ்சுவதில்லை, மக்களையும் மதிப்பதில்லை. என்றாலும் இக்கைம்பெண் எனக்குத் தொல்லை கொடுத்துக்கொண்டிருப்பதால் நான் இவருக்கு நீதி வழங்குவேன். இல்லையானால் இவர் என் உயிரை வாங்கிக்கொண்டேயிருப்பார்’ என்று தமக்குள்ளே சொல்லிக்கொண்டார்”

பின் ஆண்டவர் அவர்களிடம், “நேர்மையற்ற நடுவரே இப்படிச் சொன்னாரென்றால், தாம் தேர்ந்துகொண்டவர்கள் அல்லும் பகலும் தம்மை நோக்கிக் கூக்குரலிடும்போது கடவுள் அவர்களுக்கு நீதி வழங்காமல் இருப்பாரா? அவர்களுக்குத் துணைசெய்யக் காலம் தாழ்த்துவாரா? விரைவில் அவர்களுக்கு நீதி வழங்குவார் என நான் உங்களுக்குச் சொல்கிறேன். ஆயினும் மானிடமகன் வரும்போது மண்ணுலகில் நம்பிக்கையைக் காண்பாரோ?” என்றார்.”

## மனந்தளராமல் செபிக்க வேண்டும்

செபத்தில் எப்பொழுதும் நிலைத்திருக்க வேண்டும், மனந்தளரக்கூடாது என்பது இவ்வுவமை தரும் முதல் பாடமாகும். தன் சீடருக்கும், அவர்கள் வழிவந்த திருச்சபைக்கும், தான் தேர்ந்தெடுத்த மக்களுக்கும் இவ்வுவமையை வழங்கும் இயேசு, கடவுளுக்கு இந்த பொல்லாத நடுவரை ஒப்புமைப்படுத்தவில்லை. ஒரு வகையில் பார்த்தால், இருவருக்கும் உள்ள முரண்பாட்டையே காட்டுகிறார். நீதிக்கும் கடவுளுக்கும் அஞ்சாத இவரே இறங்கி வருகிறார் என்றால், நீதியுள்ளவராய் இருக்கும் கடவுள் எவ்வளவு செய்யமாட்டார் என்பதே அவரின் ஒப்பீடாகும்.

## விவிலியம் காட்டும் நேர்மையற்ற நடுவர்கள்

நேர்மையற்றுச் செயல்படும் ஒரு நடுவரையும் தனக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டியதற்காக போராடிக்கொண்டிருக்கும் ஒரு விதவையையும் இந்த உவமையில் காண்கிறோம். நீதிபதிகள் நீதியற்ற முறையில் செயல்பட்டார்கள் என்பதைப் பழைய ஏற்பாட்டிலேயும் காண்கிறோம். “அவர்கள் கையூட்டு வாங்கிக்கொண்டு, குற்றவாளியை நேர்மையாளர் எனத் தீர்ப்பிடுகின்றார்கள். குற்றமற்றவருக்கு நீதி கிடைப்பதைத் தடை செய்கின்றார்கள் (எசா.5:23) எனவும், கையூட்டு வாங்குவதற்கு ஒவ்வொருவனும் ஏங்குகிறான்; திக்கற்றோருக்கு அவர்கள் நீதி வழங்குவதில்லை; கைம்பெண்ணின் வழக்குகளைத் தீர்ப்பதில் கவனம் செலுத்துவதில்லை” (எசா.1:23) எனவும் காண்கிறோம்.

விதவைகளும் அநாதைகளும் அநீதிகளால் மிகுந்த அளவு பாதிப்புக்குள்ளாவதையும் அவர்களுக்கு கருணை காட்ட இறைவன் வலியுறுத்துவதையும் விவிலியத்தில் பல பகுதிகளில் வாசிக்கிறோம். இத்தகைய ஒரு பின்னணியில் இந்த உவமையை புரிந்துகொள்வது எளிதாகுகின்றது.

இங்கு உதாரணமாகப் தரப்பட்டிருக்கும் நடுவர், யூத நீதிபதி அல்ல. யூத சட்டப்படி ஒரே மனிதர் நீதிமன்றமாக முடியாது. எப்போதும் மூன்று நீதிபதிகள் இருந்தாக வேண்டும். மேலும் யூத வழக்குகள் எல்லாமே மூப்பர்களின் முன்னிலையில்தான் கொண்டுசெல்லப்பட்டனவே தவிர பொது வழக்காடு மன்றங்களுக்கு அல்ல. இந்த நீதிபதி ஏரோதினாலோ உரோமையர்களாலோ நியமிக்கப்பட்டிருக்க வேண்டும்.

இத்தகையவர்கள் இலஞ்சம் வாங்குவதில் கைதேர்ந்தவர்களாக இருந்தனர்.

இவ்வுவமையில் விதவைப் பெண், ஏழைகள் மற்றும் துணையற்றோரின் அடையாளமாய் நிற்கிறார். அவரிடம் எதுவுமே இல்லை. ஆனால் தனக்குரிய நீதி வழங்கப்படவேண்டும் என்பதில் உறுதியாக நிற்கிறார்.

## காலம் தாழ்த்துவதாகத் தோன்றலாம்

அநீதியான சித்திரவதைகளும் துன்பங்களும் தொடரும்போது இறைவனின் நீதி காலந்தாழ்த்துவதாகத் தோன்றலாம். ஆனால் அவர் உறுதியாய் வருவார். அவர் காலந்தாழ்த்துவது நம் நன்மைக்கே. நம்பிக்கையின்மைகளின் ஊடே நம் நம்பிக்கை போராடுகிறது. எல்லாக் கதவுகளும் இறுகப் பூட்டப்பட்டுள்ளன என்பது தெரிந்திருந்தும், நம்பிக்கை வெளிச்சம் எங்கிருந்தோ வருகிறது. இருண்ட வேளையிலும் ஒளியாய் நிற்கின்றோம். எல்லாம் தொலைந்துபோன நிலையிலும் நம் கைகள் நிறைந்தே காணப்படுகின்றது.

பலமுறை நாம் தொடர்ந்து கேட்டாலும் இறைவன் இல்லை என்றே பதில் வழங்கியிருக்கிறார். காரணம் என்னவெனில், நமக்கு நல்லதெனத் தோன்றுவதை தமக்கு நல்லதெனத் தெரியும் காலத்தில்தான் இறைவன் தருகிறார். நம்முடைய வாழ்வின் சிறப்பான நோக்கமே முடிவற்ற வாழ்வும் நிலையான மீட்பும். அதற்கு இடையூறாக இருக்கும் எதையும் அவர் அனுமதிப்பதில்லை.

## விளைவுகள் நமக்கு விளங்காது

இன்றைய தேவைகளில் நாளைய விளைவுகள் நமக்குத் தெரிவதில்லை. ஆனால் காலம் முழுவதையும் ஒரே நேரத்தில் பார்க்கிறார் இறைவன். இறைவன் நீதி வழங்குவதில் காலந்தாழ்த்துவதால் மனிதரின் இறைநம்பிக்கை மறைந்துபோகக்கூடும் என்பதும் அவருக்கு தெரிந்ததுதான்.

செபத்தில் நிலையாய் இருக்க வேண்டுமென்ற உவமையும், நள்ளிரவில் வரும் நண்பர் என்ற உவமையும் சில சந்தேகங்களையும் நமக்குள் எழுப்புகின்றன. என் தந்தைக்கு என் தேவை தெரிந்திருக்க, அதையும் நான் எடுத்துரைத்திருக்க, திரும்பவும் திரும்பவும் சென்று தொந்தரவு செய்து நச்சரிக்க வேண்டியது அவசியமா என்ற கேள்வி எழுகிறது.

“அப்பா எனக்கொரு எழுதுகோல் வேண்டும்” என மகன் கேட்கிறான். தந்தை வாங்கிக் கொடுக்கவில்லை. மறுநாளும் கேட்கிறான். கிடைக்கவில்லை. இப்படியே தொடர்கின்றன. கடைசியில் அவன் தொந்தரவு பொறுக்கமுடியாமல், “போய்த்தொலைகிறான்” என தந்தை வாங்கிக் கொடுத்தால் அங்கு உண்மை அன்பிற்கு இடமில்லை என்று நாம் வாதம் செய்யலாம்.

இந்த விவாதம் நாம் ஒரு பக்கம் மட்டுமே நின்று சிந்திப்பதால் எழுகிறது. தந்தைமீது மகனுக்கு உண்மை அன்பிருந்தால், நம் தந்தை ஏன் அதை வாங்கித் தரவில்லை என்பதற்கான காரணத்தைப் புரிந்திருப்பான். வழக்கமாக மகனின் தேவையைப் பூர்த்திசெய்யும் தந்தை, இப்போது காலம் தாழ்த்துகிறார் என்றால் ஒன்றில் அவரிடம் காசில்லை அல்லது இப்போது அது நமக்குத் தேவையில்லை என அவர் உணர்கிறார் எனக் கொள்ளலாம்.

## அன்பு குற்றம் சாட்டாது

நமக்கு உண்மையிலேயே அன்பிருக்கும்போது அங்கு குற்றச்சாட்டிற்கு இடம் இருக்காது. ஏனெனில் குறைகாண மனமிருக்காது. இறைவன்மீது உண்மையான பற்றுக்கொண்டிருக்கும் பக்தர் இறைவனின் காலந்தாழ்த்தலையும் தன் நன்மைக்கே எனப் புரிந்துகொள்கிறார். ஏனெனில் காரணமில்லாமல் என் தந்தை காலந்தாழ்த்த மாட்டார் என அவரின் அசையாத நம்பிக்கையுடன்கூடிய அன்பு பதில் சொல்கிறது.

தன் ஒரே அன்பு மகன் இயேசு தன்னைப் பார்த்து, ‘என் தந்தையே கூடுமானால் இத்துன்பக்கலம் என்னைவிட்டு அகலட்டும்’ என்று மன்றாடியபோது இறைவன் செவிசாய்த்தாரா? இல்லையே. தன் மக்களுக்கு எது நல்லது எனக் கண்டாரோ அதைத்தான் அன்று அவர் நிறைவேற்றினார். எதிலும் நல்லதைத்தான் நிறைவேற்றுகிறார் இறைவன். அதனால்தான் இறைவனின் செயல்கள் சிலவேளை கசப்பு மாத்திரைகளாகத் தெரிகின்றன.

## நமது ஈடுபாட்டை எதிர்பார்க்கும் இறைவன்

நாம் ஏன் கேட்கவேண்டும்? இறைவனுக்கு என் தேவைகள் தெரியாதா? அழுதாலும் அழாவிட்டாலும் குழந்தைக்கு பால் ஊட்டுகிறாளே தாய் என்றும் எண்ணத் தோன்றுகிறது. இறைவனுக்குத் தெரியும். ஆனால் நம் தேவைகள் குறித்து நமக்கு ஈடுபாடு இருக்க

வேண்டும் என்பதே இங்கு எதிர்பார்ப்பு. கேட்காமலேயே பெற்றுக்கொண்டிருந்தால், பெறும்பொருட்களின் பெருமையை, மதிப்பை நாம் உணர்வதில்லை. நாம் வெறும் பிணமாக வாழ அதுவே வழிவகுத்துவிடும். நமக்குள்ளவைகள் அனைத்தும் நமக்காகவே நிறைவேற்றப்பட்டு நான் என்ற தனித்தன்மையை ஒவ்வொருவரும் இழந்திருப்போம். கேட்பது கிடைக்கவில்லை என்பதற்காகவோ, கேட்டது கிடைத்துவிட்டது என்பதற்காகவோ நாம் இறைவனிடம் கேட்டதை நிறுத்திவிட முடியுமா? அப்படியொரு வரையறைக்கோ, முடிவுக்கோ நாம் வருவோமேயானால் கடவுள் கற்பித்த செபத்தின் சில பகுதிகளை நாம் இன்று அகற்ற வேண்டியிருக்கும். அதாவது, 'இன்று தேவையான உணவை எங்களுக்குத் தாரும்' (மத்.6:11) என்ற செபத்தின் பகுதியைத்தான், தினம் தினம் இச்செபத்தை செபித்துக்கொண்டிருந்தாலும், உணவின்றியே மக்கள் செத்துக்கொண்டிருப்பதால் ஏழை மக்கள் இவ்வரிகளை விலக்கி வைப்பது இவ்வுலக முறைப்படி நியாயமாகத் தெரியலாம். தேவைக்கதிகமாகவே உணவைச் சேமித்து வைத்திருக்கும் பணக்காரனுக்கு இவ்வரிகள் தேவையற்றவைகளாக இருக்கலாம். இருப்பினும் இரு தரப்பினரும் இச்செபத்தை தொடர்ந்து சொல்லிக்கொண்டுதான் இருக்கின்றோம்.

## உமது விருப்பம் நிறைவேறுக

இறைவனின் திட்டங்கள் புதிரானவை. செபத்தின் தொடக்கத்திலேயே ஓர் உறுதிமொழியை வழங்கி விடுகிறோம். நம் முழுச் சுதந்திரத்தையும் அவர் கையில் ஒப்படைத்து விடுகின்றோம். "உமது திருவுளம் விண்ணுலகில் நிறைவேறுவதுபோல மண்ணுலகிலும் நிறைவேறுக" (மத்.6:10) என்ற வார்த்தைகள் மூலம், இந்தச் செபம் மட்டுமல்ல, நம் ஒவ்வொரு செபமும் விண்ணப்பமும் வேண்டுதலும் அப்படியே முடியட்டும். "இறைவா உன் விருப்பம் மட்டுமே நிறைவேறுவதாக"

நாம் மீண்டும், மீண்டும் நம்மையே தாழ்மைப்படுத்தி இறைவனிடம் இறைஞ்சும்போது இறைவனின் விருப்பத்தை மனமுவந்து ஏற்றுக்கொள்ளும் தயார் மனநிலை நம்மில் இயல்பாகவே இடம்பெறுகிறது. ஏனெனில் நம் தேவைகள் என்னவென நம்மைவிட அவருக்கே சிறப்பாய்த் தெரியும். பிரபு டென்னிசன், "இவ்வுலகம் கனவிலும் எண்ணிப்பார்க்க முடியாத உயரியவை செபத்தால் நிகழ்ந்துள்ளன" என்று கூறுவார்.



# 8.4

# தாழ்ச்சி நிறைந்த செபம்

## பரிசேயரும் - வரிதண்டுபவரும் (லூக்.18:9-14)



*தாங்கள் நேர்மையானவர் என்று நம்பி மற்றவர்களை இகழ்ந்து ஒதுக்கும் சிலரைப் பார்த்து இயேசு இந்த உவமையைச் சொன்னார்.*

*"இருவர் இறைவனிடம் வேண்டக் கோவிலுக்குச் சென்றனர். ஒருவர் பரிசேயர் மற்றவர் வரிதண்டுபவர். பரிசேயர் நின்றுகொண்டு, இவ்வாறு இறைவனிடம் வேண்டினார். 'கடவுளே நான் கொள்ளையர், நேர்மையற்றோர், விபசாரர் போன்ற மற்ற மக்களைப் போலவோ இந்த வரிதடுபவரைப் போலவோ இல்லாததுபற்றி உமக்கு நன்றி செலுத்துகிறேன். வாரத்தில் இருமுறை நோன்பிருக்கிறேன். என் வருவாயில் எல்லாம் பத்திலொரு பங்கைக் கொடுக்கிறேன்"*

*ஆனால் வரிதண்டுபவர் தொலையில் நின்றுகொண்டு வானத்தை அண்ணார்ந்து பார்க்கக்கூடத் துணியாமல் தன் மார்பில் அடித்துக்கொண்டு, 'கடவுளே, பாவியாகிய என்மீது இரங்கியருளும்' என்றார். இயேசு, "பரிசேயரல்ல, வரிதண்டுபவரே கடவுளுக்கு ஏற்புடையவராகி வீடு திரும்பினார். ஏனெனில் தம்மைத் தாமே உயர்த்துவோர் தாழ்த்தப்பெறுவர். தம்மைத் தாமே தாழ்த்துவோர் உயர்த்தப் பெறுவர் என நான் உங்களுக்குச் சொல்கிறேன் என்றார்" (லூக்.18:9-14).*

## இருவேறு துருவங்களின் இயல்புநிலை

“செருக்குற்றோரை அவர் இகழ்ச்சியுடன் நோக்குவார் தாழ்நிலையில் உள்ளவர்களுக்கோ கருணை காட்டுவார்” என்கிறது நீதிமொழி நூல் (3:34)

இயேசுக் கிறிஸ்து இங்கு, “தம்மைத்தாமே உயர்த்துவோர் தாழ்த்தப்பெறுவர், தம்மைத்தாமே தாழ்த்துவோர் உயர்த்தப்பெறுவர்” என்ற இறுதி வார்த்தைகளின் மூலம் தான் சொல்ல வந்த கருத்தை, அதாவது உவமையின் நோக்கத்தைத் தெளிவுபடுத்தி விடுகிறார். தாங்களே மற்றவர் எவரையும்விட உயர்ந்தவர்கள், பண்பாளர்கள் என்று எண்ணிக்கொண்டிருப்பவர்களைப் பற்றிய உவமையே இதுவாகும்.

தான்தான் உயர்ந்தவன் என எண்ணுகிறவன் இறைவனிலிருந்து விலகிப் போகிறான். மிகவும் உயர்வானவர்களாக, பக்திமான்களாகக் கருதப்பட்டவர்களில் இருந்தும், தங்களின் செயல்களுக்காக மற்றவர்களிடமிருந்து ஒதுக்கிவைக்கப்பட்டவர்களிடமிருந்தும் உதாரணங்களை எடுக்கும் இயேசு, தற்பெருமையையும், உண்மைத் தாழ்ச்சியையும் தனித்தனியே வைத்துக்காட்டி ஒப்புமைப்படுத்துகிறார். இருவேறு துருவங்களின் இயல்பு நிலைகளை இயம்பி நிற்கின்றார். இந்த உவமையில் காட்டப்படும் பரிசேயரும், வரிதண்டுபவரும் அந்தக் காலத்துக்கு மட்டுமே உரியவர்கள் அல்ல. ஒவ்வொரு காலத்திலும் இருக்கிறார்கள். சில சமயம் நம் முகம் பார்க்கும் கண்ணாடியில்கூட தோன்றுவதுண்டு.

## பரிசேயர்களின் வாழ்வு முறை

இஸ்ரயேலிலேயே இறைவனின் சட்டத்தை அணு அளவும் பிசகாமல் கடைப்பிடித்தவர்கள் பரிசேயர்கள். அவர்கள் உயரிய பக்திமான்களாகக் கருதப்பட்டனர். பத்துக் கட்டளைகள், மோசேயின் சட்டங்கள், விதிகள் ஆகியவற்றைச் சிறப்பாக அனுசரித்தது மட்டுமல்ல, அவ்வாறு கடைபிடிக்காதவர்களை விலக்கியும் வைத்தனர். இவர்கள் தங்களைப் பற்றிக்கொண்டிருந்த தற்பெருமையே, மற்றவர்களை தீர்ப்பிடவும், விலக்கி வைக்கவும் அனுமதித்தது.

வருடத்திற்கு ஒருமுறை நோன்பையே சட்டம் கட்டாயப்படுத்துகிற போதிலும், இவர்கள் வாரத்திற்கு இருமுறை, திங்களும் வியாழனும், அதாவது சந்தை கூடும் அவ்விரு நாட்களிலும் நோன்பிருந்து மக்களுக்கு தாங்கள் நோன்பிருப்பதாகக் காட்டிக்கொண்டனர். கீழை

நாடுகளின் வெப்பம் குறித்து நமக்குத் தெரியும். அத்தகைய வெப்பம் இருந்தும்கூட, நோன்பு நாட்களில் இவர்கள் தண்ணீர்கூடக் குடிப்பதில்லை. நிலங்களின் பலனிலும், மரங்களின் பழங்களிலும் பத்தில் ஒரு பகுதியையும், ஆடு மாடுகளின் தலையீற்றையும் காணிக்கையாகத் தரும்படி சட்டம் வலியுறுத்துகின்றபோதிலும் (விப22:29; லேவி27:30; இச12:6,17; 14:22) பரிசேயர்களோ தங்கள் வருவாயில் எல்லாம் பத்தில் ஒரு பங்கை காணிக்கையாகக் கொடுத்தனர்.

தன் உடல் உழைப்பிற்கு கிடைத்த ஊதியமாக இருந்தால்கூட, அதிலும் ஒரு பகுதியை காணிக்கையாக்கினர். அதாவது இறைவன் கேட்டதற்கும் அதிகமாக இவர்கள் கொடுத்தனர். தன் உடலை நோன்புகளால் வருத்துவதாயினும் சரி, கோவிலுக்கான காணிக்கையாயினும் சரி எதிர்பார்ப்புகளுக்கு மேலாகவே இவர்கள் செயற்பாடு இருந்தது என்பதை மறுக்க முடியாது.

## வரிதண்டுவோரின் வாழ்க்கை முறை

ஆனால், வரிதண்டுபவர்களோ உரோமை ஆட்சியாளர்களின் கைக்கூலிகளாகக் கருதப்பட்டனர். யூத இனத்தைச் சார்ந்தவர்களாக இருப்பினும், இவர்கள் தங்களை ஆட்சிசெய்து வந்த உரோமையர்களுக்கு, தங்கள் மக்களிடமிருந்தே வரி வசூலித்துக் கொடுப்பவர்களாக செயல்பட்டதால், வரிதண்டுபவர்கள் உரோமைய ஆட்சியாளர்கள் விதித்த வரியைவிடவும் அதிகமாகப் பெற்று, அந்த அதிகத் தொகையை தங்களுக்கென வைத்துக்கொண்டனர். இதனால் மக்களின் வெறுப்பையும் சம்பாதித்தனர்.

சக்கேயு என்ற தலைமை வரிதண்டுபவருக்கும் இயேசுவுக்கும் இடையே இடம்பெற்ற சந்திப்பின்போது சக்கேயு கூறியது, "ஆண்டவரே! இதோ! என் உடைமையில் பாதியை ஏழைகளுக்குக் கொடுத்துவிடுகிறேன். எவர்மீதாவது பொய்க்குற்றம் சுமத்தி எதையாவது கவர்ந்திருந்தால் நான் அதை நான்கு மடங்காகத் திருப்பிக் கொடுத்துவிடுகிறேன்" (லூக்.19:8) என்ற வார்த்தைகளே வரி வசூலிப்பவர்களான வரி தண்டுபவர்கள் ஏமாற்றக்கூடியவர்கள் என்ற எண்ணம் இருந்ததை பிரதிபலிக்கிறது. நற்செய்தியை எழுதிய திருத்தூதரான புனித மத்தேயுவும் ஒரு வரிதண்டுபவரே; சுங்கத் துறையில் வரி வசூலித்துக்கொண்டிருந்தபோதே இயேசுவால் அழைக்கப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## தன்னைப் பற்றி தம்பட்டம் அடிக்கும் பரிசேயர்

கோவிலுக்குச் செபிக்க வந்துள்ள இந்த இருவரையும் சிறிது உற்று நோக்குவோம். "இந்த வரி தண்டுபவருக்கு இங்கு என்ன வேலை?" என்பதுபோல் பார்க்கிறார் பரிசேயர். இறைவனிடம் செபிக்கச் சென்ற பரிசேயர் தான் எவ்வளவு நல்லவர் என்பதைச் சொல்லி நிற்கிறார். தான் உயர் நிலையில் இருப்பதாக அல்ல, மாறாக மற்றவர்கள்போல் கீழ்நிலையில் இல்லாமல் இருப்பதற்காக இறைவனுக்கு நன்றி கூறுகிறார். பின்னர், தான் செய்யும் நல்லவைகளைக்கூறி நிபந்தனையோடு முடிக்கிறார். அதாவது *ஆகவே......* என இடைவெளி விட்டு இறைவனிடம் பேரம் பேசுவதுபோல் நமக்குத் தோன்றுகிறார்.

தன்னைப் பற்றியவைகளை அவர் இருவிதமாகப் பார்க்கிறார். ஒன்று, தீமைகளில் இருந்து விடுதலை, ஏனையது நன்மைகளை மட்டுமே ஆற்றும் நிலை. உண்மைச் செபம் கடவுளுக்கு மட்டுமே காணிக்கையாக்கப்படுவது என்பதை மறந்து தனக்குத்தானே செபித்து, தன்னைப்பற்றிய சாட்சியத்தை வழங்குகிறார். அந்தச் செபத்தின் சுமையே அவராக மாறுகின்றார். ஏனெனில் முழுச் செபமும் அவரைப் பற்றியதாக இருக்கின்றது.

தான் நற்செயல்கள் செய்ததே - செய்வதே, இறைவனின் சலுகைக்கான உரிமை என்ற முறையில் பரிசேயரின் செபம் உள்ளது. இங்கு அவரின் செபம் இறைவனின் சிறப்பு அருளையோ, மன்னிப்பையோ வேண்டுவதாக இல்லை. ஏனெனில் நல்ல நிலையில் இருந்து நல்லவைகளை மட்டுமே ஆற்றுபவருக்கு அவை கேட்டு வாங்கவேண்டிய தேவையில்லாதவை என உணருகிறார். நான் நல்லவைகளையே ஆற்றுவதால் இறைவனும் எனக்கு நல்லவைகளைத்தான் தரவேண்டும் என்ற முன் நிபந்தனையுடன் அவர் வாழ்வதுபோல் தெரிகிறது. ஆகவேதான் எந்த விண்ணப்பமும் இவர் செபத்தில் இல்லை. தான் செய்த நல்லவைகளிலும், அது குறித்த தன் தீர்ப்பிலுமே அவர் முழு நம்பிக்கை கொண்டிருந்ததால், கடவுளின் கண்களின் முன்னால் அவருக்கு தீர்ப்புத் தேவையில்லை என்று அவர் கருதுகிறார். இங்கு மருந்தே நோய்க்கு காரணமாகின்றது.

## தற்பெருமை மிக்க செபம் அருவருப்பானது

தற்பெருமைமிக்க செபம் கடவுள் முன்னிலையில் அருவருப்பானது. நாம் செபிப்பது கிடைக்க நாம் தகுதியுடையவர்கள் என்று நினைத்து செபிக்கக்கூடாது என்பது யூதர்களின் கண்ணோட்டமாகும்.

ஆபிரகாம் கடவுளிடம் சொதோம் நகரை இறைவன் அழித்துவிடாமலிருக்க வேண்டுகையில், "புழுதிக்கும் சாம்பலுக்கும் சமமாய் இருக்கிற அடியேன் ஆண்டவரோடு பேசத்தொடங்கியபடியால், இன்னும் என் ஆண்டவரிடம் ஒன்று கேட்பேன்" என்று தன்னை மிகமிகத் தாழ்த்திக்கொள்கிறார் (தொடக்க நூல் 18:27). தாழ்ந்த இடத்தில் தண்ணீர் நிற்கும் என்பதற்கிணங்க தாழ்ச்சியோடு செபிக்கும் உள்ளத்திலேதான் கடவுளின் அருள் வெள்ளம் பாய்கிறது.

## மன்னிப்பிற்காய் ஏங்கும் வரிதண்டுபவர்

வரிதண்டுபவரோ இங்கு மன்னிப்புக்காய் ஏங்கி நிற்கிறார். வானத்தை அண்ணார்ந்து பார்க்கவும் துணியாதவராய் தன்னிலையுணர்ந்து தலை கவிழ்ந்து, "கடவுளுக்கேற்ற பலி நொறுங்கிய நெஞ்சமே, கடவுளே நொறுங்கிய குற்றமுணர்ந்த உள்ளத்தை நீர் அவமதிப்பதில்லை" என்ற 51ம் திருப்பாடலின் 17ம் வசனத்தை அல்லது வாக்கியத்தைப் பிரதிபலித்து நிற்கிறார்.

இறைவனின் புனிதத்துவத்தின் முன்னால் தன்நிலையைப் பார்க்கிறார் வரிதண்டுபவர். தன் தவறுகளை எண்ணியே, இழப்பையெண்ணியே மார்பில் அடித்துக்கொள்ளும் கீழை நாடுகளின் பழக்கத்தை கடைப்பிடித்து, ஒருசில வார்த்தைகளில் தன் செபத்தை முடித்துக்கொள்கிறார். 25ம் திருப்பாடலில் வரும் தாவீதின் செபமான, "ஆண்டவரே, உமது பெயரின் பொருட்டு என் குற்றத்தை மன்னித்தருளும், ஏனெனில் என் குற்றம் மிகப் பெரியது" (தி.பா.25:11) என்பதைவிடச் சிறியதாக இருக்கிறது வரிதண்டுபவரின் செபம்.

இறைவனின் அருள் மற்றும் இரக்கத்தை மட்டுமே வேண்டி நிற்பது அவரது நோக்கமாக இருப்பதால், அங்கு வார்த்தைகளுக்கு இடமில்லை. இவரின் செபம் கேட்கப்படுகிறது. வெளிப்படையான நோன்புகளும், கோவிலுக்கான காணிக்கைகளும், இதயமற்ற செபமும் பரிசேயருக்கு பெற்றுத்தர முடியாததை, மனத்தாழ்ச்சியுடன்கூடிய செபத்தின் மூலம் பெற்றுச்செல்கிறார் வரிதண்டுபவர்.

இங்கு, இயேசு வேறொரு இடத்தில் பரிசேயர்களுக்கு கூறிய வார்த்தைகள் மீண்டும் ஒருமுறை நமக்கு நினைவுக்கு வருகின்றன. “மனிதர்முன் நீதிமான்களாகக் காட்டிக்கொள்ளுகிறவர்கள் நீங்கள்தாம். கடவுளோ உங்கள் உள்ளங்களை அறிவார். மனிதர்களுக்கு மேன்மையானது கடவுளுக்கு அருவருப்பானது”

## மனத்தாழ்ச்சியே செபத்திற்கு அடிப்படை



ஏனைய சில இடங்களில் இயேசு மக்களின் கருத்தை, மற்றும் தீர்ப்பைக் கேட்பதுபோல் இங்கும், இவர்களுள் இறை-வனுக்கு ஏற்புடையவரானவர் யார் என எண்ணுகிறீர்கள் எனக் கேட்கவில்லை. ஒருவேளை, அவர் அவ்வாறு கேட்டிருந்தால், பதில் இவ்வளவு ஆணித்தரமாக அழுத்தம் திருத்தமாக இருந்திருக்காது. ஏனெனில் பரிசேயர் இங்கு பாவம் எதுவும் செய்ததாகத் தெரியவில்லை. ஆகவே இயேசுவின் பதில்கூட சிலருக்கு அதிர்ச்சியைத் தருவதாக அந்த வேளையில் இருந்திருக்கலாம்.

பரிசேயர் தன் செபத்தில் கூறியதெல்லாம் உண்மையே. ஆனால் தன் வாழ்வை இறைவனின் வாழ்வோடு இணைத்துப் பார்ப்பதிலேயே உண்மை செபம் பிறக்கிறது என்பதை மறந்துவிட்டு, மனிதர்களோடு ஒப்பிட்டு பெருமைப்பட்டுக்கொள்கிறார் பரிசேயர். செபத்திற்கு மனத்தாழ்ச்சி இன்றியமையாதது என்பதை மறந்துவிட்டார்.

தற்பெருமை இருக்கும்போது தன்னையே உயர்த்தலும், மற்றவர்களைக் கண்டனத்துக்குரியவர்களாக நோக்குதலும், தன்னைத்தானே புகழ்தலும் வருகிறது. அங்கு உள்ளத்தில் உண்மையிருக்காது, பிறர் நலம் இருக்காது. இறுதியில் இறைவனை நோக்கிய திறந்த மனமே இருக்காது. அடுத்தவரை

கண்டனத்துக்குரியவராக நோக்குபவரால் செபிக்க முடியாது. ஏனெனில் மற்றவர்களைவிட நாம் உயர்ந்தவர்கள் என்பதை எடுத்துக் காட்டுவதை நோக்கமாகக் கொண்ட எந்தச் செபமும் உண்மைச் செபமாக இருக்க முடியாது. இயேசுவின் வாழ்வோடு நம் வாழ்வை ஒப்பிட்டுச் செபிக்கும்போது, முதலில் வரும் வார்த்தைகளோ, "இயேசுவே! பாவியாகிய என்மீது இரங்கியருளும்" (லூக்.17:13) என்பதாகத்தான் இருக்கும்.

நம்முடைய நற்குணங்களையும், நற்செயல்களையும் பறைசாற்றுவதற்கு பயன்படுவதில்லை செபம். மாறாக, நம் மனதையும் இதயத்தையும் இறைவன்பால் எழுப்பி அவரின் நன்மைத்தனத்தை புகழ்ந்து, அவரின் கொடைகளுக்காக நன்றி கூறி, மக்கள் அனைவருக்குமான கொடைகளுக்காக வேண்டி, அனைவரின் பாவங்களுக்காக மன்னிப்பை நாடுவதே செபம்.

செபம், ஒரு குறிப்பிட்ட இடத்திற்கோ, நேரத்திற்கோ, மனிதருக்கோ மட்டும் சொந்தமானதல்ல. நம்மையே முற்றிலுமாக இறைவனுக்கு வெளிப்படுத்த உதவும் செபம், அனைத்து மதத்தினருக்கும் பொதுவானது. செபத்தை தொடங்குவதற்கு முன்னால், நம்மையே உணர்ந்த மனநிலையும், தாழ்ச்சியுடன் கூடிய மனநிலையும் தேவை.

"மோட்சத்தின் கதவுகள் மிகவும் தாழ்வாகவே கட்டப்பட்டுள்ளன. ஆகவே முழங்காற்படியிடாமல் எவராலும் அதனுள் நுழைய முடியாது" என்பார் ஓர் அறிஞர்.



# 8.5

# பிறரன்போடு கூடிய செபம்

## மன்னிக்க மறுத்த பணியாளர் (மத் 18:23-35)



விண்ணரசைப் பின்வரும் நிகழ்ச்சிக்கு ஒப்பிடலாம். ஓர் அரசர் தம் பணியாளர்களிடம் கணக்குக் கேட்க விரும்பினார். அவர் கணக்குப் பார்க்கத் தொடங்கிய-பொழுது, அவரிடம் பத்தாயிரம் தாலந்து கடன்பட்ட ஒருவனைக் கொண்டு வந்தனர். அவன் பணத்தை திருப்பிக் கொடுக்க இயலாத நிலையில் இருந்தான். தலைவரோ, அவனையும் அவன் மனைவி மக்களோடு அவனுக்குரிய உடமைகள் யாவற்றையும் விற்றுப் பணத்தைத் திருப்பி அடைக்க ஆணையிட்டார்.

உடனே அப்பணியாள் அவர் காலில் விழுந்து பணிந்து, 'என்னைப் பொறுத்தருள்க, எல்லாவற்றையும் உமக்குத் திருப்பி தந்துவிடுகிறேன்' என்றான். அப்பணியாளின் தலைவர் பரிவுகொண்டு அவனை விடுவித்து அவனது கடன் முழுவதையும் தள்ளுபடி செய்தார்.

ஆனால் அப்பணியாள் வெளியே சென்றதும், தன்னிடம் நூறு தெனாரியம் கடன்பட்டிருந்த உடன் பணியாளர் ஒருவரைக் கண்டு, 'நீ பட்ட கடனை திருப்பித் தா' எனக்கூறி அவரைப் பிடித்து கழுத்தை நெரித்தான். உடனே அவனுடைய உடன் பணியாளர் காலில் விழுந்து, 'என்னைப் பொறுத்தருள்க, நான் திருப்பிக் கொடுத்துவிடுகிறேன்'

என்று அவனைக் கெஞ்சிக் கேட்டார். ஆனால் அவன் அதற்கு இசையாது, கடனைத் திருப்பி அடைக்கும்வரை அவரைச் சிறையிலடைத்தான்.

அவருடைய உடன் பணியாளர்கள் நடந்ததைக் கண்டபோது மிகவும் வருந்தித் தலைவரிடம் போய் நடந்தவற்றையெல்லாம் விளக்கிக் கூறினார்கள். அப்போது தலைவர் அவனை வரவழைத்து, "பொல்லாதவனே, நீ என்னை வேண்டிக்கொண்டதால் அந்தக் கடன் முழுவதையும் உனக்குத் தள்ளுபடி செய்தேன். நான் உனக்கு இரக்கம் காட்டியதுபோல நீயும் என் உடன் பணியாளருக்கு இரக்கம் காட்டியிருக்க வேண்டும் அல்லவா?" என்று கேட்டார்.

அத்தலைவர் சினங்கொண்டவராய், அனைத்துக் கடனையும் அவன் அடைக்கும்வரை அவனை வதைப்போரிடம் ஒப்படைத்தார். உங்களுள் ஒவ்வொருவரும் தம் சகோதர சகோதரிகளை மனமார மன்னிக்காவிட்டால் விண்ணுலகில் இருக்கும் என் தந்தையும் உங்களை மன்னிக்கமாட்டார்.

## மன்னிப்பைப் பற்றிய இயேசுவின் போதனைகள்



எதிரிகளையும் அன்பு செய்யவேண்டிய தேவை குறித்து ஏற்கனவே தன் சீடர்களுக்கு கட்டளையிட்டுள்ளார் இயேசு. "உங்கள் பகைவரிடமும் அன்புகூருங்கள். உங்களைத் துன்புறுத்துவோருக்காக இறைவனிடம் வேண்டுங்கள்" (மத்.5:44) என விண்ணப்பித்தவர், புதுக்கட்டளை வழங்கியவர் நம் இறைவன்.

மேலும், செபிக்கும் முறைபற்றி விளக்கி, புதிய செபத்தையும் வழங்கிய இறைவன், இறுதியில், "மனிதர் செய்யும் குற்றங்களை நீங்கள் மன்னிப்பீர்களானால் உங்கள் விண்ணகத் தந்தையும் உங்களை மன்னிப்பார். மற்ற மனிதரை நீங்கள் மன்னிக்காவிடில் உங்கள் தந்தையும் உங்கள் குற்றங்களை

மன்னிக்கமாட்டார்" (மத் 6:14-15) என்றும், "நீங்கள் வேண்டுதல் செய்ய நிற்கும்போது யார் மேலாவது நீங்கள் மனத்தாங்கல் கொண்டிருந்தால், மன்னித்துவிடுங்கள். அப்போது உங்கள் விண்ணகத் தந்தையும் உங்கள் குற்றங்களை மன்னிப்பார்" (மாற்.11:25) எனவும் கூறியவர் நம் இயேசு.

## மன்னிப்பது கோழையின் செயல் அல்ல

மன்னிப்பது மனிதனின் முதிர்ச்சிபெற்ற நிலையின் வெளிக்காட்சி. பழிவாங்குபவன் மிருகம் என்ற முறையில் பலசாலி! மன்னிப்பவன் மனிதன் என்ற முறையில் பலசாலி! மன்னிப்பவன் கையாலாகாதவன் என்று கருதப்படுகின்றான்; காரணம் உண்மையான வளர்ச்சி எது என்று உலகம் இன்னும் புரிந்துகொள்ளவில்லை. பழிவாங்கும் மனிதன் மிகவும் பரிதாபத்திற்குரியவன் அவன் இன்னும் வளரவில்லை. மனித வளர்ச்சி அடையவில்லை. அவன் அவனாகச் செயற்படவில்லை. ஆட்டிப்படைக்கப்படுகிறான். இன்றைய பழிவாங்கும் உலகம் இந்த மன்னிப்பு என்ற தெய்வீகப் பண்பை பிழையாக விளங்கிவைத்திருக்கிறது. அதாவது மன்னிப்பது கோழையின் செயல் என அது அர்த்தப்படுத்துகின்றது. "மனத்தில் பகையை அடக்கி வைத்திருப்பது நேரடிப்போரைவிடக் கொடியது" என்கிறார் காந்தியடிகள்.

## எத்தனை முறை மன்னிப்பது?



மத்தேயு நற்செய்தி 18ம் அதிகாரத்தில் இயேசு தன் சீடர்களுக்கு பணிவு, இடறல், சகோதரனைத் திருத்தும் முறை, பிறரன்பு போன்றவை பற்றி எடுத்துரைத்துக்கொண்டே வருகிறார். இதே பின்னணியில், சகோதரனைத் திருத்தும் முறைபற்றி விளக்கம் கேட்கும் புனித பேதுரு "என் சகோதரனை எத்தனை முறை மன்னிப்பது? ஏழுமுறை வரைக்குமா?" எனக் கேட்கிறார். மூன்றுமுறை மன்னித்தால் போதும் என்கிறது யூதச்சட்டம். யூத மதகுரு ஜோஸ்பென்


ஜெகுதா "மூன்று முறை மன்னிப்பு வழங்கு. நான்காவது முறை மன்னிக்க வேண்டாம்" என எழுதி வைத்துச் சென்றுள்ளார். இவ்வாறு மூன்று முறைதான் மன்னிக்க வேண்டும் என்பதற்கான விளக்கத்தை ஆமோஸ் நூல் முதல் இரண்டு அதிகாரங்களில் கூறப்பட்டிருப்பவைகளுடன் ஒப்புமைப்படுத்தி காட்டுவார்.

மேலும் யோபு நூல் 33ம் அதிகாரத்தை எடுத்துக்காட்டி, "இதோ இறைவன் இவற்றையெல்லாம் மனிதர்க்கு மீண்டும் மீண்டும் செய்கிறார். இவ்வாறு குழியிலிருந்து அவர்களின் ஆன்மாவை காப்பாற்றுகின்றார். வாழ்வோரின் ஒளியை அவர்கள் காணச் செய்கின்றார்" (யோபு.33:29-30) என்று கூறப்பட்டிருப்பதையும் மேற்கோள் காட்டி, மூன்றுமுறை மட்டுமே மன்னித்தால் போதும் என்பதற்கு விளக்கம் கொடுத்தனர் யூதக் குருக்கள். இறைவனே மூன்று முறைதான் மன்னிக்கிறார். நான்காம் முறை தண்டனையோடு வருகிறார் என அறிவித்த அவர்கள், மனிதன் இறைவனைவிட இரக்கம் நிறைந்தவனாக இருக்க முடியாது என்பதால் அதே எண்ணிக்கையை மனிதனுக்குத் தந்தனர். ஆனால் இது ஒரு தவறான விளக்கமாகும்.

யூதச் சட்டமே, மூன்று முறை மன்னித்தால் போதும் என்று கூறியிருக்க, பேதுருவோ, அதனினும் இரண்டு மடங்குக்கு மேலான ஓர் எண்ணிக்கையைக் கூட்டி தன் தாராள குணத்தை முன்வைக்கிறார். ஏழு முறையா எனக் கேட்டதற்காகத் தான் பாராட்டப்படுவோம் என அவர் நிச்சயம் எதிர்பார்த்திருக்க வேண்டும். ஆனால் இயேசுவின் பதிலோ, கிறிஸ்தவர்களைப் பொறுத்தவரையில் மன்னிப்பில் வரையறையைக் காட்டும் இக்கேள்வியே வீணானது என்று கூறுவதாக உள்ளது. புதிய ஏற்பாடு முழுவதும் ஊடுருவிச் சென்று காணப்படும் ஒரு போதனையைத்தான் இங்கு தருகிறார் இயேசு.

மன்னிப்புப் பெறவேண்டுமானால் உனக்கும் மன்னிக்கத் தெரியவேண்டும் என்கிறார் இறைவன். முன் நிபந்தனையுடன்கூடிய ஓர் அருளைப்பற்றிக் கூறுகிறார். தன் உடன்வாழ் மனிதனை மன்னிக்க மறுப்பவன் இறைவனிடமிருந்து மன்னிப்பை எதிர்பார்க்க முடியாது என்கிறார். கடவுளால் மன்னிக்கப்படுபவன், தன் சகோதரனை மன்னிக்கத் தவறினால் அவன் கடவுளின் மன்னிப்பிற்கே தன்னை தகுதியற்றவன் ஆக்குகிறான்.

## அரசனிடம் கடன்பட்ட ஊழியனின் இக்கட்டான நிலை



இயேசு கூறிய உவமைக்கே திரும்பிச் செல்வோம். அரசன் முன் கொண்டுவரப்படும் ஊழியன் தன் கடனையெல்லாம் திருப்பி அளிக்க முடியாத நிலையில் இருக்கிறான். அரசனும் அக்கால சட்டம் அனுமதிக்கும் முறைகளையே பயன்படுத்தி, அந்த ஊழியனுக்கு சொந்தமானதையெல்லாம் விற்கக் கட்டளையிடுகிறார்.

அடிமைகளாக்குவதைக் குறித்து விடுதலைப் பயண நூல் 22ம் அதிகாரமும் (22:3) லேவியர் நூல் 25ம் அதிகாரமும் (25:37-38) கூறுகின்றன. மனைவி மக்களையும்கூட இழக்க வேண்டியிருக்குமே என அஞ்சி அலறும் ஊழியன், "என்னைப் பொறுத்தருள்க எல்லாவற்றையும் உமக்கு திருப்பித் தந்து விடுகிறேன்" (மத்.18:26) எனக் கெஞ்சுகிறான்.

இன்னும் சிறிது காலம் பொறுப்பாரா என்று அஞ்சியவனின் கடன் முற்றிலுமாக மன்னிக்கப்பட்டபோது எத்தனை பெரிய சந்தோசத்தை அடைந்திருக்க வேண்டும்?

## மன்னிக்க மறுக்கும் ஊழியன்

தன்மேல் உள்ள தனிப்பட்ட பாசத்தால்தான் அரசன் கடனை மன்னித்தார் என மமதை கொள்ளும் ஊழியன், தன்னிடம் சிறிதளவு கடன்பட்டிருக்கும் பிறிதொரு ஊழியனை மன்னிக்க மறுத்துச் சிறையில் தள்ளுகிறான். தனக்குரிய கடனைத் திருப்பித்தர மறுத்தவனை, ஏதோ அரசாங்கத்திற்கு எதிராகக் குற்றம் செய்தவன்போல் நடத்திச் சிறையில் தள்ளுகிறான். தண்டிக்கப்பட்டவன் கடன்பட்டிருந்ததோ வெறும் எட்டரை டொலர்களே, அதாவது 100 தெனாரியம். ஆனால் தண்டனை வழங்கியவன் கடன்பட்டிருந்த தொகையோ 51 இலட்சம் டொலர்கள். அதாவது தண்டிக்கப்பட்டவனைவிட 6 இலட்சம் மடங்கு அதிகம். மன்னிக்கப்பட்டவனின் இரக்கமற்ற செயலை அறியவரும் மன்னன்,

அவனைச் சிறையில் தள்ளி, அவனின் பழைய கடனுக்காகத் தண்டனை வழங்குகிறான்.

## மன்னித்தால்தான் மன்னிப்பைப் பெறமுடியும்!



கடவுளும் இந்த அரசனைப்போலவே நம்மை மன்னிக்கிறார். நம் ஒவ்வொரு-வருக்கும் அருளையும், கொடைகளையும் தந்துள்ள இறைவன், அவைகளை நாம் தவறாகப் பயன்படுத்தினால் கணக்குக் கேட்பார். ஆனால் அதேவேளை மன்னிப்பு என்று அவரை நாடி வந்தால் நிச்சயம் அதனைப் பெறுவோம். அதேவேளை, அது முன் நிபந்தனையுடன்கூடியது.

கடவுள் நம் பாவங்களை மன்னிக்கத் தயாராக இருப்பதுபோல் நாமும் பிறர் குற்றத்தை மன்னிக்கத் தயாராக இருக்க வேண்டும். நாம் பிறரை மன்னிக்கத் தவறும்போது, நம்மை ஏற்கனவே மன்னித்ததை அவர் திரும்ப எடுப்பதில்லை. ஆனால், மன்னிப்புப் பெற்றவன், பிறரை மன்னிக்கத் தவறினால் அது முன்னையதைவிடப் பெரிய பாவமாகிறது.

நாம் எந்த அளவையால் அளப்போமோ, அந்த அளவையால்தான் அவரும் அளக்கிறார். தெரிந்தே அநீதியான முறையில் குற்றமிழைப்பது கீழ்த்தரமானது. ஆனால் அதேவேளை, மன்னிப்பது தாராள மனத்தையும் உன்னத நிலையையும் காட்டுகிறது.

நம்மிடம் இருப்பதைவிட, நமக்கு உரியதைவிட அதிகமாகப்பெற விரும்பும் முயற்சி, பேராசை - நம்மிடம் இருப்பதையே இழக்க வைக்கிறது. மன்னிப்புப் பெற்ற ஊழியன், அரசனின் தாராள மனத்தை பின்பற்றத் தவறியிருந்தால்கூட அரசனின் பொறுமையையும் இரக்கத்தையுமாவது கடைப்பிடித்திருக்க வேண்டும். கடனை மன்னிக்காவிட்டாலும் காலக் கெடுவாவது கொடுத்திருக்க வேண்டும். ஆனால், பெற்ற மன்னிப்பிற்கு தகுதியில்லாதவனாகத் தன்னைக்காட்டித் தவறிழைக்கிறான்; தண்டனை பெறுகிறான்.

## மன்னிக்க மறுத்தால் எப்படி மன்னிப்பு வேண்டுவது?



'எங்களுக்கு எதிராக தீமை செய்தவர்களை நாங்கள் மன்னிப்பதுபோல், எங்கள் பாவங்களையும் மன்னித்தருளும்' என தினந்தோறும் இயேசு கற்பித்த செபத்தின் வழியாகச் செபிக்கிறோம். நாம் இறைவனால் மன்னிக்கப்படுவதற்கு, நாம் மற்றவர்களை மன்னிப்பதை முன் உதாரணமாகக் காட்டுகிறோம்.

ஆனால் பலரும் இந்த வாக்கியத்தின் பொருளை உணராமல், ஒரு கடமையாக - வாடிக்கையாகவே இதைச் சொல்வதால்,பொய்யராகிறோம். இறைவனிடமே பொய்யுரைக்கிறோம். நாங்கள் மன்னிக்கிறோம், ஆகவே அதற்குரிய தகுதியைப் பெற்று, எங்களுக்கான மன்னிப்பையும் வேண்டுகிறோம் என்று கூறும்போது எத்தனை பெரிய தவறு செய்கிறோம் என்பதை நாம் உணர்ந்திருக்கிறோமா?

நாங்கள் அடுத்தவரை மன்னிக்கிறோம்; ஆகவே எங்களையும் மன்னியும் என்று அச்செபத்தில் நாம் கூறுவது உண்மைதானா என ஒவ்வொரு கிறிஸ்தவனும் ஆன்ம சோதனைசெய்து பார்க்க வேண்டும்.

இறைவன் பாவங்களை வெறுக்கிறார், பாவிகளை மன்னிக்கிறார், மனிதர்களின்மீதான அவரின் எல்லையற்ற அன்பே, நாம் எவ்வளவு தூரம் விலகிச் சென்றாலும் நம்மைத் தேடி ஓடவைக்கிறது. ஊதாரிப்பிள்ளையின் உவமையில் மகனை எதிர்பார்த்துக் காத்திருக்கும் தந்தையைப்போல நம் இறைவனும் நமக்காகக் காத்திருக்கின்றார். அதனால்தான் இயேசு கூறினார் "மருத்துவன் நோயற்றவர்க்கன்று, நோயுற்றவர்க்கே தேவை, நீதிமான்களை அன்று மனம் திரும்பும்படி பாவிகளையே அழைக்க வந்தேன்"

## கடின இதயத்தால் என்ன இலாபம்?

நம்முடைய பலவீனங்களும், பிறரின் உதவி தேவைப்படும் நிலைகளும், மற்றவர்களிடம் நாம் சகிப்புத்தன்மையுடையவர்களாகவும், மன்னிப்பை வழங்குபவர்களாகவும் இருக்க வேண்டும் என்பதை எதிர்பார்க்கிறது. நாம் பிறரின் பாவங்களை மன்னிக்கத் தவறினால், எந்தத் தகுதியோடு இறைவனிடம் மன்னிப்பை வேண்ட முடியும்?

மற்றவர்களின் பாவங்களை மன்னிக்காமல் இருக்க நாம் என்ன காரணம் சொல்ல முடியும்? பாவங்களை மன்னிக்க மறுக்கும் கடின இதயத்தால் எந்த இலாபத்தை நாம் அடைகிறோம்? மற்றவர்களை மன்னிப்பதன் மூலம் நமக்கு என்ன தீமை வந்துவிடும்? புனித யாக்கோபு, 'இரக்கம் காட்டாதோருக்கு இரக்கமற்ற தீர்ப்புதான் கிடைக்கும். இரக்கமே தீர்ப்பை வெல்லும்' (யாக்.2:13) என்று கூறுகிறார்.

## நமது செபங்கள் பிறரன்போடுகூடிய செபங்களா?

ஆகவே இந்த அடிப்படையில் நமது செபங்கள் பிறரன்போடுகூடிய செபங்களா என்று நம்மையே நாம் ஆராய்ந்து பார்க்க அழைக்கப்படுகின்றோம். செபத்திற்கான அடிப்படை மனநிலையே பிறரோடு நமக்குள்ள உறவுதான். இந்த உறவு சரியில்லாதபோது நம் செபங்கள் அர்த்தத்தை இழக்கின்றன. பிறரன்பு இல்லாத சுயநலம்மிக்க செபங்களை இறைவன் நிராகரிக்கின்றார்.



# இயல் 9
# செபத்தின் பல்வேறு வகைகள்

**9.1 புகழ்ச்சிச் செபம்**
**9.2 மன்னிப்புச் செபம்**
**9.3 இறைவார்த்தைச் செபம்**
**9.4 வேண்டுதல் செபம்**
**9.5 நன்றிச் செபம்**

*மனிதர் தம்முடைய மனநிலைக்கும் உணர்வுகளுக்கும் ஏற்ப செபிக்கக்கூடிய பல்வேறு வகையான செபங்கள் உள்ளன.*

*ஆண்டவருடைய அன்பை நினைக்கும்போது உள்ளத்தில் எழும் செபம் புகழ்ச்சி ஆகும்.*

*மனிதர் தம்முடைய பாவங்களையும் பலவீனங்களையும் உணரும்போது எழும் செபம் மன்னிப்பு ஆகும்.*

*ஆண்டவருடைய குரலைக் கேட்கவேண்டும் என்ற உணர்வு ஏற்படுகின்றபோது இறைவார்த்தை செபமாகின்றது.*

*நம்முடைய விண்ணப்பங்களை வானகத் தந்தையிடம் எடுத்துச்சொல்லி செபிக்கும் செபம் வேண்டுதல் ஆகும்.*

*ஆண்டவருடைய நன்மைத்தனங்களை நினைக்கும்போது உள்ளத்தில் எழும் செபம் நன்றியாகும்.*

"பிறர்மயமான வேண்டுதல்கள் கேட்கப்படுகின்றன"
*(அன்னை திரேசா)*

"நீ செய்த பாவங்களுக்காக உடனுக்குடன் கடவுள் உன்னைத் தண்டித்தால் உன்னால் ஒருநாள்கூட முழுமையாக வாழமுடியாது"

செபத்தின் பல்வேறு வகைகள் என்று இங்கு குறிப்பிடப்பட்டாலும் இந்த ஐந்து வகைகளும் முழுமையான செபத்தின் ஐந்து அம்சங்களாகும்.

செபத்தின் ஆரம்பத்தில் இறைவனைப் புகழ்ந்து, போற்றி வணங்குவதும், பின்பு அவருக்கு நன்றி சொல்லுவதும், மன்னிப்புக் கொடுத்து மன்னிப்பு வேண்டுவதும், இறைவார்த்தையை வாசித்து இறைவன் நமக்குச் சொல்வதைக் கேட்பதும், கடைசியாக எம்முடையதும் சிறப்பாகப் பிறரதும் தேவைகளுக்காக வேண்டுவதுமே முழுமையான செபத்தின் அம்சங்களாகும்.

திருப்பலி திருச்சபையின் உன்னத செபமாக இருப்பதால் அதில் இந்த ஐந்து அம்சங்களும் செறிந்திருப்பதை நாம் காணலாம். எனினும் இந்த அம்சங்கள் தனித்தனியாகச் செயற்படும்போது இவை செபத்தின் பல்வேறு வகைகளாகின்றன.








# புகழ்ச்சிச் செபம்



இறைமக்களாகிய நம்மைப் பொறுத்தவரையில் நாம் இறைவனிடம் மன்றாட்டுக்களைச் சமர்ப்பித்தே பழகியிருக்கிறோம். ஞாயிறு திருப்பலியில் விசுவாசிகள் மன்றாட்டு, நவநாள் செபங்கள், புனிதர்கள் பேரில் உள்ள பிரார்த்தனைகள் எதுவானாலும் நமக்கு எளிதாக வரும் செபம் "ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்" என்பதுதான். இந்தச் செபம் ஒருவித வாய்ப்பாடு போலாகி, நமது உள்ளத்தின் ஆழத்திலிருந்து ஊற்றெடுக்காத வெறும் சொல்லாக மாறிவிட்டது. நமது செபங்களில் எந்தளவுக்கு இறைபுகழ்ச்சி இடம்பெறுகின்றது என நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

"செபிக்கும்போது நாம் மனிதர்களைப்போல செயற்படுகின்றோம். ஆனால் இறைவனை மகிமைப்படுத்தி புகழும்போது தேவதூதர்களைப்போல செயற்படுகின்றோம்." என்கிறார் தோமஸ் வொட்சன் என்ற அறிஞர்.

## புகழ்ச்சிக்குரிய ஆண்டவர்

"ஏனெனில் நிலையான நகர் நமக்கு இங்கே இல்லை வரப்போகும் நகரையே நாம் நாடிச் செல்கிறோம். ஆகவே அவர் வழியாக எப்போதும் நாம் கடவுளுக்குப் புகழ்ச்சிப் பலியைச் செலுத்துவோமாக" (எபிரேயர் 13:14-15அ). எங்கெல்லாம் இறைவனின் பெயர்

புகழப்படுகிறதோ அங்கெல்லாம் இறைவன் கொலு வீற்றிருக்கிறார். "நீரோ தூயவராய் விளங்குகின்றீர், இஸ்ரயேலின் புகழ்ச்சிக்கு உரியவராய் வீற்றிருக்கின்றீர்" (தி.பா.22:3).

கடவுள் இஸ்ராயேல் வரலாற்றில் செய்த மீட்புச்செயல்களை நினைவுகூர்ந்து அவரைப் புகழ்வது யூதசெபத்தில் முக்கிய அம்சமாகும். இதனை முக்கியமாக இணைச் சட்டப் பாரம்பரியம் (D) வலியுறுத்துகின்றது. இறைவன் செய்த இரக்கச் செயல்கள் பற்றிய நினைவு மனித இதயங்களில் இருத்தப்பட வேண்டும்—அது செபத்திற்குத் தூண்ட வேண்டும். அதனை இணைச்சட்டநூல் 4:9, 37-39, 7:18-19 8:2, 1அரசர் 8:23-27 போன்ற பகுதிகள் விபரிக்கின்றன.

நம்மைப் படைத்துப் பராமரித்து வழிநடத்திவரும் இறைவனைப் புகழ நாம் அழைக்கப்படுகின்றோம். "நம்மைப் படைத்து, பராமரித்துவரும் கடவுளுக்கு ஆராதனையும் புகழ்ச்சியும் செலுத்த வேண்டும்" என்கிறது கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வி நூல் (கிறிஸ்தவ வாழ்வில் செபம்). இறைவனை நாம் புகழாவிட்டால் அவரது மகிமை குறைவுபடப்போவதில்லை. அதனால் அவருக்கு எந்த இழப்பும் இல்லை. இறைவனைப் புகழ்வது நமது மீட்புக்கு வழியாக உள்ளது.

## அல்லேலூயா

'அல்லேலூயா' என்பது ஒரு அரமேயச் சொல். 'கல்லேல்' என்றால் புகழ் என்பது பொருள். 'யா' என்பதற்கு யாவே அல்லது கடவுள் என்று பொருள். அல்லேலூயா என்றால் ஆண்டவரைப் புகழ்வோம் என்பது பொருள். அல்லேலூயா என்று ஆர்ப்பரித்துப் பாடுவது கத்தோலிக்க திருச்சபையின் பரம்பரை வழக்கம்.

அல்லேலூயா என்ற அரமேயச் சொல்லை உலகம் எத்திசையிலும் கேட்கலாம். எல்லா நாட்டினரும், எல்லா மொழியினரும், எல்லா இனத்தவரும், எல்லாக் கலாச்சாரத்தாரும், எல்லாக் காலத்தவரும், எல்லா வயதினரும் கூறும் ஒரே சொல் அல்லேலூயா. மொழிபெயர்ப்பில்லாத ஒரே வாழ்த்தொலி அல்லேலூயா ஆகும்.

## திருப்பாடல்களில் இறைபுகழ்ச்சி

பழைய ஏற்பாட்டு நூல்களில் இறைவனைப் புகழ்ந்து பாடும் புகழ்ச்சித் திருப்பாடல்கள் நிறையவே உள்ளன. "என் நாவில் உள்ளதெல்லாம் உமது புகழே; நாளெல்லாம் நான் பேசுவது உமது பெருமையே"

(தி.பா.71:80). "ஆண்டவரை எனது உள்ளம் போற்றிப் பெருமைப் படுத்துகின்றது. என் மீட்பராம் கடவுளை நினைத்து எனது மனம் பேருவகைகொள்ளுகின்றது" (லூக்.1:47). "உமது இல்லத்தில் தங்கியிருப்போர் நற்பேறு பெற்றோர். அவர்கள் எந்நாளும் உம்மைப் புகழ்ந்துகொண்டே இருப்பார்கள்" (தி.பா.84:4). அவரது கூடாரத்தில் ஆர்ப்பரிப்புடன் பலிகளைச் செலுத்துவேன்: ஆண்டவரைப் புகழ்ந்து பாடல்கள் பாடுவேன்" (தி.பா.27:6).

## இயேசு இறைவனைப் புகழ்ந்து செபித்தார்

இயேசுவின் செபவாழ்வு அனுபவத்தில் புகழ்ச்சிச் செபம் சிறப்பாக இடம்பெற்றிருப்பதை நாம் காணமுடிகிறது. "அந்நேரத்தில் இயேசு தூய ஆவியால் பேருவகையடைந்து, 'தந்தையே விண்ணுக்கும் மண்ணுக்கும் *ஆண்டவரே, உம்மைப் போற்றுகிறேன்.* ஏனெனில் ஞானிகளுக்கும் அறிஞர்களுக்கும் இவற்றை மறைத்து குழந்தைகளுக்கு வெளிப்படுத்தினீர். ஆம், தந்தையே, இதுவே உமது திருவுளம்' என்றார்."

"அவர்கள் உணவு அருந்திக்கொண்டிருந்தபொழுது, இயேசு அப்பத்தை எடுத்து *கடவுளைப் போற்றி,* அதைப் பிட்டுச் சீடருக்குக் கொடுத்து, 'இதைப் பெற்று உண்ணுங்கள்: இது எனது உடல்' என்றார். பின்பு கிண்ணத்தை எடுத்து, *கடவுளுக்கு நன்றி* செலுத்தி அவர்களுக்குக் கொடுத்து, 'இதில் உள்ளதை அனைவரும் பருகுங்கள்: ஏனெனில் இது எனது உடன்படிக்கையின் இரத்தம் .......' என்றார்." (மத்.26:26-28).

## புகழ்ச்சியினால் வாழ்க்கைப் போரில் வெற்றி

2குறிப்பேடு 20:1-26 பகுதியில் இறைபுகழ் மூலம் யோசபாத்து அரசன் தன் எதிரிகள்மேல் வெற்றிகொள்வதைப் பார்க்கிறோம். யூதாவின் அரசனான யோசபாத்துவை அம்மோனியரும் மோவாபியரும் சேயீர் மலைநாட்டவரும் எதிர்த்துப் படையெடுத்து வருகின்றனர். யோசபாத்து கதிகலங்கியபோது யாகசியேல் என்பவர் ஆவியால் ஏவப்பட்டு, "கடவுள் அவர்களுக்காக போராடுவார்" என அவர்களைத் திடப்படுத்துகிறார்.

யோசபாத்து போருக்குப் புறப்படும்போது பாடகர் குழுவினரை படைகளுக்கு முன் போகச்செய்து, அவர்கள் யாவரும், "ஆண்டவரைப் போற்றுங்கள் ஏனெனில் அவர்தம் பேரன்பு என்றுமுளது" (2 குறிப்.20:21)

எனப் பாடச் செய்கிறார். எதிர்த்து வந்தவர்கள் ஒருவரையொருவர் வெட்டி வீழ்த்தி தங்களையே அழித்துக்கொள்கிறார்கள். யோசபாத்தும், மக்களும் எதிரிகளைக் கொள்ளையிடுகின்றனர். இறுதியாக போர்க்களம் பெராக்கா எனப்படும் புகழ்ச்சிப் பள்ளத்தாக்காக மாறுகிறது.

இதிலிருந்து துதிமூலம் எதிரிகளின் தாக்குதலிலிருந்து நாம் தப்பமுடியும், குறிப்பாக சாத்தானின் தாக்குதலை முறியடிப்பது மட்டுமல்ல, போர்க்களம் புகழ்ச்சிப் பள்ளத்தாக்காக மாறும் எனவும் தெரிகிறது. காரணம், ஆண்டவரைப் போற்றிப் புகழும்போது ஆண்டவர் நமக்காக போராடுகிறார். நம்முடைய குடும்பங்களிலும் சாத்தானின் சேனையை வெல்ல, குடும்பத் தகராறுகளை வென்றிட நமக்குக் கொடுக்கப்பட்ட ஆயுதம் இறைபுகழ்ச்சியாகும். உண்மையில் புகழ்ச்சியினால் பாதிக்கப்படுவது சாத்தான்தான். காரணம், அவனால் கடவுளைப் புகழ முடியாது.

**விண்ணகத்தில் செய்வதை மண்ணகத்திலும் .....**

“தூயவர், தூயவர், தூயவர்,
எல்லாம் வல்ல கடவுளாகிய ஆண்டவர்,
இருந்தவரும் இருக்கின்றவரும்
வரவிருக்கின்றவரும் இவரே”

என்று விண்ணகத்தில் அரியணையிலிருக்கும் செம்மறியானவரை நான்கு உயிர்கள் அல்லும் பகலும் பாடிப் போற்றிப் புகழ்ந்து அவருக்கு நன்றி செலுத்திக்கொண்டிருக்கின்றன என்று (திருவெளிப்பாடு 4:8-9) கூறுகின்றது.

எனவே விண்ணகத்தில் செய்யப்போவதை இந்த மண்ணுலகில் செய்வதுதான் புகழ்ச்சிச் செபம். இவ்வாறு விண்ணக வாழ்வுக்குரிய முன்னேற்பாடும், முன் தயாரிப்புமாக புகழ்ச்சிச் செபம் அமைகிறது. மாற்றிக்கூறினால் எங்கெல்லாம் இறைபுகழ் கூறப்படுகிறதோ அங்கெல்லாம் விண்ணகம் வந்துவிடுகிறது. எனவேதான் மெர்லின் கரோதர்ஸ் என்ற ஆசிரியர் “விண்ணகத்தை நரகத்திற்குள் கொண்டு வருவது எப்படி?” (How to bring Heaven into Hell) என்ற புத்தகத்தில் இறைபுகழ் மூலம் இதைச் செய்ய முடியும் என்கிறார். இவ்வாறு இறைபுகழ் நரகத்தை விண்ணகமாக மாற்றுகிறது.

## துன்பத்தில் இறைவனைப் புகழ முடியுமா?


திருப்பாடல் 34:1ல் "ஆண்டவரை நான் எக்காலமும் போற்றுவேன் அவரது புகழ் எப்பொழுதும் என் நாவில் ஒலிக்கும்" என எழுதப்பட்டுள்ளது. எனவே துன்பத்திலும், துயரத்திலும், வேதனையிலும், வியாதியிலும், ஏமாற்றங்களிலும் இறைபுகழ் கூற மறைநூல் நமக்கு அழைப்பு விடுக்கின்றது.

பிலிப்பி நகரில் பவுலும் சீலாவும் சிறையிடப்படுகின்றனர். அவ்வேளையில் அவர்கள் சிறையில் இறைவனைப் புகழ்ந்து பாடிச் செபிக்கின்றனர். "அவர்களை நன்கு அடித்துச் சிறையில் தள்ளி கருத்தாய்க் காவல் செய்யுமாறு சிறைக்காவலர் ஒருவருக்குக் கட்டளையிட்டார்கள். இவ்வாறு கட்டளை பெற்ற அவர் அவர்களை உட்சிறையில் தள்ளி, அவர்கள் கால்களைத் தொழுமரத்தில் உறுதியாய் மாட்டிவைத்தார். நள்ளிரவில் பவுலும் சீலாவும் கடவுளுக்குப் புகழ்ப்பா பாடி இறைவனிடம் வேண்டினர். மற்றக் கைதிகளோ இதனைக் கேட்டுக்கொண்டிருந்தார்கள். திடீரென ஒரு பெரிய நிலநடுக்கம் ஏற்பட்டது. சிறைக்கூடத்தின் அடித்தளமே அதிர்ந்தது. உடனே கதவுகள் அனைத்தும் திறந்தன. அனைவரின் விலங்குகளும் கழன்று விழுந்தன." (தி.ப.16:24-26).


துன்பங்களின்போது, இழப்புக்களின்போது ஆண்டவரில் மகிழ்ச்சியுறுவதென்பது சாதாரணமாக இயலாத காரியம். ஆனால் இங்கே ஓர் இறைமனிதர் அப்படி மகிழ்வுறுகின்றார்.

"அத்திமரம் துளிர்த்து அரும்பாமல் போயினும், திராட்சைக் கொடிகள் கனி தராவிடினும் ஒலிவ மரங்கள் பயன் அற்றுப்போயினும், வயல்களில் தானியம் விளையாவிடினும், கிடையில் ஆடுகள் யாவும் அழிந்து போயினும், தொழுவங்களில் மாடுகள் இல்லாது போயினும், நான் ஆண்டவரில் களிகூர்வேன்: என் மீட்பரான கடவுளில் மகிழ்ச்சியுறுவேன். (அபக்கூக்கு 3:17-18)






# மன்னிப்புச் செபம்



"நீ செய்த பாவங்களுக்காக உடனுக்குடன் கடவுள் உன்னைத் தண்டித்தால் உன்னால் ஒரு நாள்கூட முழுமையாக வாழமுடியாது" என்கிறார் ஓர் இறையடியார். பாவத்திற்கு அடிமையாகி குற்றப்பழி உணர்வோடு உள்ள மனிதன் கடவுளின் மன்னிப்பை உணரவோ ஏற்றுக்கொள்ளவோ மறுக்கிறான். "என்னையும் கடவுள் மன்னிப்பாரா?" என்று அவநம்பிக்கையோடு கேள்வி எழுப்புகிறான்.

கடவுளின் கருணைக்கு கணக்கே இல்லை! இறைவனுடைய இரக்கத்திற்கும் மன்னிப்பிற்கும் அளவே இல்லை. "கடவுளையும் பிறரையும் அன்புசெய்யத் தவறியதற்காக மனம் வருந்த வேண்டும்" எனக் கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வி நூல் - (கிறிஸ்தவ வாழ்வில் செபம்) அறிவுறுத்துகின்றது.

## மன்னிப்பினால் சீடனாகிய திருடன்

ஓர் ஊரில் ஒரு மடத்தில் துறவி ஒருவர் இருந்தார். ஒரு நாள் இரவு அவர் ஏதோ ஞான நூல் ஒன்றைத் தீவிரமாகப் படித்துக்கொண்டிருந்தார். அந்த நேரம் பார்த்து ஒரு திருடன் உள்ளே நுழைந்தான். அவன் கையிலே கூர்மையான கத்தி. "மரியாதையாக பணம் தந்து விடுகிறாயா? அல்லது ஒரே குத்து குத்தட்டுமா?" என்று

கேட்டான். துறவி, "என்னைத் தொந்தரவு செய்யாதே அப்பா, அந்த மேசையில் பணமிருக்கிறது எடுத்துக்கொள்" எனக் கூறிவிட்டு தன் படிப்பில் ஆழ்ந்தார்.

திருடனை ஏறெடுத்து பாராமலேயே, "எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு போய்விடாதே. கொஞ்சம் மிச்சமிருக்கட்டும். நாளைக்கு வரிகட்ட வேண்டும்" எனக் கூறிய அவரின் நிதானத்தைக் கண்டு வியந்து, அவர் கூறியபடியே கொஞ்சம் பணத்தை விட்டுவிட்டு பெரும்பணத்தை எடுத்துக்கொண்டு கிளம்பினான்.

அவன் கதவை நோக்கிச் செல்லும்போது, "எதை யார் கொடுத்தாலும் நன்றி சொல்ல வேண்டுமப்பா. அதுதான் நாகரீகம்" எனக் கூறியதை மதித்து, 'நன்றி' எனக் கூறிவிட்டு இருளில் மறைந்தான்.

சில நாட்களில் பிடிபட்டான். எங்கெல்லாம் திருடினான், என்னென்ன பொருள் திருடினான் எனக் காவல் துறையினரிடம் ஒப்புக்கொண்டதால் துறவியை அழைத்தனர். சாட்சி சொல்வதற்காக சென்ற துறவி காவல் துறையினரிடம், "என்னைப் பொறுத்தவரை இவன் திருடவில்லை. சிரமமாக இருந்ததால் என்னிடம் வந்தான் பணம் பெற்றுக்கொண்டு நன்றியும் சொன்னான்" என்று கூறினார் துறவி. சிறைவாசம் முடிந்ததும் மனம் திருந்தியவனாக அந்தத் திருடன் அந்த துறவிக்கு சீடனானான்.

## ஊதாரி மைந்தனா? ஊதாரித் தந்தையா?

திருவிவிலியம் இறைவனை மன்னிக்கும் தந்தையாகச் சித்தரித்துக் காட்டுகின்றது. லூக்கா நற்செய்தி 15ம் அதிகாரத்தில் யேசு கூறுகின்ற காணாமற்போன மகன் உவமையில் தந்தையின் மன்னிக்கும் மனநிலையையும், அவருடைய அன்பான அணுகுமுறையையும் நாம் கண்டு வியக்கலாம். இந்த உவமையில் வரும் தந்தையின் இரக்க குணத்தை, நிபந்தனையின்றி மன்னிக்கும் மாண்பை நோக்கும்போது உண்மையில் மன்னிப்பதில் அந்தத் தந்தை ஊதாரியாக இருக்கின்றார் என்றே சொல்லவேண்டும்.

இந்த உவமையில் வரும் தந்தையினுடைய அன்பை, இரக்கத்தை ஆழமாகப் புரிந்துகொள்ள அன்றைய யூத சமூகப் பின்னணியை - தீண்டாமை பற்றிய நிலைப்பாட்டை நாம் அறியவேண்டும்.

யூத சமூகத்தில் இருந்து ஒருவர் விலகிப்போய் அன்னிய மக்களோடு கலப்பாராயின் அவர் மீண்டும் யூத சமூகத்திலே ஏற்றுக்கொள்ளப்பட

மாட்டார். இந்த சமூக வழக்கம் அந்த இளைய மகனுக்கு நன்கு தெரிந்திருக்க வேண்டும். அதனால்தான் தந்தையிடம் திரும்பிவரத் தீர்மானிக்கின்றவன் தனக்குள் என்ன சொல்கின்றான்? “அப்பா கடவுளுக்கும் உமக்கும் எதிராக நான் பாவம் செய்தேன்; இனிமேல் நான் உம்முடைய மகன் எனப்படத் தகுதியற்றவன்; உம்முடைய கூலியாள்களுள் ஒருவனாக என்னை வைத்துக்கொள்ளும் என்பேன்” என்று சொல்லிக்கொண்டார்” (லூக்.15:18).

ஆனால் இயேசு காட்டும் மன்னிக்கும் தந்தை தனது சமூகக் கட்டுப்பாடுகள், சடங்கு - சம்பிரதாயங்கள் அனைத்தையும் உடைத்து எறிந்தவராக எந்தவிதமான கேள்வியுமின்றி நிபந்தனையும் இன்றி தன் மகனை ஏற்றுக்கொள்கின்றார்.

ஊதாரியாக அலைந்த மகன் திரும்பி வந்தபோது, அவனை வரவேற்கும் தந்தையின் நிலைப்பாடு இயற்கைக்கு அப்பாற்பட்ட ஒன்றாக இருக்கின்றது. வயது முதிர்ந்த தந்தை கண்பார்வை குறைந்தவராக இருக்க வேண்டும். ஆனால் தன் மகன் தொலைவில் வந்துகொண்டிருக்கும்போதே அவர் தந்தை அவரைக் கண்டுகொள்கிறார் (லூக்.15:20). வயது முதிர்ந்த அந்தத் தந்தை நடக்கச் சிரமப்படுபவராக இருந்திருக்க வேண்டும். ஆனால் மகன் தொலையில் வந்து கொண்டிருக்கும்போதே அவர் தந்தை ஓடிப்போகிறார் (லூக்.15:20).

திருச்சபை புனிதர்களின் அருங்காட்சியகம் மட்டுமல்ல, மாறாக மனம் மாறிவரும் பாவிகளைக் குணமாக்கும் மருத்துவமனையும் கூட என்பதை மறந்துவிடக்கூடாது.

## மன்னிப்பு வழங்கும் ஆண்டவர்

திருவிவிலியத்தில் ஆண்டவர் மன்னிப்பு வழங்குகின்றவராக காட்டப்படுகின்றார். பாவமும் பலவீனமும் நிறைந்த மனிதர்களுக்கு இறைவன் தரும் மன்னிப்பின் வார்த்தைகள் ஆறுதலும், அமைதியும் அளிப்பவையாக உள்ளன.

“வாருங்கள், இப்பொழுது நாம் வழக்காடுவோம்’ என்கிறார் ஆண்டவர்: உங்கள் பாவங்கள் கடுஞ்சிவப்பாய் இருக்கின்றன: எனினும் உறைந்த பனிபோல அவை வெண்மையாகும். இரத்த நிறமாய் அவை சிவந்திருக்கின்றன. எனினும் பஞ்சைப்போல் அவை வெண்மையாகும்.” (எசா.1:18).

"உன் குற்றங்களைக் கார்மேகம் போலும், உன் பாவங்களைப் பனிப்படலம் போலும் அகற்றிவிட்டேன். என்னிடம் திரும்பி வா, நான் உனக்கு மீட்பளித்து விட்டேன்" (எசா.44:22).

"கொடியவர் தம் வழிமுறையையும், தீயவர் தம் எண்ணங்களையும் விட்டுவிடுவார்களாக; அவர்கள் ஆண்டவரிடம் திரும்பி வரட்டும்: அவர் அவர்களுக்கு இரக்கம் காட்டுவார்: அவர்கள் நம் கடவுளிடம் வரட்டும்: ஏனெனில் மன்னிப்பதில் அவர் தாராள மனத்தினர்" (எசா.55:7).

"அவர் உன் குற்றங்களையெல்லாம் மன்னிக்கின்றார்: உன் நோய்களையெல்லாம் குணமாக்குகின்றார்" (தி.பா.103:3).

"ஆயிரம் தலைமுறைக்கும் பேரன்பு செய்பவர்: கொடுமையையும் குற்றத்தையும் பாவத்தையும் மன்னிப்பவர்" (விப.34:7).

"ஆண்டவர் சினங்கொள்ளத் தாமதிப்பவர்: அருளிரக்கம் காட்டுவதில் அளவு கடந்தவர்: குற்றங்களையும் குறைகளையும் மன்னிப்பவர்" (எண்.14:18).

"ஆண்டவர் பரிவும் இரக்கமும் உள்ளவர்: பாவங்களை மன்னிப்பவர்: துன்ப வேளையில் காப்பாற்றுகிறவர்" (சீஞா.2:11).

"அவர் மன்னிப்பதில் வல்லவர்: தம் சினத்தைக் காட்டுவதிலும் வல்லவர்" (சீஞா.16:11).

## அறியாமல் செய்பவை அப்போதே மன்னிக்கப்படுகின்றன

ஒரு ஆற்றங்கரையில் இராமர் குளிக்கச் சென்றார். அக்கால வழக்கப்படி அரசர்கள் வாளைக் கீழே வைக்க மாட்டார்கள். நிலத்தில் குத்தியே வைப்பார்கள். இராமரும் தன் வாளை நிலத்தில் குத்திவைத்து விட்டு ஆற்றில் நீராடினார். நீராடிய பின் கரைக்கு வந்து குத்தியிருந்த வாளை எடுத்தார். அப்போதுதான் தான் குத்தியிருந்த வாளில் ஒரு தேரை குத்தப்பட்டிருப்பதைக் கண்டு அதிர்ச்சியடைந்தார்.

"ஏ தவளையே நான் இந்த வாளை நிலத்தில் குத்தும்போது நீ கத்தியிருக்கலாமே" என்றார் இராமர். தவளை சொன்னது, "எப்போதெல்லாம் எனக்குத் துன்பம் வருகிறதோ அப்போதெல்லாம் நான் இராமா... இராமா... என்றுதான் கூப்பிடுவேன். இப்போது அந்த இராமனே என்னைக் குத்தும்போது நான் யாரைச் சொல்லிக் கூப்பிடுவேன்?" என்றது.

இராமர் மிகவும் நொந்து, "தவளையே நான் தெரியாமல்

செய்துவிட்டேன். மன்னித்துக்கொள்" என்றார். தவளை சொன்னது, "அறியாமல் செய்யும் குற்றங்கள் அப்போதே மன்னிக்கப்படுகின்றன என்று சொன்னதே நீதானே. உன்னை நான் அப்போதே மன்னித்துவிட்டேன்" என்று சொல்லி தன் உயிரைவிட்டது.

## அப்போதே துடைத்து விட்டேனே!

புத்தரின் பேச்சைப் பிடிக்காத இளைஞன் ஒருவன், அவரைக் காறி உமிழ்ந்தான். அவ்வேளையில் புத்தரோடு இருந்தவர்கள் அந்த இளைஞனைக் கோபத்தோடு தாக்க முயற்சித்தனர். புத்தர் அவர்களைத் தடுத்துவிட்டு எச்சிலைத் துடைத்துவிட்டார். இளைஞனும் அந்த இடத்தைவிட்டுச் சென்றுவிட்டான்.

இரண்டு தினங்களுக்குப் பின்னர் அந்த இளைஞன் மனச்சாட்சியின் குத்தல் தாங்கமுடியாமல் புத்தரிடம் வந்து மன்னிப்புக் கேட்டான். "ஐயா, என்னை மன்னித்துவிடுங்கள்" என்று வேண்டினான். அதற்குப் புத்தர், "எதற்காக?" என்று கேட்டார். "நான் இரண்டு நாட்களுக்கு முன்னர் உங்கள்மீது காறி உமிழ்ந்தேனே......" என்றான். அதற்குப் புத்தர், "அதை நான் அப்போதே துடைத்துவிட்டேனே" என்றார்.


நம் ஆண்டவர் நம் பாவங்களை மன்னிப்பவர் மட்டுமல்ல, அவற்றை மறந்தும் விடுபவர் என்பதை விவிலியம் நமக்கு தெளிவாகக் கூறுகின்றது. "நான், ஆம், நானே, உன் குற்றங்களை என்பொருட்டுத் துடைத்தழிக்கின்றேன்: உன் பாவங்களை நினைவிற் கொள்ளமாட்டேன்" (எசா.43:25). "அவர்களது தீச்செயலை நான் மன்னித்துவிடுவேன்: அவர்களுடைய பாவங்களை இனிமேல் நினைவு கூரமாட்டேன்" (எரே.31:34) என்று ஆண்டவர் வாக்குறுதி தருகின்றார்.

"அவர் நம்மீது இரக்கம் காட்டுவார். நம் தீச்செயல்களை மிதித்துப் போடுவார். நம் பாவங்கள் அனைத்தையும் ஆழ்கடலில் எறிந்துவிடுவார்" (மீக்கா.7:19). நம் பாவங்களை ஆண்டவர் ஆழ்கடலில் எறிந்துவிடுகிறார் எனில் அதன் அர்த்தம் அதனை மீண்டும் அவர் நினைத்துக்கூடப் பார்ப்பதில்லை என்பதாகும். எவ்வளவு ஆறுதல் தரும் வார்த்தைகள் இவை!






# இறைவார்த்தைச் செபம்



வெகு நாட்களுக்குப்பின் உன் தந்தையோ மாமாவோ நண்பனோ உனக்கு ஒரு கடிதம் எழுதினால் அதை நீ மிகுந்த ஆர்வத்தோடு படிப்பாய் அல்லவா? அவர்கள் நேரடியாக உனக்கு முன்னால் நின்று பேசுவது போன்ற அனுபவத்தை நீ பெறுவாய் அல்லவா?

நமது தந்தை அல்லது நண்பர் நமக்கு கடிதம் எழுதுவதுபோல் நம் அனைவருக்கும் கடவுள் ஒரு அன்புக் கடிதம் எழுதியுள்ளார். அக்கடிதத்தில் தன் அன்பை, அக்கறையை, மன்னிப்பை, இரக்கத்தை, கண்டிப்பை இறைவன் தெளிவாக எழுதியுள்ளார். அக்கடிதம்தான் இறைவார்த்தைகள் அடங்கிய திருவிவிலியம். அதை வாசிக்கின்றபோது இறைவன் நம்மோடு பேசுவதை நாம் உணர்வோம்.

## இறைவன் பேசுகின்ற இனிய வழி

செபம் என்பது இறைவனுக்கும் நமக்கும் இடையில் நடைபெறுகின்ற உரையாடல் என்றால் நாமும் பேசவேண்டும். இறைவனும் பேசவேண்டும். இங்கே இறைவன் பேசுவதை நாம் கேட்பதற்குரிய மிகச்சிறந்த வழிமுறைதான் இறைவார்த்தையோடு - திருவிவிலியத்தோடு செபிப்பதாகும்.

நாம் இறைவனை நோக்கி வேண்டும்போது அவருடன் பேசுகின்றோம். "இறைவார்த்தைகளை வாசிக்கும்போது அவர்

பேசுவதைக் கேட்கின்றோம்" என்று 2ம் வத்திக்கான் சங்க ஏடு எடுத்தியம்புகிறது." (சங்க ஏடுகள் - இறைவெளிப்பாடு எண். 25).

## நெஞ்சத்தை நெகிழவைக்கும் இறைவார்த்தை

ஆண்டவர் நம்மோடு பேசுவதைக் கேட்கும்போது நமது உள்ளங்கள் உடைக்கப்படுகின்ற அனுபவத்தை நாம் பெறுகின்றோம். நெகேமியா.8:6,8-10 வரையான இறைவார்த்தைகளை நாம் வாசிக்கும்போது இதன் உண்மையை நாம் ஆழமாகப் புரிந்துகொள்ளலாம்.

"திருநூல் வல்லுனர் எஸ்ரா திருநூலைத் திறந்து வாசித்தபோது மக்கள் எல்லோரும் கைகளை உயர்த்தி ஆமென் என்று பதிலுரைத்தார்கள்; பணிந்து, முகங்குப்புற விழுந்து ஆண்டவரைத் தொழுதார்கள்...... ஆளுனர் நெகேமியாவும், குருவும் திருநூல் வல்லுனருமான எஸ்ராவும், விளக்கம் கூறிய லேவியர்களும் மக்கள் அனைவரையும் நோக்கி: 'இன்று கடவுளாகிய ஆண்டவரின் புனித நாள்; எனவே நீங்கள் அழுது புலம்பவேண்டாம். என்றனர்.' ஏனெனில் மக்கள் அனைவரும் திருச்சட்டத்தின் சொற்களைக் கேட்டதிலிருந்து அழுதுகொண்டிருந்தார்கள்." இங்கே ஆண்டவரின் வார்த்தையைக் கேட்ட மக்கள் உள்ளம் உடைந்து அழுகின்றார்கள்.

## உள்ளங்களைப் பற்றி எரியச் செய்யும் வார்த்தை

எம்மாவுஸ் நோக்கிப் பயணம் செய்த சீடர் தமக்குள் பேசிக்கொள்ளும்போது "அவர் வழியில் நம்மோடு பேசி மறைநூலை விளக்கும் போது நம் *உள்ளம் பற்றி எரியவில்லையா*" என்கின்றனர் (லூக்.24:32). இங்கே எம்மாவுஸ் சீடர்கள் ஆண்டவர் தம்மோடு பேசியபோது உள்ளம் பற்றி எரிகின்ற அனுபவத்தைப் பெறுகின்றனர்.

## உள்ளங்களைக் குத்தி ஊடுருவும் வார்த்தை —

"அவர்கள் இதைக்கேட்டு *உள்ளம் குத்தப்பட்டவர்களாய* பேதுருவையும் மற்றத் திருத்தூதர்களையும் பார்த்து, சகோதரரே நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டார்கள்" (தி.ப.2:37). தூய ஆவியை பெற்றுக்கொண்டபின்னர் திருத்தூதர் பேதுருவின் முதல் உரையைக் கேட்ட மக்களின் நிலை உள்ளம் குத்தப்பட்ட அனுபவத்தைப் பெறுகின்றனர்.

இப்படியாக இறைவன் பேசுகின்றபோது, உள்ளம் உடைந்து அழுகின்றவர்களாக, உள்ளம் பற்றி எரிகின்றவர்களாக, உள்ளம் குத்தப்பட்டவர்களாக மக்கள் இருக்கின்றார்கள்.

## இறைவார்த்தையின் இயக்காற்றல்


“கடவுளுடைய வார்த்தை உயிருள்ளது; ஆற்றல் வாய்ந்தது; இரு பக்கமும் வெட்டக்கூடிய எந்த வாளினும் கூர்மையானது; ஆன்மாவையும் ஆவியையும் பிரிக்கும் அளவுக்குக் குத்தி ஊடுருவுகிறது; எலும்பு மூட்டையும் மச்சையையும் அவ்வாறே ஊடுருவுகிறது; உள்ளத்தின் சிந்தனைகளையும் நோக்கங்களையும் சீர்தூக்கிப் பார்க்கிறது” (எபிரேயர்.4:12).

“இறைவாக்குகளைப் படிப்போரும் இவற்றைக் கேட்போரும் இந்நூலில் எழுதியுள்ளவற்றைக் கடைப்பிடிப்போரும் பேறு பெற்றோர்”(தி.வெ.1:3).

இறைவார்த்தையின் ஆற்றல், சக்தியை உணரும்போது அதை மென்மேலும் வாசிக்க வேண்டும் என்ற உணர்வு நமக்கு ஏற்பட வேண்டும். இறைவார்த்தையைப் பயன்படுத்தி செபிக்கின்ற செபம் அதிக நன்மை பயப்பதாக உள்ளது. இறைவார்த்தைப் பகுதிகளை ஆறுதலாக வாசித்து, உள்ளத்தைத் தொடும் வார்த்தைகள் அல்லது வசனங்கள் வருகின்றபோது சற்று நிறுத்தி அமைதியில் தியானிப்பது நன்று.

திருவிவிலியத்தில் இறைமனிதர்கள் செபித்த செபங்கள் பல இடங்களில் உள்ளன. அவை இன்றும்கூட நமது மனநிலையைப் பிரதிபலிப்பனவாகவே உள்ளன. அச்செபங்களை நமது உணர்வுகளாக்கிச் செபிக்கலாம்.

# திருவிவிலியத்தில் இடம்பெற்றுள்ள செபங்கள்



திருவிவிலியத்தில் இடம்பெற்றுள்ள செபங்கள் இப்பகுதியில் தொகுக்கப் பட்டுள்ளன. இச்செபங்களை ஒவ்வொரு முறை படிக்கும் பொழுதும் அவைகளில் காணப்படும் உறுதியான நம்பிக்கை நமக்கு இன்றும் வழிகாட்டியாகவும், உற்சாகம் அளிப்பதாகவும் அமைந்துள்ளன.

எடுத்துக்காட்டாக வரிசை எண் 12ல் தொகுக்கப் பட்டுள்ள, சாலமோன் அரசர் தாம் கட்டிமுடித்த ஆலய அபிஷேகத்தின் பொழுது மக்களுக்காக அவர் மன்றாடிய செபம் உலகப் புகழ்பெற்றது. அந்த ஆலயத்திற்கு எக்காலத்திலும் வரும் மக்களுக்காக அவர் தமது இளவயதில் மன்றாடிய விதம் நமக்கு பெரிதும் வியப்பளிக்கும் வகையில் உள்ளது.

வரிசை எண் 31,34,64,68 ஆகியவற்றில் உள்ள எஸ்தர், யூதித்து, சின்ன தோபியாஸ், மற்றும் அவரது மனைவி சாரா மற்றும் யூதித்து போன்ற இளவயதினர் உறுதியான நம்பிக்கையுடன் செய்த தங்கள் செபங்களினால் அவர்கள் மேற்கொண்ட பணிகளில் வெற்றி பெற்றனர். அவர்களின் செபங்கள் இப்பொழுதும் நமக்கு ஊக்கமாக அமைகின்றன. இவைபோன்று ஏனைய செபங்களும் அனைவருக்கும் பயனளிப்பதாக உள்ளன.

வலுவூட்டும் வார்த்தைகளும் பொலிவூட்டும் பொருளும் செறிந்த இச்செபங்களை பல்வேறு நிலையினரும் பல்வேறு தேவைகளில் பயன்படுத்தலாம்.

## I) இறந்தவர்களை உயிர்ப்பிக்க

01. இயேசு: இலாசரின் கல்லறையில்...................... யோ.11:38-44

02. பேதுரு: இறந்துபோன தபிதாவை
உயிர்ப்பிக்க ........................................................ திப.9:36-41

03. எலியா: விதவையின் இறந்த மகன்
உயிர் பெறுவதற்காக ................................. 1அர.17:17-23

## II) இறைவனுக்கு நன்றி செலுத்தி

04. சீராக் மகன் இயேசு: அழிவினின்று
தம்மைக் காத்ததற்கு ................................சீஞா.51:1-12

05. தானியேல்: தமக்கு மிகுந்த
திறமை கொடுத்தமைக்கு............................. தானி.2:17-24

06. தானியேல் தோழர் அசாரியா:
நெருப்புச் சூளையின் நடுவில்நின்ற தமக்கு
இரக்கம் காட்டி காத்தமைக்கு .................. தானி.(இ)1:1-27

07. தானியேலின் தோழர்கள் மூவர்:
சூளையினின்று காப்பாற்றப்பட்டதற்கு ............ தானி.(இ)3:24-31

## III) எதிரிகளிடமிருந்து விடுதலை பெற

08. தானியேல்: யூத குல மக்கள் அடிமை
வாழ்விலிருந்து விரைவில் விடுபட ..............தானி.9:2-19

09. தாவீது: சவுல் அரசனிடமிருந்து தம்மைப்
பாதுகாக்க ................................................. சாமு.23:7-14

10. மனாசே: அசீரிய நாட்டு அரசனிடமிருந்து
தாம் விடுதலைப்பெற .............................2 குறி.33:9-13

11. யாக்கோபு: தனது தமையன் ஏசாவிடமிருந்து
காப்பாற்றும்படி ....................................... தொநூ.32:3-21;33:1-4

## IV) கடவுளின் ஆசிகேட்டு

12. சாலமோன்: தான் கட்டிய எருசலேம்
தேவாலய அர்ச்சிப்பின்போது ......................... 1அர.8:22-54

13. தாவீது: தாம் அரசராகும் தருணத்தில்
தமக்கு வழிகாட்டும் படிக்கு .......................... 2சாமு.2:1-4

14. தாவீது: தம்மையும் தம் அரசினையும்
என்றென்றும் ஆசீர்வதிக்க ....................... 2சாமு.7:10-29

15. நல்ல கள்ளன்: தனது மீட்புக்காக ......... லூக்.23:39-43

16. யாக்கோபு: இரவில் இறைவனுடன்
போராடுகையில் ................................ தொநூ.32:23-30

17. யாபேசு: சொத்துக்கள் பெருகிடவும்,
தீமையிலிருந்து தம்மைக் காத்தருள்வும் ....1குறி.4:10

## V) கடவுளின் இரக்கம் பெற

18. எஸ்ரா: யூதர் குல ஆடவர் புற இனப்
பெண்களை மணந்ததால் ஏற்பட்ட
பாவத்திற்கு மன்னிப்பு பெற .......................எஸ்ரா 10:1-19,
எஸ்ரா 9:5-15

19. காயின்: கடவுள் தம்மீது இரக்கம் காட்ட தொநூ.4:8-16

20. சீராக் ஆசிரியர்: கடவுளின் இரக்கம் பெற சீஞா.39:1-17

21. தாவீது: தம்மீது தயை காட்டும்படி ........ தி.பா.அதி 25 – 28

22. நெகேமியா: அடிமைத்தனத்திலிருந்து
மீண்டுவந்த யூதர்களுக்கு இரக்கம் காட்ட .... நெகே.1:1-11

23. மோசே: இஸ்ரயேலர் பாவமன்னிப்புப்பெற..விப.32:30-35

## VI) ஞானம் அருள வேண்டி

24. சாலமோன்: தம் மக்களுக்கு
நீதி வழங்குவதற்கான ஞானம் கிடைக்க .... 1அர.3:4-15

25. ஞான ஆகம ஆசிரியர்:
தமக்கு ஞானம் அருளும்படி ....................... சாஞா.அதி 9

## VII) தமக்கு குழந்தைப்பேறு கிடைக்க

26. அன்னா: தமக்கு ஒரு மகன் பிறக்க ...... 1சாமு.1:10-20

27. ஆபிரகாம்: தனக்கு ஒரு மகன் பிறக்க ...தொநூ.15:1-6

28. ஈசாக்: தமக்குக் குழந்தைகள் பிறப்பதற்கு ...... தொநூ.25:20-21

## VIII) எதிரிகளிடமிருந்து காப்பாற்றப்பட

29. எசேக்கியா: தமது மக்கள் விடுதலைபெற ......... 2 அர 19:9-37

30. எரேமியா: யூதேயா நாட்டினரைக் காக்க........... எரே அதி 42

31. எஸ்தர்: தனது மக்களைக் காக்கவும்,
எதிரிகளை அழிக்கவும் வேண்டி .................எஸ் (கி) 4:1-17
அதி 5, 6, 7, 8, 9

32. மொர்தெகோய்: மக்கள் காக்கப்பட .......எஸ் (கி) 3:7-15;
4:15-17; 17(a) – 17(z)

33. கிதியோன்: எதிரிகளிடமிருந்து மீட்புப்பெற..நீதி.த 6:33-40; 7:4-25

34. யூதித்து: தம் நாட்டின்மீது படையெடுத்த
ஒலோபெரின் எனும் தலைவனை அழிக்க .....யூதி அதி 9, 13

35. யோசபாத்: எதிரிகளிடமிருந்து பாதுகாக்க 2குறி.20:5-30

## IX) தமது படைகள் வெற்றிபெற

36. ஆசா: தனது படைக்கு வெற்றி கிடைக்க 2குறி.14:9-16

37. அபியாவின் படைகள்: வெற்றிக்காக ..... 2குறி.13:13-20

38. எலிசா: படைகளை வெற்றிகொள்ள ........2அர.6:8-23

39. சாமுவேல்: பிலிஸ்தியர்களை முறியடிக்க 1சாமு.7:2-11

40. யோசுவா: படைகளை வெல்வதற்கு .........யோசு அதி 7

41. ரூபனின் புதல்வர்கள்:
எதிரிகளைப் போரில் வெல்வதற்கு ...............1குறி.5:18-22

## X) நல்ல உடல் வலிமை பெற

42. சிம்சோன்: உடற்பலம் மீண்டும் கிடைக்க ........ நீதி.த16:21-30

43. பவுல்: உடல் வலிமையோடு வாழ்வதற்கு ...... 2கொரி.12:7-10

## XI) நோயுற்றவர் குணமடைய

44. எசேக்கியா:
மரண நோயிலிருந்து தாம் சுகம்பெற ............ 2அர.20:1-11

45. பவுல்: புப்லியுவின் தந்தை குணம்பெற .... திப 28:7-10

46. தொழுநோயாளி:
இயேசு தம்மைக் குணப்படுத்த .......... மத்.8:1-4;

47. நூற்றுவர் தலைவர்: மகன் குணமடைய .. மத்.8:5-13

48. மோசே: மிரியாவின் தொழுநோய் நீங்க .. எண்.12:1-15

## XII) வறட்சி நிலை அகன்றிட

49. எரேமியா: யூதேயா வறட்சியைப் போக்க.. எரே.14:19-22

50. எலியாவின் வலிமை மிக்க மன்றாட்டு யாக்.5:16-18

## XIII) வேறு பல காரணங்களுக்காக

51. ஆபிரகாம்: சோதோம் நகர்காப்பாற்றப்பட தொ.நூ.18:20-32

52. ஆபிரகாம்: அபிமெலக் மற்றும்
அவரது குடும்பத்தினருக்காக ...................... தொநூ.20:14-18

53. ஆபிரகாமின் ஊழியர்:
மணப்பெண்ணைத் தேர்வு செய்ய ................ தொநூ.24:2-53

54. ஆதிகிறிஸ்தவர்கள்: ஊழியர் துணிவுபெற திப.4:18-32

55. இயேசு கற்பித்த செபம் ......................... மத்.6:9-15;

56. இயேசு: மன்னிக்கும்படி ......................... லூக்.23:33-34

57. இயேசு: துன்பங்களிலிருந்து விடுபட ........ மத்.26:36-44

58. இயேசு: திருச்சபைக்காக ...................... யோவா.17:1-26

59. இரெபேக்கா: தனக்குப் பிறக்கவிருக்கும்
குழந்தைகள் சமாதானமாக வாழ்வதற்கு... தொநூ.25:21-26

60. எரேமியா: தம்மைத் திருத்துவதற்காக .... எரே.10:23-25

61. எலியா: பாகாலின் தீர்க்கதரிசிகளை
வெல்வதற்கு........................................1அர.18:16-40

62. கொர்னேலியு: பேதுருவின்
போதனைகளைக் கேட்பதற்காக ...............திப.10:1-8, 17-37

63. சிம்சோன்: வனாந்திரத்தில் நீருக்காக .......நீதி.15: 12-20

64. சாரா : துன்பங்கள் விலகுவதற்கும்,
தனக்கு நல்ல கணவன் கிடைப்பதற்கும் ..... தோபி.3: 7-17

65. பவுல்: எபேசியருக்காக ..............................எபே.3:12-21

66. தாவீது: நீதி வழங்கிட.......................... தி.பா.அதி 9, 10

67. தோபித்து (பெரிய): தாம் அமைதியாக
இளைப்பாற கட்டளையிடும்படி ...................தோபி.2:11-14;
தோபி.3:1-6, 16-17

68. தோபித்தும் (சிறிய) சாராவும்:
தங்களுக்கு நல்மணவாழ்வு கிடைக்கும்படி தோபி.8:1-18

69. மோசே: தவளைகளை ஒழிக்க .............விப.8:9-15

70. மோசே: தண்ணீர் சுவை மாறுவதற்கு ....விப.15:22-25

71. மோசே: தமக்குப்பின் தலைமை ஏற்க
ஒருவரைத் தேர்ந்தெடுக்க .......................எண்.27:12-23

72. மோசே: வாக்களிக்கப்பட்ட பூமியை
தமக்குக் காண்பிப்பதற்கு .......................இச.3:23-28

73. எஸ்ரா: இஸ்ரயேலர் பயணம்
பாதுகாப்பாக அமைய ..............................எஸ்ரா.8:21-23

74. இஸ்ரயேலர்: அனைவரும் முழுமனதோடு
கடவுளைத் தேட உடன்படிக்கை செய்தல் ....2குறி.15:1-15

75. யோனா: மீனின் வயிற்றிலிருந்து வெளிவர யோனா.1:15-17;
யோனா அதி 2



# 9.4

# வேண்டுதல் செபம்



இறைவனால் படைக்கப்பட்ட நாம் நம்முடைய தேவைகளுக்காக அவரிடமே கையேந்த வேண்டியவர்களாக உள்ளோம். நம்முடைய தேவைகளுக்காக நாம் அவரிடம் சென்றால் அவர் நம்மை புறக்கணிக்க மாட்டார். “மேலும் நான் உங்களுக்கு சொல்கிறேன்: கேளுங்கள், உங்களுக்குக் கொடுக்கப்படும்: தேடுங்கள், நீங்கள் கண்டடைவீர்கள்: தட்டுங்கள் உங்களுக்குத் திறக்கப்படும். ஏனெனில் கேட்போர் எல்லாரும் பெற்றுக்கொள்கின்றனர்: தேடுவோர் கண்டடைகின்றனர்: தட்டுவோருக்குத் திறக்கப்படும்” (லூக்.11:9-10).

“நம்முடைய தேவைகளையும் நாம் அன்பு செய்பவர்களுடைய தேவைகளையும் பிறருடைய தேவைகளையும் இறைவனிடம் சொல்லி அவர் உதவியைக் கோரவேண்டும்” எனக் கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வி நூல் - கிறிஸ்தவ வாழ்வில் செபம் - என்ற பகுதி குறிப்பிடுகின்றது. “அனைவருக்காகவும் மன்றாடுங்கள்: இறைவனிடம் வேண்டுங்கள்: பரிந்து பேசுங்கள்: நன்றி செலுத்துங்கள். முதன்முதலில் நான் உங்களுக்குத் தரும் அறிவுரை இதுவே.”(1 திமொ.2:1) என்கிறார் புனித பவுல்.

## கடவுளே கடவுளே எனக் கூப்பிடு கடவுள் வருவார்

கடவுள் தம்முன் தோன்றித் தரிசனம் தரவேண்டும். கடவுள் தம்மை ஆசீர்வதிக்கவேண்டும் என்று ஒரு வேள்வி நடைபெற்றுக் கொண்டிருந்தது. வேள்விக்கான பொருட்கள் எல்லாம் படைக்கப்பட்டிருந்தன. குருக்களும், வேதியர்களும், வேதம் ஓதிக்கொண்டிருந்தனர்.


அவ்வேளையில் அந்த யாக அறையினுள் ஆற்றில் மீன்பிடிக்கும் செம்படவன் ஒருவன் நுழைந்தான். அவனைக் கண்டதும் குருக்கள் முகம் சுளித்தனர், ஆத்திரம் கொண்டனர். "உனக்கு இங்கு என்ன வேலை? ஏன் வந்தாய்? சீக்கிரம் சென்றுவிடு" என்று குரு சினந்தார். ஆனால் அந்த ஏழைச் செம்படவனோ, மிகவும் தாழ்ச்சியாக, "குருவே நான் கடவுளைக் காண என்ன செய்யவேண்டும் சொல்லுங்கள்" என்று கேட்டான். அதற்குக் குரு, "நீ இங்கு கடவுளைக் காண முடியாது," என்று திட்டவட்டமாகக் கூறினார்.

"அப்படியானால் நான் கடவுளைக் காண என்ன செய்ய வேண்டும்" என்று அம்மனிதன் கேட்டான். குரு ஏளனமாக, "நீ தினமும் வலை வீசுகின்ற அந்த ஆற்றுக்குச் செல். அங்கு சென்றதும் ஆற்றில் இறங்கி உனது மூக்கைப் பொத்திக்கொண்டு கடவுளே கடவுளே எனக் கூப்பிடு. கடவுள் வருவார்" என்றார்.

குருவின் வாக்கில் நம்பிக்கை கொண்ட அந்தச் செம்படவன் ஆற்றுக்கு வந்தான். குரு தனக்குச் சொன்னபடியே ஆற்றில் இறங்கினான். தனது மூக்கைப் பொத்திக்கொண்டு "கடவுளே கடவுளே" என்று மிகுந்த நம்பிக்கையோடு அழைத்துச் செபித்தான். கடவுளும் அவனுடைய வேண்டுதலைக் கேட்டார், தரிசனம் தந்தார்.கடவுளின் தரிசனம் வேண்டி வேள்வி நடத்தப்பட்ட இடத்திலோ இறைவன் தரிசனம் கொடுக்கவில்லை.

ஆம், நம்பிக்கையோடு கேட்கும் வேண்டுதல்களுக்கு இறைவனிடமிருந்து பதில் அளிக்கப்படுகின்றன. "எதைப்பற்றியும் கவலைப்பட வேண்டாம். ஆனால் நன்றியோடு கூடிய இறை வேண்டல், மன்றாட்டு ஆகிய அனைத்தின் வழியாகவும் கடவுளிடம் உங்கள் விண்ணப்பங்களைத் தெரிவியுங்கள். அப்பொழுது, அறிவெல்லாம் கடந்த இறை அமைதி கிறிஸ்து இயேசுவோடு இணைந்துள்ள உங்கள் உள்ளத்தையும் மனத்தையும் பாதுகாக்கும். (பிலி.4:6-7).

## செபங்களுக்குச் செவிசாய்க்கும் கடவுள்



"கடவுளை நோக்கி உரத்த குரலில் மன்றாடுகின்றேன். கடவுள் எனக்குச் செவிசாய்த்தருள வேண்டுமென்று அவரை நோக்கி மன்றாடுகின்றேன்." (தி.பா.77:1). கடவுளிடம் நாம் விண்ணப்பிக்கும்போது அவர் நமது வேண்டுதல்களைக் கேட்டு பதில் தருகின்றவராக இருக்கின்றார். "அவர் விடாப்பிடியாக கதவைத் தட்டிக்கொண்டே இருந்தால் அவர் தம் நண்பர் என்பதற்காக எழுந்து கொடுக்காவிட்டாலும் அவரது தொல்லையின் பொருட்டாவது எழுந்து அவருக்குத் தேவையானதைக் கொடுப்பார்" (லூக்.11:5-8).

மனிதர்கள் தமது தேவையை நிறைவு செய்ய படைத்த இறைவனையே நம்பி இருக்கின்றனர். நாம் நம்பிக்கையோடு - விடாப்பிடியாக இறைவனிடம் வேண்டினால் அவர் நிச்சயம் நமது வேண்டுதலைக் கேட்டு நமது தேவையை நிறைவுசெய்வார். இறைத்தந்தையின் பராமரிப்பில் நம்பிக்கை வைக்கும்படி இயேசு பல இடங்களில் சுட்டிக்காட்டுகின்றார் (மத்.6:25-34).

சிலவேளைகளில் நமது வேண்டுதல் கேட்கப்படாததுபோல் நமக்குத் தென்பட்டாலும் அதுவும் நமது நன்மைக்கான இறைவனின் திருவுளமே என்று ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவம் நமக்கு வேண்டும். "நீங்கள் இறைவனிடம் வேண்டும்பொழுது பிச்சைக்காரராய் இல்லாமல், உரிமைப் பிள்ளைகளாய் கேளுங்கள்" என்று அன்னை திரேசா அடிக்கடி சொல்வார்.

## பரிந்துரைச் செபம்

பரிந்துரைச் செபம் என்பது மற்றவர்களின் தேவைகளுக்காக நாம் செபிக்கும் செபமாகும். சமூகப் பிராணிகளான நாம் ஒருவர் மற்றவரில்

தங்கி வாழ்கின்றோம். செபத்திலும் நாம் தங்கி இருக்கின்றோம். பரிந்துரைச் செபம் செய்வதன் ஊடாக ஒருவர் மற்றவரில் வைத்திருக்கும் அக்கறையை வெளிப்படுத்துகின்றோம். இந்த ஒன்றிப்பால் இறைவன் மகிழ்கின்றார்; திருச்சபை வளர்கின்றது; திருச்சபை சான்று பகர்கின்றது; ஒளிவிளக்காகின்றது; இயேசுவைப்போல் நாமும் மற்றவர்களுக்காக செபிக்க அழைக்கப்படுகின்றோம். "பிறர்மயமான வேண்டுதல்கள் கேட்கப்படுகின்றன" என்கிறார் அன்னை தெரேசா.

## எவற்றிற்காகச் செபிக்க வேண்டும்?

நாம் எவற்றிற்காகச் செபிக்க வேண்டும் என இறைவார்த்தை நமக்கு அறிவுறுத்துகின்றது. இறைவார்த்தை கூறுகின்ற இந்த வழியில் செபிக்கின்றபோது நாம் சரியான செபங்களை ஏறெடுக்கின்றோம் என்று துணியலாம். "அனைவருக்காகவும் மன்றாடுங்கள்; இறைவனிடம் வேண்டுங்கள்; பரிந்து பேசுங்கள்; நன்றி செலுத்துங்கள். முதன் முதலில் நான் உங்களுக்குத் தரும் அறிவுரை இதுவே" (1திமொ.2:1-2).

### அன்றாட உணவுக்காகச் செபியுங்கள்

"இன்று தேவையான உணவை எங்களுக்குத் தாரும்" (மத்.6:11).

### குற்றங்களை மன்னிக்கும்படி செபியுங்கள்

"எங்களுக்கு எதிராகக் குற்றம் செய்தோரை நாங்கள் மன்னித்துள்ளதுபோல எங்கள் குற்றங்களை மன்னியும்" (மத்.6:12).

### சோதனைக்கு உட்படாதிருக்கச் செபியுங்கள்

"எங்களைச் சோதனைக்கு உட்படுத்தாதேயும்" (மத்.6:13).

### சாத்தானை விரட்டச் செபியுங்கள்

"அவர் வீட்டில் நுழைந்ததும் அவருடைய சீடர் அவரிடம் தனியாக வந்து, "அதை ஏன் எங்களால் ஓட்ட இயலவில்லை? என்று கேட்டனர். அதற்கு அவர், இவ்வகைப்பேய் இறை வேண்டலினாலும் (நோன்பினாலும்) அன்றி வேறு எதனாலும் வெளியேறாது என்றார்" (மாற்.9:28-29)

### துன்புறுத்துவோருக்காகச் செபியுங்கள்

"உங்கள் பகைவரிடமும் அன்புகூருங்கள். உங்களைத் துன்புறுத்துவோருக்காக இறைவனிடம் வேண்டுங்கள். இப்படிச் செய்தால் நீங்கள் உங்கள் விண்ணகத் தந்தையின் மக்கள் ஆவீர்கள்" (மத்.5:43-45)

## அறுவடைக்கு ஆட்களை அனுப்பும்படி செபியுங்கள்

"திரண்டிருந்த மக்களை அவர் கண்டபோது அவர்கள்மேல் பரிவுகொண்டார்: அவர்கள் ஆயர் இல்லா ஆடுகளைப்போல அலைக்கழிக்கப்பட்டு சோர்ந்து காணப்பட்டார்கள். அப்பொழுது அவர் தம் சீடரை நோக்கி, அறுவடையோ மிகுதி: வேலையாள்களோ குறைவு. ஆகையால் தேவையான வேலையாள்களை அனுப்பும்படி அறுவடையின் உரிமையாளரிடம் மன்றாடுங்கள் என்றார்" (மத்.9:36-38).

## தூய ஆவியைப் பெறச் செபியுங்கள்



"பிள்ளை மீனைக்கேட்டால் உங்களுள் எந்தத் தந்தையாவது மீனுக்குப் பதிலாகப் பாம்பைக் கொடுப்பாரா? முட்டையைக் கேட்டால் அவர் தேளைக்கொடுப்பாரா? தீயோர்களாகிய நீங்களே உங்கள் பிள்ளைகளுக்கு நற்கொடைகள் அளிக்க அறிந்திருக்கிறீர்கள். அப்படியானால் விண்ணகத் தந்தை தம்மிடம் கேட்போருக்குத் தூய ஆவியைக் கொடுப்பது எத்துணை உறுதி" (லூக்.11:11-13).

## ஆள்வோருக்காகச் செபியுங்கள்

"இறைபற்றும் கண்ணியமும் நிறைந்தவர்களாய், தொல்லையின்றி அமைதியோடு வாழ அரசர்களுக்காகவும், உயர் நிலையிலுள்ள எல்லா மனிதர்களுக்காகவும் மன்றாடுங்கள். இதுவே நம் மீட்பராகிய கடவுளின் முன் சிறந்ததும் ஏற்புடையதுமாகும்." (1திமொ.2:2-3).

## நோயுற்றோருக்காக செபியுங்கள்

"உங்களுள் யாரேனும் நோயுற்றிருந்தால், திருச்சபையின் மூப்பர்களை அழைத்து வாருங்கள். அவர்கள் ஆண்டவரது பெயரால் அவர் மீது எண்ணெய் பூசி இறைவனிடம் வேண்டுவார்கள். நம்பிக்கையோடு இறைவனிடம் வேண்டும்போது நோயுற்றவர் குணமாவார்" (யாக்.5:14-18).



# 9.5

# நன்றிச் செபம்



இதய உணர்வுகளில் மிகச் சிறந்த உணர்வு நன்றி உணர்வாகும். நமது சாதாரண வாழ்க்கையில் மற்றவர்கள் நமக்குச் செய்த நன்மைகளுக்கு நன்றி தெரிவிக்கின்றோம். 'நன்றி' (Thank You) என்ற வார்த்தையை அடிக்கடி பயன்படுத்துகின்றோம். எந்த நிகழ்வுகளின் இறுதியிலும் நன்றி உரை நிகழ்த்துவதை கட்டாய கடமையாகக் கொண்டிருக்கிறோம். நன்றிக் கடிதங்களை, நன்றி மடல்களை அனுப்புகின்றோம்.


மனிதர்கள் நமக்குச் செய்த நன்மைகளுக்கு இந்த அளவில் நன்றி சொல்கின்றோம் என்றால் நம்மைப் படைத்து, பராமரித்து, உயிர் தந்த இறைவனுக்கு நாம் எந்தளவுக்கு நன்றி சொல்ல வேண்டும்!

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்; உய்வு இல்லை
செய்நன்றி கொன்ற மகற்கு"

எந்த அறத்தை அழித்தவர்க்கும் தப்பிப் பிழைக்க வழி உண்டு. ஆனால் ஒருவர் செய்த நன்றியை மறந்தவர்க்கு உயர்வே கிடையாது என்பது இதன் பொருள். எனவே நமக்கு எல்லாமாக இருந்து அனைத்தையும் செய்யும் இறைவனுக்கு நாம் நன்றி கூறாமல் இருக்க முடியுமா?

"கடவுளின் நன்மைத்தனங்களுக்கும் அவர் வழங்கும் அனைத்துக் கொடைகளுக்கும் நன்றி சொல்ல வேண்டும்" (கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வி நூல் - கிறிஸ்தவ வாழ்வில் செபம்) "எல்லாச் சூழ்நிலையிலும் நன்றி கூறுங்கள். உங்களுக்காகக் கிறிஸ்து இயேசு வழியாய்க் கடவுள் வெளிப்படுத்திய திருவுளம் இதுவே" (1தெச.5:18)

## நன்றியால் நிறைந்திருக்கும் திருவிவிலியம்



திருவிவிலியம் முழுவதும் நன்றி என்ற வார்த்தை பல இடங்களில் இடம்பெறுகின்றது. முழுத் திருவிவிலியத்திலும் 288 தடவை நன்றி என்ற வார்த்தை வருகின்றது. திருப்பாடல்கள் நூலில் மட்டும் நன்றி என்ற வார்த்தை 77 தடவை வருகின்றது. ஆண்டவருக்கு நன்றி செலுத்துங்கள் என்று மீண்டும் மீண்டும் சொல்லப்படுகின்றது. 136வது திருப்பாடலில் மீட்பு வரலாற்றிலே இறைவன் செய்த அற்புதச் செயல்களை நினைவுகூர்ந்து, இவற்றை எல்லாம் செய்தவருக்கு நன்றி கூறுங்கள் என 26 செயல்கள் நினைவுகூரப்பட்டு ஆண்டவருக்கு நன்றி கூறப்படுகின்றது.

"ஆண்டவருக்கு நன்றி செலுத்துங்கள்: அவர்தம் பெயரைச் சொல்லி வழிபடுங்கள்: அவர்தம் செயல்களை மக்களினங்கள் அறியச் செய்யுங்கள்" (1குறி.16:8)

"ஆண்டவருக்கு நன்றி செலுத்துங்கள்! ஏனெனில், அவர் நல்லவர்: என்றென்றும் உள்ளது அவரது பேரன்பு!" (1குறி.16:34)

## திருப்பாடல் ஆசிரியரின் நன்றி உணர்வு

தி.பா.7:17 ஆண்டவர் வழங்கிய நீதிக்காக அவருக்கு நன்றி கூறுவேன்: உன்னதரான ஆண்டவரின் பெயரைப் போற்றிப்பாடுவேன்.

தி.பா.26:7 உரத்த குரலில் உமக்கு நன்றிப்பா பாடுகின்றேன்: வியத்தகு உம் செயல்களை எல்லாம் எடுத்துரைக்கின்றேன்:

தி.பா.28:7 ஆண்டவர் என் வலிமை, என் கேடயம்: அவரை என் உள்ளம் நம்புகின்றது: நான் உதவி பெற்றேன்: ஆகையால் என் உள்ளம் களிகூர்கின்றது: நான் இன்னிசை பாடி அவருக்கு நன்றி கூறுவேன்.

தி.பா.33:2 யாழிசைத்து ஆண்டவருக்கு நன்றி செலுத்துங்கள்: பதின் நரம்பு யாழினால் அவரைப் புகழ்ந்து பாடுங்கள்:

தி.பா.35:18 மாபெரும் சபையில் உமக்கு நன்றி செலுத்துவேன்: திரளான மக்களிடையே உம்மைப் புகழ்வேன்.

தி.பா.75:1 உமக்கு நன்றி செலுத்துகின்றோம்: கடவுளே, உமக்கு நன்றி செலுத்துகின்றோம்: உமது பெயரைப் போற்றுகின்றோம்: உம் வியத்தகு செயல்களை எடுத்துரைக்கின்றோம்.

தி.பா.92:1 ஆண்டவருக்கு நன்றியுரைப்பது நன்று: உன்னதரே! உமது பெயரைப் புகழ்ந்து பாடுவது நன்று.

தி.பா.95:2 நன்றியுடன் அவர் திருமுன் செல்வோம்: புகழ்ப்பாக்களால் அவரைப் போற்றி ஆர்ப்பரிப்போம்.

தி.பா.100:4 நன்றியோடு அவர்தம் திருவாயில்களில் நுழையுங்கள்! புகழ்ப்பாடலோடு அவர்தம் முற்றத்திற்கு வாருங்கள்! அவருக்கு நன்றி செலுத்தி, அவர் பெயரைப் போற்றுங்கள்!

தி.பா.105:1 ஆண்டவருக்கு நன்றி செலுத்துங்கள்! அவர்தம் பெயரைச் சொல்லி வழிபடுங்கள்! அவர்தம் செயல்களை மக்களினங்கள் அறியச் செய்யுங்கள்.

## நன்றி மறவாத நல்ல சிங்கம்

உரோமை நகரில் ஆண்டிராக்கல்ஸ் என்ற அடிமை ஒருவன் இருந்தான். இந்த அடிமை ஒருநாள் தனது எசமானின் வீட்டிலிருந்து தப்பிச்சென்று விடுகின்றான். தப்பிச்சென்ற ஆண்டிராக்கல்ஸ் தனது பாதுகாப்பிற்காக காட்டிற்குள் போகின்றான்.

காட்டிற்குள் சென்ற அவனை நோக்கி சிங்கம் ஒன்று வந்துகொண்டிருந்தது. சிங்கத்தைக் கண்ட அம்மனிதன் நடுங்கினான். ஆனால் அடிமையை நோக்கி வந்த சிங்கம் அவன்முன்னே மண்டியிட்டுத் தனது ஒரு காலை உயர்த்திக் காட்டியது.

சிங்கத்தின் காலை உற்றுப்பார்த்த ஆண்டிராக்கல்ஸ் அதன் காலில் பெரிய முள் ஒன்று குத்தியிருப்பதையும் அதன் வலியைத் தாங்க



முடியாமல் சிங்கம் தவிப்பதையும் கண்டான். அதன்மீது இரக்கம் கொண்டான். தன் பற்களால் கடித்து அந்த முள்ளை வெளியே இழுத்தெடுத்தான். சிங்கத்தின் காயம் ஆறும்வரை அதற்கு மருந்துகட்டினான்.

காயம் ஆறியதும் காட்டைவிட்டு வெளியேறினான். நாட்டுக்குள் நுழைந்த ஆண்டிராக்கல்ஸ் கைதுசெய்யப்பட்டான். அவனுக்கு மரண தண்டனை தீர்ப்பாக வழங்கப்பட்டது. மரணத்தீர்ப்பு பெற்ற மனிதர்களைக் கொடிய விலங்குகளுக்கு இரையாகக் கொடுப்பது வழக்கம். மரணத்திற்குரிய நாள் வந்ததும் ஆண்டிராக்கல்ஸ் முற்றவெளியில் நிறுத்தப்பட்டான்.

சிங்கத்தின் கூடு திறக்கப்பட்டது. பசியுடன் இருந்த சிங்கம் ஆண்டிராக்கல்ஸ்சை உண்பதற்குப் பாய்ந்து வந்தது. அணமித்து வந்த சிங்கம் அம்மனிதனைக் கண்டதும் தனது பசியை மறந்து அவன்முன் மண்டியிட்டு வணங்கியது.

இதனைக்கண்ட அனைவரும் ஆச்சரியம் அடைந்தனர். என்ன நடந்தது? ஆண்டிராக்கல்ஸ் காட்டில் உதவி செய்த அதே சிங்கம்தான் இது. அச்சிங்கம் தனது நன்றி உணர்வை வெளிப்படுத்தியது. விபரம் அறிந்ததும், சிங்கத்தையும் ஆண்டிராக்கல்ஸ்சையும் விடுதலை செய்தனர். ஆம் மிருகத்தின் நன்றியுணர்வு சிலவேளை மனிதர்களாகிய நமக்கு இல்லாமல்போவது ஆச்சரியமானதே.

## நன்றி கூறிச் செபிக்கும் இயேசு

இயேசுவின் செப வாழ்வு அனுபவத்தில் நன்றிகூறிச் செபிக்கும் அனுபவத்தை நற்செய்தியாளர்கள் குறிப்பிட்டுக்காட்டியுள்ளார்கள். அப்பங்களைப் பலுகச் செய்த புதுமையில் இயேசு நன்றிகூறிச் செபிக்கின்றார். "பின்பு அந்த ஏழு அப்பங்களையும் மீன்களையும்

எடுத்து, *கடவுளுக்கு நன்றி செலுத்தி,* பிட்டு, சீடர்களிடம் கொடுக்க, அவர்களும் மக்களுக்குக் கொடுத்தார்கள்" (மத்.15:36).

நற்கருணையை ஏற்படுத்தியபோதும் இயேசு கடவுளுக்கு நன்றி கூறுகின்றார். "பின்பு கிண்ணத்தை எடுத்துக் *கடவுளுக்கு நன்றி செலுத்தி* அவர்களுக்குக் கொடுத்து, இதில் உள்ளதை அனைவரும் பருகுங்கள்" (மத்.26:25).

இலாசரை உயிர்ப்பித்த வேளையிலும் இயேசு நன்றி கூறுகின்றார். "இயேசு அண்ணாந்து பார்த்து, 'தந்தையே, நீர் என் வேண்டுதலுக்குச் செவிசாய்த்ததற்காக **உமக்கு நன்றி கூறுகின்றேன்.** நீர் எப்போதும் என் வேண்டுதலுக்கு செவிசாய்க்கிறீர் என்பது எனக்குத் தெரியும்." (யோவா.11:41-42).

## இயேசுவுக்கு நன்றி செலுத்திய நல்ல சமாரியன்



"அவர்களுள் ஒருவர் தம் பிணி தீர்ந்திருப்பதைக் கண்டு உரத்த குரலில் கடவுளைப் போற்றிப் புகழ்ந்துகொண்டே இயேசுவிடம் திரும்பி வந்தார். அவருடைய காலில் முகங்குப்புற விழுந்து அவருக்கு நன்றி செலுத்தினார். அவரோ ஒரு சமாரியன்"(லூக்.1715-16).

குணம் அடைந்த பத்துப் பேரில் ஒருவர் மட்டும் தாம் குணமடைந்ததை அறிந்தவராகத் திரும்பிவந்து இயேசுவின் பாதத்தில் விழுந்து நன்றி கூறுகிறார். இயேசுவும் அவரைப் பாராட்டுகிறார். நன்றி கூறியவர் யூதர்களால் புறக்கணிக்கப்பட்ட, ஒதுக்கப்பட்ட சமாரியர் ஆவார். ஏனைய ஒன்பது பேரும் நன்றி மறந்தவர்களாவர்.

## எல்லாச் சூழ்நிலையிலும் நன்றிகூற முடியுமா?

"எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருங்கள். இடைவிடாது இறைவனிடம் வேண்டுங்கள். எல்லாச் சூழ்நிலையிலும் நன்றி கூறுங்கள்." (1தெச.5:16-18) பழைய மொழிபெயர்ப்பில் "என்ன நேர்ந்தாலும் நன்றி கூறுங்கள்" என இவ்வசனம் உள்ளது. "நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் பெயரால் எல்லாவற்றிற்காகவும் எப்போதும் தந்தையாம்

கடவுளுக்கு நன்றி செலுத்துங்கள்." (எபே.5:20).

எல்லாச் சூழ்நிலையிலும், எல்லாவற்றிற்காகவும் நன்றிகூற முடியுமா? என்ற கேள்வி எழுகின்றது. நன்மையானவை நடந்தால் நன்றி கூறலாம். நாம் விரும்பாத தீமைகள், துன்பங்கள் நேரிட்டால் எப்படி நன்றி கூற முடியும்? ஆனால் துன்பங்களுக்காகவும் நன்றி சொல்லும்படியே விவிலியம் நமக்கு அழைப்பு விடுக்கின்றது.

## நன்றி உணர்வில் நகரட்டும் வாழ்க்கை!



நன்றிச் செபம் செய்வது நமது கிறிஸ்தவ வாழ்வில் மிகவும் முக்கியமானதாகும். காரணம் நாம் அனைத்தையுமே இறைவனிடம் இருந்து இலவசமாகப் பெறுகின்றோம். நாளும் பொழுதும் நன்றி உணர்வு நம் உள்ளத்தில் மேலோங்கி நிற்கட்டும்.

ஆண்டவரே நன்றி, இயேசுவே நன்றி என்ற வார்த்தைகள் அடிக்கடி நம் உள்ளத்திலும் நாவிலும் எழட்டும். நமது செப வழிபாடுகளில் நன்றிச் செபத்தை முக்கியப்படுத்துவோம். நமது வாழ்வே நன்றியின் வாழ்வாக அமையட்டும்.

# இயல் 10

# செபமும் செயற்பாடும்

1. மலை அனுபவமா? மக்கள் அனுபவமா?
2. செயற்பாட்டை மையப்படுத்திய செபம்
3. ஆண்டவரை அயலவரில் காண்பது செபம்
4. வார்த்தையை வாழ்வதே செபம்
5. பணி வாழ்வுக்கு பலம் சேர்ப்பது செபம்

*இறைவனோடு நம்மை இணைக்கும்*
*செப உறவானது*
*பிறரோடும் சமுதாயத்தோடும்*
*பிற உயிர்களோடும்*
*படைப்புக்கள் அனைத்தோடும்*
*நம்மை உறவுகொள்ளச் செய்ய வேண்டும்.*


*வாழ்வே செபமாக மாறவேண்டும்.*
*செபமே வாழ்வாக மாறவேண்டும்!*
*பணி இன்றி செபத்திற்கு அர்த்தமில்லை.*
*செபம் இன்றி பணிக்கு ஆழமில்லை!*

*குறிப்பிட்ட நேரத்தில் தொடங்கி*
*குறிப்பிட்ட நேரத்தில் முடிவடையும்*
*சடங்கல்ல செபம். மாறாக*
*வாழ்வு முழுவதும் இழையோடி நிற்கும்*
*தொடர் தேடலே உண்மைச் செபம்.*

*நமது செபத்தின் அதிர்வுகள்*
*அனைத்து இடங்களிலும் அனைவராலும்*
*அனுபவிக்கப்பட வேண்டும்;*
*உணரப்பட வேண்டும்!*

> "நான்
> கிறிஸ்துவில்
> ஏழைகளைக்
> காண்கிறேன்.
> ஏழைகளில்
> கிறிஸ்துவைக்
> காண்கிறேன்"
> *(அன்னை திரேசா)*

> "கிறிஸ்தவனின் செபம்
> இரகசியமானதாகவே
> இருந்தாலும்
> அதன் விளைவுகள்
> பகிரங்கமானதாகவே
> இருக்கும்"
> - கவார்ட் ரொபின்சன்





# 10.1

# மலை அனுபவமா? மக்கள் அனுபவமா?



இயேசுவின் செபம் சமுதாயச் சூழலிலிருந்து அவரைத் தப்பிக்க அழைக்கவில்லை. மாறாகச் சிந்திக்கத் தூண்டியது. எதிர்கொள்ளத் தூண்டியது. தன் உயிரையே தியாகம் செய்யத் தூண்டியது. இயேசுவின் செயற்பாடு செபத்திற்கும் செபம் செயற்பாட்டிற்கும் இட்டுச்சென்றது.

இயேசு செபிக்கும் செயலை நற்செய்தி ஐந்து சொல்லாடல்கள் மூலம் தெளிவுபடுத்துகின்றது.

தனிமையாகச் சென்றார் (மாற்கு.1:35: 6:32).
கூட்டத்தை விட்டகன்றார் (யோவான்.6:15).
மலைக்கும் பாலைவனத்திற்கும் சென்றார் (லூக்.4:1).
வானத்தை நோக்கிப் பார்த்தார் (மாற்.6:41).
இரவைக் கழித்தார் (லூக்.6:12).

ஆனால் ஒவ்வொரு முறையும் இச்செயல் நடப்பதற்கு முன் அவர் மக்களோடிருந்தார் என்றும்; சீடரோடு நடந்துசென்றார் என்றும் நற்செய்தி கூறுகின்றது. எனவே மக்களோடிருந்தார்; பின் மலைக்குச் சென்றார். மனிதரோடு இருந்தார்; பின் தனிமைக்குச் சென்றார் என்பது செபத்திற்கும் செயற்பாட்டிற்கும் இடையே இருந்த ஒருங்கிணைப்பைச் சுட்டிக்காட்டுகிறது.

## இறைவனோடும் மக்களோடும் இயேசு!

பாலைவனப் புழுதியில் புழுதியோடு புழுதியாக, மணலோடு மணலாக இஸ்ராயேல் மக்களோடு மக்களாகப் பின்னிப் பிணைந்து வாழ்ந்த யாவே, தாவீது கட்ட விரும்பிய கோவிலில் வாழ விரும்பவில்லை. மக்களோடு தன்னையே இனம்கண்ட யாவே அவர்களோடு களத்தில் போராடுவதை சந்தோசம் என உணர்ந்தார்.

இறைவனோடும் மக்களோடும் தன்னை இணைத்துக்கொண்ட இயேசுவின் வாழ்வும் இதுதான். இரவில் அவர் பெற்ற மலை அனுபவம் (இறைவேண்டல் அனுபவம்) மக்கள் அனுபவத்திற்கு (மக்கள் பணிக்கு) அவரை அழைத்துச்சென்றது. மலை அனுபவம், மக்கள் அனுபவம் இரண்டும் தேவை!

செபம் என்ற பெயரில் ஓர் அறைக்குள், நான்கு சுவர்களுக்கு மத்தியில் கோவிலுக்குள் மட்டும் பூட்டிக்கொண்டு இருப்பதை மூடத்தனமாகத்தான் கருத முடியும். நான்கு சுவர்களை உடைத்தெறிந்து உலகிற்குள் குதிக்கவும், செபத்தால் செயல்படவும் உறுதிபெற வேண்டும். இறைவனோடு உள்ள உறவு மக்களை நோக்கி நாம் செல்லத் தூண்டவேண்டும். மக்களோடு உள்ள உறவு இறைவனை நோக்கிச் செல்லத் தூண்டவேண்டும்.

## மேசை, செருப்பு சொர்க்கம் போனால் நீயும் போவாய்

சுவாமி விவேகானந்தரிடம் ஒரு இளைஞன் வந்தான். அவன் வசதியான உயர் குலத்தில் பிறந்தவன். அவன் விவேகானந்தரிடம், "சுவாமி, நான் தினமும் கோவிலுக்குப் போகிறேன். நான் திருடுவதில்லை, பொய் பேசுவதில்லை, யாரையும் கற்பழித்ததில்லை, விபச்சாரம் செய்ததில்லை, எனக்கு சொர்க்கத்தில் இடம் உண்டுதானே?" என்று கேட்டான். விவேகானந்தர் எந்தப் பதிலும் சொல்லவில்லை. தொடர்ந்து எதையோ படித்துக்கொண்டிருந்தார். இளைஞன் விடவில்லை; திரும்பத் திரும்ப இதையே கேட்டுக்கொண்டிருந்தான். விவேகானந்தரோ சலிப்படைந்து அவனைப் பார்த்துச் சொன்னார், "தம்பி, இந்த மேசை, இந்த டம்ளர், இந்தச் செருப்பு இவை சொர்க்கம் போனால் நீயும் போவாய்."

இடைமறித்து இளைஞன் கேட்டான், "சுவாமி நீங்கள் சொல்வது எனக்குப் புரியவில்லை!" விவேகானந்தர் விளக்கம் தந்தார். "தம்பி நீ தினமும் கோவிலுக்குப் போகிறாய். அது நல்லது. ஆனால நமது

நாட்டில் நமது உடன் பிறப்புக்கள் பலர் அந்தக் கோவிலுக்குள்ளே நுளைய முடியாதபடி நிற்கிறார்களே! அதைப்பற்றி நீ நினைத்ததுண்டா? நீ திருடுவதில்லை, ஆனால் திருடினால்தான் ஏதாவது உண்ண முடியும் என்ற நிலையில் நம் நாட்டில் வாழும் மக்களைப்பற்றி நீ நினைத்ததுண்டா? நீ பொய் பேசுவதில்லை ஆனால் நம் நாட்டில் பொய் பேசியே பெரியவர்களானவர்கள் எத்தனையோ பேர். இது உனக்குத் தெரியுமா? நீ கற்பழிப்பதில்லை. ஆனால் நம் நாட்டில் நடக்கும் இன, மத, மொழிக் கலவரங்களின்போது கற்பழிக்கப்படும் சகோதரிகளின் துயரை நீ நினைத்துப் பார்த்ததுண்டா? நீ விபச்சாரிகளிடம் போனதில்லை, பாராட்டுகிறேன்; ஆனால் வறுமையின் கொடுமை தாங்காது விபச்சாரத்திற்குத் தள்ளப்பட்ட அபலைகளைப்பற்றி நீ கவலைப்பட்டதுண்டா?

மற்றவர்களைப்பற்றியோ அல்லது சமூகத்தைப் பற்றியோ கவலைப்படாத நீ ஒரு ஜடம்! எனவேதான் இந்த மேசை, டம்ளர், செருப்பு சொர்க்கம் போனால் நீயும் போவாய் என்று கூறினேன்" விவேகானந்தர் தொடர்ந்து படிப்பதில் ஈடுபட்டிருந்தார். வந்த இளைஞன் ஆழ்ந்த சிந்தனையோடு வெளியேறினான்.

எனக்கும் இறைவனுக்கும் உள்ள உறவு எனது நண்பர்கள், இந்த சமுதாயம், நான் வாழுகின்ற பூமி, அனைத்தையும் சென்றடையும் விசாலமான வட்டமாக வேண்டும். இப்படி வளருகின்றபோது எனது கடமைகள் வளருகின்றன. நான் தீமையை செய்யாமல் இருந்தால் மட்டும் போதாது; நன்மையைச் செய்ய முன்வரவேண்டும். அதற்கான தூண்டுதலைத் தருவதுதான் செபம்.



# 10.2

# செயற்பாட்டை மெய்ப்படுத்திய செபம்



நமது செப வாழ்வு நம்மை செயற்துடிப்பு நிறைந்தவர்களாக மாற்ற வேண்டும். நமது செபவாழ்வின் அனுபவம் செயல்பாடாக வெளிப்பட வேண்டும். நமது செபத்தின் அதிர்வுகள் அனைத்து இடங்களிலும் அனைவராலும் அனுபவிக்கப்பட வேண்டும்; உணரப்பட வேண்டும்!

செயலில்லாத விசுவாசம் செத்த விசுவாசம் என புனித யாகப்பர் குறிப்பிடுகின்றார்.

“என் சகோதர சகோதரிகளே, தம்மிடம் நம்பிக்கை உண்டு எனச்சொல்லும் ஒருவர் அதைச் செயல்களிலே காட்டாவிட்டால், அதனால் பயன் என்ன? அந்த நம்பிக்கை அவரை மீட்க முடியுமா? ஒரு சகோதரன் அல்லது ஒரு சகோதரி போதிய உடையும் அன்றாட உணவும் இல்லாதிருக்கும்போது, அவர்கள் உடலுக்குத் தேவையானவை எவற்றையும் கொடாமல் உங்களுள் ஒருவர் அவர்களைப் பார்த்து, ‘நலமே சென்று வாருங்கள்; குளிர் காய்ந்துகொள்ளுங்கள்: பசியாற்றிக்கொள்ளுங்கள்’ என்பாரென்றால் அதனால் பயன் என்ன? அதைப்போலவே நம்பிக்கையும் செயல் வடிவம் பெறாவிட்டால் தன்னிலே உயிரற்றதாயிருக்கும்” (யாக்.2:14-17).

## நீங்கள்தான் இயேசுவா?

புறப்படத் தயாராயிருக்கும் புகையிரதத்தைப் பிடிக்க அவசர அவசரமாக நான்கு நண்பர்கள் ஓடினார்கள். புகையிரதத்தை தவறவிட்டு விடுவோமோ என்ற அவசரம்! ஓடிய வேகத்தில் கண்தெரியாத வயோதிபர் விற்றுக்கொண்டிருந்த ஒரு பழக் கூடையைத் தட்டி விட்டார் முன்னால் ஓடியவர். பழங்கள் சிதறின....! நசுங்கிப் பாழாயின.....! பின்னால் வந்த இருவரும்கூட அதைப் பொருட்படுத்தவில்லை. பழங்களைப்பற்றிய எந்த அக்கறையும் இன்றி அவர்கள் அவற்றை மிதித்துக்கொண்டு ஓடினர். அந்த வயோதிபர் சிதறிய பழங்களைத் தன் கைகளால் தடவிப்பார்த்து எடுத்து கூடையில் போட்டுக்கொண்டிருந்தார்.

ஆனால் கடைசியில் ஓடிவந்த அருண் நின்று சிதறின பழங்களைப் பொறுக்கிக் கூடையிலே போட்டான். பழம் விற்ற பார்வையற்ற பெரியவரிடம், "எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். உங்களுக்கு ஏற்பட்ட இழப்புக்கு ஈடாக இதை வைத்துக்கொள்ளுங்கள்" என்று சொல்லிப் பணமும் கொடுத்தான். அப்போது அந்த முதியவர் கேட்டார், "நீங்கள்தான் இயேசுவா?"

இத்தகைய நற்பண்புகள் செபத்தில் இருந்துதான் பிறக்க முடியும். செபிக்கின்ற நாம் இயேசுவைப் பிரதிபலிக்கின்றவர்களாக வாழவேண்டும்.

## கிறிஸ்துவைப் பிரதிபலிப்பதே கிறிஸ்தவ வாழ்வு

ஒரு பெண்மணி யேசுவைக் கனவில் கண்டார். இயேசுவுக்கும் அப்பெண்ணுக்கும் இடையில் நடைபெற்ற உரையாடல்:

***இயேசு:*** யார் நீ?

***பெண்:*** நான் வக்கீல் மனைவி.

***இயேசு:*** நீ யார் மனைவி எனக் கேட்கவில்லை. யார் நீ?

***பெண்:*** நான்கு குழந்தைகளுக்குத் தாய்.

***இயேசு:*** நீ எத்தனை குழந்தைக்குத் தாய் எனக் கேட்கவில்லை யார் நீ?

***பெண்:*** நான் பள்ளியின் ஆசிரியை.

***இயேசு:*** நீ என்ன வேலை செய்கிறாய் எனக் கேட்கவில்லை. யார் நீ?

***பெண்:*** நான் சவிரியம்மா

*இயேசு:* உன் பெயரென்ன என்று நான் கேட்கவில்லை. யார் நீ?
*பெண்:* நான் தோமஸ் - றோசி என்பவர்களின் மகள்
*இயேசு:* உன் பெற்றோர் யார் எனக் கேட்கவில்லை. யார் நீ?

"நான் கிறிஸ்தவள்" என்பதுதான் யேசு எதிர்பார்க்கும் பதில். கிறிஸ்து + அவன் = கிறிஸ்தவன் என்ற நிலையை அடையச் செபமும் வாழ்வும் ஒன்றிணைந்து செல்லவேண்டும். ஒரு கிறிஸ்தவனின் அடையாளம் கிறிஸ்துவைப் பிரதிபலித்து வாழ்வதாகும்.

## என்னைச் சந்திப்பவர்கள் உம்மைச் சந்திக்கட்டும்!

கர்தினால் நியூமன் அவர்களின் செபம் இது: "இறைவா! நான் போகுமிடமெல்லாம் உம் மணம் பரப்ப எனக்கு உதவ வாரும். என்னை ஊடுருவி உமதாக்கிக்கொள்ளும். என் வாழ்வு முழுவதும் உமதாகட்டும். நான் சந்திக்கிற ஒவ்வொரு நபரும் என்னையல்ல, மாறாக இயேசுவே உம்மை என்னில் சந்திக்கட்டும். இவ்வாறு நான் நற்செய்தியைப் பரப்பவேண்டும். எனது வார்த்தையால் அல்ல, மாறாக எனது முன்மாதிரிகையால், அன்பென்னும் விசையால், பாசம் நிறைந்த இதயத்தினால், இவ்வாறு எனது முழு வாழ்க்கையால் நான் நற்செய்தியைப் பரப்பவேண்டும் ஆமென்."

"என்னைப் பார்க்கும் மனிதரெல்லாம் உம்மை என்னில் காண வேண்டும் இயேசுவே" என்ற கிறிஸ்தவப் பாடலும் இதே உண்மையையே உரைக்கின்றது.

இன்றைய சமுகத்தில் கிறிஸ்துவைப் பிரதிபலித்து வாழ நமது செப வாழ்வு நமக்கு உந்துதல் தரவேண்டும். ஐந்து நற்செய்திகள் உள்ளன என்று சொல்வார்கள். "நான்கு நற்செய்திகள்தானே இருக்கின்றன; அது எப்படி ஐந்து நற்செய்திகள் இருக்க முடியும்?" என்று நாம் கேட்கலாம்? அந்த ஐந்தாவது நற்செய்தி நாம் ஒவ்வொருவரும்தானே!



# 10.3

# ஆண்டவரை அயலவரில் காண்பது செபம்

## "நான் வெளியே இருக்கிறேன்"



முன்னொரு காலத்தில் இறைவனிடம் அன்பும் பக்தியும் கொண்ட பெண் ஒருத்தி இருந்தாள். ஒவ்வொரு நாள் காலையிலும் அவள் கோவிலுக்குப் போவது வழக்கம். வழியில் குழந்தைகள் அவளைக் கூப்பிட்டாலும் பிச்சைக்காரர்கள் வழிமறித்தாலும் அவற்றையெல்லாம் பொருட்படுத்தாமல் தன்வழியே செல்வாள்.

ஒருநாள் வழக்கம்போல் நடந்துசென்று, செபம் தொடங்க இருந்த நேரத்தில் ஆலயத்தை அடைந்தாள். அவள் கதவைத் தள்ளினாள். அது திறக்கவில்லை. மறுபடியும் அழுத்தித் தள்ளினாள். கதவு பூட்டப்பட்டிருந்ததை அறிந்தாள். "இன்று செப நேரத்தை தவற விட்டுவிட்டோமே" என்ற வருத்தத்துடன், என்ன செய்வது என்று தெரியாது நிமிர்ந்து பார்த்தாள். அவளுக்கு முன்னால், அக்கதவில் ஒரு குறிப்பு காணப்பட்டது. அது "நான் வெளியே இருக்கிறேன்" என்பதாகும்.

## எனக்கே செய்தீர்கள்!

இறுதித் தீர்ப்பின்போது நாம் செய்யும் சமயக் காரியங்கள் குறித்து எதுவும் கேட்கப்படாது. மாறாக மற்றவர்களுக்கு நாம் என்ன செய்தோம் என்பது குறித்துத்தான் கேட்கப்படும். இது ஆச்சரியமான ஒரு விடயம்தான்! அயலவருக்கு நாம் செய்யும் நன்மைகள் அனைத்துமே

ஆண்டவருக்குச் செய்யப்படும் நன்மைகள் ஆகும்.

"அதற்கு நேர்மையாளர்கள், 'ஆண்டவரே, எப்பொழுது உம்மைப் பசியுள்ளவராகக் கண்டு உணவளித்தோம், அல்லது தாகமுள்ளவராகக் கண்டு உமது தாகத்தைத் தணித்தோம்? எப்பொழுது உம்மை அன்னியராகக் கண்டு ஏற்றுக்கொண்டோம்? அல்லது ஆடை இல்லாதவராகக் கண்டு ஆடை அணிவித்தோம்? எப்பொழுது நோயுற்றவராக அல்லது சிறையில் இருக்கக் கண்டு உம்மைத்தேடி வந்தோம்?' என்று கேட்பார்கள். அதற்கு அரசர், 'மிகச் சிறியோராகிய என் சகோதரர் சகோதரிகளுள் ஒருவருக்கு நீங்கள் செய்ததையெல்லாம் எனக்கே செய்தீர்கள் என உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன்' எனப் பதிலளிப்பார்" (மத்.25:37-40).

ஆம், இதையே அன்னை திரேசா தன் வாழ்வில் செய்தார். அதையே அவர் சொன்னார். "நான் (செபிக்கும்போது) கிறிஸ்துவில் ஏழைகளைக் காண்கின்றேன். நான் (பணிசெய்யும்போது) ஏழைகளில் கிறிஸ்துவைக் காண்கிறேன்" (I see poor in Christ and I see Christ in poor).

## உன்மீது நீ அன்புகூர்வதுபோல்.....

"உன்மீது நீ அன்புகூர்வதுபோல் உனக்கு அடுத்திருப்பவர்மீதும் அன்புகூர்வாயாக" (மாற்.12:31).



குறிப்பிட்ட நேரத்தில் தொடங்கிக் குறிப்பிட்ட நேரத்தில் முடிவடையும் சடங்கல்ல செபம். மாறாக வாழ்வு முழுவதும் இறையோடி நிற்கும் தொடர் தேடலே உண்மைச் செபம். செபத்தில் செயலும், செயலில் செபமும் உயிர்பெறக்கூடிய இயங்கியல் தனமே (Dialectical Approach) உண்மைச் செபம். செய்வதனைத்தையும் இறைநோக்கில் செய்யும் வாழ்வியல் கண்ணோட்டமே உண்மைச் செபம். பிறர் நமக்கு என்ன செய்ய வேண்டும் என எண்ணுவதை நாம் அவர்களுக்குச் செய்யக்கூடிய முழுமையான அகச் சுதந்திரமே செபம்.

“ஆகையால் பிறர் உங்களுக்குச் செய்யவேண்டும் என விரும்புகிறவற்றை எல்லாம் நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள். இறைவாக்குகளும் திருச்சட்டமும் கூறுவது இதுவே” (மத்.7:12). மேற்குறிப்பிட்ட மத்தேயு.7:12 இறைவார்த்தைப் பகுதி *‘பொன்விதி’* (Golden Rule) என்றும் *‘அறநெறிகளின் எவரெஸ்ட் சிகரம்’* (Everest of Ethics) என்றும் *‘செபத்தின் கிரீடக்கல்’* (Capstone of prayer) என்றும் அழைக்கப்படுகிறது.

யூதர்கள் மத்தியில் நிலவும் கதை ஒன்று இது: இயேசுவிற்கு முந்தைய காலத்தில் இரு பெரும் யூத மறைநூல் வல்லுநர்கள் வாழ்ந்து வந்தனர். அவர்களில் ஒருவர் முற்கோபியும், அறிவாளியுமான ஷாம்மாய் (Shammai) என்பவர். மற்றவர் அன்புருவான ஹில்லல் (Hillel) என்பவர்.

யூதர் ஒருவர் ஷாம்மாயிடம் சென்று, “உண்மைச் செபம் என்னவென்று எனக்கு ஒரு வரியில் சொன்னால் நான் உம் அடிமையாகி விடுகிறேன்” என்று சொல்கின்றார். முற்கோபியான ஷாம்மாய் தன்னிடம் கேள்வி கேட்ட அந்த யூதரை விரட்டியடித்துவிட்டார்.

அந்த யூதர் ஹில்லலிடம் சென்று, “உண்மைச் செபம் என்னவென்று ஒரு வரியில் சொன்னால் நான் உம் அடிமையாகி விடுகிறேன்” என்று சொல்கிறார். அதற்கு ஹில்லல், “எவை உனக்கு வெறுப்பைத் தருகின்றனவோ அவற்றை நீ பிறருக்குச் செய்யாதே - இதுவே உண்மைச் செபமும், சட்டமும்” என்று கூறினாராம்.


ஹில்லலுடைய எதிர்மறைப் பொன் விதியை இயேசு நேர்மறையாக மாற்றி, பிறர் நமக்கு என்ன செய்யவேண்டும் என விரும்புகிறோமோ அதையே நாம் அவர்களுக்குச் செய்யக்கூடிய அகச்சுதந்திரமான மனநிலையே உண்மைச் செபம் என்கிறார்.

---



# 10.4

# வார்த்தையை வாழ்வதே செபம்



"கிறிஸ்தவ வாழ்வு பேசுவதிலும் பகல் கனவு காண்பதிலும் அல்ல, மாறாக செயற்பாடுகளிலே விளங்குகிறது." என்கிறார் புனித வின்சென்ற் பல்லோட்டி. ஆம், எமது செப வாழ்வு எமது செயற்பாட்டில் வெளிப்படுத்தப்பட வேண்டும்.

## சொல்வதைச் செய்யாமல்....

"நான் சொல்பவற்றைச் செய்யாது என்னை, 'ஆண்டவரே, ஆண்டவரே' என ஏன் கூப்பிடுகிறீர்கள்? என்னிடம் வந்து, என் வார்த்தைகளைக் கேட்டு, அவற்றின்படி செயல்படும் எவரும் யாருக்கு ஒப்பாவார் என உங்களுக்கு எடுத்துக்காட்டுகிறேன். அவர் ஆழமாய்த் தோண்டி, பாறையின்மீது அடித்தளம் அமைத்து, வீடு கட்டிய ஒருவருக்கு ஒப்பாவார். வெள்ளம் ஆறாகப் பெருக்கெடுத்து அந்த வீட்டின்மேல் மோதியும் அதை அசைக்க முடியவில்லை: ஏனென்றால் அது நன்றாகக் கட்டப்பட்டிருந்தது" (லூக்.6:46-49)

"என்னை நோக்கி, ஆண்டவரே, ஆண்டவரே எனச் சொல்பவரெல்லாம் விண்ணரசுக்குள் செல்வதில்லை. மாறாக விண்ணுலகிலுள்ள என் தந்தையின் திருவுளப்படி செயல்படுபவரே செல்வர்" (மத்தேயு 7:21).

செபத்திற்கும் செயற்பாட்டிற்கும் இடையே உறவும் தொடர்பும் இருக்க வேண்டும் என்பதை இயேசு தெளிவாகச் சுட்டிக்காட்டுகின்றார்.

தந்தையின் திருவுளப்படி நடக்காமல் - நடக்க முயற்சிக்காமல் வெறுமனே ஆண்டவரே! ஆண்டவரே! என்று சொல்லிக்-கொண்டிருப்பவர்கள் இறைவனின் அரசிற்குள் நுழைவதில்லை. அவர்கள் வாழ்வு அடித்தளம் இல்லாமல் மணல்மீது கட்டப்பட்ட வீட்டைப்போன்று தகர்ந்துவிடும் என்பதை இயேசு ஐயம் திரிபுற விளக்கிக் காட்டுகின்றார்.

## செயற்பாட்டிற்கு முனைவதே செபம்

"செபம் என்பது வெறுமனே பேசுவது மட்டுமல்ல, மாறாகக் கேட்பதும் ஆகும். செபம் என்பது பெறுவது மட்டுமல்ல, மாறாகக் கொடுப்பதும் ஆகும். செபம் என்பது ஓய்ந்திருப்பது மட்டுமல்ல, மாறாக செயல்பாட்டிற்கு முனைவதும் ஆகும். செபம் என்பது வாழ்வின் துன்பத்திலிருந்து தப்பி ஓடுவது மட்டுமல்ல, மாறாக போரை எதிர்கொள்ளும் சவாலும் ஆகும்" என உரைக்கின்றார் ஏர்னெஸ்ட் கார்டன் என்ற அறிஞர். ஆம் செபம் செயற்பாட்டிற்கு நம்மை அழைத்துச் செல்ல வேண்டும்.

## இறைவார்த்தையைக் கேட்டலும் செயல்படலும்

"இறைவார்த்தையைக் கேட்கிறவர்களாக மட்டும் இருந்து உங்களை ஏமாற்றிக்கொள்ள வேண்டாம். அதன்படி நடக்கிறவர்களாயும் இருங்கள். ஏனென்றால் வார்த்தையைக் கேட்டு அதன்படி நடவாதோர், கண்ணாடியிலே தமது முகத்தைப் பார்த்துவிட்டுச் சென்று உடனே தாம் எவ்வாறு இருந்தார் என்பதை மறந்துவிடும் ஒரு மனிதருக்கு ஒப்பாவர்" (யாக்.1:21-25).



செபத்தில் இறைவனின் குரலை நாம் கேட்கின்றோம் என்றால் அக்குரல் கூறும் வார்த்தைகளை வாழ்வாக்க வேண்டும். அப்படி இல்லை என்றால் அந்த வார்த்தையைக் கூறுபவரை நாம் மதிக்கவில்லை, அன்பு செய்வதில்லை என்றுதானே அர்த்தம்? "என்மீது அன்புகொண்டுள்ளவர் நான் சொல்வதைக் கடைப்பிடிப்பார்.....என்மீது அன்புகொண்டிராதவர் நான் சொல்வதைக் கடைப்பிடிப்பதில்லை" (யோவா.14:23-24) என இயேசு கூறுவதில் எத்துணை உண்மை உண்டு!

## செயல்களில்லாத நம்பிக்கையும் செத்ததே.


"அறிவிலிகளே, செயலற்ற நம்பிக்கை பயனற்றது என நான் எடுத்துக்காட்ட வேண்டுமா? நம் முதாதையாகிய ஆபிரகாமைப் பாருங்கள். தம் மகன் ஈசாக்கைப் பீடத்தின்மேல் பலிகொடுத்தபோது அவர் செய்த செயல்களினால் அல்லவோ கடவுளுக்கு ஏற்புடையவரானார்? அவரது நம்பிக்கையும் செயல்களும் இணைந்து செயல்பட்டன என்றும், செயல்கள் நம்பிக்கையை நிறைவுபெறச் செய்தன என்றும் இதிலிருந்து புலப்படுகிறது அல்லவா?

ஆபிரகாம் ஆண்டவர்மீது நம்பிக்கைகொண்டார். அதை ஆண்டவர் அவருக்கு நீதியாகக் கருதினார் என்னும் மறைநூல் வாக்கு இவ்வாறு நிறைவேறியது. மேலும் அவர் கடவுளின் நண்பர் என்றும் பெயர் பெற்றார். எனவே மனிதர் நம்பிக்கையினால் மட்டுமல்ல, செயல்களினாலும் கடவுளுக்கு ஏற்புடையவராகின்றனர் எனத் தெரிகிறது. அவ்வாறே, இராகாபு என்ற விலைமகள் தூதர்களை வரவேற்று வேறு வழியாக அனுப்பியபோது, செயல்களால் அல்லவா கடவுளுக்கு ஏற்புடையவரானார்! உயிர் இல்லாத உடல்போல, *செயல்களில்லாத நம்பிக்கையும் செத்ததே*" (யா.2.20-26).


எனவே செபத்தில் நாம் கேட்கும் இறைவார்த்தைகளை வாழ்வாக்குவோம். அந்த வார்த்தையின் எதிரொலிகள் நம் வாழ்வில் செயலாக்கம் பெறட்டும். நமது விசுவாசம் செயலற்ற செத்த விசுவாசமாக இல்லாமல் செயற்பாட்டோடுகூடிய உயிர்த்துடிப்புள்ள விசுவாசமாக மாறட்டும்.

---






# பணி வாழ்வுக்கு பலம் சேர்ப்பது செபம்



*வெளிநாட்டு பத்திரிகை நிருபர் இந்தியாவின் கல்கத்தாவில் உள்ள அன்னை திரேசாவின் இல்லத்திற்குச் சென்றார். அன்னையைச் சந்தித்துப் பேட்டி கண்டார். இருவருக்கும் இடையே நடந்த உரையாடலில் இருந்து ஒரு பகுதி!*

*நிருபர்:* அன்னையே, உங்கள் இல்லத்திலே என்னென்ன பணிகளைச் செய்கின்றீர்கள்?

***அன்னை :*** அனாதைக் குழந்தைகளைப் பராமரித்தல், முதியோரைக் கண்-காணித்தல், தெருக்களில் சாகக்கிடக்-கின்றவர்களை அவர்கள் அமைதியாக இறக்க உதவுதல், சேரிகளில் வாழும் மக்களுக்கு இலவச மருத்துவப் பணி .... போன்ற பணிகளைச் செய்கின்றோம்.

*நிருபர்:* இத்தகைய பணிகளைச் செய்ய வேண்டும் என்ற தூண்டுதல் எப்போது உங்களுக்கு ஏற்பட்டது?

***அன்னை :*** தொடக்கத்திலே நான் கல்கத்தாவில் உள்ள புகழ்வாய்ந்த லொரேட்டோ ஆங்கிலப் பள்ளியில் ஆசிரியையாகப் பணியாற்றிக் - கொண்டிருந்தேன். அந்தப் பணி எனக்கு மன நிறைவைக் கொடுக்கவில்லை. அப்போது சேரிப்பகுதிகளில் வாழ்கின்ற ஏழை மக்களை அடிக்கடி சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது. இறுதியில் அவர்களுக்காகவே என் வாழ்வை அர்ப்பணிக்க வேண்டும் என முடிவெடுத்தேன்.

***நிருபர்:*** மூளை வளர்ச்சியற்ற குழந்தைகள், இறக்கும் நிலையில் உள்ள முதியவர்கள் ஆகியோருக்கு தொண்டுபுரிவது கடினமாயிற்றே! எனக்கு மாதத்திற்கு ஒரு இலட்சம் ரூபாய் கொடுத்தாலும் இந்தப் பணியைச் செய்ய மாட்டேன். இதற்கு மிகுந்த சகிப்புத் தன்மையும் மனஉறுதியும் வேண்டுமே. அது உங்களுக்கு எப்படிக் கிடைக்கிறது?

***அன்னை:*** எனக்கு நீங்கள் இரண்டு இலட்சம் கொடுத்தாலும் நானும் இந்த வேலைகளைச் செய்யமாட்டேன். தயவுசெய்து என்னுடன் வாருங்கள் (நிருபரை அங்குள்ள சிற்றாலயத்திற்கு அழைத்துச் செல்கிறார்.) இதோ பார்த்தீர்களா இந்த ஆலயத்தில்தான் நாங்கள் காலையிலும் மாலையிலும் ஒன்றுகூடிச் செபிக்கின்றோம். அதோ நடுவில் தெரிகிறதே அந்த நற்கருணைப் பேழையில் உள்ள ஆண்டவர் இயேசுதான் எங்களுக்கு சக்தியையும் மன உறுதியையும் தருகின்றார். செபமே எங்களது பணிக்கு உயிர்நாடி.

***நிருபர்:*** கைவிடப்பட்ட மக்களுக்காக நீங்கள் இப்பணிகளைச் செய்யும்போது உங்களுக்கு ஏதாவது எதிர்ப்புக்கள் வந்தனவா? எப்படிச் சமாளித்தீர்கள்?

***அன்னை:*** தொடக்கத்தில் எங்கள் பணிகளைப் புரிந்துகொள்ளாமல் பலரும் எதிர்த்தார்கள். ஒருசில இந்துக்கள் நான் மதமாற்றம் செய்ய வந்துள்ளேன் என்றுகூடச் சொன்னார்கள். எதிர்ப்புக்கள் நடுவிலும் பணியாற்றும் சக்தியை எங்களுக்குக் கொடுத்தது செபமே!

.............................

ஆம்! அன்னை திரேசாவினதும் அவரது சகோதரிகளினதும் வாழ்வு செபத்தோடு பின்னிப் பிணைந்த ஒரு வாழ்வு! நற்கருணை ஆண்டவர் வழங்கிய ஆற்றலும் சக்தியும் மனிதக் கண்ணோட்டத்தில் சாத்தியமற்ற பணிகளைக்கூட மிகுந்த அன்போடு, மிகுந்த மகிழ்ச்சியோடு செய்வதற்கு அவர்களைத் தூண்டியது; தட்டி எழுப்பியது.

அன்னை திரேசா, பிரபல பாடகி லதா மங்கேஸ் போன்று ஆயிரம் பாடல்களுக்குமேல் பாடவில்லை, சார்ஜகான்போல் உலக அதிசயங்களில் ஒன்றான தாஜ்மகாலைக் கட்டவில்லை; அல்லது மனோகரம்மாவைப்போல் ஆயிரம் படங்களுக்குமேல் நடிக்கவில்லை. ஆனால் அவர் அன்புப் பணிதான் செய்தார். சமூகத்தின் கடைநிலையில் இருந்தவர்களைக் கரைசேர்த்தார்! இதைச் செய்வதற்கு அடிப்படையாக செபமே இருந்தது.

## அச்சாணி இல்லாத தேர் முச்சாணும் நகராது

அச்சாணி இல்லாத தேர் முச்சாணும் நகராது என்பார்கள். அதுபோலதான் செபம் இல்லாத பணிவாழ்வு அதிக காலத்திற்கு - அதிக தூரத்திற்குச் செல்லாது. ஏனெனில் பணிவாழ்வில் சோதனைகள், வேதனைகள், எதிர்ப்புக்கள், விளக்கயீனங்கள் எனப் பல சவால்கள் உண்டு.

எதிர்ப்புக்கள் மத்தியில் இயேசுவுக்கு பலம் கொடுத்தது செபமே. இயேசுவின் பணிவாழ்வு மிகுந்த எதிர்ப்புக்கள், சவால்கள் மத்தியிலேயே இடம்பெற்றது என்பதை நற்செய்தியாளர்கள் தெளிவாகச் சுட்டிக்காட்டுகின்றார்கள்.

கைசூம்பியவரை இயேசு ஓய்வுநாளில் குணப்படுத்தியபோது, “அவர்களோ கோபவெறிகொண்டு இயேசுவை என்ன செய்யலாம் என்று ஒருவரோடு ஒருவர் கலந்துபேசினர்” (லூக்.6:11). “மறைநூல் அறிஞரும் பரிசேயரும் பகைமையுணர்வு மிகுந்தவராய் அவரது பேச்சில் அவரைச் சிக்கவைக்குமாறு பல கேள்விகளைக் கேட்டனர்”(லூக்.11:53). “தலைமைக் குருக்களும் மறைநூல் அறிஞர்களும் மக்களின் தலைவர்களும் அவரை ஒழித்துவிட வழிதேடினார்கள். ஆனால் என்ன செய்வதென்று யாருக்கும் தெரியவில்லை” (லூக்.19:48).

இந்தச் சவால்களைச் சந்தித்து இறையரசுப் பணியில் களைககாமல், சளைக்காமல் தொடர்ந்து நடைபயில இயேசுவுக்கு பலம் கொடுத்தது அவருடைய செப வாழ்வே.

# துணை நின்ற நூல்கள்

1. திருவிவிலியம் - ஒரு வழிகாட்டி,
2. விசுவாசப் பூக்கள் -
   (கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வி நூல்)
3. விடுதலை விழைதல்கள்
4. கத்தோலிக்க அருங்கொடை மறுமலர்ச்சி
5. மண்ணோடு விண்ணாக
6. விண்ணின் விதைகள்

# நூல் ஆசிரியர் தமிழ் நேசன்



தமிழ் நேசன் என்னும் பெயரில் எழுத்துலகில் வலம் வந்துகொண்டிருக்கும் அருட்பணியாளர் பாவிலு கிறிஸ்து நேசரெட்னம் அடிகளார் முருங்கன் கிராமத்தில் 1969ல் பிறந்தவர். மன்/ முருங்கன் மகா வித்தியாலயத்தில் ஆரம்பக்கல்வி மற்றும் இடை நிலைக் கல்வியையும், யாழ்/ புனித பத்திரிசியார் கல்லூரியில் உயர்தரக் கல்வியையும் கற்ற இவர், 1986ம் ஆண்டில் யாழ் புனித மாட்டீனார் ஆரம்பக் குருமடத்தில் இணைந்து தனது குருத்துவ உருவாக்கத்தை ஆரம்பித்தார். கண்டி அம்பிட்டிய தேசிய குருத்துவக் கல்லூரியில் மெய்யியல் கல்வியையும், யாழ் புனித பிரான்சிஸ் சவேரியார் உயர் குருத்துவக் கல்லூரியில் இறையியல் கல்வியையும் நிறைவு செய்தார்.

மன்னார் மறைமாவட்டக் குருவாக 1997ல் திருநிலைப்படுத்தப்பட்ட இவர், வங்காலை புனித ஆனாள் ஆலயம் (1997 – 1998), மன்னார் புனித செபஸ்தியார் பேராலயம் (1998 – 2000) ஆகிய இடங்களில் உதவிப் பங்குத்தந்தையாகவும், தலைமன்னார் புனித லோறன்சியார் ஆலயத்தில் பங்குத் தந்தையாகவும் (2000 – 2003) பணியாற்றினார். கடந்த ஏழு வருடங்களாக (2000 – இன்றுவரை) 'மன்னா' என்ற மன்னார் மறைமாவட்டப் பத்திரிகையின் ஆசிரியராகப் பணியாற்றி வருகின்றார். கடந்த நான்கு ஆண்டுகளாக (2003 – இன்றுவரை) மன்னார் மறைமாவட்டத்தின் மறைக்கல்வி, கல்வி, விவிலியப்பணிகள் ஆணைக்குழுவின் இயக்குனராகவும் கடந்த வருடத்திலிருந்து (2006) மன்னார் மறைமாவட்டத்தின் மறைத்தூதுப் பணிகள் ஆணைக்குழுவின் இயக்குனராகவும் பணியாற்றி வருகின்றார்.

இவர் கடந்த 20 வருடங்களாக கவிதை, சிறுகதை, விழிப்புணர்வுக் கட்டுரைகள் போன்ற ஆக்க இலக்கியங்களை பாதுகாவலன், மன்னா, தொண்டன், நான், இறையியல் கோலங்கள் போன்ற கத்தோலிக்க கிறிஸ்தவ சஞ்சிகைகளில் படைத்து வருகின்றார். இதைவிட தமிழில் பல்வேறு ஆய்வுக் கட்டுரைகளை தினகரன், வீரகேசரி போன்ற தேசிய நாளேடுகளிலும், மல்லிகை போன்ற தேசிய கலை இலக்கிய சஞ்சிகைகளிலும், ஆங்கிலத்தில் சில ஆய்வுக் கட்டுரைகளை மெசஞ்சர் என்ற ஆங்கில வாரப்பத்திரிகையிலும் எழுதியுள்ளார்.

மறையாசிரியர்கள், கத்தோலிக்க ஆசிரியர்கள், பொதுநிலைப் பணியாளர்கள், தன்னார்வ இறைவார்த்தைப் பணியாளர்கள், அன்பிய ஊக்குவிப்பாளர்கள் என பல்வேறு குழுவினருக்கு கருத்தமர்வுகளையும், தியானங்களையும் நடாத்தி வருகின்றார்.